

## யத்தனபூடி சுலோசனாராணி

தெலுங்கு இலக்கிய உலகில் 'நாவல் ராணி' என்று அழைக்கப்படும் இவர் 2.4.1939-ல் ஆந்திர மாநிலத்தில் பிறந்தவர். 'ஆந்திரப் பத்திரிகா வீக்லி' யில் இவரது முதல் சிறுகதை 1956 ம் வருடம் பிரசுரமானது. 1965-ல் இவர் தனது முதல் நாவலான 'செக்ரட்ரி'யை வெளியிட்டார். இதுவரை இவர் சுமார் ஐம்பது நாவல்களும், 30 சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இதில் சுமார் 16 நாவல்கள் திரைப் படமாகவும், 10 நாவல்கள் ...யோவில் தொடராகவும், 4 நாவல்கள் தொலைக் காட்சித் ...டராகவும், வெளிவந்துள்ளது. 1962 ல் 'ஒய்.எஸ்.எஸ்.' இடமிருந்து ...த கதைக்கான விருதும், 1969-ல் 'கேசரி கட்டீர்' விருதான தங்கக் ...பையும்; 1978-ல் ஆந்திர மாநிலத்தின் 'சாஹித்திய அகாடமி' ...தும், 1998-ல் கோபிசந்த் ஸ்மாராகா விருதும், 1999-ல் ராகசப்தசாரம் ...த்தினரால் வழங்கப்பட்ட தங்கப் பதக்கத்தையும், 1989-ல் ஆந்திர ...லைக்காட்சி நிலையத்தார் வழங்கிய சிறந்த தொலைக்காட்சி ...லுக்கான விருதையும் பெற்றார். இவரது திரைக் கதைகள் 1965, ... 1978, 1983-ம் ஆண்டுகளில் சிறந்த திரைக் கதைக்கான ...துகளைப் பெற்றுள்ளது. இந்தியாவிலேயே முதன்முதலாக 1998ல் ... 'கோகிலா' என்ற ஆடியோ கேஸட் பத்திரிகையை வெளியிட்டார். ...நடைய சில நாவல்கள் கன்னட மொழியில் வெளி வந்து அமோக ...வற்பைப் பெற்றுள்ளது.

## ...ளரி கிருபாநந்தன்

2.9.1956-ல் பிறந்த இவர், ...மொழி தமிழானாலும், தந்தை ஆந்திராவில் வேலை பார்த்து ...தால் பள்ளி, கல்லூரி படிப்பு முழுவதும் தெலுங்கில். 1976-ல் ... திருமணத்திற்குப் பிறகே தமிழைப் படிக்கவும், எழுதவும் கற்றார்.

...சையை அடுத்த கிராமத்தில் ஐந்து வருடம் ...ந்ததில், மாவட்ட நூலகத்தில் தமிழ்ச் ...தைகள், நாவல்கள் படித்து தனது இலக்கிய ...த்தை வளர்த்துக் கொண்டார். இவரது ...ழிபெயர்ப்புச் சிறுகதை முதலில் 1955 ல் ...னயாழியில் வெளிவந்தது. தொடர்ந்து ... 13 நாவல்களையும், 4 சுய முன்னேற்ற ...களையும் மொழிபெயர்த்து, அவை நூல் ...க வெளிவந்துள்ளன. இவர் சொந்தமாகச் ...சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.



சிநேகிதியே ★ யத்தன்னபூடி சுலோசனாராணி ★ கலா நிலையம்

யத்தன்னபூடி சுலோசனா ராணி

# சிநேகிதியே



தமிழில்

உரிமை பதிப்பு
முதற் பதிப்பு : டிசம்பர், 2001

© ஆசிரியருக்கு

விலை : ரூ. 55.00

721392

அச்சிட்டோர் :- கே யெம் பேக்கேஜிங் இண்டஸ்டிரிஸ்,
சென்னை - 600 014.



பிரியம்வதா சுவர்க்கத்திலிருந்து யதார்த்த உலகத்திற்கு வந்து விட்டவள் போல் சுய உணர்வு பெற்றாள். வாசற்கதவு திறந்துதான் இருந்தது. குழந்தைகள் விளையாடும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. காலிங் பெல்லை யார் அடித்திருப்பார்கள்? வருணுக்குக் குறும்பு அதிகம். இப்படித்தான் ஏதாவது செய்து கொண்டிருப்பான்.

பிரியம்வதா வாசற்கதவு அருகில் சென்றாள்.

வெளியில் காவல் அதிகாரி ஒருவர் நின்றிருந்தார். "எக்ஸ்க்யூஸ் மீ" என்றார்.

"சொல்லுங்கள், யார் வேண்டும்?" பிரியம்வதா கேட்டாள்.

"மிஸஸ் விக்ரம் இருக்காங்களா?"

"நான்தான்."

அவர் சட்டைப் பையிலிருந்து ஒரு போட்டோவை எடுத்துக் கொடுத்தார். "இந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?"

பிரியம்வதா போட்டோவைப் பார்த்தாள். "மதுரா ..." தெளிவற்ற குரலில் சொன்னாள்.

அவர் இன்னொரு போட்டோவையும் காண்பித்தார்.

அதில் மதுராவுடன் பிரியம்வதாவும் இருந்தாள். மதுராவுக்கு பர்த்டே கேக்கை ஊட்டிக்கொண்டிருந்தாள் பிரியம்வதா. இருவரின் முகங்களிலும் மகிழ்ச்சி வெளிப்படையாக தென்பட்டது.

"இந்தப் பெண் உங்களுக்கு என்ன ஆக வேண்டும்?" காவல் அதிகாரி கேட்டார்.

"என்னுடைய சிநேகிதி. இருவரும் ஒரே பள்ளியில், கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தோம். அவளும் நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள்."

"தாங்க் காட். அந்தப் பெண்ணை தெரிந்த ஒரு நபரையாவது கண்டுபிடிக்க முடிந்தது. மேடம்... ஒரு முறை என்னுடன் வர முடியுமா?"

"எதற்கு?"

"மதர் தெரஸா ரெஸ்டிட்யூட் ஹோமுக்கு. இந்தப் பெண் அங்கே உயிருக்காக போராடிக்கொண்டிருக்கிறாள். அவளை அடையாளம் காட்டுவதற்காக நீங்க வரவேண்டும். அவளுடைய பேக்கில் உங்களுடைய போட்டோ இருந்தது. அங்கே இருந்த நர்ஸ் உங்களை ஏதோ ஒரு விழாவில் பார்த்திருக்கிறாளாம். அதான் உங்களை அழைத்துப் போக வந்தேன். ப்ளீஸ் என்னுடன் வர முடியுமா?"

"நானா?" பிரியம்வதா தடுமாறினாள்.

"ஆமாம். அவள் மதுராதான் என்பதை உறுதிப் படுத்துவதற்காக நீங்கள் வரவேண்டும். நேரில் பார்த்துவிட்டு ஒரு கையெழுத்து போட்டுவிட்டால் போதும்."

"என் கணவர் வீட்டில் இல்லை. அவரிடம் கேட்க வேண்டும்"

"எங்கே போயிருக்கிறார்?"

"பார்ட்டிக்கு."

"யார் வீட்டில் நடக்கிறது?"

பிரியம்வதா சொன்னாள்,

"அவர்களை எனக்குத் தெரியும்" என்று சொல்லிக் கொண்டே காவல் அதிகாரி மேஜையின் மீது இருந்த போனை எடுத்து டயல் செய்தார்.

மறுமுனையில் விக்ரம் போனை எடுத்தான்.

"எஸ்.ஐ.ராஜாராம் பேசுகிறேன் சார். உங்க வீட்டிலிருந்துதான் பேசுகிறேன்" என்று சொல்லிவிட்டு வந்த வேலையைச் சொன்னார். ஒரு நிமிடம் கழித்து போனை பிரியம்வதாவிடம் நீட்டிக்கொண்டே "உங்களிடம் பேச வேண்டுமாம்" என்றார்.

"ஹலோ" என்றாள் பிரியம்வதா.

"யார் இந்த மதுரா?" ஒருதடவை கூட இந்தப் பெயரை நீ என்னிடம் சொன்னதாக நினைவு இல்லையே?"

"என்னுடைய கிளாஸ் மேட். எங்களுடைய ஊர்தான்."

"நன்றாக தெரிந்தவள்தானே?"

"ஆமாம்."

"அப்படி என்றால் நீ காவல் அதிகாரியுடன் நேராக இங்கே வந்துவிடு. நாம் இருவருமாகச் சேர்ந்து அங்கே போகலாம்."

"சரி." போனை வைத்துவிட்டாள்.

குழந்தைகளை ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லிவிட்டு ஐந்து நிமிடங்களில் காவல் அதிகாரியுடன் கிளம்பினாள்.

கால் மணி நேரம் கழித்து ராஜலக்ஷ்மியின் வீட்டின் முன்னால் ஜீப் வந்து நின்றது. விக்ரம் இவர்களுக்காக காத்திருப்பது போல் வெளியிலேயே நின்றிருந்தான். ராஜலக்ஷ்மியும் அங்கே இருந்தாள்.

பிரியம்வதாவை பார்த்ததும் அருகில் வந்தாள். "பிரியா நீ பார்ட்டிக்கு ஏன் வரவில்லை? வி மிஸ் யூ" என்றாள்.

"ஆன்டீ... நான்தான் வரவேண்டாம் என்று தடுத்து விட்டேன். குழந்தைகளுக்கு பரீட்சைகள் வேறு." விக்ரம் சொன்னான்.

"விக்ரம்... நீ ரொம்ப பொல்லாதவன். இவ்வளவு அழகான மனைவியை வீட்டிலேயே வைத்திருப்பது பெரியக்குற்றம்."

"இல்லை ஆன்டீ. உங்களுக்குத் தெரியாது. ஆண்கள் உண்மையிலேயே என்ஜாய் செய்ய வேண்டும் என்றால், சில

இடங்களுக்கு மனைவி இல்லாமல்தான் வரவேண்டும்." விக்ரம் புதிர் போடுவது போல் சொன்னான்.

"ஏன் அப்படி?"

"இது போன்ற பார்டிகளுக்கோ, சினிமாவுக்கோ போகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். சத்தமாக விசிலடித்து, ரகளை செய்ய வேண்டும் என்று தோன்றினால், மனைவி பக்கத்திலேயே இருந்தால் இஷ்டம் வந்ததுபோல் நடந்துகொள்ளத்தான் முடியுமா? அங்கே வந்திருக்கும் இளம் பெண்கள் எங்களுக்குத் திருமணம் ஆகவில்லை என்று நினைத்துக்கொண்டு ஓரக்கண்ணால் எங்களை பார்க்கும் போது... ஆஹா... ஆஹா..."

"போதும். போதும்... நிறுத்திக்கொள். உடனே இடத்தை காலி செய்." என்று சொல்லிக்கொண்டே அந்த அம்மாள் விக்ரமின் தோள்களைப் பிடித்துத் தள்ளிவிட்டாள்.

விக்ரம், பிரியம்வதா ஜீப் அருகில் வந்தார்கள்.

எஸ்.ஐ. ராஜாராம் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். மூவரும் ஏறிக்கொண்டதும் ஜீப் புறப்பட்டது. அங்கிருந்து மதர் தெரஸா ரெஸ்டிட்யூட் ஹோமுக்கு வந்தார்கள்.

ஜீப்பை விட்டு இறங்கி உள்ளே வரும்போது பிரியம்வதாவுக்கு என்னவோ போல் இருந்தது. கனவுலகிலிருந்து திடீரென்று தள்ளப்பட்டு வாஸ்தவத்திற்கு வந்தாற்போல் தோன்றியது. வாழ்க்கை என்றால் அன்பான கணவன், குழந்தைகள், குடும்பம், பார்டிக்கள் மட்டுமே இல்லை என்றும், ஏழ்மை, தனிமை, ஏமாற்றம், வியாதிகள் எல்லாமே இருக்கும் என்று புரிந்தது. வாழ்க்கை என்ற நாணயத்தின் மறுபக்கத்தைத் தெரியப்படுத்துவது போல் அந்த சூழ்நிலை இருந்தது.

அங்கே பசுமை நிறைந்த மரங்கள் எதுவுமே இல்லை. சிரிப்பு, சந்தோஷம் எதுவுமே இல்லை. மரணதேவதையின் குடியிருப்பாய் அந்த இடம் விளங்கியது. உள்ளே பெரிய ஹால் இருந்தது. ஹால் முழுவதும் வரிசையாக கட்டில்கள்



போடப்பட்டிருந்தன. அவற்றின் மீது இருபது முதல் அறுபது வயது வரையில் இருந்த பெண்கள் படுத்திருந்தார்கள். ஒவ்வொருவரின் வாழ்க்கையும் கஷ்டங்கள், கண்ணீர் நிறைந்த புத்தகம்தான். சிலர் மயக்க நிலையிலேயே ஏதோ உளறிக்கொண்டு இருந்தார்கள். சிலர் நினைவு தப்பிய நிலையில் இருந்தார்கள்.

காவல் அதிகாரியைப் பார்த்ததும் அங்கே இருந்த நர்ஸ் எழுந்து நின்றாள். விக்ரம், பிரியம்வதா இருவரையும் ஹாலில் இரண்டாவது வரிசையில் கடைசியாக இருந்த கட்டில் அருகில் அழைத்துச் சென்றார் ராஜாராம்.

அங்கே கட்டில் மீது ஒரு பெண்மணி படுத்திருந்தாள்.

அவள் பிரியம்வதாவின் வயதை ஒத்தவள் என்றால் யாராலும் நம்ப முடியாது. தலைமுடி நன்றாக நரைத்துவிட்டது. கன்னங்கள் ஒட்டிப்போய், கண்களுக்குக் கீழே கருவளையங்கள் தென்பட்டன. எலும்புக்கூடாய், கட்டிலோடு கட்டிலாய் கிடந்தாள் அந்தப் பெண்.

பிரியம்வதா அதிர்ச்சி அடைந்தவள்போல் அப்படியே நின்றுவிட்டாள்.

இந்த எலும்புக்கூடு மதுராவா? ஒரு காலத்தில் கல்லூரியில் பேரழகியாய் எத்தனையோ மாணவர்களின் மனத்தில் ஏக்கத்தை உண்டாக்கி, சக மாணவிகளின் மனத்தில் பொறாமையைத் தூண்டிவிட்ட அந்த மதுராவும், இவளும் ஒன்றுதானா?

மதுராதான். சந்தேகமே இல்லை.. இளைத்து, துரும்பாகி விட்டாலும் ஜாடை தென்பட்டுக்கொண்டிருந்தது.

"இந்தப் பெண் மதுராதானே?" காவல் அதிகாரி கேட்டார்.

"ஆமாம் மதுராதான்." பிரியம்வதாவின் குரல் தெளிவற்று ஒலித்தது.

பக்கத்து கட்டிலில் இருந்த பெண் இறந்துபோய் அரைமணியாகிவிட்டது. வெள்ளைத் துணியை முழுவதுமாக

போர்த்தி இருந்தார்கள். பிணத்தை எடுத்துப் போவதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும் என்று நர்ஸ் சொல்லிக் கொண்டிருந்தாள். இந்தப் பக்கத்து கட்டிலில் இருந்த பெண் முதல் நாள் இரவே இறந்து போய்விட்டாளாம்.

மதுரா மயக்க நிலையிலேயே இருந்தாள்.

மதுராவை பெயரைச் சொல்லி அழைக்கும்படி ராஜாராம் பிரியம்வதாவிடம் கேட்டுக்கொண்டார்.

"மதுரா..." பிரியம்வதா குனிந்து அழைத்தாள். மதுராவை நெருங்கியபோது குப்பென்று ஏதோ நெடி. புடவைத் தலைப்பால் மூக்கை மூடிக்கொள்ளாமல் பிரியம்வதாவால் இருக்க முடியவில்லை.

மதுரா பதில் சொல்லவில்லை.

"மதுரா.." மறுபடியும் அழைத்தாள்.

"ஊம்." எங்கேயோ கிணற்றுக்குள்ளிருந்து வருவது போல் மதுராவின் குரல் ஒலித்தது.

## 2

இரவு ரொம்ப நேரமாகி விட்டது. வானத்தில் நட்சத்திரங்கள் மினுக் மினுக்கென்று ஜொலித்துக் கொண்டிருந்தன. குளிர்ந்த காற்று ஜன்னல் கர்டென்களை தள்ளிக்கொண்டு உள்ளே வர முயற்சி செய்துகொண்டிருந்தது.

பிரியம்வதா படுக்கை அறையை ஒட்டியிருந்த வராண்டா தூணில் சாய்ந்துகொண்டு நின்றிருந்தாள். இருளில் அவள் உடுத்தியிருந்த வெள்ளை நிறப்புடவையைத் தவிர எதுவும் தென்படவில்லை.

"பிரியா..." படுக்கை அறைக்கு வந்த விக்ரம் அழைத்தான். பிரியம்வதாவுக்கு இந்த அழைப்பு காதில் விழவில்லையோ, விழுந்தாலும் பதில் சொல்லவேண்டும் என்று தோன்றவில்லையோ... அப்படியே மௌனமாக நின்றிருந்தாள்.



"பிரியா!" விக்ரமின் குரல் பதட்டத்துடன் மறுபடியும் ஒலித்தது.

வராண்டா கதவு திறந்திருப்பதை பார்த்துவிட்டு அந்தப் பக்கம் போனான்.

இருளில் சற்றுதொலைவில் தூணில் சாய்ந்துகொண்டு நின்றிருந்த பிரியாவின் உருவம் மங்கலாக தென்பட்டது. ஓசைப் படுத்தாமல் அருகில் சென்றான்.

பிரியம்வதா இந்த உலகத்தில் இல்லாதவளை போல் சூனியத்தை பார்த்துக்கொண்டு நின்றிருந்தாள். நிகழ் காலத்தை மறந்து அவள் மனம் பழைய நினைவுகளில் சிக்கிக்கொண்டு விட்டது போல் இருந்தது.

விக்ரம் பின்னாலிருந்து வந்து மனைவியின் தோள்களைப் பற்றிக்கொண்டான்.

பிரியம்வதா திடுக்கிடவில்லை. மெள்ளமாக அவன் பக்கம் திரும்பினாள்.

"தனியாக இங்கே நிற்பானேன்?" விக்ரம் கேட்டான்.

பிரியம்வதா பேசவில்லை. மேலும் நெருங்கி அவன் மார்பின் மீது தலையை சாய்த்துக்கொண்டாள்.

"பிரியா!" அவன் அழைத்தான். இம்முறை அவன் குரல் தேடுவது போல் இல்லை. நயமாக ஒலித்தது.

"நீ இன்னும் அந்த நினைப்பிலிருந்து மீளவில்லையா?" தாழ்ந்த குரலில் கேட்டான். பிரியம்வதா பதில் சொல்லவில்லை. கண்களை மூடிக்கொண்டாள். விக்ரம் மனைவியின் தலையை ஆதரவுடன் வருடிவிட்டான்.

"உள்ளே போகலாம் வா பிரியா."

பிரியம்வதா மறுப்பது போல் தலையை அசைத்தாள்.

அவன் மௌனமாக நின்றிருந்தான். இது போன்ற சூழ்நிலையில் இருவருக்குமிடையே இது போன்ற மௌனம் பழக்கம்தான். அவனுக்கு பிசிநெஸ் விஷயமாக பிரச்சனைகள், தொந்தரவுகள், ஏமாற்றங்கள் ஏற்படும்போது பிரியம்வதா இது போலவே அவனை அணைத்துக்கொண்டு மௌனமாக இருப்பாள். மொழி தேவையில்லாத சந்தர்பங்கள் அவை. ஒருவர் மனதில் இருக்கும் வேதனை மற்றவருக்குப் புரியும். அதைப் போக்க முடியாத இயலாமையும் தெரியும். அந்த வேதனையை பகிர்ந்து கொள்ளும் முறையும் இதுதான் என்று தெரியும்.

"தனிமை எவ்வளவு பயங்கரமான விஷயம்!'' பிரியம்வதாவின் குரல் தெளிவற்று ஒலித்தது.

"நீ இன்னும் மதுராவைப் பற்றி யோசித்துக்கொண்டு இருக்கிறாய். அப்படித்தானே?"

"வாழ்க்கையில் என்னால் அவளை மறக்க முடியுமா? மதுராவை அதுபோன்ற தீனமான நிலையில் பார்க்க நேர்ந்தது. ரொம்ப துரதிர்ஷ்டம். என்னை அந்த நிலையில் ஊகித்து பார்த்துக் கொண்டால்..."

"பிரியா!" தடுப்பதுபோல் சொன்னான்.

"என்னால் ... என்னால் அந்த நினைப்பை கூட தாங்கிக் கொள்ள முடியவில்லை." பிரியா ஹோவென்று கதறிவிட்டாள்.

விக்ரம் மனைவியை மேலும் நெருக்கமாக அணைத்துக் கொண்டான்.

ரெஸ்டிட்யூட் ஹோமில் மதுராவை பார்த்ததிலிருந்து பிரியம்வதாவின மனம் என்னவோபோல் ஆகிவிட்டது. மதுராவை அடையாளம் கண்டு கொண்டதாகவும், அந்தப் பெண் மதுராதான் என்று உறுதிப் படுத்துவதாகவும் நர்ஸ் சொன்ன இடத்தில் பிரியம்வதா கையெழுத்து போட்டாள்.



பிரியம்வதா, விக்ரம் வீட்டுக்கு வந்து விட்டார்கள். பிரியம்வதா உடைகளை மாற்றிக்கொண்டு வந்து கட்டில் மீது அமர்ந்து கொண்டாள்.

"சாப்பிடுவோம் வா" விக்ரம் அழைத்தான்.

"எனக்குப் பசி இல்லை.'' பிரியம்வதாவின் குரல் கிணற்றிலிருந்து வருவது போல் ஒலித்தது. விக்ரம் மனைவியை ஒரு நிமிடம் கூர்ந்து பார்த்தான். ரொம்ப வேதனை ஏற்பட்டால் தவிர பிரியம்வதா அப்படி உட்கார்ந்து கொள்ள மாட்டாள்.

"ஓ.கே.'' என்று சொல்லிவிட்டு எழுந்து போனான். குழந்தைகளுக்கு உணவளித்து விட்டு வந்தான். வரும் போதே ஒரு தட்டில் தயிர் சாதம் பிசைந்து ஸ்பூன் போட்டு எடுத்து வந்தான்.

கட்டில் மீது அமர்ந்துகொண்டு ஸ்பூனால் தயிர் சாதத்தை எடுத்து "ஊம். வாயைத் திற" என்றான்.

பிரியம்வதா கண்களை உயர்த்திப் பார்த்தாள்.

"நீ சாப்பிட்டுத்தான் ஆகணும்" இல்லாவிட்டால் நானும் சாப்பிடமாட்டேன்.

பிரியம்வதா அப்படியே கண் இமைக்காமல் கணவனை பார்த்துக்கொண்டிருந்தாள்.

பிறகு மெள்ளமாக அவள் கைகள் அசைவு பெற்றன. அடுத்த நிமிடம் அவை அவன் கழுத்தைச் சுற்றி மாலையாக பிணைந்து கொண்டன.

"நாம் ரொம்ப அதிர்ஷ்டசாலி விக்ரம்" என்றாள்.

"அதை இப்பொ நீ சொல்கிறாய். நான் நம் திருமணமான நிமிடமே என்னைப் போன்ற அதிர்ஷ்டசாலி இருக்கமுடியாது என்று நினைத்துக்கொண்டேன். என்னதான் சொல்லு. சில விஷயங்கள் ஆண்களுக்குப் புரியும் அளவுக்கு சீக்கிரமாக பெண்களுக்குப் புரியாது" என்றவன் கையிலிருந்த ஸ்பூனை

நீட்டிக்கொண்டே "இந்த தயிர்சாதத்திற்கு வயிற்றுக்குள் போகும் அதிர்ஷ்டம் இருக்கிறதா இல்லையா?" என்றான். பேச்சை மாற்றி மனைவியை சிரிக்க வைக்க முயற்சி செய்துகொண்டிருந்தான்.

அதற்குள் போன் மணி ஒலித்தது. அவன் போனையும், மனைவியையும் மாறி மாறி பார்த்தான். பிறகு தட்டை பக்கத்தில் இருந்த ஸ்டூல் மீது வைத்து விட்டு ஹாலுக்குப் போனான். வைசாக்லிருந்து போன் வந்தது. அவன் போனில் பேசிக் கொண்டிருந்த போதே காலிங் பெல் ஒலித்தது. பேசி முடித்து விட்டு, போனை வைத்துவிட்டு போய்க் கதவைத் திறந்தான்.

அவனைத் தேடிக்கொண்டு யாரோ வந்திருந்தார்கள். அவன் அவர்களுடன் உரையாடிக்கொண்டிருப்பது பிரியம்வதாவின் காதில் விழுந்தது.

பிரியம்வதா எழுந்து குழந்தைகளின் அறைக்கு வந்தாள். குழந்தைகள் ஆழமாக உறங்கிக்கொண்டிருந்தார்கள். பிரியம்வதா ஒரு நிமிடம் அவர்களையே பார்த்தாள்.

'எனக்கு இவர்கள் இருக்கிறார்கள்' என்ற உணர்வை திரும்பத் திரும்ப நினைவுப்படுத்திக்கொள்ளத் தோன்றியது. கட்டில் மீது அனாதையாகக் கிடந்த மதுராவின் உருவம் கண்களுக்கு முன்னால் நிழலாடியது.

கல்லூரி ஆண்டு விழாவின்போது மதுரா பிச்சைக்காரக் கிழவியாக வேடம் போட்டு முதல் பரிசை தட்டிச்சென்றாள். அப்பொழுது எடுத்த போட்டோக்களை மதுரா தன்னுடைய தாயிடம் காட்டிய போது "வேறு வேடமே கிடைக்காதது போல் பிச்சைக்காரி வேடம் போடுவானேன்?" என்று மகளைத் திட்டினாள். "அந்த போட்டோக்களை என் கண்ணில் காட்டாதே. தீயிட்டு கொளுத்து முதலில்." காச் மூச் என்று கத்தினாள். அன்று தானும், மதுராவும் சேர்ந்து நகைத்தது இன்னும் நினைவில் இருக்கிறது. மதுரா விளையாட்டுக்காக போட்ட மாறுவேடமே அவள் வாழ்க்கையாக முடிந்துவிட்டது.



பிரியம்வதாவால் மேலும் அங்கே நிற்க முடியவில்லை. அங்கிருந்து வராண்டாவுக்கு வந்தாள். எதிரே காரிருள். தொலைவில் மினுக் மினுக்கென்று ஏழையின் விருப்பத்தை போல் மின்னும் நட்சத்திரங்கள்.

பிரியம்வதா ஆழமாக மூச்சை எடுத்துக்கொண்டாள். இன்று தான் இவ்வளவு அமைதி நிறைந்த, மகிழ்ச்சியான வாழ்க்கையை அனுபவித்து வருகிறாள் என்றால் அதற்கு அஸ்திவாரம் மதுராவின் நல்லதனம்தான்.

மதுரா தன் ஒருத்திக்கு மட்டுமே இல்லை. தன்னைப் போன்ற எத்தனையோ பேருக்கு உதவி செய்திருக்கிறாள். மற்றவர்களின் வாழ்க்கையை சீரமைத்துத் தந்த மதுராவால் தன்னுடைய வாழ்க்கையை சரியாக அமைத்துக்கொள்ள முடியவில்லை.

நல்ல தனத்தைத் தவிர சாமர்த்தியம் இல்லாதவர்களின் வாழ்க்கை எந்த விதமாக மாறுமோ மதுராவின் வாழ்க்கையே ஒரு எடுத்துக்காட்டு.

பிரியம்வதாவுக்குக் கணவனின் அணைப்பு ஒரு கோட்டையின் சுவராய் பாதுகாப்பு தருவது போல் இருந்தது. அவனுடைய தொடுகை, சூடான மூச்சுக் காற்று, அவன் உடலிலிருந்து மெலிதாக வீசும் ஆண்மைக் கலந்த நறுமணம்... இவையெல்லாம் அவளுக்கு ஏற்கனவே பழக்கம் தான் என்றாலும், இன்றுதான் அவற்றை புதிதாக உணர்ந்து கொண்டது போல், இந்த கணத்தில்தான் அந்த சுகத்தை பெறுவது போல் தோன்றியது.

"பிரியா... இப்படிவா. உட்கார்ந்து கொள்வோம்." விக்ரம் மனைவியின் இடுப்பைச் சுற்றிலும் கையைப் போட்டு அழைத்துச் சென்று அங்கே இருந்த ஊஞ்சல் பலகையின் மீது உட்காரவைத்து தானும் உட்கார்ந்துகொண்டான். பிரியவதாவின் தலை இன்னும் அவன் தோளில் சாய்ந்துதான் இருந்தது.

விக்ரம் தாழ்ந்த குரலில் நயமாக எடுத்துச்சொன்னான். "பிரியா! நீ புத்திசாலி, நன்றாகப் படித்தவள். வாழ்க்கையைப் பற்றி, அதிர்ஷ்டத்தைப் பற்றி உனக்குத் தனியாக சொல்ல வேண்டியது இல்லை. நீ இப்படி வேதனைப்படுவதால், உனக்குள் நீயே குன்றிப் போவதால் ஏதாவது பிரயோஜனம் இருக்கிறதா? நீயே சொல்லு."

"என்னங்க... ஒரு விஷயம் கேட்கட்டுமா?"

"என்னம்மா... சொல்லு."

"நாம்... நாம் மதுராவை வீட்டுக்கு அழைத்து வருவோமா?"

அவனையும் அறியாமல் அவன் உடல் விரைப்பாக மாறியது. ஆனால் உடனே சமாளித்துக்கொண்டான். பிறகு அன்பு ததும்பும் குரலில் சொன்னான்.

"இந்த வார்த்தையைச் சொல்வதற்கு நீ இவ்வளவு தயங்க வேண்டுமா?" மதுராவை வீட்டுக்கு அழைத்துப் போவோம் என்று அங்கேயே ஒரு வார்த்தையைச் சொல்லியிருந்தால், உடனே சிஸ்டரிடம், ராஜாராமிடம் பேசி ஏற்பாடு செய்திருப்பேன் இல்லையா?"

"எனக்கு ரொம்ப பதட்டமாக இருந்தது. எந்த யோசனையும் ஓடவில்லை. மதுராவை அந்த நிலையில் பார்த்தபோது எனக்கு மூளையே கலங்கி விட்டது."

"அதை என்னால் உணர்ந்து கொள்ள முடியும்." தெளிவான குரலில் சொன்னான்.

"வீட்டுக்கு வந்தது முதல் என் மனம் அமைதியின்றி தவிக்கிறது. மதுராவின் நிலைமை தெரிந்த பிறகு அவளை இப்படி தனியாக, யாருமே இல்லாத அனாதையைப் போல் விட்டுவிட என் மனம் ஒப்பவில்லை. நீங்க தவறாக நினைக்கமாட்டீர்கள் இல்லையா?"



"மாட்டேன். அப்படி நினைத்தால் உனக்குக் கணவன் என்று சொல்லிக் கொள்ளும் தகுதி எனக்கு இருக்காதோ என்னவோ. கட்டாயம் அழைத்து வருவோம் பிரியா! ஒரு விஷயம் கேட்கட்டுமா?"

"என்னங்க?"

"மதுராவைப் பற்றி நீ என்னிடம் என்றுமே சொன்னது இல்லையே?"

"சொல்ல வேண்டிய தேவை ஏற்படவில்லை."

"அப்படின்னா?"

"நான் இன்று இப்படி இருப்பதற்கும், என் படிப்புக்கும், சமுதாயத்தில் இன்று எனக்குக் கிடைத்த அங்கீகாரத்திற்கும், நீங்க என்னைத் திருமணம் செய்துகொள்ளும் நிலையில் நான் இருந்ததற்கும்... எல்லாவற்றுக்கும் காரணம் மதுராதான்."

மனைவியை இறுக்கமாக அணைத்திருந்த விக்ரமின் கைகள் அவனறியாமல் தளர்ந்தன. புரியாதவன்போல் மனைவியை வித்தியாசமாக பார்த்தான். பிரியம்வதா ஊஞ்சல் பலகையிலிருந்து எழுந்து தொலைவாக போய் நின்றுகொண்டாள்.

"மதுராவுக்கு எந்த அளவுக்கு நன்றிக்கடன்பட்டிருக்கிறேனோ என் ஒருத்திக்குத்தான் தெரியும். எனக்கு பன்னிரண்டு வயது ஆகும்போது மதுராவின் அறிமுகம் ஏற்பட்டது. அப்பொழுது என் வாழ்க்கை, இதோ... இந்த வானத்தை போல் இருட்டாக இருந்தது. நன்றாக படிக்க வேண்டும் என்றும், பத்து பேருக்கு நடுவில் தலைநிமிர்ந்து நடமாட வேண்டும் என்றும், என் மனதில் எண்ணங்கள் அதோ... அந்த நட்சத்திரங்கள் போல் மின்னிக் கொண்டிருந்தன. சேற்றில் பிறந்த தாமரையாய் எந்த களங்கமும் இல்லாமல் வாழ்க்கையில் முன்னேறிவிட்டேன். நன்றாக பராமரிக்கப்பட்ட

தோட்டத்தில் அபூர்வமாக இருக்கும் ரோஜாவை போல் வளர்ந்த மதுரா, வாழ்க்கையை முழுவதுமாக அனுபவிக்காமலேயே, பழுத்த இலையாய் உதிர்ந்து போவதற்கு தயாராக இருக்கிறாள். மதுரா என்னை விட புத்திசாலி என்னை விட பல மடங்கு உயர்ந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள்.

எங்க இருவரின் கதையைக் கேட்டால் வாழ்க்கை என்பது விதியின் விளையாட்டு என்பீர்களோ, முன் ஜென்மத்தில் செய்த பாவ புண்ணியத்தின் விளைவு என்பீர்களோ, சுயமாக செய்து கொண்டது என்பீர்களோ தெரியாது. எப்படி எடுத்துக் கொண்டாலும் உங்கள் விருப்பம்.

என்னுடைய அப்பா முஸ்லீம். அம்மா இந்து மதத்தைச் சேர்ந்தவள். அவ்விருவருடையது காதல் திருமணம். அவர்களுடைய திருமண வாழ்க்கையின் அடையாளமாக நான் பிறந்தேன். என் சிறுவயதிலேயே அப்பா அம்மா இறந்து போய்விட்டார்கள். அம்மாவின் பக்கத்து உறவினர்கள் என்னை வளர்ப்பதிலோ, ஆதரவுக் காட்டுவதிலோ விருப்பம் காட்டவில்லை. அப்பாவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்கனவே ஏழ்மையில் இருந்தவர்கள், அவர்களுக்குள்ளேயே ஆயிரம் சண்டை சச்சரவுகள் இருந்தன. என்னைப்பற்றி கவலைப்பட வேண்டிய தேவையோ, எண்ணமோ அவர்களுக்குக் கொஞ்சம்கூட இருக்கவில்லை. என்னுடைய அம்மா பக்கத்து வீட்டில் இருக்கும் ஜோசப் அங்கிளிடம் என்னை ஒப்படைத்து பாட்டி, தாத்தாவிடம் சேர்பிக்கச் சொல்லி கேட்டுக்கொண்டாள். அப்பொழுது எனக்கு எட்டு அல்லது ஒன்பது வயது இருக்கலாமோ என்னவோ. விவரம் தெரியாத வயது. அதுவரையில் எனக்குத் துணையாக, பாதுகாப்பாக இருந்து வந்த அம்மா ஒரு நாள் திடீரென்று மாய மாகிவிட்டாள்.

ஒரு இரவு நேரம். டாக்டர் வந்து பார்த்தார். "அம்மா இறந்து விட்டாள்" என்றார்.

எனக்குப் புரியவில்லை.



"அம்மாவின் உடல் முழுவதும் வெள்ளைத் துணியை போர்த்தி விட்டார்கள். அக்கம் பக்கத்தில் இருக்கும் மக்கள் கும்பல் கும்பலாக ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்கள். எனக்கு பயமாக இருந்தது.

அதுவரையில் நான் மரணத்தை பார்த்ததில்லை. மனிதர்கள் இறந்து போவார்கள் என்று எனக்குத்தெரியாது. யார் யாரோ வந்து போய்க்கொண்டிருந்தார்கள். அம்மாவிடம் எந்த அசைவும் இல்லை. பேசவும் இல்லை.

"அம்மா!" கட்டில் அருகில் ஓடப் போனேன். அதற்குள் ஜோசப் அங்கிள் என்னைத் தடுத்து, அம்மாவிடம் போகாமல் பலமாக பிடித்துக்கொண்டார். வலுக்கட்டாயமாக என்னை அவர்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அம்மாவிடம் போக வேண்டும் என்று முரண்டு, பிடிவாதம் பிடித்து அழுதேன்.

குடிக்க தண்ணீர் கொடுத்தார். சமர்த்தாக குடித்துவிட்டால் அம்மாவிடம் அழைத்துப் போவதாக சொன்னார். உடனே டம்ளரை இரண்டு கைகளால் பிடித்துக்கொண்டு மளமளவென்று குடித்துவிட்டேன். ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் நல்ல உறக்கம் வந்து விட்டது. நன்றாக தூங்கிவிட்டேன்.

மறுநாள் காலையில் எனக்கு விழிப்பு வரும்போது நன்றாக விடிந்து விட்டது. கண்களைத் திறந்து பார்க்கும்போது ஜோசப் அங்கிள் வீட்டு கயிற்றுக்கட்டிலில் படுத்திருந்தேன். சட்டென்று எழுந்து எங்கள் வீட்டுப் பக்கம் ஓடினேன். வீட்டின் முன்னால் மக்கள் கும்பலாக இருந்தார்கள். அவர்களைத் தள்ளிக்கொண்டு உள்ளே போனேன். யாருமே என்னை கவனிக்கவில்லை. நான் போகும்போது அம்மாவை மூங்கில்பாடையில் கிடத்தியிருந் தார்கள். நான்கு ஆட்கள் பாடையை தோளில் தூக்கிக் கொண்டார்கள்.

"அம்மா!" கத்திக்கொண்டே அருகில் ஓடினேன். அங்கேயே இருந்த ஜோசப் அங்கிள் சட்டென்று திரும்பினார். "நீயா!" என்று சொல்லிக்கொண்டே என்னைப் பிடித்துக் கொண்டார்.

"அம்மா... அம்மா... அவங்க யாரோ அம்மாவை தூக்கிக்கிட்டு போறாங்க." பயத்தால் பெரிதாக அழுது கொண்டிருந்தேன். அவருடைய பிடியிலிருந்து விடுப்பட்டு அம்மாவிடம் ஓடுவதற்கு முயற்சி செய்தேன். ஆனால் ஜோசப் அங்கிள் பிடியை தளர விடவில்லை.

"அம்மா... அம்மா..." நான் அழுதுகொண்டே இருந்தேன்.

அம்மா பிறகு என் கண்ணில் படவேயில்லை. அவள் எங்கே போனாள் என்று யாருமே என்னிடம் சொல்லவும் இல்லை. ஜோசப் அங்கிள் என்னை தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

எப்போதும் அம்மாவின் புடவைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு சுற்றுவதுதான் என் பழக்கமாக இருந்தது. அம்மாதான் எனக்கு உணவை ஊட்டி விடவேண்டும்.

காலையில் எழுந்ததும் "அம்மா!" என்று குரல் கொடுப்பேன். அம்மா வந்து நெற்றியில் முத்தம் கொடுத்த பிறகுதான் கண்களைத் திறப்பேன்.

என்னிக்காவது அம்மாவுக்கு வேலை இருந்து,

"எழுந்து வாம்மா." என்று கெஞ்சினாலும். மறுத்துவிட்டு அப்படியே கண்களை மூடி படுத்திருப்பேன். அம்மா கை வேலையை விட்டுவிட்டு அருகில் வந்து என்னை எழுப்பி விடுவாள்.

தலைவாரி பின்னிக்கொள்வது! எப்படி என்று ஒரு நாள் எனக்குக் கற்றுத்தந்தாள். அம்மாவின் பின்னலை அவிழ்த்து தலையை வாரி பின்னி விடுவேன். சின்னக் குழந்தையை போல் சமர்த்தாக தலையைக் குனிந்துகொண்டு தலையை காட்டுவாள்.

அம்மாவை விட்டு ஒரு நிமிடம் கூட நான் இருந்தது இல்லை.

அப்படிப்பட்டவள் வேற்று மனிதரான ஜோசப் அங்கிள் வீட்டில் அம்மா இல்லாமல் காலத்தைக் கழிக்க வேண்டியதாகி விட்டது."

# 3

ஜோசப் அங்கிளுக்கு உடனே என்னை தாத்தாவின் ஊருக்கு அழைத்துப் போகமுடியவில்லை. சுமார் ஒரு மாதம் அவர்கள் வீட்டிலேயே தங்கிவிட்டேன். அந்தக் குடும்பத்தில் எல்லோரும் என்னை அன்புடன் நடத்தினார்கள். உணவு விஷயத்தில் நான் ரொம்ப கூச்சப்படுகிறேன் என்று தெரிந்துகொண்டு வற்புறுத்தி நன்றாக சாப்பிடும்விதமாக பார்த்துக்கொண்டார்கள். அவருடைய மகள் ரோஸீ தன்னுடைய பொம்மைகளை என்னிடம் தந்தாள். தன்னுடன் விளையாடச் சொல்லி அழைத்தாள். நான்தான் போக மறுத்துவிட்டேன். எனக்கு எப்போதும் அம்மாவின் நினைவுதான். அம்மா கடவுளிடம் சென்று விட்டாள் என்று ஜோசப் அங்கிள் தெரிவித்தார். தினமும் இரண்டு வேளையும் பிரார்த்தனை செய்யும் பழக்கத்தை கற்றுத் தந்தார். பிரார்த்தனை முடிவில் "தேவனே! அம்மாவை என்னுடன் சேர்த்துவைத்து என்மீது கருணை காட்டு" என்று மனதிற்குள் வேண்டிக்கொள்வேன்.

இந்த ஒரு மாத காலத்திற்குள் அந்த வீட்டாருடன் நன்றாக பழகிவிட்டேன். முன்பு இருந்த தயக்கமும் கூச்சமும் போய் இயல்பாக இருக்கத் தொடங்கினேன்.

ஜோசப் அங்கிள் ஒரு நாள் பள்ளியிலிருந்து வரும் போதே என்னை துணிமணிகளை எடுத்து வைத்துக்கொள்ளச் சொன்னார். "உன்னுடைய தாத்தாவின் ஊருக்குப் போகப் போகிறோம்" என்றார். "என்னுடைய உடைகளை ஒரு பையில் எடுத்து வைத்துக்கொண்டு பயணத்திற்கு தயாராகி விட்டேன். ஜோசப் அங்கிளின் மனைவி என் கழுத்தில் சிலுவை லாக்கெட் இருந்த ரோல்ட் கோல்ட் செயினை அணிவித்தாள். நானும்,

அங்கிளும் ஒரு நாள் முழுவதும் பயணம் செய்து தாத்தாவின் ஊருக்குப் போனோம். காவேரி நதியின் கரையில் அந்தக் கிராமம் அமைந்திருந்தது. பஸ்ஸில் போகும்போது சாலைக்கு இரு பக்கமும் வாய்க்கால்களில் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. வாய்க்கால் கரையில் வரிசையாக தென்னையும், வாழையும் செழிப்பாக வளர்ந்திருந்தன. நான் விரித்த கண்களை மூடாமல் அவற்றையே பார்த்துக்கொண்டிருந்தேன். பட்டணத்தில் குறுகலான தெருக்கள், நெருக்கமாக தீப்பெட்டிகளைப் போல் கட்டப்பட்ட வீடுகள், வாளியில் தண்ணீரை பிடித்துவைத்துக் கொண்டு அது கிடைத்ததே பெரும் பாக்கியமாக நினைக்கும் தண்ணீர் பற்றாக்குறையிலிருந்து வந்த எனக்கு இந்தச் சூழ்நிலை... முக்கியமாக அந்த வாய்க்கால், ஏதோ வேறு உலகத்திற்கு வந்துவிட்டது போல் தோன்றியது.

பள்ளிப் பாளையத்திற்கு வந்து சேர்ந்தோம். தாத்தாவின் வீட்டைத் தேடிக்கொண்டு போனோம். தாடி, மீசையுடன் நடுத்தர வயது கடந்த நபர் ஒருவன் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். உள்ளே என்ன வேலை செய்து கொண்டிருந்தானோ, உடல் முழுவதும் வியர்வை வழிந்து கொண்டிருந்தது. பேசும் போது மூச்சு இரைத்துக்கொண்டிருந்தது. வேட்டியை மடித்துக் கட்டியிருந்தான். முகம் கோபத்தினால் ஜிவு ஜிவு என்று இருந்தது.

ஜோசப் அங்கிள் என்னை அவரிடம் காண்பித்துக் கொண்டே உரையாடலைத் தொடங்கினார். அந்த இருவருக்கும் நடுவில் உரையாடல் மூலமாக நான் புரிந்துகொண்டது என்னவென்றால், என்னுடைய பாட்டி இறந்து போய் விட்டாளாம். கடன் தொல்லை அதிகமாகிவிட்டதால் தாத்தா யாரிடமும் சொல்லாமல் வீட்டை விட்டு போய் விட்டாராம்.

"இந்தப் பெண்ணை இங்கே விட்டுவிட்டு போவதற்காக வந்திருக்கிறேன்." ஜோசப் அங்கிள் சொன்னார்.



"இந்தப் பெண்ணின் பொறுப்பை நான் எதற்காக ஏற்றுக் கொள்ள வேண்டும்?"

"உங்களுடைய தங்கையின் மகள் இல்லையா?"

"என்னுடைய தங்கையா! என்னிக்கு அந்த துலுக்கப் பயலுடன் ஓடிப் போனாளோ அன்னிக்கே எங்களைப் பொறுத்த வரையில் அவள் செத்துப் போய்விட்டாள்."

"உங்கள் தங்கை ஓடிப் போகவில்லை. பதிவுத் திருமணம் செய்துகொண்டாள்."

"பதிவுத் திருமணம்! எங்கள் மனதை ரணமாக்கிவிட்டு தன்னுடைய சந்தோஷத்தை அவள் தேடிக்கொண்டாள். எங்களுடைய வயிற்றெரிச்சல் சும்மா போகுமா? அதான் ஆயுசு முடியாமலேயே அவனும் செத்தான். இவளும் போய்ச் சேர்ந்தாள். எங்களுக்கும் சனி விட்டது."

"இறந்து போனவர்களை சாடுவதில் எந்த பிரயோஜனமும் இல்லை.. இதோ... இந்தப் பெண் பிரியம்வதா உங்களுடைய தங்கையின் மகள். உங்களிடம் ஒப்படைப்பதற்காக வந்தேன். என் வேலை முடிந்துவிட்டது. நான் கிளம்புகிறேன்." என்றார் ஜோசப் அங்கிள்.

"இங்கே விடக் கூடாது" கத்தினார் அவர், போகிற வழியில் காவேரியில் தள்ளிவிட்டுப் போங்க. "ஜாதி கெட்டபெண்ணை எங்கள் வீட்டில் சேர்ப்பதாவது?"

"பத்து வருடங்கள் நீங்க இந்தப் பெண்ணுக்கு ஆதரவு தந்தால் பிறகு கடவுள் ஒரு நல்ல வழியை அவளுக்குக் காட்டாமல் போக மாட்டார்." ஜோசப் அங்கிள் நயமாக எடுத்துச் சொல்ல முயன்றார்.

அந்த ஆள் எரிந்து விழுந்தான். "நன்றாக சொற்பொழிவு ஆற்றுகிறாய்."

"நான் போய்விடுகிறேன்."

"நில்லு. அந்தப் பெண்ணையும் அழைத்துக்கொண்டு போ."

"திரும்ப அழைத்துப் போவதற்காக வரவில்லை. இங்கே விட்டுவிட்டுப் போகத்தான் வந்தேன்."

"இன்னிக்கு எனக்கு விடிந்த வேளை சரியில்லை. இந்தப் பீடையை என் தலையில் கட்டிவிட்டு போகிறேன் என்று சொன்னால் நான் என்ன செய்யட்டும்? எனக்கும் இந்தப் பெண்ணுக்கும் எந்த உறவும் இல்லை. நீ என்ன வேண்டு மானாலும் செய்து கொள்."

"எனக்கு எதுவும் தெரியாது. உங்கள் தங்கை உங்களிடம் ஒப்படைக்கச் சொன்னாள். ஒப்படைத்து விட்டேன், என் கடமை முடிந்து விட்டது."

"என்னுடைய அம்மா என்னிக்கோ இறந்து போய் விட்டாள். அப்பா வீட்டை விட்டு போய் விட்டார். இந்தப் பெண்ணின் பொறுப்பை நான் எதற்காக ஏற்றுக்கொள்ளணும்?"

"அதெல்லாம் எனக்குத்தெரியாது. உங்கள் தங்கை சொன்னபடி செய்துவிட்டேன். நான் கிளம்புகிறேன்." ஜோசப் அங்கிள் குடையை மடக்கி கையில் எடுத்துக்கொண்டு கிளம்ப முற்பட்டார். ஓடிப்போய் அவருடைய கையைப் பற்றிக் கொண்டேன். "அங்கிள்! நான் இங்கே இருக்க மாட்டேன். உங்களுடன் வந்து விடுகிறேன்." அழுதுகொண்டே சொன்னேன். மீசைக்காரரை பார்த்தாலே என் உடல் முழுவதும் நடுங்கிக்கொண்டிருந்தது.

ஜோசப் அங்கிள் என் கண்களைத் துடைத்தார்.

"இதோ பார் குழந்தாய். அழாதே, இதுதான் உன்னுடைய இடம். இந்த ஊர் முழுவதும் உன்னுடைய உறவினர்கள்தான். உன் அம்மாவுக்கு தெரிந்தவர்கள்தான், யாராவது இரக்கப்பட்டு உனக்கு ஆதரவு தராமல் இருக்க மாட்டார்கள். உன்மாமா அப்படிப் பேசுகிறாரே தவிர நல்லவர்தாம்மா."



"எனக்கு பயமாக இருக்கிறது."

"புதுஇடம் இல்லையா. அதான் பயப்படுகிறாய். எங்க வீட்டிலும் முதல் முதலில் பயமாக இருந்தது. போகப் போக நன்றாக பழக ஆரம்பித்தாய். இந்த இடமும் உனக்கு பழகிவிடும்., ஊருக்கு போனதும் உனக்குக் கடிதம் எழுதுகிறேன். நானும், ஆன்டியும், ரோஸியும் சேர்ந்து உன்னைப் பார்க்க வருவோம். நீ பயப்பட வேண்டிய தேவையில்லை. பஸ்ஸுக்கு நேரமாகிறது. நான் வரட்டுமா."

"நானும் வருகிறேன்." அழுதுகொண்டே சொன்னேன்.

அவர் என் தலையை வருடிக்கொண்டே சொன்னார். "இதோ பார் பிரியா. அந்த ஏசு பிரபு இருக்கிறார் இல்லையா, அவர் மேலிருந்து நம்மை எப்போதும் பார்த்துக்கொண்டே இருப்பார். நமக்கு எந்த ஆபத்தும் வராமல் பாதுகாப்பு தருவார்."

அவர் பேசியது எதுவும் எனக்குப் புரியவில்லை. ரொம்ப பதட்டமாக இருந்தது. பயத்தினால் என் கால்கள் வெடவெட என்று நடுங்கிக்கொண்டு இருந்தன.

ஜோசப் அங்கிள் சற்றுகுனிந்து குரலை தாழ்த்திக்கொண்டு என் காதில் ரகசியமாக சொன்னார். "இதோ பாரு குழந்தே. நான் இங்கிருந்து போனதும் நீ போய் அந்தத் திண்ணையில் உட்கார்ந்துகொள். அவர்களே உன்னை உள்ளே அழைப்பார்கள். அடுத்த ஞாயிறு அன்று ரோஸியை அழைத்துக்கொண்டு உன்னைப் பார்க்க வருகிறேன். சரிதானே"

"நான் உங்களோடு வந்துவிடுகிறேன் அங்கிள்" கண்ணை கசக்கிக்கொண்டே சொன்னேன்.

"திரும்பத் திரும்ப அதே பேச்சு பேசக் கூடாது. நீ என்னுடன் வரக்கூடாது. இங்கேதான் இருக்க வேண்டும். புரிந்ததா!" கோபத்தினால் அவர் குரல் கொஞ்சம் உயர்ந்தது.

நான் திகைத்துப் போய், அதிர்ச்சியுடன் நின்று விட்டேன்.

அவர் என்ன நினைத்துக்கொண்டாரோ என்னவோ, மறுபடியும் நயமான குரலில் சொன்னார். "உனக்கு அம்மாவை ரொம்ப பிடிக்கும் இல்லையா."

"ஆமாம்." அழுதுகொண்டே சொன்னேன்.

"அப்படியானால் நீ இங்கேதான் இருக்க வேண்டும். ஏன் தெரியுமா? உன் அம்மாவுக்கு நீ இங்கே இருந்தால்தான் பிடிக்கும். மாட்டேன்னு சொன்னால் அம்மாவுக்குக் கோபம் வந்துவிடும். பிறகு உன்னிடம் வரவே மாட்டாள். நான் கிளம்புகிறேன். அதோ... பஸ் வந்து விட்டது. சொல்லிக் கொண்டே அவர் ஓடினார். பஸ்ஸில் ஏறிவிட்டார். பஸ் ரொம்ப கூட்டமாக இருந்தது. அங்கிள் ஏறிக்கொண்டதும் பஸ் புறப்பட்டுவிட்டது.

விசும்பி விசும்பி அழுதுகொண்டு அங்கேயே ரொம்ப நேரம் நின்றிருந்தேன். ரொம்ப களைப்பாக இருந்தது. பின்னால் திரும்பி பார்த்தேன். அந்த வீட்டில் யாரையும் எனக்குத் தெரியாது. ஜோசப் அங்கிள் சொன்னது என் நினைவுக்கு வந்தது. அம்மாவுக்கு நான் இருந்தால்தான் பிடிக்குமாம். அப்படி இருந்தால்தான் என்னிடம் வருவாளாம். இங்கேதான் நான் இருந்தாகவேண்டும்.

சோர்வும், பசி மயக்கமும் சேர்ந்துகொண்டதால் என்னால் நிற்கக்கூட முடியவில்லை. எப்படியோ நடந்து வந்து திண்ணை மீது உட்கார்ந்துகொண்டேன். யாரும் என்னுடன் பேசவில்லை. ஜோசப் அங்கிள் இருக்கும்போதே அந்த மீசைக்காரர் உள்ளே போய் கதவைச் சாத்திக்கொண்டு விட்டார். மறுபடியும் திறக்கவே இல்லை. நான் உட்கார்ந்திருந்த திண்ணையை ஒட்டி ஜன்னல் இருந்தது. உள்ளே இருந்து சிரிப்பு சத்தம், பேச்சுகுரல் கேட்டுக் கொண்டிருந்தது. நான் அப்படியே உட்கார்ந்திருந்தேன். வெய்யில் ரொம்ப தீவிரமாக இருந்தது. மதியம் ஆகிவிட்டது. எனக்கு பசியாக இருந்தது. என்ன செய்வதென்று புரியவில்லை. எதிரில் அணில் ஒன்று கொய்யா பழத்தை தின்று



கொண்டிருந்தது. சின்ன கல்லை எடுத்து அதன் மீது வீசினேன். அணில் ஓடிவிட்டது. கொய்யா பழம் கீழே விழுந்துவிட்டது. நான் ஓடிப்போய் அதை எடுத்துக் கொண்டேன். மண்ணை தட்டிவிட்டு, இரண்டு கைகளாலேயும் பழத்தை பிடித்துக் கொண்டு சாப்பிடும்போது, போன உயிர் மறுபடியும் மீண்டு வந்தது போல் தோன்றியது சீக்கிரமாக சாப்பிட்டால் தீர்ந்துவிடுமே என்று மெதுவாக சாப்பிடத் தொடங்கினேன். எவ்வளவு மெதுவாக சாப்பிட்டாலும் பழம் தீர்ந்துவிட்டது. பசி இன்னும் அடங்கவில்லை. மேலும் அதிகமாகிவிட்டது. நேரம் பாட்டுக்கு போய்க்கொண்டிருந்தது. தூக்கம் கண்களை சுழற்றிக்கொண்டு வந்தது.

திடீரென்று அந்த வீட்டுக் கதவுகள் திறந்துகொண்டன. கருப்பாக, பெருமனாக இருந்த பெண்மணி ஒருத்தி அந்தவீட்டிலிருந்து வெளியே வந்தாள். மீசைக்காரரும் அவள் பின்னாலேயே வந்தார். ஏதோ சொல்லிக்கொண்டே அவள் கன்னத்தில் லேசாக தட்டினார். அந்தப் பெண் அவருக்கு பழிப்பு காட்டினாள்.

"எங்க வீட்டு பிசாசு வந்து விடுவாள். இனி நீ கிளம்பு மீசைக்காரர் அவளை சீக்கிரமாக அனுப்பி வைப்பதிலேயே குறியாக இருந்தார்.

"மீசை நரைத்தாலும் ஆசை போகவில்லை. இதில் பெண்டாட்டிக்கு பயப்படுவானேன்?" நக்கலாக சொல்லிவிட்டு அவள் போய்விட்டாள். அவர் உள்ளே போய் கதவைச் சாத்திக் கொண்டார். நான் அப்படியே உட்கார்ந்திருந்தேன்.

சற்று நேரம் கழித்து அந்த வீட்டின் முன்னால் மாட்டு வண்டி ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து சற்று பெருமனாக, பெரிய குங்குமப் பொட்டுடன், கை நிறைய வளையலுடன் பட்டுப் புடவை அணிந்திருந்த ஒரு அம்மாள் இறங்கினாள். சாமான்களை இறக்கி வைத்துக்கொண்டே "எங்கே போய்

தொலைந்தீங்க எல்லோரும்" என்று பெரிதாக கத்தினாள். அந்தக் குரலை கேட்டதும் மீசைக்காரர் கதவைத் திறந்து கொண்டு வந்தார். நல்ல உறக்கத்திலிருந்து எழுந்து வந்தவர் போல் தென்பட்டார்.

அந்த அம்மாள் அவரை ஏற இறங்க பார்த்துவிட்டு "வயலுக்குப் போகாமல் இந்த நேரத்தில் தூங்குவானேன்?" என்று கேட்டாள்.

"நேற்று இரவு சரியாக தூங்கவில்லை. பயணம் நன்றாக இருந்ததா?" மீசைக்காரர் கேட்டார். இப்பொழுது அவருடைய குரல் பூனைக்குட்டியின் குரலைப் போல் இருந்தது.

"பஸ்டயர் பஞ்சர் ஆகி அரைமணிநேரம், இஞ்சின் கெட்டுப் போய் ஊருக்கு வெளியில் மூன்று மணி நேரம் காத்துக்கொண்டு இருந்தோம். உடம்பு செத்து சுண்ணாம்பாகிவிட்டது." எரிந்து விழுந்தாள்.

"நாளைக்குத்தானே வருவதாகச் சொன்னாய்?"

"சொன்னேன். வேலை முடிந்து விட்டது. கிளம்பி வந்து விட்டேன். ஏன் உங்களுக்கு ஏதாவது பிரச்னையா? குழந்தைகள் எங்கே?"

"சித்தப்பா வீட்டுக்கு போயிருக்காங்க."

"வீட்டை விட்டு எங்கேயும் போகக்கூடாது என்று சொல்லிவிட்டு போயிருந்தேனே. அதையும் மீறி போனாங்களா?" வரட்டும் காலை ஒடிக்கிறேன்.

"அடடா. வீட்டில் இன்னும் நுழையக்கூட இல்லை. அதற்குள் இப்படி சத்தம் போட வேண்டுமா?"

அந்த அம்மாள் "என்ன? உங்களிடமிருந்து ஏதோ பழ வாசனை வருகிறதே. குடித்தீங்களா என்ன?" என்று கேட்டுக் கொண்டே மோப்பம் பிடிப்பது போல் அவரை நெருங்கினாள்.

அவர் சட்டென்று பின்னால் நகர்ந்து "நீ ரொம்பதான் பேசுகிறாய்" என்று வீட்டுக்குள் போகப் போனார்.



பின்னாலேயே போகப்போன அந்த அம்மாள் என்னைப் பார்த்ததும் நின்று விட்டாள்.

"யாரிந்த பெண்?" சந்தேகமாக பார்த்துக்கொண்டே கேட்டாள்.

"என் தங்கை லக்ஷ்மியின் மகள். ஜோசப் என்று ஒரு ஆள் கடிதம் எழுதியிருந்தார் இல்லையா?"

"நாம்தான் அழைத்து வரவேண்டாம் என்று பதில் போட்டு விட்டோமே."

"பதில் போட்டோம்., ஆனால் அவங்க அதை சீரியஸாக எடுத்துக்கொள்ளவில்லை. அந்தப் பெண்ணை அழைத்து வந்து வாசலில் விட்டுவிட்டு போய்விட்டான்."

அந்த அம்மாள் இடுப்பின்மீது கையை வைத்துக்கொண்டு "அவன் விட்டுவிட்டுப் போனால், நீங்க வாயைப் பிளந்து கொண்டு பார்த்துக்கிட்டு சும்மா இருந்தீங்களா" என்று கத்தினாள்.

நான் சும்மா ஒன்றும் இருக்கவில்லை. துரத்தி விட்டேன். காவேரியில் கடாசி விட்டு போய்க்கொள் என்று கச்சிதமாக சொன்னேன். திரும்ப அழைத்துக்கொண்டு போய் விடுவார் என்றுதான் நினைத்தேன். நான் உள்ளே போய்விட்டேன்.

"அப்படி குடி முழுகிப் போகிற காரியம் என்ன இருந்தது வீட்டில்? ஏன்? அந்தக் கழுதை மறுபடியும் வந்தாளா?"

"இல்லவே இல்லை. சத்தியமாகச் சொல்கிறேன்." தலைமீது கையைவைத்து சத்தியம் செய்தார்.

"இவளை என்ன செய்யப்போறீங்க?" என்னைச் சுட்டிக் காட்டினாள்.

"அதுதான் எனக்கும் தெரியவில்லை."

"வீட்டில ஒரு வேளை நான் இல்லை என்றால் ஏதாவது பிரச்னை வந்து தொலையும். அது நமக்கு பழக்கம்தானே."

அந்த அம்மாள் எரிச்சலுடன் முணுமுணுத்துக்கொண்டே உள்ளே சென்றாள். குழந்தைகள் சத்தம் போட்டுக்கொண்டே ஓடி வந்தார்கள். வீட்டுக்குள் போனார்கள். உள்ளே இருந்து குழந்தைகளின் சத்தமும், கூச்சலும் கேட்டுக்கொண்டிருந்தது. நான் வெளியில் திண்ணையில் அப்படியே உட்கார்ந்திருந்தேன்.

சற்று நேரம் கழித்து "சுந்தரி! ஊரிலிருந்து வந்து விட்டாயா? என்று கேட்டுக்கொண்டே கூனல் விழுந்த கிழவி ஒருத்தி வந்தாள். என்னைப் பார்த்துவிட்டு யார் இந்த பெண்?" என்றாள்.

"அந்த கேடு கெட்டவளின் மகள்."

"யாரு?" லக்ஷ்மியின் மகளா?

"ஆமாம். அந்த ஓடுகாலியின் மகள்தான்". அரிசியிலிருந்து கல்லை பொறுக்கிக்கொண்டே சுந்தரி சொன்னாள்.

அந்தக் கிழவி எனக்கு சற்று தொலைவில் உட்கார்ந்து கொண்டாள். "உன் பெயர் என்ன குழந்தே?" என்று கேட்டாள்.

"பிரியம்வதா" என்றேன்.

"என்ன?"

இரண்டு மூன்று முறை சொன்ன பிறகுதான் அந்த பாட்டிக்கு என் பெயர் புரிந்தது. சுந்தரி மாமி உள்ளே போனாள். சுந்தரி மாமியின் மகன் கிருஷ்ணன் அங்கேயே விளையாடிக் கொண்டு இருந்தான். பாட்டி அவனை அருகில் அழைத்து "டேய் கிருஷ்ணா! ஓடிப் போய் ராஜாத்தியை அவசரமாக நான் வரச் சொன்னேன்னு சொல்லி அழைச்சிக்கிட்டு வா" என்றாள். கிருஷ்ணன் ஓடினான்.

ராஜாத்தி ஓட்டமும் நடையுமாக அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாள். பாட்டி ராஜாத்தியிடம் குசுகுசுவென்று ஏதோ சொன்னாள். அதைக் கேட்டு விட்டு ராஜாத்தி "அப்படியா சேதி" என்பது போல் என் பக்கம் பார்த்தாள். அரைமணிநேரம்



போவதற்குள் பத்து பதினைந்து பெண்கள் அங்கே வந்து என்னை ஆர்வத்துடன் பார்க்கத் தொடங்கினார்கள்.

"உன் அப்பாவை உனக்கு நினைவு இருக்கா?" என்று ஒருத்தி கேட்டாள்.

"உன் அம்மா அப்பா சண்டை போட்டுக்கொள்வார்களா?" என்று ஒருத்தி கேட்டாள். இன்னொருத்தி, "உன்னுடைய அப்பா அம்மாவை நன்றாகப் பார்த்துக்கொண்டாரா இல்லை அடித்து துன்புறுத்தி வந்தாரா?" நீட்டிமுழக்கிக் கொண்டே கேட்டாள். இப்படி பலதரப்பட்ட கேள்விகளை கேட்டு என்னை திக்கு முக்காட வைத்தார்கள்.

சுந்தரி மாமி வெளியில் வந்தாள். "வேடிக்கை பார்த்தது போதும். இனி கிளம்புங்க. போய் அவங்கவங்க ஜோலியை பாருங்க" என்றாள் கோபமாக.

எல்லோரும் போய் விட்டார்கள்.

இருட்டத் தொடங்கி விட்டது. ஹரிகேன் விளக்குகளை ஏற்றினார்கள். நான் இன்னும் திண்ணையிலேயே உட்கார்ந்திருந்தேன்.

சுந்தரி மாமி ஏதோ ஒரு வேலையை செய்துகொண்டே உள்ளுக்கும் வாசலுக்கும் நடமாடிக்கொண்டிருந்தாள். மாடுகளுக்கு வைக்கோலை எடுத்துப் போட்டாள். பாலை கறந்து உள்ளே எடுத்து போனாள். அரிசி களைந்த நீரை மாட்டுக்கு வைத்தாள். வீட்டுக்கும், வாசலுக்கும் அலைந்து கொண்டுதான் இருந்தாள். ஆனால் என் பக்கம் திரும்பி பார்க்ககூட இல்லை. நான் ஒருத்தி அங்கே இருப்பது போலவே கண்டு கொள்ளவில்லை.

நான் திண்ணையிலேயே அமர்ந்திருந்தேன். பசி வயிற்றை கிள்ளத் தொடங்கியது. அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. ஏசு பிரபுவை நினைத்து பிரார்த்தனை செய்தேன். குழந்தைகளும், மீசைக்காரரும் உள்ளே சாப்பிட்டுக்கொண்டு இருந்தார்கள்.

"திண்ணையில் உட்கார்ந்திருக்கும் அந்த சனியனை எப்போ துரத்தப் போறீங்க?" சுந்தரிமாமி கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அதான் எனக்கும் தெரியவில்லை."

காலையில் எழுந்ததும் முதல் பஸ்ஸில் கிளம்பிப் போய் பட்டணத்தில் விட்டுவிட்டு வாங்க."

"சரி"

"ஏற்கனவே ஊரில் பாதிபேர் வந்து வேடிக்கை பார்த்துவிட்டு போய்விட்டார்கள். நாளைக்கு இன்னும் எத்தனை பேர் வருவாங்களோ."

"காலையிலேயே அழைத்துப் போகிறேன். போதுமா."

"ஒரு பிடி சோறுகூட போடாமல் பட்டினி போட்டாள் என்ற கெட்ட பெயர் எனக்கு எதற்கு? பிச்சைக்காரர்களுக்கு போடவில்லையா? போனால் போகிறது. ஒரு கவளம் சாதம் போட்டு விடுகிறேன்."

"சரி. உன் இஷ்டம்."

சற்று நேரம் கழித்து சுந்தரிமாமி தையல் இலையில் கொஞ்சம் மோர் சாதம் வைத்து எடுத்து வந்தாள். நான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து சற்று தொலைவில் வேண்டாத வெறுப்பாக வைத்தாள். "சாப்பிடு. எந்த ஜென்மத்தில் உனக்குக் கடன் பட்டிருக்கிறேனோ" என்றாள்.

ஏற்கனவே பசியுடன் தவித்துக்கொண்டிருந்ததால் அவசர அவசரமாக சாதத்தை அள்ளி வாயில் போட்டுக்கொண்டேன். அந்த அவசரத்தில் தையல் இலையின் ஈர்குச்சி தொண்டையில் குத்தி திக்கு முக்காடி விட்டேன். சுந்தரி மாமி எனக்குக் குடிக்க தண்ணீர் தரவில்லை. அங்கேயே வாளியில் இருந்த தண்ணீரை கையால் அள்ளி குடித்தேன். தட்டுகளை அலம்புவதற்காக வெளியில் வந்த சுந்தரி மாமியின் கண்களில் இந்தக் காட்சி பட்டுவிட்டது. உடனே உரத்த குரலில் கத்தத் தொடங்கினாள்.



"உன் தலையில் இடி விழ. அந்த வாளியில் இருந்த தண்ணீரை தொட்டு விட்டாயா. முதலில் அதை அப்படியே கொட்டி விடு."

மாமி சொன்னது போல் வாளித்தண்ணீரை கொட்டி விட்டேன்.

"இதோ பார்... எதையாவது தொட்டு கிட்டு வைத்தாயோ... தெரியும் சேதி. கையை காலை ஒடித்து விடுவேன் ஜாக்கிரதை! சுட்டுவிரலை உயர்த்தி மிரட்டினாள்." "சாப்பிட்ட இலையை எடுத்து சுவற்றுக்கு அந்தப் பக்கமாக போட்டு விடு."

இலையை எடுக்கத் தெரியாவிட்டாலும் எப்படியோ கஷ்டப்பட்டு எடுத்து வெளியில் போட்டுவிட்டு வந்தேன். மறுபடியும் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொண்டேன். தூக்கம் கண்களை சொக்கியது. நாய் ஒன்று என்னைப் பார்த்து குரைக்கத் தொடங்கியது. பயத்தினால் எனக்கு உயிரே போய்விடும் போல் இருந்தது. திண்ணையில் ஒரு ஓரமாக முடங்கி உட்கார்ந்து கொண்டேன். நாய் மேலும் அருகில் வந்தது. பயத்தினால் வெடவெடவென்று நடுங்கிக் கொண்டிருந்தேன்.

அதற்குள் அங்கே கையில் ஹரிகேன் விளக்கை எடுத்துக்கொண்டு, தலைப்பாகை அணிந்திருந்த ஒருவன் வந்தான். அவன் கையில் நீளமான கழி ஒன்று இருந்தது.

"சுந்தரி அம்மா ... சுந்தரிஅம்மா" என்று குரல் கொடுத்தான். நாய் அவனைப் பார்த்ததும் குரைப்பதை விட்டுவிட்டு வாலை ஆட்டிக்கொண்டு அருகில் சென்றது.

"யாரு? முத்து கருப்பனா?" சுந்தரிமாமி வெளியில் வந்தாள்.

"சின்னம்மாவின் மகள் வந்திருக்கிறாளாம். ஊரில் கதை கதையாக பேசிக்கொள்கிறார்களே. உண்மைதானா?"

"அதோ! அங்கே திண்ணையில் உட்கார்ந்திருக்கிறாள் பாரு." சுந்தரி மாமி கையை காட்டிவிட்டு உள்ளே போய் விட்டாள்.

"எங்கே?" என்று சொல்லிக்கொண்டே ஹரிகேன் விளக்கை திண்ணையின் பக்கம் திருப்பினான். விளக்கு வெளிச்சத்தில் என்னைப் பார்த்ததும் ஹரிகேனை திண்ணைமீது வைத்துவிட்டு அருகில் வந்தான்.

"கண்ணம்மா. எப்பொ வந்தாய்?'' திண்ணையில் உட்கார்ந்து கொண்டான். "நீ பிறந்த செய்தியை உன் அம்மா எனக்குக் கடிதாசு போட்டாங்க. உன்னைப் பார்க்க பட்டணம் வரலாம்னு நினைச்சேன். வரமுடியலை. கண்ணே தாத்தாவிடம் வாம்மா." கைகளை நீட்டிக்கொண்டே சொன்னான்.

நான் நகரவில்லை.

அவனே என் அருகில் வந்து என்னைத் தூக்கிக் கொண்டான்.

"பயப்படாதே கண்ணம்மா. உன் அம்மா உன்னிடம் முத்துக் கருப்பன் தாத்தா பற்றி எதுவும் சொல்லவே இல்லையா. இந்த ஊருக்கு எப்பொ வந்தாய்? யார் அழைச்சிகிட்டு வந்தாங்க?" என்று கேட்டான்.

"ஜோசப் அங்கிளோடு வந்தேன்."

"ஜோசப் அங்கிளா? அது யாரு குழந்தே?" விவரமாக சொன்னேன்.

"அப்படியா. எனக்குத் தெரியவே தெரியாதே. வந்து பார்த்திருப்பேனே. "தலைமீது கையை வைத்து அன்புடன் தடவிக் கொடுத்தான். அவன் உடுத்தி இருந்த வேட்டி ரொம்ப அழுக்காக இருந்தது. இருந்தாலும் எனக்கு ஏனோ அருவருப்பு ஏற்படவில்லை. ஜோசப் அங்கிள் எப்படி தூக்கிக்கொள்வாரோ அதே போல் தூக்கிக்கொண்டான். எனக்கு பயம் கொஞ்சம் குறைந்தது.

சுந்தரி மாமியுடனும், மாமாவுடனும் முத்துகருப்பன் எனக்காக சண்டை போட்டான்.



"சுந்தரி அம்மா! உங்களுக்கும் குழந்தைங்க இருக்காங்க. பாவம் சின்னப் பெண். இப்படி இருட்டில் தனியாக விட்டு விடுவீங்களா? உங்கள் குழந்தைகளுக்கு இதுபோன்ற நிலைமை வந்தால் எப்படி இருக்குமோ யோசித்துப் பார்த்தீங்களா?"

"வாயை மூடிக்கொண்டு உன் வழியை பார்த்துக்கிட்டு போ." சுந்தரி மாமி கத்தினாள்.

"போகத்தான் போகிறேன். முதலில் இந்தப் பெண்ணை வீட்டுக்குள் அழைத்துக்கொள்ளுங்கள்'' முத்துகருப்பன் சொன்னான்.

"கண்ட கண்ட ஜாதியைச் சேர்ந்தவர்களை வீட்டுக்குள் அழைத்துகொள்ள வேண்டிய தலையெழுத்து எனக்கு இல்லை."

"அந்த பிரம்மா யார் தலையில் என்ன எழுதியிருக்கிறானோ யாருக்குத் தெரியும்? சும்மா சும்மா ஜாதிகெட்டவள் என்று ஏன் சொல்றீங்க? நீங்கள் படுத்திய பாட்டை தாங்க முடியாமல்தானே சின்னம்மா தற்கொலை செய்து கொள்ளப் போனாள். குளத்தில் விழுந்து சாகப் போனவளை அந்த முஸ்லீம் பையன் காப்பாற்றி அழைத்துப்போய் கல்யாணம் கட்டிக்கிட்டான்."

"இப்பொ அந்தப் பழைய கதையெல்லாம் எதுக்கு? யாரையும் வைத்து காப்பாற்ற வேண்டிய கடமை எனக்கு இல்லை. அவ்வளவு அக்கறை இருப்பவனாக இருந்தால் நீயே அழைத்துக்கொண்டு போய் உன் வீட்டில் வைத்துக்கொள். உங்கள் வீட்டு கருவாட்டுக் குழம்பை சாப்பிட்டு வண்ணான் மூட்டையை தூக்குவதில் உனக்கு உதவியாக இருப்பாள்." நக்கலாக சொன்னாள்.

முத்து கருப்பனுக்குக் கோபம் வந்து விட்டது. "ச்சீ... ச்சீ... இவர்கள் மனிதர்களே இல்லை. வா கண்ணம்மா, போகலாம்." என்னைத் தூக்கிக்கொண்டு வெளியில் நடந்தான்.

அந்த இருட்டில், முன்பின் அறிமுகமில்லாத ஆள் என்னை எங்கே அழைத்துப் போகிறானோ தெரியவில்லை. பயமாக இருந்தாலும் எதுவும் செய்ய முடியாத நிலைமை.

அவன் என்னை கோவிலுக்கு அருகில் இருந்த ஒரு ஓட்டு வீட்டுக்கு அழைத்துச் சென்று கதவைத் தட்டினான்.

"குருக்கள் அய்யா... குருக்கள் அய்யா!" குரல் கொடுத்தான்...

உள்ளே இருந்து கதவைத் திறந்தார்கள்.

"முத்துகருப்பா நீயா!" இந்தப் பெண் குழந்தை யாரு?"

"நம்ம சின்னம்மா லக்ஷ்மியின் மகள் சாமி."

"எந்த லக்ஷ்மி? நம்ப ராஜாராமய்யரின் மகளா?"

"ஆமாம்."

"அவள் செத்துப் போய்விட்டதாக பேசிக்கிட்டாங்களே.'"

"ஆமாம். அந்த அம்மா செத்துப் போனதால்தான் இந்தப் பெண் இப்படி நம் ஊருக்கு வர வேண்டியதாகிவிட்டது."

"நம்மால் என்ன செய்ய முடியும் சொல்லு."

"இந்த ஒரு வேளைக்கு இந்தக் குழந்தையை உங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளுங்கள். நாளை நான் பஞ்சாயத்தைக் கூட்டி சுந்தரியும், கோவிந்தனும் இந்தக் குழந்தையை வளர்த்துக் கொள்வாங்களா மாட்டாங்களா என்று கேட்டு விடுகிறேன்."

"உன்னுடைய தவிப்பு எனக்குப் புரிகிறது கருப்பா. ஆனால் அந்த சுந்தரி லேசுப்பட்டவள் இல்லை." அவள் ஒப்புக் கொள்வாள் என்று எனக்குத் தோன்றவில்லை. அவளுடைய தொல்லையை தாங்கமுடியாமல்தானே லக்ஷ்மி ஊரை விட்டுப் போய்விட்டாள்."

"வளர்க்க மாட்டேன்னு சொன்னால். சின்னம்மாவின் நிலம் இருக்கு இல்லையா. அதை இந்தக் குழந்தையின் பெயரில் எழுதிவைக்கச் செய்கிறேன். அந்த ஆதாரம் இருந்தால் உங்களைப் போன்ற நல்லவர்கள் யாராவது இந்தக் குழந்தையை வளர்க்காமல் போக மாட்டார்கள்."



"லக்ஷ்மியின் மீது இருக்கும் பாசத்தினால் நீ இப்படி நினைக்கிறாய். ஆனால் அவர்கள் நீ சொன்ன வழிக்கு வருவார்களா? சரி ஆகட்டும். ஒரு நல்ல காரியத்தை செய்வதற்கு தயங்கக் கூடாது. அது நல்லபடியாக முடிந்தாலும் சரி. இல்லா விட்டாலும் சரி."

"இந்த விஷயம் நல்லபடியாக முடியுமா முடியாதா என்ற பிரச்னைக்கு இடமே இல்லை சாமி. சின்னம்மாவின் மகளை இந்த ஊரில் என் கண்முன்னால் வளர வேண்டியதுதான்." தீர்மானமாகச் சொன்னான் முத்துக்கருப்பன்.

"சரி ஆகட்டும். வாம்மா குழந்தாய்" என்றார் அவர்.

முத்து கருப்பன் என்னை கீழே இறக்கி விட்டான். "கண்ணம்மா இவங்க நம் மனிதர்கள்தான். நான் காலையில் வருகிறேன். உனக்கு எந்த பயமும் இல்லை" என்றான்.

முத்துக்கருப்பன் சொன்னது போல் குருக்கள் வீட்டுக்குள் போனேன். உள்ளே அவருடைய மனைவி இருந்தாள். அவளால் பேச முடியாது. பாவம் ஊமை. என்னைப் பார்த்து சாப்பிடுகிறாயா என்று ஜாடையில் கேட்டாள். வேண்டாம் என்று சொன்னேன்.

வராண்டாவில் கட்டில்களை வரிசையாக போட்டு படுத்துக் கொண்டார்கள். எனக்கும் ஒரு கட்டிலை போட்டு படுக்கையை விரித்தார்கள்.

அவர்கள் எல்லோரும் உறங்கி விட்டார்கள். எனக்கு தூக்கம் வரவில்லை. அப்படியே உட்கார்ந்திருந்தேன். ஜோசப் அங்கிள் சொன்னது நினைவுக்கு வந்தது. கட்டில் மீது உட்கார்ந்து கொண்டே பிரார்த்தனை செய்தேன். பிறகு தூக்கம் வந்துவிட்டது. தூக்கத்தில் ஏசு பிரபு எனக்கு பாதுகாப்பு தருவது போல் தோன்றியது. சர்ச்... மணி ஓசை... பிரார்த்தனை... என் கனவு முழுவதும் இவைதான் நிரம்பியிருந்தன. நான் அம்மாவுக்காக சர்ச்சில் தேடிக்கொண்டு இருக்கிறேன். அம்மா அங்கேதான் இருக்கிறாள். ஆனால் என் கண்ணில் படவேயில்லை.

# 4

மறுநாள் கர்ணம் மாமா வீட்டின் முன்னால் இருக்கும் பந்தலுக்குக் கீழே எனக்காக பஞ்சாயத்தை கூட்டினார்கள். ஊர் பெரியவர்கள் முன்சீப் மாமா எல்லோரும் வந்தார்கள். என்னுடைய தாய் மாமன் மீசைக்காரன் கோவிந்தனும் வந்து உட்கார்ந்து கொண்டான்.

முத்துக்கருப்பன் காலையிலேயே குருக்கள் மனைவியிடம் சொல்லி என்னைக் குளிக்கச் செய்து, தலைவாரி பின்னவைத்து, அவர்களுடைய மகளுடைய பாவாடை சட்டையை அணிவிக்கச் செய்து கர்ணம் மாமா வீட்டுக்கு அழைத்துப் போனான். என்னை ஒரு இடத்தில் உட்கார வைத்து பின்னாலேயே கையைக் கட்டிக் கொண்டு பணிவாக நின்றுகொண்டான்.

என்னை பற்றிய வாதவிவாதங்கள் நடந்துகொண்டிருந்தன. முத்துக்கருப்பன் முன்பே சொல்லித் தந்தது போல் நான் எதுவும் பேசாமல் அவர்களுடைய பேச்சை கவனமாக கேட்டுக் கொண்டிருந்தேன்.

முன்சீப் மாமா கோவிந்தனைப் பார்த்து "என்னப்பா? உன் தங்கையின் மகளை வீட்டில் வைத்துக் கொள்வதற்கு ஆட்சேபனை சொல்லுவானேன்.?"

"அய்யா! அந்த கேடு கெட்டவளின் மகளை எங்க வீட்டில் வைத்துக்கொள்ள முடியாது. மடி, ஆசாரம் மிகுந்த குடும்பம் எங்களுடையது. எப்பொ அந்த ஓடுகாலி எங்கள் வீட்டை விட்டு அந்த துலுக்கப் பயலுடன் ஓடினாளோ அன்னிக்கே எங்களுக்கும் அவளுக்கும் இருந்த உறவு அறுந்துவிட்டது." முகத்தை கடுகடுவென்று வைத்துக்கொண்டே சொன்னார்.

கர்ணம் மாமா சொன்னார். "இதோ பார் கோவிந்தன். வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசினால் எப்படி?



என்னதான் சொன்னாலும் லக்ஷ்மி உன்கூடப் பிறந்தவள். தெரிந்தோ தெரியாமலேயோ பாதை தவறிவிட்டாள். உங்கள் வீட்டு கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்திவிட்டாள். உன் வேதனை எங்களுக்குப் புரியாமல் இல்லை. அவளே போய்ச் சேர்ந்துவிட்டாள். இந்த பகை, துவேஷத்திற்கு அத்துடன் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, இந்தப் பெண் குழந்தைக்கு ஆதரவு தருவது நல்லது. ஆண் குழந்தையாக இருந்தால் ஏதோ ஒரு இடத்தில் எப்படியாவது பிழைத்துக்கொள்ளட்டும் என்று விட்டு விடலாம். பெண் குழந்தையை, அப்படி விடமுடியுமா? கொஞ்சம் ஆதரவு தந்தால் வீட்டில் ஒத்தாசையாகவும் இருப்பாள். கொஞ்சம் பெரியவள் ஆனதும் ஒரு பையனை பார்த்து கட்டிவைத்தால் உன் கடமை முடிந்து விடும். நயமாக எடுத்துச் சொல்ல முயன்றார்.

"நீங்க என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். அந்தப் பெண்ணை நான் என் வீட்டில் வைத்துக்கொள்ள முடியாது. வேலியில் போகிற ஓணானை பிடித்து காதில் விட்டுக் கொள்வதற்கு நான் ஒன்றும் முட்டாள் இல்லை." கோவிந்தன் சொன்னான்.

"கோவிந்தனின் பிரச்னையையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும், ஆந்தப் பெண்ணை வீட்டில் வைத்துக்கொள்வதில் அவன் மனைவி சுந்தரிக்குக் கொஞ்சம்கூட விருப்பம் இல்லை. அவளுடைய சண்டை போடும் குணம் நமக்குத் தெரியாதா என்ன?" என்றார் ஒருவர்.

கர்ணம் மாமா அவரை எச்சரிப்பது போல் பார்த்தார். "இதோ பார் ராகவன். நீயும், கோவிந்தனும் ஒன்றாக குடிப்பவர்கள், சீட்டாட்ட நண்பர்கள். அதான் நீ அவன் பக்கம் பேசுகிறாய். இந்த பஞ்சாயத்தில் உன்னை பேச விடக்கூடாது என்று முன்சீபிடம் நான் முன்னாடியே சொல்லி விட்டேன்."

"அய்யா! நண்பன் என்பதற்காக நான் பேசவில்லை. அவன் பக்கம் இருக்கும் நியாயத்தையும் யோசித்துப் பார்க்க வேண்டும் என்று சொன்னேன். லக்ஷ்மி ஊரை விட்டு ஓடிப்

12796

போன பிறகு அந்தக் குடும்பத்தை எல்லோரும் பழிக்கவில்லையா? அந்த வேதனையை கோவிந்தன் மறந்தாலும் அவன் மனைவியால் மறக்க முடியுமா? இன்னிக்கு இந்தக் குழந்தையின் வளர்ப்புக்காக கணவன் மனைவியை சண்டைபோட்டுக்கொள்ளச் சொல்றீங்களா?'' ராகவன் படபடவென்று கேட்டு விட்டான்.

யாரும் எதுவும் பேசவில்லை.

"இப்பொ இந்தப் பெண்ணை என்ன செய்வது?" கர்ணம் கேட்டார்.

"செய்வதற்கு என்ன இருக்கு? ஏதாவது அனாதை இல்லத்தில் சேர்க்க வேண்டியதுதான்." ராகவன் சொன்னான்.

"அப்படிச் சொல்வது நியாயம் இல்லை. லக்ஷ்மியால் நம் எல்லோருக்கும் கொஞ்சமோ, நஞ்சமோ நன்மைதான் நடந்தது. குழந்தைகளுக்கு படிப்புச் சொல்லிக்கொடுத்தாள். நம்வீட்டுப் பெண்களுக்கு பிரசவ சமயத்தில் தானாக முன் வந்து உதவிகளை செய்திருக்கிறாள். ஜாதி வேறுபாடு பார்த்திருந்தால் லக்ஷ்மி நமக்கு உதவி செய்திருக்க முடியுமா? நம்மால் லக்ஷ்மிக்கு உதவ முடியவில்லை. அவள் குழந்தைக்காவது ஆதரவு தருவது நம்முடைய கடமை." கர்ணம் சொன்னார்.

"அப்பொ உங்க வீட்டில் அந்தப் பெண்ணுக்கு இடம் கொடுங்கள்." கூட்டத்தில் யாரோ சொன்னார்கள்.

"என் மனைவி உயிரோடு இருந்தால் கட்டாயம் செய்திருப்பேன். என் உடல் நலமும் சரியாக இல்லை. மகன் மருமகனின் தயவில் காலத்தைத் தள்ளிக்கொண்டு இருக்கிறேன்." கர்ணம் தன்னுடைய இயலாமையை வெளிப்படுத்தினார்.

"ராகவன்! உனக்குத்தான் குழந்தைகள் இல்லையே. இந்தப் பெண் குழந்தையை வளர்த்துக் கொள்ளலாமே?" முன்சிப் கேட்டார்.

கிளை நூலகம், தூத்துக்குடி வடக்கு.


"நானா! எனக்கு ஆட்சேபனை இல்லை... ஆனால் என் மனைவி தன்னுடைய தம்பி மகனை சுவீகாரம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்." ராகவன் சொன்னன்.

கர்ணம் முத்துக்கருப்பன் பக்கம் பார்த்தார். "முத்துக்கருப்பா! என்ன செய்வது? இந்தப் பெண்ணை ஏதாவது அனாதை இல்லத்தில் சேர்க்க வேண்டியதுதான்."

"என் உடலில் உயிர் இருக்கும்வரையில் இப்படி நடக்க விட மாட்டேன். இந்தக் குழந்தை என் கண் முன்னால் வளர வேண்டியதுதான்."

"எப்படி வளர்க்க முடியும்? நீயே சொல்லு. பெண் குழந்தையை வளர்ப்பது என்றால் வெறும் வாய் பேச்சு இல்லை. எவ்வளவு பெரிய பொறுப்பு தெரியுமா? யாராவது மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டால்தான் அந்தக் குழந்தையின் பொறுப்பை ஒப்படைக்க முடியும்."

முத்துக் கருப்பனை சமாதானப்படுத்த முயன்றார். அதற்குள் அந்த இடத்திற்கு வேலைக்காரி போன்று தோற்றமளித்த பெண் ஒருத்தி வந்தாள்.

"என்ன நாகம்மா இந்தப் பக்கம்?" கர்ணம் கேட்டார்.

நாகம்மா நான்காக மடிக்கப்பட்ட காகிதத்தை அவரிடம் கொடுத்துக்கொண்டே "இந்த கடிதத்தை பங்கஜம் அம்மா அனுப்பியிருக்கிறாள்" என்றாள்.

அந்தப் பெயரைக் கேட்டதும் எல்லோரும் தலையை உயர்த்தி பார்த்தார்கள்.

முன்சிப் மட்டும் தலையைக் குனிந்துகொண்டார்.

கர்ணம் மாமா கடிதத்தை படித்துக் காட்டினார்.

சபையில் இருக்கும் பெரியவர்களுக்கு,

வணக்கம். லக்ஷ்மியின் மகளை வளர்ப்பதற்கு கோவிந்தன் விருப்பப்படவில்லை என்று கேள்விப்பட்டேன். உங்களுக்கு

ஆட்சேபனை இல்லை என்றால் நான் அந்தக் குழந்தையை வளர்க்க ஆசைப்படுகிறேன்.

இப்படிக்கு
பங்கஜம்

கர்ணம் மாமா படித்து முடித்து விட்டு மற்றவரின் அபிப்பிராயத்திற்காக காத்திருப்பது போல் எல்லோரின் முகங்களையும் பார்த்தார்.

எல்லோரும் முன்சீபையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவருடைய பார்வை தரையில் பதிந்து இருந்தது.

"என்ன சொல்லப் போறீங்க?" கர்ணம்மாமா முன்சீபைப் பார்த்து கேட்டார்.

முன்சீப் தலையை உயர்த்தி, கம்பீரமாக பார்த்தார். "இதில் நான் சொல்ல என்ன இருக்கிறது? குழந்தையின் பொறுப்பை அவள் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னால் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. தாராளமாக ஒப்படைத்து விடுங்கள். எனக்கு வேலை இருக்கிறது. வருகிறேன்." அவர் சட்டென்று எழுந்து அங்கிருந்து போய் விட்டார்.

எல்லோரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

கர்ணம் முத்துக்கருப்பன் பக்கம் பார்த்துக்கொண்டே "பங்கஜம் இந்தக் குழந்தையை வளர்த்துக் கொள்வாளாம்" என்றார்.

முத்துக்கருப்பன் உடனே மகிழ்ச்சி அடைந்து சரி என்று சொல்லி விடவில்லை. சற்று நேரம் யோசித்து விட்டு, "சரி அப்படியே ஆகட்டும்" என்றான்.

நாகம்மா அங்கேயே நின்றிருந்தாள்.

"நாகம்மா! குழந்தையை அழைத்துக்கொண்டு போ" என்றார் கர்ணம்.



கோவிந்தன் எழுந்து கொண்டு கிளம்ப முற்பட்டான். கூட்டமும் கலையத் தொடங்கியது. திடீரென்று முத்துக்கருப்பன் சொன்னான். "கர்ணம் அய்யா! இந்தக் கூட்டத்தில் இன்னொரு விஷயமும் முடிவு செய்தாக வேண்டும். கோவிந்தனை ஒரு நிமிடம் இருக்கச் சொல்லுங்கள்."

கோவிந்தன் நின்று பின்னால் திரும்பிப் பார்த்தான்.

முத்துக்கருப்பன் சொன்னான்."கர்ணம் அய்யா! நான் குத்தகைக்கு எடுத்து இரண்டு ஏக்கர் நஞ்சை நிலத்தில் இனி மேல் ஒரு பிடி நெல்லு கூட கோவிந்தனுக்குத் தரமாட்டேன். சின்னம்மாவின் மகள் எந்த வீட்டில் இருப்பாளோ, யார் வளர்க்கப் போறாங்களோ அவர்களிடம்தான் குத்தகை பணத்தைத் தருவேன்."

கோவிந்தன் வேகமாக முன்னால் வந்தான்... வந்த வேகத்தில் கையை உயர்த்தி "ரொம்ப பேசினால் பல்லை தட்டி கையில் கொடுத்து விடுவேன். ஜாக்கிரதை. நேற்றிலிருந்து நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன், அந்தப் பெண்ணை சாக்காக வைத்துக்கொண்டு பஞ்சாயத்து கூட்டம், தீர்வு என்று கலாட்டா செய்துகொண்டு இருக்கிறாய். நிலம் உங்கப்பனோட சொத்து என்று நினைத்தாயா?"

"அந்த நிலம் சின்னம்மாவின் அம்மா வழி பாட்டியின் சொத்து. அதை விற்கவோ, தானம் செய்யவோ சின்னம்மாவுக்குத்தான் உரிமை இருக்குன்னு உயில் எழுதி வைத்துவிட்டு அந்த பாட்டி போய்ச் சேர்ந்தாள். இல்லாவிட்டால் நீங்களோ உங்க அப்பாவோ இந்நேரத்திற்கு நிலத்தை விற்று காசாக்கியிருப்பீங்க." முத்துக்கருப்பன் கோபமாக சொன்னான்.

"வாயை மூடு கழுதை. எங்க வீட்டு அழுக்குத் துணிகளைத் தோய்க்கிறவன் நீ, உன் எல்லை என்னவென்று தெரிந்து கொண்டு பேசு.. இல்லாவிட்டால் உன் கைகால் உனக்கு சொந்தமாக இருக்காது."

"நாக்கை அடக்கிப் பேசுங்க, சின்னம்மாவின் அண்ணனாச்சே என்று மரியாதை கொடுத்து இத்தனை நேரம் சும்மா இருந்தேன். அந்த உறவு இல்லைன்னு நீங்களே உங்க நடத்தையால் நிரூபித்து விட்டீங்க."

"பார்த்தீங்களா எப்படி பேசுகிறானோ?" கோவிந்தன் கர்ணம் மாமாவிடம் புகார் செய்தான்.

"முத்துக்கருப்பா! அமைதியாக இரு. கோவிந்தன்! நீயும் கொஞ்சம் அடக்கமாக இரு." நிலைமையை சீர் செய்ய முயன்றார் கர்ணம்.

"இனிமேல் நிலத்தை நீ பார்த்துக் கொள்ளத் தேவையில்லை. வேறு ஆளை பார்த்துக் குத்தகைக்கு விடுகிறேன்." கோவிந்தன் கத்தினான்.

"அந்த நிலத்தில் எவனாவது வந்து காலை வைத்தால் தெரியும் சேதி. அந்த காலை ஒடித்து விட்டுத்தான் மறு வேலை. முத்துக்கருப்பன் கருவினான்.

"கோவிந்தன்! நிலத்தைப்பற்றி பிறகு பார்த்துக் கொள்ளலாம்." ராகவன் சொன்னான்.

"பிறகு பார்த்துக்கொள்வதற்கு எதுவும் இல்லை. இதுநாள் வரையில் அந்த நிலத்தின் மீது உரிமையிருப்பவர்கள் யாரும் இல்லாததால் குத்தகை நெல்லை கோவிந்தனிடம் கொடுத்து வந்தேன். சின்னம்மாவின் மகள் வந்து விட்டாள் இல்லையா. இனி அவருக்குக் கொடுக்க மாட்டேன்." முத்துக்கருப்பன் தீர்மானமாக சொல்லிவிட்டான்.

"அந்த விஷயத்தை நீங்கள் இருவரும் பேசி முடிவு செய்து கொள்ளுங்கள்." கர்ணம் மாமா சொன்னார். எல்லோரும் போய் விட்டார்கள்.

"வாம்மா. வீட்டுக்கு போகலாம்" என்றாள் நாகம்மா.



நான் முத்துக்கருப்பன் பக்கம் பார்த்தேன்.

"நான் அழைத்துக்கிட்டு வர்றேன். நீ முன்னால் போ நாகம்மா." முத்துக்கருப்பன் சொன்னான்.

நாகம்மா முன்னால் நடந்தாள், முத்துக்கருப்பன் முண்டாசை சரியாக கட்டிக்கொண்டு என்னைத்தூக்கிக் கொண்டு கிளம்பினான்.

ஊரைத் தாண்டி தென்னந்தோப்பு ஒன்று இருந்தது. அதன் நடுவில் மச்சு. வீடு வீட்டுக்கு வலதுபுறம் வாழை மரங்கள், காய்கறி தோட்டமும், இடதுபுறம் மாட்டுக் கொட்டகையும் இருந்தன.

எங்கும் மரங்கள், செடி கொடிகள் இருந்ததால் அந்த இடம் முழுவதும் பசுமையாக காட்சி அளித்தது. வாசலில் பெரிதாக கோலம் போட்டு காவி இடப்பட்டிருந்தது.

முத்துக்கருப்பன் என்னை கீழே இறக்காமலேயே "அம்மா! அம்மா!" என்று குரல் கொடுத்தான்.

உள்ளே இருந்து சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி ஒருத்தி வெளியில் வந்தாள். அரக்கு நிறத்தில் பட்டுப் புடவை, கழுத்தில் சிவப்புக் கல் அட்டிகை அணிந்திருந்தாள். களையான, லக்ஷ்மிகரமான முகம்.

புன்முறுவலுடன் எதிரேவந்தாள். வா முத்துக்கருப்பா. பாப்பாவை அழைத்து வந்து விட்டாயா? என்றவள் என்னைப் பார்த்துவிட்டு இருகைகளையும் நீட்டினாள். "வா குழந்தே"

நான் போகவில்லை. முத்துக்கருப்பனின் கழுத்தை பலமாக கட்டிக்கொண்டேன்.

"போம்மா குழந்தே "இனி இவங்கதான் உன் அம்மா. நீ இங்கேதான் இருக்கணும். நான் தினமும் வந்து பார்த்துக் கொள்கிறேன்." என்றான்.

விருப்பம் இல்லாமலேயே அவளிடம் போனேன். அருகில் இழுத்து அணைத்துக்கொண்டாள். "தங்கப் பதுமை போல்

இருக்கிறாள்". என்று சொல்லிக்கொண்டே இரு கன்னங்களிலும் அழுத்தமாக முத்தமிட்டாள்.

என்னைத் தூக்கிக்கொண்டே உள்ளே போனாள். ரொம்ப பெரிய வீடு. நிறைய அறைகள் இருந்தன.

கிண்ணத்தில் தயிர்சாதம் பிசைந்து எனக்கு ஊட்டி விட்டாள். முத்துக்கருப்பனுக்கு முன் அறையில் வாழையிலையை போட்டு உணவு பரிமாறினாள். முத்துக்கருப்பன் சாப்பிட்டுக்கொண்டே கர்ணம் வீட்டில் நடந்த பஞ்சாயத்தைப்பற்றி விவரமாகச் சொன்னான். கோவிந்தன் மாமா பேசியது, நிலத்தைப் பற்றிய தகறாரு எல்லாமே சொன்னான்.

பங்கஜம் கவனமாக கேட்டுக்கொண்டிருந்தாள்.

சற்று நேரம் கழித்து முத்துக்கருப்பன் கிளம்பிப் போனான். போகும் முன் என் அருகில் வந்து "கண்ணம்மா... நீ எதுக்கும் பயப்படத் தேவையில்லை. நான் தினமும் வந்து உன்னைப் பார்த்துக்கொள்கிறேன்" என்று தைரியம் சொல்லி விட்டு போனான்.

நான் தலையை அசைத்தேன்.

மாலையாகிவிட்டது.

நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்த எனக்கு திடீரென்று விழிப்பு வந்தது. எழுந்து உட்கார்ந்து கொண்டேன். பக்கத்து அறையிலிருந்து பேச்சுக்குரல் கேட்டது.

"என்னிடம் ஒரு வார்த்தைக்கூடக் கேட்காமல் நீ பாட்டுக்கு கடிதம் எழுதி அனுப்பி இருக்கிறாய். உன் எண்ணம்தான் என்ன?" ஆண்குரல் கேட்டது.

"குழந்தையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுவதாய் உங்களிடம் முன்னாடியே சொல்லியிருந்தேன்.

"நமக்குக் குழந்தைகள் வேண்டாம் என்று ஏற்கனவே பலதடவை சொல்லியிருக்கிறேன். அதற்காகத்தான் உன்னைக் கவனமாக இருக்கச் சொன்னேன். எனக்கு மனைவி, குழந்தைகள் இருக்கிறார்கள். இது போன்று குழந்தை, குட்டி என்று ஆசையை வளர்த்துக்கொண்டாய் சரிப்பட்டு வராது. இந்த விஷயத்தை இந்த ஊருக்கு அழைத்து வரும் முன்பே உன்னிடம் கண்டிஷனாக சொல்லியிருந்தேன். எல்லா வற்றுக்கும் ஒப்புக்கொண்டு விட்டு இப்பொழுது..."



"நீங்கள் சொன்னதற்கு மாறாக என்றுமே நான் நடந்து கொள்ளவில்லையே. முத்துக்கருப்பன் காலையில் வந்த போது அந்தப் பெண்ணைப் பற்றிச் சொன்னான். அவளுக்கு ஆதரவு தருவதற்கு யாருமே முன்வரவில்லை. எனக்குக் குழந்தை வேண்டும். அதான் அவளுக்கு ஆதரவு தரவேண்டுமென்று முடிவு செய்தேன். குழந்தையை வளர்த்துக்கொண்டால் உங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றும், அனாதை இல்லத்திலிருந்து குழந்தையை சுவீகாரம் எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னது நீங்கள்தானே."

"அனாதை இல்லத்திலிருந்து எடுத்துவந்தால் எந்தப் பிரச்னையும் வந்திருக்காது. இந்தப் பெண் என்றால் கோவிந்தன் நம்மீது பகையைச் சாதிப்பானோ என்னவோ!"

"அந்தப் பயம் உங்களுக்கு வேண்டாம். எல்லாவற்றையும் நான் பார்த்துக்கொள்கிறேன்."

"உன்னோடு வந்த தொல்லையே இதுதான். எல்லா விஷயங்களிலும் எனக்குக் கீழ்படிந்து நடப்பது போல் பேசுவாய். ஆனால் பிடிவாதமாக நீ நினைத்ததை சாதித்துக் கொள்வாய்."

"என் பிடிவாதத்தால் உங்களுக்கு எந்தப் பிரச்னையும் வராது என்று நம்பிக்கை ஏற்பட்ட பிறகுதான் அதை செயல்படுத்துவேன். அதையும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்."

"நடித்தது போதும். முன்னாடியே கேட்டால் நான் மறுத்து விடுவேன் என்று தெரிந்துதான் என்னிடம் கேட்காமல் நீயாக முடிவு செய்து விட்டாய்."

முதலில் உங்களுக்குத்தான் கடிதம் எழுதி அனுப்பினேன். நீங்கள் வீட்டில் இல்லை என்று நாகம்மா திரும்பி வந்து விட்டாள். நீங்க என்னுடைய விருப்பத்தை ஏற்றுக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கை இருப்பதால்தான் இந்தக் காரியத்தை செய்தேன். "பங்கஜத்தின் குரல் வேண்டுவது போல் ஒலித்தது."

"ச்சீ... ச்சீ... வாயை மூடு. உன் முகத்தில் கூட இனி விழிக்க மாட்டேன். அந்தப் பெண்ணை இங்கிருந்து அனுப்பினால் தவிர, இந்த வீட்டு வாசற்படியை மிதிக்க மாட்டேன்."

தடாலென்று கதவைத் திறந்துகொண்டு அந்த நபர் வெளியே வந்தான். விளக்கு வெளிச்சத்தில் அந்த நபரை அடையாளம் தெரிந்தது. அந்த ஆள் வேறு யாரோ இல்லை. முன்சீப்தான்.

"நான் சொல்வதை கொஞ்சம் கேளுங்க." பின்னாலேயே வந்த பங்கஜம் அவருடைய கையைப் பற்றிக்கொள்ளப் போனாள். கையை உதறித் தள்ளிவிட்டு போய் விட்டார்.

பங்கஜம் அங்கேயே இருந்த நாற்காலியில் சரிந்தாள். அதற்குள் நாகம்மா அங்கே வந்தாள்.

"அம்மா... இப்பொ அழுது என்ன பிரயோஜனம்? இந்த யோசனை சரியானது இல்லை என்று முன்னாடியே சொன்னேன் இல்லையா?" என்றாள்.

"நாகம்மா! நீயும் என்னை குற்றம் சொல்கிறாயா? வேலை... வேலை என்று இந்தப் பெரிய மனிதர் பத்து நாட்களுக்கு ஒரு முறை வருவார். அவருடைய வருகைக்காக எதிர்பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கவேண்டும். எந்த வேலையும் இல்லாமல் எனக்கு பைத்தியமே பிடித்துவிடும் போலிருக்கிறது. இவரை நம்பி இந்த ஊருக்கு வந்தது என்னுடைய தவறுதான். தொழிலில் இருந்தாலும் எனக்குக் கொஞ்சம் சுதந்திரம் கிடைத்திருக்குமோ என்னவோ! கஷ்டமோ சுகமோ பெண்ணாகப் பிறந்தவளுக்கு ஒருத்தனின் நிழலில் இருப்பதுதான் நல்லது என்று நினைத்தேன்.



"அவர் உங்களுக்கு என்ன குறைவைத்தார் சொல்லுங்கள் வீடு கட்டிக்கொடுத்தார், எல்லா வசதிகளும் செய்து கொடுத்தார். மனைவி என்ற அந்தஸ்தை கொடுக்காவிட்டாலும் அவர் உங்களை நன்றாகத்தான் பார்த்துக் கொள்கிறார். அதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்." நாகம்மா நீட்டி முழக்கினாள்.

"எல்லா வசதிகளும் தந்தது உண்மைதான். ஆனால் நான் விரும்பியது இது இல்லை. இப்படி என்று தெரிந்திருந்தால் வந்திருக்கவே மாட்டேன். என் மனதில் என்ன இருக்கிறதென்று நானே சரியாகப் புரிந்து கொள்ளவில்லை." பங்கஜம் அழத் தொடங்கினாள்.

கட்டில் மீது அமர்ந்துகொண்டு அவ்விருவரையும் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு ஒரு விஷயம் மட்டும் நன்றாகப் புரிந்தது. என் காரணமாக அவர்களுக்குள் சண்டை வந்திருக்கிறது. என்னை இந்த வீட்டிலிருந்து அனுப்பிவிடப் போகிறார்கள். மறுபடியும் எந்த இடத்திற்கு போக வேண்டியிருக்குமோ?

அழுது கொண்டிருந்த பங்கஜத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

# 5

அதற்குப் பிறகு நான்கைந்து மாதங்கள் முன்சீப் அந்த வீட்டுக்கு வரவே இல்லை. ஏனோ தெரியவில்லை. பங்கஜம் அதைக் கொஞ்சம்கூட பொருட்படுத்தவில்லை. என்னை தன் இதயத்தில் வைத்து பாதுகாப்பது போல் அபூர்வமாக பார்த்துக் கொண்டாள். தானே எனக்கு தலைவாரி பின்னி. குளிப்பாட்டுவாள். சாதம் ஊட்டிவிடுவாள். தோட்டத்திற்கோ,

வயலுக்கோ போகும் போதும் என்னையும் அழைத்துக்கொண்டு போவாள். வீட்டிலும் சரி, வெளியிலும் சரி எல்லோரும் அவளிடம் பயபக்தியுடன் நடந்து கொண்டார்கள். அவளுக்கு கடவுள் பக்தி அதிகம். அடிக்கடி வீட்டில் பூஜைகள் செய்ய வைப்பாள்.

ஒரு நாள் மாலை வேளை. வாசலில் இருந்த தென்னை மரத்தின் அடியில் போட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் நானும் பங்கஜமும் உட்கார்ந்து இருந்தோம். என்னை மடியில் வைத்துக்கொண்டு பங்கஜம் ராமர் காட்டுக்குப் போன கதையைச் சொல்லிக் கொண்டிருந்தாள். அந்த இடம் முழுவதும் நிசப்தமாக, ஆளரவமற்று இருந்தது. பகல் முழுவதும் அந்த இடம் எவ்வளவு சந்தடியாக இருக்குமோ இரவு ஆக ஆக ஒரு விதமான நிசப்தம் குடி கொண்டு விடும். வேலைக்காரர்கள் வீட்டுக்குப் போய் விடுவார்கள். வீட்டில் எஞ்சியிருப்பது நானும், பங்கஜமும், நாகம்மா மற்றும் பெருமாள் என்ற குடிகார வேலைக்காரன். பெருமாள் குடித்திருந்தாலும் வெறுமே இருந்தாலும் எல்லோரையும் மி ரட்டிக்கொண்டே இருப்பான். பங்கஜத்திடம் மட்டும் வளர்ப்பு நாயை போல் விசுவாசமாக அடங்கியிருப்பான். பங்கஜம் என்னைப் பார்த்துக் கொள்வது போல் அவனையும் பார்த்துக்கொள்வாள். இன்று ஏனோ அவன் இன்னும் வீட்டுக்கு வரவில்லை.

நாகம்மா சமையல் அறையில் வேலையாக இருந்தாள்.

அதற்குள் வேலையாள் ஒருவன் அங்கே வந்தான். சட்டைப் பையிலிருந்து கடிதத்தை எடுத்து பங்கஜத்திடம் கொடுத்தான்.

நான் எழுந்துகொள்ளப் போகும்போது பங்கஜம் என்னைத் தடுத்து விட்டு அப்படியே கடிதத்தை படிக்கத் தொடங்கினாள். அதில் என்ன எழுதியிருந்ததோ தெரியாது. கோபத்துடன் அந்தக் கடிதத்தை சுக்கு நூறாகக் கிழித்து அவன் முகத்தில் வீசி எறிந்தாள். "இந்தக் கடிதத்திற்கு இதுதான் என்னுடைய பதில். போய் உன் முதலாளியிடம் சொல்லிக் கொள்" என்றாள்.



வந்தவன் கொஞ்சம்கூட அவமானமாக உணர்ந்ததாகத் தெரியவில்லை. இந்த அவமானம் தனக்கு இல்லை வேறு யாருக்கோ என்பது போல் போய்க்கொண்டிருந்தான். பின்னாலிருந்து பங்கஜம் அவனை அழைத்தாள். "கொஞ்சம் நில்லு. இந்தச் செய்தியையும் கேட்டு விட்டுப்போ. இந்த ஊர் அவர் ஒருத்தருக்கு மட்டுமே சொந்தம் இல்லை. நான் இந்த ஊரில் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தால் அந்தக் கடவுளே வந்தாலும் என்னைத் தடுக்க முடியாது. இதையும் உன் முதலாளியிடம் சொல்லு" என்றாள்.

அவன் தலையை அசைத்து விட்டுப் போகப்போனான்.

பங்கஜம் மேலும் சொன்னாள். "இந்த ஊரில் குடியிருப்பது மட்டுமே இல்லை. இந்தப் பெண்ணையும் இங்கேயே வளர்த்து ஆளாக்குவேன் என்று சொல்லு. இன்னொரு தடவை இது போன்ற மிரட்டல் கடிதம் ஏதாவது எடுத்துக்கொண்டு என் வீட்டு வாசற்படியில் எவனாவது காலை வைத்தால் அவன் காலை ஒடித்து விடுவேன், ஜாக்கிரதை."

சத்தம் கேட்டு நாகம்மா ஓடிவந்தாள். "அம்மா! என்ன பேச்சு பேசுறீங்க? பிறகு நீங்கதான் வருத்தப்படப் போறீங்க."

"நிச்சயமாக வருத்தப் படமாட்டேன் நாகம்மா. இந்த ஜென்மத்தில் நான் யாருக்காகவும் வருத்தப் படமாட்டேன். நான் விரும்பியது அவருடைய துணையை மட்டும்தான். நான் அவருக்கு சொந்தமானவள் என்று நான் என்னிக்குமே ஊரில் டமாரம் அடித்துக்கொண்டது இல்லையே. நான் அவருக்கு சொந்தம் ஆக முடியுமே தவிர, அவர் என்றுமே எனக்கு சொந்தம் ஆக முடியாது நாகம்மா. எனக்கு ஒரு துணை வேண்டும் என்பதை அவர் ஏன் புரிந்துகொள்ளவில்லை? ஏன் இந்த அகங்காரம்? பெண் ஜென்மம்! இவளால் என்ன செய்து விடமுடியும் என்ற திமிருதானே. அதிகாரம் தன் கையில் இருக்கிறதென்ற ஆணவம் தானே. எது எப்படி போனாலும் சரி. இந்தப் பெண்ணை என்னால் விட முடியாது. ஏனோ தெரியவில்லை நாகம்மா. இந்தப் பெண்ணைப் பார்த்ததும்

எனக்குத் தேவையான துணை கிடைத்துவிட்டாற்போல் தோன்றியது. இவளுக்கும் என்னைப் போல் யாருமே இல்லை.

சின்ன வயதிலேயே பெற்றோரை இழக்க நேர்ந்தது, யாருடைய வீட்டிலோ அன்பும், ஆதரவு கிடைக்காத நிலையில் வளரவேண்டிய சூழ்நிலை. பன்னிரண்டு வயதிலேயே எல்லாம் இழக்க வேண்டி வந்தால் அதைவிட நரகம் வேறு இருக்கமுடியாது. நாகம்மா! அந்த வேதனை... அந்தத் தனிமை எனக்குத்தான் புரியும். இந்தக் குழந்தையை நன்றாகப் பார். எவ்வளவு லட்சணமாக இருக்கிறாள்! குறைந்த பட்சம் ஒரு பெண் குழந்தையையாவது இந்த தொழிலிலிருந்து காப்பாற்றமுடிந்தால், என் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் கிடைத்தாற் போல்தான். இந்தக் குழந்தையைப் பார்க்கும் போது சின்ன வயதில் நான் வாழ்ந்த வாழ்க்கைதான் நினைவுக்கு வருகிறது. அப்போதும் இப்போதும் நான் தனியாள்தான். எனக்கு ஒரு துணை வேண்டும் நாகம்மா. கடவுளாக பார்த்து எனக்கு அனுப்பி வைத்த துணை இந்தப் பெண். பங்கஜம் திடீரென்று என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழத் தொடங்கினாள்.

"என்னம்மா நீங்க. சமீபகாலமாய் அடிக்கடி இப்படி மனசை தளரவிடறீங்க." நாகம்மா கடிந்து கொண்டாள்.

"என் மனம் ரொம்ப பலவீனப்பட்டு விட்டது நாகம்மா. என்னுடைய வாழ்க்கை எப்படி முடியப் போகிறதோ என்று பயமாக இருக்கிறது. சின்ன வயதில் பெற்றோரின் பாதுகாப்பில் வளர்ந்தால் அந்த நினைவுகள் தரும் ஊக்கத்தில் மனிதனால் தைரியமாக வாழ முடியும். திருமணமாகி ஒரு வாழ்க்கை துணை அமைந்தவிட்டால் உலகம் எவ்வளவு கேலி செய்தாலும் தனக்கென்று ஒரு வீடு, குடும்பம் இருந்தால் வாழ்க்கையை அனுபவிக்கமுடியும். குழந்தை குட்டி இருந்தால் அவர்களுடைய படிப்பு, பாட்டு என்று சந்தடியாக, சந்தோஷமாக வாழ முடியும். உன்னையே எடுத்துக் கொள். இளமையிலேயே கணவன் இறந்து போய் விட்டாலும் மகன் இருப்பதால், அவனுடைய ஆதரவு இருப்பதால் இப்படி தைரியமாக வாழ்ந்து கொண்டிருக்கிறாய்."



"என் தைரியத்தை நீங்கதான் பாராட்டணும். என்னவோ போங்க. நூறு வீடுகளில் பத்து பாத்திரம் தேய்த்து, கஷ்டப்பட்டு உழைத்து மகனை வளர்த்து ஆளாக்கினேன். அவன் விரும்பிய பெண்ணை எனக்கு பிடிக்காவிட்டாலும் கல்யாணம் கட்டி வைத்தேன். அவனா இப்பொழுது என்னைக் காப்பாற்றுகிறான்? இந்த வீட்டில் வேலை செய்து கொண்டு உங்களையே என்னுடைய துணையாக நினைத்துக்கொண்டு வாழவில்லையா." நாகம்மா ரொம்ப நேரம் பங்கஜத்தை தேற்றிக்கொண்டு இருந்தாள்.

"அவருடைய விருப்பத்திற்கு மாறாக நீங்க இந்தப் பெண்ணை வளர்க்க நினைப்பது சரியில்லை அம்மா."

நாகம்மாவின் கருத்தை பங்கஜம் ஏற்றுக் கொள்ளவில்லை.

பங்கஜத்திற்கு தலைமுடி அடர்த்தியாகவும், ரொம்ப நீளமாகவும் இருந்தது. பின்னலை அவிழ்த்து விட்டால் கிருஷ்ண வேணி பிரவாகமாய் முதுகு முழுவதும் படரும். இரண்டு கைகளாலேயும் அந்த தலைமுடியயை பிடித்துக் கொள்வது எனக்கு ரொம்ப பிடித்தமான விஷயம்.

வந்த மறுநாளே எனக்கு ஜுரம் வந்து விட்டது. சாப்பிட எது கொடுத்தாலும் வேண்டாம் என்று மறுத்துக் கொண்டிருந்தேன்.

நாட்டு வைத்தியர் வந்து பார்த்துவிட்டு "ஏக்கத்தினால் வந்த ஜுரம்" என்றார். பங்கஜம் என் அருகில் வந்து "யார் வேண்டும் குழந்தே?" என்று கேட்பாள்.

"அம்மா! அம்மாதான் வேண்டும்" என்பேன். அவள் கண்களில் நீர் நிறைந்துவிடும். அப்படியே பத்து நாட்கள் கழிந்தன.

ஆசாரி கொடுத்த மருந்தினாலோ என்னவோ ஜுரம் குறைந்துவிட்டது. என்னுடைய கை கால்கள் ஈர்க்குச்சியாய் மெலிந்துவிட்டன. தலைமுடி கொட்டிவிட்டதில் பின்னல்

எலிவால் போல் ஆகிவிட்டது. எலும்புக்கூடாக காட்சி அளித்தேன்.

பங்கஜத்தின் வளர்ப்பு மகள் என்பதால் என்னைப் பார்ப்பதற்காக அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்கள் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். முத்துக்கருப்பன் எனக்கு ஜுரம் வந்த நாள் முதல் என் அருகிலேயே இருந்தான். வந்தவர்கள் என்னை ஏற இறங்க பார்த்துவிட்டு "எலிக்குஞ்சுபோல் இருக்கும் இந்தப் பெண்ணுக்காகவா பங்கஜம் முன்சீபுடன் சண்டை போட்டாள்" என்று என் முன்னாலேயே சொல்லிக்காட்டுவார்கள்.

அவர்களுடைய பேச்சும் நடத்தையும் ரொம்ப வேடிக்கையாக இருந்தன. பங்கஜம் எதிரில் இருந்தால் ரொம்ப மரியாதையாக, பணிவாக பேசுவார்கள், காபியோ, டீயோ கொண்டு வருவதற்காக பங்கஜம் உள்ளே போனால் என்னைப் பற்றி ஏளனமாகப் பேசி சிரித்துக்கொள்வார்கள். ஒரு முறை பங்கஜத்திடம் இதையெல்லாம் சொல்லி விட்டேன். அதற்குப் பிறகு அவர்கள் வராமல் தடுத்து விட்டாள்.

பங்கஜம் அருகில் இல்லாதபோது நாகம்மா என்னை வசைபாடிக்கொண்டிருந்தாள்.

"எங்கிருந்து வந்து சேர்ந்தாயோ. தரித்திர ஜாதகம். அம்மாவுக்கும் அய்யாவுக்கும் ஆகாமல் செய்து விட்டாய். நீ செத்தால்தான் இந்த வீட்டைப் பிடித்த சனி விலகும். சாப்பிடு வயிறு வெடிக்கும் அளவுக்கு நன்றாக கொட்டிக் கொள்."

நாகம்மா கொடுத்த பாலை நான் சாப்பிடவில்லை. அழுது கொண்டே உட்கார்ந்திருந்தேன். பங்கஜம் வயல்காட்டிலிருந்து திரும்பி வந்தாள்.

"ஏன் அழுதுகொண்டிருக்கிறாய்?" என்னைத் தூக்கிக் கொண்டே கேட்டாள்.

நாகம்மா என்னைத் திட்டியதை அப்படியே ஒப்பித்தேன்.

"நாகம்மா!" உரத்த குரலில் கத்தினாள்.



நாகம்மா ஓட்டமும் நடையுமாக வந்தாள். பயத்துடன் நடுங்கிக்கொண்டே பார்த்தாள்.

"கண்ணம்மா சொன்னது உண்மைதானா?"

நாகம்மா உடனே கண்களை அகலமாக விரித்து அதிர்ச்சி அடைந்து விட்டவள் போல் பார்த்தாள். இரண்டு கைகளாலேயும் மார்பின் மீது படீர் படீர் என்று அறைந்து கொண்டே "அம்மாடி! எவ்வளவு பெரிய பொய்? சாண் உயரம்கூட இல்லை இந்தப் பெண். எவ்வளவு பெரிய பழியை என் மீது சுமத்திவிட்டாள்?" என்றவள் சட்டென்று குனிந்து பங்கஜத்தின் இரண்டு கால்களையும் கெட்டியாக பிடித்துக்கொண்டாள். "அம்மா! என் மகன் மீது சத்தியம் செய்து சொல்கிறேன். நான் யாரையும் எதையும் சொல்லவில்லை. நீங்க என்னைக் கொன்று போட்டாலும் எனக்கு சம்மதம்தான். நிம்மதியாக செத்துப் போய்விடுவேன். சத்தியமாக பாப்பாவை நான் ஒன்றுமே சொல்லவில்லை. உங்க வீட்டு உப்பை சாப்பிட்டு வாழ்கிறவள், உங்களை ஏதாவது சொன்னால் என் இரண்டு கண்ணும் அவிஞ்சு போய் விடாதா" என்று புலம்பினாள்.

"நாகம்மா! எழுந்துகொள்." பங்கஜம் நாகம்மாவின் தோளைப்பற்றி எழுப்பி விட்டாள்.

"பாப்பா சொன்னது முழுக்க முழுக்க பொய் அம்மா." நாகம்மா அழுதுகொண்டே சொன்னாள்.

பங்கஜம் பதில் எதுவும் சொல்லவில்லை. நாகம்மா உன்னை எதுவும் சொல்லவில்லையா என்று என்னிடம் கேட்கவும் இல்லை. ஆனால் எனக்குத்தான் ரொம்ப பயமாக இருந்தது.

அன்று முதல் நாகம்மா பங்கஜம் எதிரில் இருந்தால் ரொம்ப அன்பாகவும், இல்லாதபோது கடிந்து கொள்வதுமாக இரட்டை வேடம் போட்டுக்கொண்டிருந்தாள். வண்ணாத்தி வந்தபோது கண்களை உருட்டிக்கொண்டே புகார் செய்தாள்.

எலிவால் போல் ஆகிவிட்டது. எலும்புக்கூடாக காட்சி அளித்தேன்.

பங்கஜத்தின் வளர்ப்பு மகள் என்பதால் என்னைப் பார்ப்பதற்காக அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்கள் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். முத்துக்கருப்பன் எனக்கு ஜூரம் வந்த நாள் முதல் என் அருகிலேயே இருந்தான். வந்தவர்கள் என்னை ஏற இறங்க பார்த்துவிட்டு "எலிக்குஞ்சுபோல் இருக்கும் இந்தப் பெண்ணுக்காகவா பங்கஜம் முன்சீபுடன் சண்டை போட்டாள்" என்று என் முன்னாலேயே சொல்லிக்காட்டுவார்கள்.

அவர்களுடைய பேச்சும் நடத்தையும் ரொம்ப வேடிக்கையாக இருந்தன. பங்கஜம் எதிரில் இருந்தால் ரொம்ப மரியாதையாக, பணிவாக பேசுவார்கள், காபியோ, டீயோ கொண்டு வருவதற்காக பங்கஜம் உள்ளே போனால் என்னைப் பற்றி ஏளனமாகப் பேசி சிரித்துக்கொள்வார்கள். ஒரு முறை பங்கஜத்திடம் இதையெல்லாம் சொல்லி விட்டேன். அதற்குப் பிறகு அவர்கள் வராமல் தடுத்து விட்டாள்.

பங்கஜம் அருகில் இல்லாதபோது நாகம்மா என்னை வசைபாடிக்கொண்டிருந்தாள்.

"எங்கிருந்து வந்து சேர்ந்தாயோ. தரித்திர ஜாதகம். அம்மாவுக்கும் அய்யாவுக்கும் ஆகாமல் செய்து விட்டாய். நீ செத்தால்தான் இந்த வீட்டைப் பிடித்த சனி விலகும். சாப்பிடு வயிறு வெடிக்கும் அளவுக்கு நன்றாக கொட்டிக் கொள்."

நாகம்மா கொடுத்த பாலை நான் சாப்பிடவில்லை. அழுது கொண்டே உட்கார்ந்திருந்தேன். பங்கஜம் வயல்காட்டிலிருந்து திரும்பி வந்தாள்.

"ஏன் அழுதுகொண்டிருக்கிறாய்?" என்னைத் தூக்கிக் கொண்டே கேட்டாள்.

நாகம்மா என்னைத் திட்டியதை அப்படியே ஒப்பித்தேன்.

"நாகம்மா!" உரத்த குரலில் கத்தினாள்.



நாகம்மா ஓட்டமும் நடையுமாக வந்தாள். பயத்துடன் நடுங்கிக்கொண்டே பார்த்தாள்.

"கண்ணம்மா சொன்னது உண்மைதானா?"

நாகம்மா உடனே கண்களை அகலமாக விரித்து அதிர்ச்சி அடைந்து விட்டவள் போல் பார்த்தாள். இரண்டு கைகளாலேயும் மார்பின் மீது படீர் படீர் என்று அறைந்து கொண்டே "அம்மாடி! எவ்வளவு பெரிய பொய்? சாண் உயரம்கூட இல்லை இந்தப் பெண். எவ்வளவு பெரிய பழியை என் மீது சுமத்திவிட்டாள்?" என்றவள் சட்டென்று குனிந்து பங்கஜத்தின் இரண்டு கால்களையும் கெட்டியாக பிடித்துக்கொண்டாள். "அம்மா! என் மகன் மீது சத்தியம் செய்து சொல்கிறேன். நான் யாரையும் எதையும் சொல்லவில்லை. நீங்க என்னைக் கொன்று போட்டாலும் எனக்கு சம்மதம்தான். நிம்மதியாக செத்துப் போய்விடுவேன். சத்தியமாக பாப்பாவை நான் ஒன்றுமே சொல்லவில்லை. உங்க வீட்டு உப்பை சாப்பிட்டு வாழ்கிறவள், உங்களை ஏதாவது சொன்னால் என் இரண்டு கண்ணும் அவிஞ்சு போய் விடாதா" என்று புலம்பினாள்.

"நாகம்மா! எழுந்துகொள்." பங்கஜம் நாகம்மாவின் தோளைப்பற்றி எழுப்பி விட்டாள்.

"பாப்பா சொன்னது முழுக்க முழுக்க பொய் அம்மா." நாகம்மா அழுதுகொண்டே சொன்னாள்.

பங்கஜம் பதில் எதுவும் சொல்லவில்லை. நாகம்மா உன்னை எதுவும் சொல்லவில்லையா என்று என்னிடம் கேட்கவும் இல்லை. ஆனால் எனக்குத்தான் ரொம்ப பயமாக இருந்தது.

அன்று முதல் நாகம்மா பங்கஜம் எதிரில் இருந்தால் ரொம்ப அன்பாகவும், இல்லாதபோது கடிந்து கொள்வதுமாக இரட்டை வேடம் போட்டுக்கொண்டிருந்தாள். வண்ணாத்தி வந்தபோது கண்களை உருட்டிக்கொண்டே புகார் செய்தாள்.

"இந்தக் குட்டி இருக்கிறாளே ரொம்ப பொல்லாதவள். சி.ஐ.டி.யில் இருக்க வேண்டியவள். நம்மைப் பற்றி அம்மாவிடம் புகார் சொல்வதுதான் இவளுடைய வேலை" என்று கையை ஆட்டிக் கொண்டே நீட்டி முழக்கினாள். வண்ணாத்திக்குக் கிண்ணம் நிறைய சாதமும், குழம்பும் நாகம்மா கொடுத்து அனுப்பியதை என் கண்ணால் பார்த்தேன்.

யார் என்ன சொன்னாலும் பொருட்படுத்த வேண்டாம் என்று முத்துக்கருப்பன் சொன்னான். அம்மாவிடம்கூட யாரைப்பற்றியும் சொல்ல வேண்டாம் என்று சொன்னான்.

பங்கஜம் என்று நான் விளிப்பதைப் பார்த்துவிட்டு "அப்படி அழைக்கக் கூடாது பாப்பா. அம்மா என்றுதான் அழைக்கவேண்டும். அவள்தான் உன்னுடைய அம்மா" என்றான்.

"அம்மா அங்கே போய்விட்டாளே?" கையை மேலே உயர்த்தி காண்பித்துக்கொண்டே சொன்னேன்.

"அந்த அம்மாவும் இந்த அம்மாவும் ஒன்றுதான் கண்ணம்மா. உங்க அம்மா மேல் உலகத்திற்குப் போன போது தன்னுடைய உடலை ஒரு மரத்தின் பொந்துக்குள் வைத்துவிட்டுப் போனாள். திரும்பி வருவதற்குள் ராட்சசி ஒன்று அந்த உடலை விழுங்கி விட்டது. அம்மா கடவுளிடம் வேண்டிகொண்ட போது புதிதாக இந்த உருவத்தைக் கொடுத்தார். அதான் அவளுக்கு உன் மீது இவ்வளவு அன்பு" முத்துக்கருப்பன் சொன்னான்.

"உண்மையாகவா?"

"ஆமாம். கண்ணம்மா."

"ஆனால் அம்மா என்னிடம் இதெல்லாம் சொல்லவே இல்லையே."

"சொல்லக் கூடாது. நீயாகத்தான் புரிஞ்சுக்கணும். அம்மா தன் வாயால் சொன்னால் இந்த உருவம் மாயமாகிவிடும் என்று கடவுள் சாபம் கொடுத்துவிட்டார்."



இதைக் கேட்டதும் எனக்கு சந்தோஷமாக இருந்தது. உடனே உள்பக்கம் ஓடினேன். அம்மா கட்டில் மீது அமர்ந்து, பூக்களை தொடுத்துக்கொண்டு இருந்தாள். அருகில் சென்று "அம்மா!" என்று அழைத்தேன்.

தலை உயர்த்தி பார்த்தாள். "யாரைக் கூப்பிட்டாய் கண்ணம்மா?"

"உன்னைத்தான்." நான் கட்டில் மீது ஏறி அம்மாவை இறுக்கமாக அணைத்துக்கொண்டேன். முத்துக்கருப்பன் என்னிடம் சொன்னதை அப்படியே அவளிடம் சொன்னேன்.

வியப்புடன் கேட்டுக்கொண்டிருந்தாள். பிறகு என் கன்னத்தில் முத்தம் பதித்துவிட்டு "ஆமாம் கண்ணம்மா. கடவுள் உன்னை எனக்காகவும், என்னை உனக்காகவும் அனுப்பிவைத்தார்" என்று சொன்னாள். சொல்லும்போதே அவள் விழிகளில் நீர் பளபளத்தது.

விவரம் தெரிந்த பிறகு முத்துக்கருப்பன் சொன்ன கதையின் பொருளை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

அன்று முதல் நான் அம்மாவை விட்டு ஒரு நிமிடம்கூட பிரிந்து இருந்தது இல்லை. அம்மாதான் எனக்கு எல்லாமே கற்றுக் கொடுத்தாள். அம்மா நன்றாகப் பாடுவாள். வீணை வாசித்துக் கொண்டே இனிமையான குரலில் அவள் பாடும்போது இந்த உலகமே மறந்து போனாற்போல் அருகில் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருப்பேன். அம்மா எனக்கு எழுத, படிக்க கற்றுக் கொடுத்தாள். என்னுடன் சேர்ந்து கண்ணாமூச்சி விளையாடுவாள். வெளியில் போகும்போது என்னையும் அழைத்துக்கொண்டு போவாள்.

ஒருமுறை அப்படிப் போகும்போது நடுத்தர வயதைக் கடந்த ஒருவர் வழியில் தென்பட்டார்.

"பங்கஜம்! யாரிந்தப் பெண்?"

"என்னுடைய மகள்."

"பார்க்க நன்றாகத்தான் இருக்கிறாள். எட்டு வயது இருக்குமா? ஒரு பத்துவருடம் காத்திருந்தால் உனக்கு நல்ல வரும்படிதான்." என்றார்.

"அய்யா! நீங்க பெரியவங்க. உங்களுக்கும் வயதுக்கு வந்த மகள் இருக்கிறாள் இல்லையா. அந்த வரும்படி ஏதோ நீங்களே பெற்றுக்கொள்ளலாமே. எங்க வீட்டுக்கு யாராவது வந்தால் உங்க வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன்."

"என்ன? வாய் ரொம்ப நீளுது."

"வார்த்தைகளை அளந்து பேசுங்க. உங்களுக்குச் சமமாக என்னாலும் பேசமுடியும்."

"உனக்கு திமிரு அதிகமாகிவிட்டது."

"வாயை மூடு."

"காலில் இருப்பதை கழட்ட வேண்டியிருக்கும் ஜாக்கிரதை."

அதற்குள் பெருமாள் அங்கே வந்தான். "என்ன ஆச்சும்மா? இங்கே நிற்கிறீங்களே?" என்று கேட்டான்.

பெருமாளை பார்த்ததும் அவர் வேகவேகமாக அங்கிருந்து போய் விட்டார்.

அன்று முழுவதும் அம்மா அழுதுகொண்டுதான் இருந்தாள். நான் அம்மாவின் கண்ணீரைத்துடைத்துக் கொண்டே "அம்மா! என்ன நடந்தது? ஏன் அழுதுகொண்டு இருக்கிறாய்?" என்று கேட்டேன்.

"ஒன்றுமில்லை."

"சாப்பிடும்மா."

"பசியே இல்லை."

முத்துக்கருப்பன் எனக்கு முன்பு ஒருதடவை சொல்லிக் கொடுத்ததுபோல் தட்டில் தயிர் சாதம் பிசைந்து எடுத்துப் போய் அம்மாவுக்கு ஊட்டிவிட்டேன். "சாப்பிடும்மா"



அம்மா என்னை அணைத்துக்கொண்டாள். நான் அம்மாவாகவும், தான் குழந்தைபோலவும் என் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள்.

விஷயம் தெரிந்து முத்துக்கருப்பன் வந்தான். "என்னம்மா! சின்னக் குழந்தையை போல் இப்படி அழலாமா? இந்த உலகத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா என்ன? மனதைத் தளர விடாதீங்க. யாருடைய பேச்சையும் காதில் போட்டுக் கொள்ளாதீங்க" என்றான்.

"இந்த ஊரில் இருக்கும் வரையில் இந்தப் பேச்சுகளை தவிர்க்க முடியாது. என் காரணமாக குழந்தைக்கும் கெட்ட பெயர் வந்துவிடும். நான் அவளை அழைத்துக்கொண்டு வேறு ஊருக்குப் போய் விடுகிறேன்."

"எந்த ஊருக்குப் போவதாக முடிவு செய்திருக்கீங்க அம்மா?"

"பட்டணத்திற்கு, அங்கே என்னுடைய சினேகிதி ரத்னா இருக்கிறாள்."

"உங்கள் விருப்பம் அம்மா. பெண்கள் தனியாக இருந்தால் இதுபோன்ற தொல்லைகள் வருவதை தவிர்க்க முடியாதம்மா."

"அங்கே போனால் கண்ணம்மாவை நல்ல பள்ளிக்கூடத்தில் சேர்க்கலாம். இந்த ஊர் பள்ளியில் குழந்தையை சேர்க்கலாம்னு பார்த்தால் கோவிந்தனும், ராகவனும் தடுத்து புண்ணியம் கட்டிக் கொண்டு விட்டார்கள். குழந்தையின் படிப்பை முன்னிட்டாவது வேறு ஊருக்குப் போக வேண்டும்."

"அப்படியே செய்யுங்க. நிலத்தைப் பற்றி உங்களுக்கு எந்தக் கவலையும் வேண்டாம். நான் பார்த்துக்கொள்கிறேன்."

அன்று இரவு படுத்துக்கொள்ளும்போது அம்மா சொன்னாள். "நாம் பட்டணத்திற்குப் போகப் போகிறோம்

கண்ணம்மா. நல்ல பள்ளிக்கூடமாக பார்த்து உன்னைச் சேர்க்கப் போகிறேன்."

"இந்த ஊர் பள்ளிக்கூடத்தில் என்னை ஏன் சேர்த்துக் கொள்ளவில்லை அம்மா?"

அம்மா ஒரு நிமிடம் பேசவில்லை. பிறகு சொன்னாள். "இந்தப்பள்ளிக்கூடம் சரியில்லை கண்ணம்மா. பட்டணத்திற்குப் போகிறோம் இல்லையா. அங்கே பெரிய பள்ளிக்கூடத்தில் சேர்க்கிறேன். நீ நன்றாக படித்து டாக்டராகவோ, பெரிய ஆபீசராகவோ ஆகவேண்டும். மிடுக்காக, கம்பீரமாக நடந்து போவதை பார்க்கும்போது எவ்வளவு நன்றாக இருக்கும் தெரியுமா? அப்போ எல்லோரும் என்னைப் பார்த்து இந்தக் கிழவிதான் பிரியம்வதாவின் தாயாரா?" என்று கேட்பார்கள்.

"ச்சீ... நீ ஒன்றும் கிழவி இல்லை" என்றேன்.

அம்மா உடனே கலகலவென்று சிரித்து விட்டாள். அப்படி சிரிக்கும்போது அம்மாவின் முகம் ரொம்பவும் அழகாக இருந்தது. அம்மா எப்போதும் சந்தோஷமாக சிரித்துக்கொண்டே இருக்கவேண்டும். அதை கண்குளிர நான் பார்க்கவேண்டும்.

அடுத்த பௌர்ணமி அன்று நான், அம்மா, நாகம்மா மற்றும் முத்துக்கருப்பன் எல்லோரும் பட்டணத்திற்குக் கிளம்பினோம்.

# 6

நானும், அம்மா, நாகம்மா பட்டணத்திற்குக் குடி பெயர்ந்தோம், முத்துக்கருப்பன் எங்களுடன் வந்து அரிசி மூட்டை, பருப்பு, புளி மற்றும் முக்கியமான மளிகைச் சாமான்களை இறக்கி வைத்துவிட்டுப் போனான். நாங்கள் குடிவந்த போர்ஷனில் மூன்று அறைகள் இருந்தன.



கொல்லையில் குழாய் இருந்தது. பக்கத்துப் போர்ஷனில் ஆசாரியும், அவர் மனைவியும் இருந்தார்கள். அவருக்கு வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும். மூத்ததாரம் இறந்து போன பிறகு இரண்டாவது திருமணம் செய்து கொண்டிருக்கிறார். கணவன் மனைவிக்குள் வயது வித்தியாசம் அதிகம். இருவருக்கும் ஒரு நிமிடம்கூட ஒத்துப் போகாது.

எதிரே பெரிய வீடு ஒன்று இருந்தது. வீட்டைச் சுற்றிலும் பெரிய தோட்டம். ஷெட்டில் ஜீப்பும், காரும் இருந்தன. அந்த வீட்டுக்கு யாராவது வந்து போய்க்கொண்டே இருந்தார்கள். அந்த வீட்டு எஜமான் பெயர் ஜகன்னாதன். பெரிய காண்ட்ராக்டர். அவருடைய மகள்தான் மதுரா. மதுரா பள்ளிக்கூடத்திற்குக் காரில்தான் போவாள்.

மதுரா சிவப்பாக, அழகாக இருப்பாள். விலை உயர்ந்த ஆடைகளை அணிந்துகொள்வாள். ஆடைகளால் அவளுடைய அழகு கூடியதா இல்லை அவளால் அந்த ஆடைகளுக்குப் பெருமை கிடைத்ததா என்று யாராலும் சொல்ல முடியாது.

அம்மா என்னை பள்ளிக்கூடத்தில் சேர்த்தாள். மதுரா படிக்கும் பள்ளியும் அதுதான்.

மதுராவுக்காக மதிய உணவு இடைவெளியில், அவர்களுடைய வீட்டு வேலைக்காரி சாப்பாடு எடுத்துக்கொண்டு காரில் வருவாள். மதுரா சாப்பிட மாட்டாள். வேலைக்காரி கெஞ்சி கூத்தாடி கடைசியில் தோல்வியுடன் திரும்பிப் போவதை பல முறை பார்த்திருக்கிறேன். நான் அம்மா கொடுத்த டிபன்பாக்ஸை மடியில் வைத்துக்கொண்டு தனியாக மரத்தின் அடியில் அமர்ந்து கொண்டு சாப்பிடுவேன், பள்ளியில் யாருடனும் அதிகமாக பேசமாட்டேன். தேவைக்கு மேல் பேச வேண்டாம் என்று அம்மா சொல்லியிருந்தாள்... யாராவது அப்பாவைப் பற்றிக் கேட்டால் ராணுவத்தில் இருந்தார் என்றும் போரில் இறந்து போய்விட்டாரென்றும் சொல்லச் சொன்னாள்.

மதுராவும் நானும் ஒரே வகுப்பு, ஒரே செக்ஷன், ஒரு நாள் மதுராவே என்னிடம் வந்தாள்.

"உங்க அப்பா எங்கே வேலை பார்க்கிறார்?" என்று கேட்டாள்.

"ராணுவத்தில் இருந்தார். போரில் இறந்து போய்விட்டார்."

"அப்படியா! பாவம்" என்றாள் நான் அங்கிருந்து போய் விட்டேன். மறு நாள் மறுபடியும் வந்தாள்.

"உங்க வீடு எங்கே இருக்கு?"

"உங்க வீட்டுக்கு எதிரில். ஆசாரி மாமா வீட்டுக்கு பக்கத்து போர்ஷனில் குடியிருக்கிறோம்."

"அப்படியா!" வியப்புடன் பார்த்தாள்.

அன்று மாலை நானும் அம்மாவும் காய்கறி வாங்க கடைத்தெருவுக்குப் போனோம். அம்மா காய்கறி வாங்கும்போது நான் கூடையைப் பிடித்துக்கொண்டு பக்கத்திலேயே நின்று கொண்டிருப்பேன்.

அம்மா காய்கறிக்காரனுடன் பேரம் பேசிக் கொண்டிருந்தாள். அதற்குள் எங்களுக்கு பக்கத்தில் கார் ஒன்று வந்து நின்றது.

"பிரியா! பிரியா!" காரில் உட்கார்ந்திருந்த மதுரா உரத்த குரலில் கத்தினாள்."

கூடையை கையில் பிடித்துக்கொண்டே கார் அருகில் ஓடினேன்.

"இங்கே ஏன் நிற்கிறாய்?" என்று கேட்டாள்.

"காய் வாங்க அம்மாவுடன் வந்தேன். அதோ என்னுடைய அம்மா" தொலைவில் நின்றிருந்த அம்மாவை சுட்டிக் காட்டினேன்.

"உன்னுடைய அம்மா ரொம்ப அழகாக இருக்கிறாள்" என்றாள்.



மதுரா அப்படிச் சொன்னது எனக்கு ரொம்ப பெருமையாக இருந்தது.

மதுராவின் தாய் ரொம்ப பருமனாக இருந்தாள், காரை விட்டு இறங்கவே இல்லை. டிரைவரை இறங்கிப் போய் காய் வாங்கி வரச்சொன்னாள்.

என்னுடைய கூடையிலிருந்து பச்சை மிளகாய் கீழே விழுந்து விட்டன. சட்டென்று குனிந்து அவற்றைப் பொறுக்கினேன்.

"ச்சீ... ச்சீ... கீழே விழுந்தவற்றை எடுக்கக் கூடாது." மதுரா சொன்னாள்.

"பரவாயில்லை. வீட்டுக்குப் போனதும் அம்மா அவற்றை அலம்புவாள்" என்றேன்.

அதற்குள் அம்மா கறிகாய்காரனிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு பக்கத்தில் திரும்பிப் பார்த்தாள். நான் இல்லாமல் போனதும் பதட்டமாக அங்கும் இங்கும் தேடினாள்.

"அம்மா!" குரல் கொடுத்தேன்.

அம்மா என்னை நோக்கி வந்தாள்.

"அம்மா! இவள்தான் மதுரா" என்றேன்.

"அப்படியா" என்றாள்.

"வணக்கம் ஆன்டி." மதுரா சொன்னாள்.

அம்மா மதுராவின் தாயைப் பார்த்து அறிமுகப்படுத்திக் கொள்வது போல் புன்முறுவல் செய்தாள்.

"இவள் உங்களுடைய மகளா?" மதுராவின் தாய் கேட்டாள்.

"ஆமாம். இருவரும் ஒரே பள்ளியில் படித்து வருகிறாள்."

"அப்படியா!" என்பது போல் அந்த அம்மாள் தலையை அசைத்தாள்.

"வரட்டுமா!" அம்மா விடைபெற்றுக்கொள்வது போல் சொன்னாள்.

"டாடா ஆன்டி," மதுரா கையை அசைத்தாள்.

நாங்க இருவரும் நடந்து வரும்போது கார் எங்களைத் தாண்டிக்கொண்டு போயிற்று. மதுரா மறுபடியும் கையை அசைத்தாள்.

அன்று மாலை அம்மா எனக்கு மருதாணியை இட்டுக் கொண்டிருந்தாள். மறுநாள் கோகுலாஷ்டமி. அம்மா கிருஷ்ணருக்கு பூஜை செய்வாள். அம்மா எனக்கு மருதாணி இடும்போது மதுரா வந்தாள்.

"இதுதான் உங்க வீடா?"

"ஆமாம்" என்றேன்.

"வாம்மா" அம்மா வரவேற்றாள். மதுரா வந்து கட்டில் மீது அமர்ந்துகொண்டாள்.

"மருதாணியா... எனக்கு ரொம்பப் பிடிக்கும்" என்றாள்

"உனக்கும் இட்டு விடட்டுமா?" அம்மா கேட்டாள்.

மதுரா தலையை அசைத்தாள்.

அம்மா எனக்கு முடிந்த பிறகு மதுராவுக்கு இட்டு விட்டாள்.

மதுரா இரண்டு கைகளிலும் மருதாணியை வைத்துக்கொண்டிருந்த போது அவர்கள் வீட்டு வேலைக்காரன் வந்தான்.

"சின்னம்மா! இங்கே இருக்கீங்களா! அங்கே பெரிய அய்யா அங்கிள் எல்லோரையும் விரட்டிக்கிட்டு இருக்கிறார். உடனே வாங்க" என்றான்.

"நான் வரமாட்டேன்." மதுரா சொன்னாள்.



அவன் போய் விட்டான். பின்னாலேயே டிரைவர் வந்தான். அவனையும் அனுப்பிவிட்டாள். சற்று நேரம் கழித்து வேலைக்காரி வந்தாள்.

"அய்யா எல்லோரையும் சத்தம் போடறாங்கம்மா. வாங்க" என்று கெஞ்சினாள்.

மதுரா இரண்டு கைகளையும் அழகு பார்த்துக்கொண்டே கிளம்பிப் போனாள்.

மறுநாள் காலையிலேயே மதுரா வந்தாள். மருதாணி இட்டிருந்த கைகளைக்காட்டினாள். சிவப்பாக பற்றியிருந்தது. என்னைவிட அவளுக்குத்தான் அழகாக இருந்தது.

மறுநாள் பள்ளியிலிருந்து திரும்பி வரும்போது மதுரா காரை நிறுத்தி என்னையும் ஏற்றிக்கொண்டாள். முதல் முறையாக காரில் ஏறினேன். ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

வீட்டுக்கு வந்ததும் அம்மா என்னை கோபித்துக் கொண்டாள். "இனி ஒரு போதும் அவர்களுடைய காரில் ஏற வேண்டாம்" என்றாள்.

"காரில் ஏறுவதற்காகத்தான் நீ அந்தப் பெண்ணுடன் நட்பு வைத்துக்கொண்டாய் என்று மற்றவர்கள் பேசுவார்கள்."

நாகம்மாவும், மதுராவின் வீட்டு சமையல்காரியும், நன்றாகப் பழகிவிட்டார்கள்.

மதுரா அம்மாவிடம் பாட்டு கற்றுக்கொள்வதற்காக வரத் தொடங்கினாள். மதுரா சம்பளம் கொடுக்க முயன்றபோது அம்மா மறுத்து விட்டாள்.

"பிரியாவுடன் சிநேகமாக இரு. அது போதும்" என்றாள்.

அம்மா பணத்தைத் திருப்பி அனுப்பிய பிறகு மதுராவின் தாய் வந்தாள்.

"மதுராவிடம் நீங்க காட்டும் அன்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வைதற்காகத்தான் வந்தேன். ஏன் என்று

தெரியவில்லை. மதுராவை எல்லோரும் இப்படித்தான் விரும்புவார்கள்." பெருமிதம் கலந்த குரலில் சொன்னாள்.

அம்மா என்னை மடியில் உட்கார வைத்துக்கொண்டாள்.

"உங்கள் கணவர் எங்கே இருக்கிறார்?"

"ராணுவத்தில் இருந்தார். ஒரு முறை போருக்குச் சென்றார். பிறகு அவருடைய விவரம் தெரியவில்லை, அப்பொழுது பிரியா கைக்குழந்தை தந்தையைப்பற்றி அவளுக்கு எதுவும் தெரியாது."

மேற்கொண்டு அந்த அம்மாள் எதுவும் கேட்கவில்லை.

"வீட்டுக்கு வாங்க" என்று அழைப்பு விடுத்தாள்.

மதுரா பாட்டு கற்றுக்கொள்வதற்காக எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவதால் எனக்கும் அவளுக்கும் இடையே நட்பு வளர்ந்தது. பாட்டு என்பது ஒரு சாக்குதான். அம்மா பாட்டு கற்றுக் கொடுக்க அழைத்தால் "நாளைக்கு கற்றுக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு என்னுடன் விளையாடிக் கொண்டிருப்பாள். அம்மா என்னுடன் அவளுக்கு பின்னல் வேலை, எம்பிராய்டரி எல்லாம் கற்றுக்கொடுத்தாள். மதுரா சிலசமயம் அம்மாவிடம் உரிமையாகக் கேட்டு, என்னுடன் சேர்ந்து எங்க வீட்டு சாப்பாட்டை சாப்பிடுவாள்.

"இந்தப் பெண் பெரியவள் ஆனபிறகு நாட்டுக்கே ராணியாகி விடுவாள். அவ்வளவு அழகு" என்பாள் நாகம்மா. மதுராவின் அழகின் முன்னால் நான் எதற்கும் லாயக்கு இல்லை என்பது போல் நாகம்மா அடிக்கடி குத்தலாகப் பேசுவாள்.

சிலசமயம் எனக்கு ரொம்ப அழுகையாக வரும். அம்மாவிடம் எனக்கு எல்லாம் நன்றாகத்தான் இருந்தது. இந்த நாகம்மாவின் தொல்லையைத்தான் தாங்க முடியவில்லை.

முத்துக்கருப்பன் அடிக்கடி வந்து அரிசி, பருப்பு என்று ஏதாவது மளிகை சாமானைக் கொண்டு வந்து தருவான். குத்தகை பணமும் கொடுத்து வந்தான்.



ஒரு நாள் மாலை...

எனக்கு ஜுரம் வந்துவிட்டது. அம்மா என்னை டாக்டரிடம் அழைத்துப் போனாள். அவர் எழுதிக் கொடுத்த மருந்துகளை வாங்கி வந்து என்னை விழுங்கச் செய்தாள்.

ஜுர மயக்கத்தில் கண்ணைத் திறக்காமல் கட்டில் மீது படுத்திருந்தேன். அம்மா சாப்பிடாமல் என் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டிருந்தாள். நாகம்மா அம்மாவை சாப்பிடச் சொல்லி வற்புறுத்திய போது "எனக்கு பசி இல்லை, நீ சாப்பிடு" என்றாள்.

"நீங்க ரொம்பதான் கவலைப்படறீங்கம்மா. குழந்தைகளுக்கு ஜுரம் வராதா என்ன? அது போகட்டும். இந்தக் குழந்தை வளர்ந்து பெரியவளான பிறகு தனக்கு பிடித்தவனை கல்யாணம் செய்துகொண்டு போய்விட்டால் என்ன செய்யப்போறீங்க?"

"நாகம்மா!" நாற்காலியிலிருந்து எழுந்துகொண்டே அம்மா கத்தினாள். வாயை மூடு. முதலில் வாய்க்கு வந்தபடி பேசாதே."

அம்மாவின் கோபத்தைப் பார்த்து நாகம்மா பின் வாங்கி விட்டாள். "உலகத்தில் நடக்காத விஷயத்தையா சொல்லி விட்டேன். ஒரு பேச்சுக்குச் சொன்னேன், அவ்வளவுதான். என் மகனிடம் போகிறேன். நாளை மாலையில் வருகிறேன்." முணு முணுப்பது போல் சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டாள்.

அம்மா கதவைத் தாழ்போட்டுவிட்டு வந்து என் அருகில் உட்கார்ந்துகொண்டாள்.

அம்மா கண்களைத் திறந்து பார்த்தேன். "அம்மா! உன்னை விட்டுவிட்டு நான் எங்கேயும் போக மாட்டேன்." அழுதுகொண்டே சொன்னேன்.

அம்மா என்தலையை அன்புடன் வருடிவிட்டாள்.

"விழித்துக்கொண்டு விட்டாயா. கண்களை மூடிக்கொண்டு தூங்கு கண்ணம்மா."

"நாகம்மா என்னைப்பற்றி ஏதாவது குறை சொல்லிக் கொண்டே இருக்கிறாள். ஏன் அம்மா?"

"அவளுக்கு மூளை கலங்கிவிட்டது. நீ அதைப் பற்றியெல்லாம் யோசிக்காதே தூங்கு கண்ணம்மா."

"நாளைக்கு ஸ்கூலுக்கு போகலாமா?"

"கட்டாயம் போகலாம் கண்ணம்மா."

வாசற் கதவை யாரோ தட்டிய சத்தம் கேட்டது.

"யாரு?" அம்மா கேட்டாள்.

"நான்தான் வரதாச்சாரி. தீப்பெட்டி வேணும். கொஞ்சம் தர்றீங்களா?"

"அம்மா எழுந்து போய்க் கதவைத் திறந்தாள். பக்கத்து போர்ஷன் ஆசாரி மாமா உள்ளே வந்தார்.

"குழந்தைக்கு ஜுரமாக இருக்கிறதாமே?"

"யார் சொன்னாங்க?"

"நாகம்மா சொன்னாள். தீப்பெட்டி கொடுக்கச் சொல்லி கேட்ட போது" நான் வெளியில் போகிறேன். நீங்களே போய் கேட்டுக்கொள்ளுங்கள். கடுகடுவென்று சொல்லிவிட்டு போய் விட்டாள். என் மனைவி பிறந்த வீட்டுக்கு போயிருக்கிறாள். நானே எல்லா வேலைகளையும் பார்த்துக்கொள்ளவேண்டும். வீட்டில் என்ன இருக்கோ இல்லையோ தெரியாது. சமயத்திற்கு வேண்டிய பொருள் கிடைக்காவிட்டால் உடனே கடைக்கு ஓட வேண்டியது. இதுதான் என் பிழைப்பாகிவிட்டது.

அம்மா உள்ளே போய் தீப்பெட்டி எடுத்து வந்தாள்.

ஆச்சாரி மாமாவின் மனைவி அவருடன் சண்டை போட்டுக் கொண்டு பிறந்த வீட்டுக்குப் போய் இருபது நாளாகிறது.

நாகம்மாவிடம் நல்லவிதமாகப் பேசி வீட்டு வேலைகளை பாதிக்கு மேல் அவள் தலையில் கட்டிவிடுவார்.



நாகம்மாவின் மூலமாக அவர் எங்கள் வீட்டு சமாசாரங்களை தெரிந்துகொள்கிறார் என்ற விஷயம் அம்மாவுக்கு நேற்று மாலையில்தான் தெரிந்தது. உடனே நாகம்மாவை நன்றாக கோபித்துக்கொண்டாள்.

"நீ இது போல் நடந்து கொண்டால் என்னிடம் வேலைக்கு இருக்க வேண்டிய அவசியம் இல்லை. உன் வழியை பார்த்துக் கொண்டு நீ போகலாம்."

அந்த கோபத்தை மனதில் வைத்துக்கொண்டு நேற்று இரவு நாகம்மா சாப்பிடவில்லை.

அம்மா தீப்பெட்டி கொடுத்ததும் அவர் போகவில்லை. ஏதோ பேசிக்கொண்டு நின்றிருந்தார்.

எனக்கு தூக்கம் கண்களை சொருகியது. விழிப்பும், தூக்கமும் கலந்த நிலை.

திடீரென்று பெரிதாக சத்தம் கேட்டது. கண்களைத் திறந்து பார்த்தேன். ஆச்சாரி மாமா அம்மாவின் கையைப் பற்றி பக்கத்து அறைக்கு இழுத்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தார். அந்த முயற்சியில் அம்மாவின் கால் தடுக்கி ஸ்டூல் கீழே விழுந்தது.

"ச்சீ... ச்சீ... விடு என்னை" அம்மா தன்னை விடுவித்துக் கொள்ள போராடிக்கொண்டு இருந்தாள். அம்மாவை அறைக்குள் தள்ளி கதவைச் சாத்த முயன்று கொண்டிருந்தார். நான் சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டேன். பயத்தினாலும், அதிர்ச்சியினாலும் என் கண்கள் அகலமாக விரிந்தன. கட்டிலை விட்டு வேகமாக இறங்கினேன். போர்வை தடுக்கி கீழே விழுந்து விட்டேன். போர்வையை கையால் விலக்கிக்கொண்டே ஓடினேன்.

"விடு... அம்மாவை விட்டுவிடு," கத்திக்கொண்டே அவருடைய கையை பலமாக கடித்துவிட்டேன். அவரின் பிடி சற்றுதளர்ந்தது. அம்மா மூலையிலிருந்த குடையை எடுத்து

அவரை கண்மண் தெரியாமல் அடிக்கத் தொடங்கினாள். சத்தம் கேட்டு மதுராவின் வீட்டிலிருந்து டிரைவரும், சமையல்காரியும் எங்கள் வீட்டை நோக்கி ஓடி வந்தார்கள். அவர்களை பார்த்ததும் ஆசாரி மாமா அந்த இடத்தை விட்டு வேகமாக வெளியேறி விட்டார்.

அம்மா கதவைச் சாத்திவிட்டாள். நான் அழுது கொண்டிருந்தேன். கலைந்து போன புடவையை சரியாக சுற்றிக் கொண்டு அம்மா என்னை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டாள்.

டிரைவரும், வேலைக்காரியும் கதவைத் தட்டினார்கள்.

அம்மா போய் கதவைத் திறந்தாள்.

"என்ன ஆச்சும்மா? ஏதோ சத்தம் கேட்டதே?" சமையல்காரி கேட்டாள்.

அம்மா தடுமாறினாள். "அது வந்து... குழந்தைக்கு ஜுரமாக இருக்கு இல்லையா. தூக்கத்தில் பயந்து கத்தியிருக்கிறாள்."

"அப்படியா!" தாறுமாறாக சிதறிக் கிடந்த பொருட்களையும் அம்மாவையும் மாறி மாறி பார்த்தார்கள். "ஏதோ சத்தம் கேட்டது. போய்ப் பார்த்துவிட்டு வரச்சொல்லி அம்மா சொன்னதால் வந்தோம்."

அவர்கள் போக முயன்ற போது அம்மா சொன்னாள். "குழந்தைக்கு ஜுரமாக இருக்கு. துணைக்கு நாகம்மா கூட இல்லை. உங்க முதலாளி அம்மா தவறாக நினைக்கவில்லை என்றால் இந்த ஒரு இரவு நானும், குழந்தையும் அங்கே வந்து படுத்துக்கொள்கிறோம். ஏனோ இங்கே தனியாக இருக்க எனக்கு பயமாக இருக்கிறது."

வேலைக்காரி போய்விட்டு மறுபடியும் வந்தாள். மதுராவின்தாய் வரச் சொல்லிச் சொன்னாளாம். வீட்டில் தனியாக இருக்க விரும்பாமல் அம்மா என்னையும் அழைத்துக்கொண்டு மதுராவின் வீட்டிற்குப் போனாள்.



நாங்கள் போனபோது ஹால் சோபாவில் மதுராவின் தந்தை அமர்ந்திருந்தார். எதிரே இருந்த டீபாய் மீது கண்ணாடி டம்ளர்களும், பாட்டில்களும் இருந்தன.

மதுராவின் தாய் சுசீலா எதிரே வந்து எங்களை உள்ளே அழைத்துக்கொண்டு போனாள். போகும் முன் தன் கணவரிடம் "இவங்கதான் மதுராவின் பாட்டு டீச்சர்" என்று அறிமுகப் படுத்தினாள்.

அப்படியா என்பது போல் அவர் பார்த்தார்.

சுசீலா மாமி எங்களுக்காக ஏற்பாடு செய்திருந்த அறையை காண்பித்துவிட்டு போய்விட்டாள்.

மாமி போனதும் நான் அம்மாவை பயத்துடன் அணைத்துக் கொண்டேன். என் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

"பயப்படாதே கண்ணம்மா!" என்று சொல்லிக்கொண்டே அம்மாவும் அழுதுவிட்டாள்.

# 7

அம்மாவும், சுசீலா மாமியும் என்ன பேசிக்கொண்டார்களோ தெரியாது. மறுநாள் மதியம் மதுராவின் தந்தை ஜகன்னாதன் ஆசாரி மாமாவை வீட்டுக்கு வரச் சொல்லி டிரைவர் மூலமாக தகவல் அனுப்பினார். ஆசாரி மாமா வந்தார். மதுராவின் தந்தை அவரிடம் பேசினார். குரலை உயர்த்தவில்லை. மிரட்டவும் இல்லை. ரொம்ப சாதாரணமான குரலில் "இன்று மாலைக்குள் இப்பொ நீ குடியிருக்கும் வீட்டை காலி செய்து இந்த தெருவை விட்டே போய் விடவேண்டும். மறுபடியும் என் கண்ணில் பட்டால் உன் கைகால்கள் உனக்குச் சொந்தமாக இருக்காது" என்றார்.

பக்கத்து அறையில் அம்மா என்னை மடியில்

உட்காரவைத்துக்கொண்டு இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள். சுசீலா மாமி அம்மாவுக்கு கண்ணாலேயே தைரியம் சொல்லிக்கொண்டிருந்தாள்.

ஆசாரி மாமா மாலைக்குள் வீட்டை காலி செய்து போய்விட்டார். அந்த போர்ஷனை சுசீலா மாமியே வாடகைக்கு எடுத்துக்கொண்டாள். அவங்க வீட்டு சமையல்காரி குடியிருக்கப் போகிறார்களாம்.

நானும், அம்மாவும் மறுபடியும் வீட்டுக்கு வந்துவிட்டோம். அன்று முதல் அம்மா இரவு படுக்கும் முன் வாசற்கதவை ஒரு தடவைக்கு இரண்டு தடவை தாழ்பாள் சரியாக போட்டிருக்கிறதா என்று பார்த்துவிட்டுத்தான் உறங்குவாள்.

சுசீலா மாமியும், அம்மாவும் நன்றாக பழகினார்கள். மதுராவின் தந்தை வீட்டில் இருப்பதாக தெரிந்தால் அம்மா அந்தப் பக்கமே போகமாட்டாள். எப்பொழுதாவது எதிர்பட்டு விட்டாலும் பணிவாக ஒதுங்கி வந்து விடுவாள். சுசீலா மாமிக்கு அம்மாவின் சுபாவம் பிடித்துவிட்டது.

நானும், மதுராவும் நட்புடன் இருப்பதை பார்த்துவிட்டு பள்ளியில் மற்ற பெண்கள் பொறாமைப் பட்டார்கள். மதுரா பணக்கார வீட்டுப் பெண் என்பதால் நான் அவளை சுற்றிவருகிறேன் என்று கேலி செய்து சிரித்துக்கொள்வார்கள். அந்தப் பேச்சுக்களை கேட்கும்போது என் மனம் வேதனைப்பட்டது. வீட்டுக்கு வந்ததும் அம்மாவிடம் சொல்லி அழுதேன். மதுராவிடம் இனி பேசமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தேன். அம்மா நயமாக எடுத்துச் சொல்வாள். "மதுரா ரொம்ப நல்லவள். உன்னை உயிருக்கும் மேலாக நேசிக்கிறாள். யாரோ ஏதோ சொன்னார்கள் என்று ஒரு நல்ல சிநேகிதியை இழக்கலாமா? பிரியா... உலகம் எப்போதும் ஏதாவது சொல்லிக் கொண்டேதான் இருக்கும். அதை பொருட்படுத்தாமல் வாழ நாம் தான் பழகிக் கொள்ளவேண்டும். மற்றவர்களின் விருப்பு வெறுப்புகளை அனுசரித்து வாழ்க்கை நடத்துவது ரொம்ப கஷ்டமான விஷயம்."



அம்மா கொடுத்த தைரியம் எனக்கு டானிக் போல் வேலை செய்தது. அதற்குப் பிறகு வாழ்க்கையில் நான் சந்தித்த பிரச்னைகளை எதிர் கொள்வதற்கு தேவையான துணிச்சலை தந்தது. படிப்பில் கவனம் செலுத்தத் தொடங்கினேன். அம்மா என்னை ட்யூஷனுக்கு அனுப்புவதாகச் சொன்னபோது வேண்டாமென்று மறுத்துவிட்டேன். மதுராவுக்கும் பாடம் சொல்லித் தந்தேன்.

பாடம் படிக்க வேண்டும் என்றாலே மதுராவுக்கு எங்கிருந்தோ சோம்பேறித்தனம் வந்துவிடும். விளையாட்டு, சினிமா, டான்ஸ் என்றால் உற்சாகமாக பேசுவாள். புத்தகத்தை கையில் எடுத்தாலே போதும், கொட்டாவி விடத் தொடங்குவாள்.

"இந்த படிப்பு எப்பொழுது முடியப் போகிறதோ தெரியவில்லை. பிரியா! தெரியாமல்தான் கேட்கிறேன். படிக்க வேண்டும் என்ற விருப்பம் இருப்பவர்கள் மட்டும் படித்தால் போறாதா? எல்லோரும் படித்துத்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் என்ன?"

"ஆரம்பித்து விட்டாயா உன் பழைய பல்லவியை. இனி புத்தகத்தை மூடிவைக்க வேண்டியதுதான்" என்றேன்.

"அது இல்லை பிரியா. படிக்கவும், எழுதவும், தெரிந்தால் மட்டும் போறாதா? தேவை இருந்தாலும், இல்லாவிட்டாலும் டிகிரியாவது முடிக்க வேண்டும் என்ற வற்புறுத்தல் எதற்கு?"

"வாழ்க்கையில் என்றைக்காவது சொந்தக் கால்களில் நிற்க வேண்டும் என்றால் கல்விதானே கை கொடுக்கும்."

"அதாவது பணத்தை சம்பாதிக்க. அப்படித்தானே."

"ஆமாம்."

மதுரா உதட்டைப் பிதுக்கினாள். "பணம் சம்பாதிக்க வேண்டிய தேவை எனக்கு வரப்போவதில்லை. அப்பா சம்பாதித்தது நிறையவே இருக்கு. நேற்று இரவு சாப்பிடும்போது அம்மா அப்பா பேசிக்கொண்டு இருந்தார்கள் ஊரில் இருந்த

நிலத்தை விற்றதில் பத்து லட்சம் வந்ததாம். அதை வைத்து வியாபாரத்தை மேலும் அபிவிருத்தி செய்யப் போகிறார்களாம்."

"முதலில் இந்த கணக்கை போடு" என்றேன்.

"என்னைக் கேட்டால்..."

"இதோ பார், கணக்கு போடுவதாக இருந்தால் இரு. இல்லாவிட்டால் உங்க வீட்டுக்குப் போய் விடு."

"என்ன? என்னை வீட்டுக்கு போகச் சொல்கிறாயா?" கண்களை பெரிதாக்கிக்கொண்டே கேட்டாள்.

"ஆமாம். நானாவது பாடம் படிக்கிறேன்."

மதுரா உடனே குரலை உயர்த்தி... "ஆன்டி... பிரியா என்னை வீட்டுக்கு போகச் சொல்கிறாள்" என்று கத்தினாள்.

சட்டென்று கையை நீட்டி மதுராவின் வாயை மூடப் போனேன். அப்படியும் மதுராவின் குரல் அம்மாவுக்குக் கேட்டு விட்டது.

என்னுடைய அறைக்கு வந்தவள், நான் செய்து கொண்டிருந்த காரியத்தைப் பார்த்து விட்டு "என்ன பிரியா? எதற்காக மதுராவின் வாயை மூடுகிறாய்?" என்று கடிந்து கொண்டாள்.

நான் மதுராவை விட்டுவிட்டேன்.

"என்னை வீட்டுக்கு போகச் சொல்கிறாள் ஆன்ட்டி" என்றாள். மதுராவுக்கு அம்மாவிடம் உரிமை அதிகம்.

நான் மதுராவை கோபமாகவும், அம்மாவை மன்னிப்பு கேட்டுக்கொள்வது போலவும் பார்த்தேன்.

"ஸாரி சொல்லு" என்றாள் அம்மா.

"ஸாரி மதுரா" என்றேன். இல்லாவிட்டால் அம்மா சும்மா இருக்க மாட்டாள்.



"நீங்க இருவரும் பாடம் படித்துக்கொண்டு இருங்கள். நான் முறுக்குக் கொண்டு வருகிறேன்". அம்மா போய் விட்டாள்.

அம்மா போன பிறகு நான் மதுராவின் பக்கம் திரும்பிப் பார்க்காமல் கணக்கை போட்டுக்கொண்டிருந்தேன்.

"நானும் போடுகிறேன்" என்றாள் மதுரா.

நான் பதில் பேசவில்லை.

"உன்னைத்தான்." மறுபடியும் அழைத்தாள்.

நான் பேசவில்லை.

"தேவியாருக்குக் கோபம் வந்து விட்டதோ."

தலையை உயர்த்திகூடப் பார்க்கவில்லை.

"கேட்டால் பதில் சொல்லக்கூடாத அளவுக்குக் கோபமா?"

நான் லட்சியம் செய்யவில்லை.

மதுரா என் கையிலிருந்த புத்தகத்தைப் பிடுங்கி தொலைவில் வீசினாள்.

நான் மௌனமாக கைவிரல்களை ஆராய்ந்து கொண்டிருந்தேன்.

கிச்சு கிச்சு மூட்டி என்னை சிரிக்கவைக்க முயற்சி செய்தாள்.

நான் சிரிக்கவில்லை.

"உண்மையிலேயே கோபம் வந்துவிட்டதா?" கண்களுக்குள் ஊடுருவுவது போல் பார்த்தாள். பிறகு ஒரு நிமிடம் கழித்து தொலைவில் வீசி எறிந்த புத்தகத்தை எடுத்து வந்து என் எதிரில் உட்கார்ந்துகொண்டாள்.

"இவ்வளவு கோபம் எதற்கு? போகட்டும் விடு. கணக்கை எப்படி போடணுமோ சொல்லிக்கொடு" என்றாள்.

நான் சொல்லச் சொல்ல சுறுசுறுப்பாக கணக்கு பாடத்தை முடித்துவிட்டாள்.

அம்மா முறுக்குகளை இரண்டு தட்டுகளில் கொண்டுவந்தாள். இருவரும் சாப்பிடத் தொடங்கினோம்.

"ஆன்ட். நாளைக்கு நானும், பிரியாவும் ஸ்கூலில் மாறுவேட போட்டியில் பங்கு எடுத்துக் கொள்ளப்போகிறோம்."

"என்ன வேடம் போடப் போறீங்க?"

"இப்பொ சொல்ல மாட்டோம். அப்புறமாக சொல்கிறோம்."

"அவ்வளவு ரகசியமா?"

"ஆமாம்" என்றாள்.

அன்று இரவு சாப்பிடும்போது அம்மா கேட்டாள். "என்ன வேடம் போடறீங்க?"

"மணப்பெண் வேடம் எனக்கு. மதுரா பிச்சைக்காரி வேடம் போடுகிறாள்."

"போயும் போயும் பிச்சைக்காரி வேடமா?"

"நடிப்புதானே!" புன்முறுவலுடன் சொன்னேன்.

"நானே உன்னை மணமகளாய் அலங்காரம் செய்கிறேன்." அம்மா சொன்னாள்.

மறுநாள் அம்மா எனக்கு அரக்கு நிறத்தில் பட்டுப் புடவையை கட்டிவிட்டாள். நெற்றிச்சுட்டி, ஜிமிக்கி, காசுமாலை எல்லாம் போட்டு விட்டாள்.

"இதெல்லாம் ஏதும்மா?"

"கவரிங் நகைகள். கடையில் வாடகைக்கு எடுத்து வந்தேன்."



நெற்றியில் கல்யாண திலகமும், கன்னத்தில் திருஷ்டிப் பொட்டும் வைத்து விட்டாள். என்னை கண்குளிர பார்த்து விட்டு கன்னத்தில் முத்தம் பதித்தாள்.

"அந்த நாள் என்னிக்கு வரப்போகிறதோ!" என்றாள். சொல்லும்போதே அம்மாவின் கண்கள் ஈரமாயின.

"எந்த நாள் அம்மா?" என்றேன்.

"இப்பொ உனக்குப் புரியாது" பேச்சை மாற்றினாள்.

சயின்ஸ் டீச்சர் மதுராவுக்கு மேக்கப் போட்டுவிட்டாள். மதுராவும் ரொம்ப இயல்பாக பிச்சைக்கார கிழவியாக நடித்தாள்.

மதுராவுக்கு முதல் பரிசு கிடைத்தது. மகிழ்ச்சியுடன் வீட்டுக்கு வந்தோம். மதுராவின் தந்தை ஊரில் இருக்கவில்லை.

வீட்டுக்கு வந்ததும் அம்மா எனக்கு திருஷ்டிக் கழித்தாள்.

"பரிசு எதுவும் கிடைக்காத போது திருஷ்டி கழிப்பானேன்?" என்றேன்.

"என்னுடைய கண்ணே பட்டு விடும். அவ்வளவு அழகாக இருக்கிறாய்?" அம்மா சொன்னாள்.

மறுநாள் போட்டோக்கள் வந்தன. சுசீலாமாமி மதுராவின் போட்டோவை பார்த்து விட்டு நன்றாக திட்டினாள். "இதென்ன பாழும் புத்தி உனக்கு? பிரியம்வதாவை பார். லக்ஷ்மி தேவியை போல் எவ்வளவு அழகாக, லட்சணமான வேடம் போட்டிருக்கிறாள்" என்றாள்.

தாய் கோபித்துக்கொண்டதில் மதுரா அன்று இரவு சாப்பிட மறுத்து விட்டாள். நான்தான் கெஞ்சி கூத்தாடி, வற்புறுத்தி சாப்பிடச் செய்தேன்.

தேர்வுகள் நெருங்கி விட்டன. இருவரும் சேர்ந்து படித்து வந்தோம். மதுரா தூங்கிவழியும் போது தண்ணீரை தெளித்து எழுப்பிவிடுவேன். தேர்வுகளை எழுதி முடித்தோம்.

கோடை விடுமுறையில் முத்துக்கருப்பனிடமிருந்து கடிதம் வந்தது. மஞ்சள் காமாலை நோய் வந்ததால் உடல்நலம் பாதிக்கப் பட்டு விட்டதாகவும், நேரில் வந்து பார்க்க முடியவில்லை என்று ஆள் மூலமாக சொல்லி அனுப்பினான்.

பங்கஜம் அம்மாவுக்கு,

வணக்கம். என் உடல் நலம் சரியாக இல்லை. வயதும் ஆகி விட்டதால் முன்போல் செயல்பட முடியவில்லை. பக்கத்து ஊர் கர்ணம் அய்யா உங்கள் நிலத்தை வாங்க வேண்டும் என்று விரும்புகிறார்கள், மேற்கொண்டு பேசுவதாகாக அவரை உங்களிடம் அனுப்பி வைக்கிறேன், என்று கடிதம் எழுதி இருந்தான்.

அடுத்த வாரமே பக்கத்து ஊரு கர்ணம் வந்தார். பேச்சு வார்த்தை முடிந்த பிறகு அட்வான்ஸ் கொடுத்துவிட்டு போனார். நிலத்தை ரிஜிஸ்டர் செய்யும்போது ரொம்ப ரகளை நடந்தது. கோவிந்தன் மாமா அரிவாளை எடுத்துக்கொண்டு சண்டைக்கு வந்துவிட்டான். முத்துக்கருப்பன் பஞ்சாயத்து பெரியவர்களை கூட்டிக்கொண்டதில் நிலத்தின் ரிஜிஸ்ட்ரேஷன் முடிந்து பணம் எங்கள் கைக்கு வந்துவிட்டது.

கோவிந்தன் மாமா அம்மாவின் மீது கேஸ் போட்டார். பங்கஜம் நடத்தை கெட்டவள் என்றும், என்னைக் கடத்திக் கொண்டு போய் நிலத்தை விற்கச் செய்தாள் என்றும் கேஸ் போட்டார். அம்மா மதுராவின் தந்தையின் உதவியுடன் நல்ல லாயரை அமர்த்திக்கொண்டதால் அந்த இக்கட்டிலிருந்து மீள முடிந்தது. அவருடைய உறுதுணை இல்லாவிட்டால் அம்மா இந்நேரத்திற்கு ஜெயிலில் இருந்திருப்பாள்.

"பிரியா! உன்னை வளர்த்து ஆளாக்கி, நல்ல பையனாக பார்த்து உனக்குத் திருணம் செய்து வைத்து, உன் நிழலில் நிம்மதியாக வாழ்ந்து விடலாம் என்று நினைத்திருந்தேன். எனக்கு அந்த யோகம் இருக்கிறதோ இல்லையோ? முதலிலிருந்தே எனக்கென்று யாருமே இல்லாமல் வாழ்ந்து வந்தேன். கடவுளாக உன்னை எனக்காக அனுப்பி வைத்தார்." என்று அம்மா அடிக்கடி சொல்லுவாள்.



"கவலைப் படாதேம்மா. என்னிடமிருந்து உன்னை யாராலும் பிரிக்க முடியாது" ரொம்ப பெரிய மனுஷி போல் அம்மாவின் கண்ணீரைத் துடைத்து விடுவேன்.

நிலத்தை விற்றதும் நல்லதாகிவிட்டது. மஞ்சள் காமாலை நோய் குணமாகாமலேயே முத்துக்கருப்பன் இறந்து போய்விட்டான்.

"உறவு எதுவும் இல்லாவிட்டாலும் முத்துக்கருப்பன் நமக்கு எவ்வளவு நன்மை செய்திருக்கிறான் பாரு" அம்மா அடிக்கடி சொல்லிக்கொண்டே இருப்பாள்.

நிலத்தை விற்று வந்த பணம் அந்த கேஸுக்கே சரியாகிவிட்டது.

தேர்வின் முடிவுகள் வெளிவந்தன. நான் முதல் வகுப்பிலும், மதுரா இரண்டாம் வகுப்பிலும் பாஸ் செய்தோம். மதுராவின் தாய் மகளை நன்றாகக் கடிந்துகொண்டாள்.

எனக்கு மெரிட் இருப்பதாலும், மதுராவுக்கு அவளுடைய தந்தையின் செல்வாக்கின் காரணமாகவும் நகரத்திலேயே பிரபலமாக இருந்த கல்லூரியில் இடம் கிடைத்தது. கல்லூரிக்குப் போன பிறகுதான் எனக்கு வாழ்க்கையைப் பற்றி மேலும் புரிந்து கொள்ள முடிந்தது. மதுரா கல்லூரியில் நாடகம், ஆண்டு விழா, போன்றவற்றில் அதிகமாக பங்கு எடுத்துக்கொள்வாள். அதன் காரணமாக அவளைச் சுற்றிலும் சினேகிதிகளின் வட்டம் ஒன்று தனியாக உருவாகிவிட்டது. வீட்டில் இருக்கும்போது மதுராவும், நானும் ஒன்றாக, நெருக்கமாக பழகினாலும் கல்லூரிக்குப் போய் விட்டால் இருவரின் உலகம் வெவ்வேறாக இருந்தது.

கையில் இருந்த பணம் கோர்ட் கேஸ் என்று செலவாகிவிட்டதால் எங்கள் வீட்டில் பொருளாதார ரீதியாக

நெருக்கடி ஏற்பட்டது. நாகம்மாவை நிறுத்திவிட்டு அம்மாவே வீட்டு வேலைகளை செய்யத் தொடங்கினாள். சில சமயம் கல்லூரியிலிருந்து திரும்பி வரும்போது அம்மா வீட்டை பெருக்கிக் கொண்டோ, பற்று தேய்த்துக் கொண்டோ இருப்பாள். அதைப் பார்க்கும்போது என் விழிகளில் கிர்ரென்று நீர் சுழலும். கிராமத்தில் இருந்தபோது அம்மா எவ்வளவு வசதியாக வாழ்ந்து வந்தாளோ எனக்கு நன்றாகவே தெரியும். போய் அம்மாவின் கையிலிருந்த வேலையை பிடுங்கிக்கொள்வேன்.

"நீ ஏம்மா இதெல்லாம் செய்யணும்?"

"நம் வீட்டு வேலையை நாம் செய்து கொண்டால் தவறு என்ன இருக்கு?" அம்மா சொல்வாள்.

"என்னால்தான் உனக்கு இந்த கஷ்டங்கள் எல்லாம்."

கொஞ்சம் வளர்ந்த பிறகுதான் எனக்காக எவ்வளவு இழந்திருக்கிறாளோ புரிந்துகொண்டேன்.

அப்படிச் சொன்னதும் அம்மா என்னை அருகில் இழுத்து மார்போடு அணைத்துக்கொள்வாள்.

"பிரியா! அப்படிச் சொல்லாதே. இந்த வாழ்க்கை எனக்கு எவ்வளவு நிம்மதியை, திருப்தியை தருகிறதோ உனக்குத் தெரியாது. நீ வருவதற்கு முன் நான் வாழ்ந்த வாழ்க்கையில் என்னிடம் நிறைய பணம் இருந்தது. ஆனால் அந்த வாழ்க்கை என்னுடையதாக இல்லாமல் இன்னொருத்தருக்காக நடிப்பது போல் இருந்தது ஆனால் இப்போ நான் வாழும் இந்த வாழ்க்கை என்னுடையது. இதில் எனக்கு சுதந்திரம் இருக்கிறது. இன்னொருத்தருக்காக முறுவலை என் உதட்டில் ஒட்டவைத்துக் கொள்ளத் தேவையில்லை. மனதில் தனிமை வாட்டிக் கொண்டிருந்தாலும், அமைதியின்றி தவித்துக் கொண்டிருந் தாலும், வெளியில் மகிழ்ச்சியாக இருப்பது போல் நடிக்கத் தேவையில்லை. உன் வருகைக்காக காத்திருப்பது எனக்கு



சந்தோஷத்தைத் தருகிறது "அம்மா!" என்ற அழைப்பை உன் வாயிலிருந்து கேட்கும் போது என் மனம் முழுவதும் அமிருதம் நிறைந்து விடுகிறது. பிரியா! இந்த உலகில் ஆணுக்குக் குழந்தைகளின் தேவையிருக்கோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் பெண்ணுக்கு மட்டும் குழந்தை கட்டாயம் வேண்டும். ஏன் தெரியுமா? தாய்மை என்பது ஒரு பெண்ணின் வாழ்க்கையில் ரொம்ப முக்கியமான பகுதி. தாய்மை அடையும்போதுதான் ஒரு பெண்ணின் வாழ்க்கை முழுமை பெறுகிறது. அதை என்னால் ஆணித்தரமாக சொல்ல முடியும். ஒரு பெண் நன்றாக படிக்கலாம். ஆணுக்கு சமமாக. இன்னும் சொல்லப் போனால் அவனை விட அதிக திறமையுடன் எல்லாத் துறைகளில் வெற்றியை சாதிக்கலாம். ஆனால் எல்லாவற்றுக்கும் முதலில் அவள் ஒரு தாய். அதான் அவளிடம் அவ்வளவு கருணை, எதையும் தாங்கிக் கொள்ளும் பொறுமை, குழந்தைகள் தாயை புரிந்து கொள்ளாதது போல் ஆணும் பெண்ணைச் சரியாகப் புரிந்து கொள்ள மாட்டான். அப்படிப் புரிந்து கொள்ளக் கூடிய கணவன் கிடைத்தால் அந்தப் பெண்ணின் வாழ்க்கை சுவர்க்கம்தான். வாழ்க்கையில் எனக்குக் கிடைக்கப் போவதில்லை என்று நினைத்த அனுபவம் உன் மூலமாக கிடைத்துவிட்டது. விரும்பியது கிடைக்கும் போது கிடைக்கும் சந்தோஷம் ஒருவிதமான மயக்கத்தை ஏற்படுத்தும்." அம்மாவின் கைகள் என் தோளைச் சுற்றி பலமாக படிந்தன. "பிரியா! முன் பிறவியில் நான் செய்த பாவத்தின் விளைவோ என்னவோ. எனக்குத் திருமணம் ஆகவில்லை. அதான் என் வயிற்றில் நீ பிறக்க வில்லை. ஆனால் வளர்ப்பு மகளாக என் வாழ்க்கையில் அடி எடுத்து வைத்து விட்டாய். நீ என்னுடையவள்." அம்மாவுக்கு குரல் கம்மிவிட்டது.

ஏதோ வசியத்திற்குக் கட்டுண்டவள்போல் வியப்புடன் அம்மா சொல்வதை கேட்டுக்கொண்டு இருந்தேன். அம்மாவுக்குத்தான் என்னிடம் எவ்வளவு அன்பு! நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி. இப்பொழுது என் மனதில் எந்த விதமான பயங்களும் இல்லை.

வருடங்கள் வேகமாக கழிந்துகொண்டிருந்தன. நாட்கள் செல்ல செல்ல எனக்கும் அம்மாவுக்கும் நடுவில் இருந்த அன்பு பிணைப்பு மேலும் வலுவடைந்தது. அம்மாவுக்காக நான் எனக்காக அம்மா. நினைக்கும் போதே திருப்தியாக இருக்கும். மல்லிகைப் பூக்களை அழகாக தொடுத்து அம்மாவின் தலையில் சூட்டிவிடுவேன். அப்பொழுது அம்மாவின் கண்களில் மகிழ்ச்சி வெளிப்படையாக தெரியும்.

மதுராவின் வீட்டில் நிலைமை இதற்கு நேர்மாறாக இருந்தது. கல்லூரியில் சேர்ந்த பிறகு மதுராவின் நடை, உடைகளில் ரொம்ப மாறுதல் வந்து விட்டது. சுசீலா மாமியால் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இருவருக்கும் ஒருநிமிடம்கூட ஒத்துப் போகவில்லை. சண்டை வரும்போதெல்லாம் மதுரா கோபித்துக் கொண்டு எங்க வீட்டுக்கு வந்து விடுவாள். சுசீலாமாமி அம்மாவிடம் வந்து புலம்புவாள். அம்மா சுசீலா மாமிக்கும், நான் மதுராவுக்கும் சமாதானம் சொல்லி அனுப்பிவைப்போம்.

இளமை மதுராவுக்கு புதிய அழகைகொண்டு வந்தது. அதோடு விதவிதமான உடைகள், ஒப்பனையின் காரணமாக அவள் அழகு மேலும் கூடியது. கல்லூரியில் அவளை விரும்பாதவர்கள் கிடையாது. முக்கியமாக மாணவர்கள், லெக்சரர்கள் அவளுடைய ரசிகர்களாகி விட்டார்கள். பெண்கள் மட்டும் பொறாமையை வெளிப்படுத்தி வந்தார்கள். மொத்தத்தில் என் வாழ்க்கை எவ்வளவு அமைதியாக இருந்ததோ, மதுராவின் வாழ்க்கை அவ்வளவு சந்தடியாக இருந்தது.

மதுராவை அடிக்கடி யாராவது போனில் அழைத்துக் கொண்டே இருப்பார்கள். மதுராவின் தாய் போனை எடுக்க நேர்ந்தால் போன் செய்பவர்களின் பெயரையும், அவர்களுக்கு மதுராவிடம் என்ன வேலை என்று கேட்டு, ஆராய்ந்த பிறகுதான் மதுராவிடம் போனைக் கொடுப்பாள். அந்த நண்பர்கள் மதுராவிடம் இதைப்பற்றி புகார் செய்தார்கள். மதுரா



நண்பர்கள் சொன்னதைக் கேட்டு தாயுடன் சண்டை போடுவாள். சுசீலாமாமி அம்மாவிடம் இதையெல்லாம் சொல்லி வருத்தப்பட்டுக் கொள்வாள்.

"உங்க மகள் பிரியாவின் சுபாவம் எனக்கு ரொம்ப பிடிக்கும். வீட்டை விட்டால் கல்லூரி. இதைத் தவிர வேறு உலகம் தெரியாது அவளுக்கு" என்று பாராட்டுவாள்.

அந்த அம்மாள் போனதும் அம்மா எனக்கு திருஷ்டி கழிப்பாள்.

"என்னம்மா இதெல்லாம்?"

"உனக்குத் தெரியாது. கண் திருஷ்டி பட்டால் கருங்கல்லும் சுக்கு நூறாகிவிடுமாம். ஏதோ என்னுடைய திருப்திக்காக." என்பாள்.

மதுரா என்னையும் தன்னுடன் வரச் சொல்லி வற்புறுத்துவாள். நான் சம்மதிக்க மாட்டேன்.

என்னுடன் சண்டை போடுவாள். கோபித்துக் கொண்டு நான்கு நாட்கள் பேசாமல் இருப்பாள் பிறகுதானே சமாதானமாகிவிடுவாள்.

"பார்த்தாயா உன்னிடம் எனக்கு பிரியம் அதிகம். அதான் இவ்வளவு சண்டை போட்டாலும் நானே வந்து உன்னிடம் பேசுகிறேன்" என்று அதட்டுவாள்.

"நான் உன்னுடன் சண்டை போடவே இல்லையே?" புன்முறுவலுடன் சொல்வேன்.

மதுரா திகைப்புடன் பார்த்துவிட்டு "வார்த்தை ஜாலத்தில் உன்னை மிஞ்சிய ஆள் இல்லை" என்று தோள்பட்டையில் அழுத்தமாக கிள்ளிவிடுவாள்.

வலியால் வீலென்று கத்துவேன்.

"வலி என்றால் எப்படி இருக்குமோ புரிந்ததா?" கலகலவென்று நகைப்பாள்.

# 8

மதுராவுக்கும் எனக்கும் இடையில் நட்பு மேலும் வளர்ந்தது. அம்மா என்னை மதுராவுடன் தவிர வேறு யாருடனும் எங்கேயும் போக அனுமதிக்கமாட்டாள். அம்மாவுக்கு என்மீது உயிர் என்று மதுராவுக்குத் தெரியும். என் தோளைச் சுற்றிலும் கையை போட்டுக் கொண்டு "ஆன்ட்! பிரியா உங்களுடைய உயிர் என்று தெரியும். பயப்படாதீங்க பிரியாவை ரொம்ப ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்கிறேன். ஏன் தெரியுமா? என்னுடைய உயிர் சினேகிதியே இவள்தான்" என்பாள்.

"அம்மா திருப்தியுடன் தலையை அசைப்பாள். மதுராவின் தந்தை காண்ட்ராக்டராக இருந்ததால் அவர்களுடைய வீட்டில் பணத்திற்கு என்றுமே தட்டுப்பாடு இருந்தது இல்லை. மதுரா ஏதாவது விரும்பினால் உடனே கைக்கு வந்தாக வேண்டும். அவளுடைய நண்பர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருந்தது. சிலர் அவளுடைய அழகான தோற்றத்திற்கு அடிமையானால், மற்றும் சிலர் அவளுடைய தந்தையின் செல்வாக்கிற்கு தலைவணங்கினார்கள். மற்றவர்களால் தான் விரும்பப்படுவதை மதுரா பெருமையாக நினைத்து வந்தாள். எனக்கு ஏனோ அவர்களுடையது உண்மையான நட்பு இல்லை என்று தோன்றும். என் சந்தேகங்களை வெளிப்படையாக சொன்னால் மதுரா என்ன நினைத்துக்கொள்வாளோ? அவள் மனம் வேதனைப்படுமோ என்னவோ.

விடுமுறை வந்தால்போதும், மதுரா வீட்டில் இருக்க மாட்டாள். எல்லோரையும் கூட்டிக்கொண்டு பிக்னிக், சினிமா என்று எங்கேயாவது கிளம்புவாள். நான் வரமாட்டேன் என்று சொன்னாலும் விடமாட்டாள். வேறு வழியில்லாமல் கிளம்புவேன். போகும்போது [illegible]



போவேன். மற்றவர்கள் எல்லோரும் பாட்டும் விளையாட்டுமாக பொழுதை போக்கிக் கொண்டிருந்தபோது நான் தனியாக எந்த மரத்தின் அடியிலேயோ உட்கார்ந்து புத்தகம் படிப்பதில் ஆழ்ந்து போய்விடுவேன். தொலைவில் சிநேகிதிகளுடன் பிசியாக இருக்கும் மதுரா நடுநடுவில் பிரியா! என்று குரல் உயர்த்தி கத்துவாள். கையை அசைப்பாள். நானும் கையை அசைத்துவிட்டு மறுபடியும் படிப்பதில் மூழ்கிவிடுவேன்.

சிலசமயம் தனியாக நடந்து போவேன். மதுரா பார்த்தாள னால் ஓடிவருவாள். "பிரியா!" இப்படி தனியாக நடந்து போவது என்றால் உனக்கு சலிப்பாக இல்லையா? என்று கேட்பாள்.

"ஊஹூம்."

"தனிமை என்றால் எனக்கு பயம்."

"தனிமை என்றால் எனக்கு ரொம்பப் பிடிக்கும்" என்பேன்.

மதுரா தோள்களை குலுக்கிக்கொண்டே "பிரியா! உண்மையிலேயே நீ ரொம்ப வித்தியாசமானவள்" என்பாள்.

"ஏன் அப்படி சொல்கிறாய்?"

"இத்தனை வருடங்களாக உன்னுடன் பழகி வருகிறேன். உன்னை என்னால் முழுவதுமாக புரிந்துகொள்ள முடியவில்லையோ என்று தோன்றும்."

"கவலைப்படாதே. என்னை நீ சரியாக புரிந்து கொள்ள முடியவில்லை என்றாலும் உன்னை நான் சரியாக புரிந்து கொண்டிருக்கிறேன்."

"அதுதான் என்னுடைய தைரியம். அது போகட்டும். தனிமை என்றால் உனக்கு பயமே இல்லையா?"

"பிறக்கும்போது மனிதன் தனியாகத்தானே பிறக்கிறான். தனிமையைக் கண்டு பயப்பட்டால் எப்படி?"

"புரியவில்லையே?"

"இப்பொழுது விளக்கிச் சொன்னாலும் உனக்குப் புரியாது. இந்த உலகில் தனிமையைக் கண்டு யார் பயப்படாமல், வேதனைப் படாமல் இருக்கிறார்களோ, யார் அந்த தனிமையில் மகிழ்ச்சியை, அமைதியை அனுபவிக்கக் கற்றுக் கொள்கிறார்களோ அவர்கள் ரொம்ப அதிர்ஷ்டசாலிகள் என்று நான் நம்புகிறேன்."

மதுரா இரண்டு கைகளையும் நீட்டி என்னைத் தடுத்தாள்.

"ஸ்டாப்... ஸ்டாப். எனக்கு எதுவும் புரியவில்லை. புரியவும் வேண்டாம். போதுமா" என்றாள்.

நான் மௌனமாக இருந்தேன்.

"பிரியா! இந்த வருடத்துடன் உன் படிப்பு முடிந்து விடும் இல்லையா. பிறகு என்ன செய்யப் போகிறாய்?"

"வேலையைத் தேடிக் கொள்வேன்."

"மேற்கொண்டு படிக்கும் எண்ணம் இல்லையா?"

"ஊஹூம்,"

"ஏன்?"

"ஏற்கனவே அம்மாவை ரொம்ப சிரமப்படுத்தி விட்டேன். ஒரு சிநேகிதியிடமிருந்து பெற்றுக்கொள்ளும் உதவியை விட அதிகமாகவே உன்னிடமிருந்து பெற்றுக்கொண்டேன். இந்த நிலைமையை மேலும் நீடிப்பதில் எனக்கு விருப்பம் இல்லை."

அவள் என்னைக் கோபமாக பார்த்தாள். "எப்போதும் ரூபாய் கணக்கு விவகாரம் தானா? என்னிடம் பெற்றுக்கொண்டால் என்ன ஆகி விடும்? எனக்குத் தேவையாக இருந்தால் நீ தர மாட்டாயா?"

"சந்தோஷமாக தருவேன். ஒருத்தருக்குக் கொடுப்பதில் இருக்கும் திருப்தி வாங்கிக்கொள்வதில் இருக்காது."



"நாளை மறுநாள் முதல் கல்லூரி விடுமுறை டாடி, மம்மி, நானும், அடுத்த வியாழன் அன்று காஷ்மீர் போகிறோம்."

"எப்பொ திரும்பி வருவீங்க?"

"இரண்டு மூன்று வாரமாவது ஆகும்னு நினைக்கிறேன். நீயும் வரக்கூடாதா?"

"ஊஹூம்."

"ஏன்?"

"அம்மாவுக்கு ஜுரம். இன்னும் குறையவே இல்லை. ரொம்ப பலவீனமாக இருக்கிறாள்."

"டாக்டரிடம் காட்டினாயா?"

"இல்லை. டாக்டரிடம் போக மறுக்கிறாள்."

"மறுத்தால் அப்படியே விட்டு விடுவதா?"

இன்றே அழைத்துப்போ. எங்க டாக்டருக்கு போன் செய்து அப்பாயிண்ட் மெண்ட் வாங்கி வைக்கிறேன்."

"உங்க அம்மா நேற்றே சொன்னாள். அம்மா சம்மதிக்க வில்லை" என்றேன்.

பின்னாலிருந்து சரோஜா, மீனா வந்தார்கள். மதுராவைப் பார்த்துவிட்டு "நீ இங்கே இருக்கிறாயா? உனக்காக ஊரெல்லாம் தேடி வருகிறோம்" என்று சொல்லிவிட்டு என் பக்கம் திரும்பினார்கள். "பிரியா! நீ எங்களுடன் சேர்ந்து பழக மாட்டாய். மதுராவும் எங்களை விட்டுவிட்டு உன்னைத் தேடிக்கொண்டு ஓடுவாள். இனி நீ பிக்னிக் வருவதாக இருந்தால் நாங்கள் வர மாட்டோம்." ஒரே குரலில் சொன்னார்கள்.

"என்ன பேச்சு இது? பிரியா பாவம். அவள் என்ன செய்து விட்டாள்?"

"எங்களுடன் நீ இருக்க முடியாமல் செய்கிறாள்."

"ஸ்டாபிட்!"

"உனக்கு அவள்தான் வேண்டும் என்றால் அவளுடன் தனியாக வந்திருக்கலாமே. நாங்க எதுக்கு நடுவில்?" மீனா கேட்டாள்.

"ஆமாம் மதுரா. எல்லோரும் சேர்ந்து மகிழ்ச்சியாக பொழுது போக்குவதற்காக, வீட்டில் மறுப்பு சொன்னாலும் பொருட்படுத்தாமல் வந்தோம். இங்கே வந்தது சன்னியாசியாக ஒரு இடத்தில் உட்கார்ந்து தவம் செய்வதற்காக இல்லையே? நீ எங்களை விட்டுவிட்டு இவள் பின்னாடி போய் கெஞ்சி கொண்டிருந்தால் எங்களுக்குக் கோபம் வராதா? நீயே சொல்லு." ரோஜா நீட்டி முழக்கிக்கொண்டே சொன்னாள்.

"ஓ.கே. ஓ.கே. இனிமேல் இப்படி நடக்காது. சரிதானா!" மதுரா மன்னிப்பு கேட்டுக்கொண்டாள். தான் இப்படி பிரியாவைத் தேடிக் கொண்டு வந்தது சிநேகிதிகளுக்கு பிடிக்கவில்லை என்று மதுராவுக்கு புரிந்தது.

மதுராவின் சிநேகிதிகளுடன் என்னால் பழகமுடியாது. அன்று இரவு வீட்டுக்கு வந்த பிறகும் அதைப் பற்றியே யோசித்துக்கொண்டிருந்தேன். என்னால் யாருடனும் ஏன் பழகமுடியவில்லை? என்னிடம் ஏதாவது குறை இருக்கிறதோ மற்றவர்களுடன் பேசவேண்டும், பழகவேண்டும் என்ற தவிப்பும் எனக்கு ஏற்படவில்லை. மௌனமாக, தனிமையில் இருப்பதே எனக்குப் பிடித்திருக்கிறது.

மறுநாள் கல்லூரிக்கு போனேன். நாளை முதல் கல்லூரி விடுமுறை. பெரும்பாலான மாணவிகள் ஊட்டி, கொடைக்கானல் என்று ஏதாவது ஹாலிடே ரிஸார்ட்களுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். நான் எங்கேயும் போக மாட்டேன். அம்மாவைத் தவிர எனக்கு யாரையும் தெரியாது. வெளி ஊர்களுக்கு போகும் அளவுக்கு பண வசதியும் எங்களுக்கு இல்லை. ஒருநாள் கல்லூரி இல்லை என்றால் பஸ்சார்ஜ் மிச்சம் என்று சந்தோஷப்படும் பொருளாதார நிலை எங்களுடையது.



கல்லூரியிலிருந்து நானும், மதுராவும் திரும்பி வந்து கொண்டிருந்தோம். மதுரா என்னை சினிமாவுக்கு வரச் சொல்லி அழைத்தாள். வழக்கம் போல் நான் மறுப்பு சொன்னேன்.

"நீ வரவில்லை என்றால் நான் உன்னுடன் பேசப் போவதில்லை" என்றாள்.

"நல்லதுதானே" என்றேன்.

"உனக்கு வருத்தமாக இருக்காதா?"

"ஊஹூம்."

"நீ ராட்சசியாக பிறக்க வேண்டியவள்."

"ஆமாம்" ஒப்புக்கொள்வது போல சொன்னேன்.

மதுரா கோபமாகப் பார்த்தாள். நான் சிரித்து விட்டேன்.

மதுராவுக்குச் சிரிப்பு வந்தாலும் அடக்கிக்கொண்டாள்.

"நானும் சினிமாவுக்கு போகப் போவதில்லை" மதுரா சொன்னாள்.

"போகாமல் இருப்பானேன்? தாராளமாய் போய்விட்டு வா."

"நீ பக்கத்தில் இல்லாமல் சினிமா பார்த்தாலும் பார்த்த மாதிரியே இருக்காது."

நான் பேசவில்லை. மதுரா எனக்காக தன்னுடைய புரோகிராமை கான்சல் செய்து கொள்வதை நான் விரும்பவில்லை. மூன்றுமணி நேரம் அந்த தலைவலியை தாங்கிக்கொள்ளும் பொறுமையும் எனக்கு இருக்கவில்லை.

"எல்லோரும் என்னை அதிர்ஷ்டசாலி என்று சொல்வார்கள். ஆனால் என்னைக் கேட்டால் நீதான் அதிர்ஷ்டசாலி என்பேன்." மதுரா பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்னாள்.

12796

"எதற்காகவாம்?"

"என்னைப் போன்ற சிநேகிதியை படைத்ததற்கு. நீ வர மறுத்துவிட்டதால் நானும் சினிமாவுக்குப் போவதில்லை."

"நீ போகாமல் இருப்பது எனக்கு சந்தோஷத்தை தரப்போவதில்லை. பிற்பாடு நீ சொல்லிக் காட்டத்தான் போகிறாய். அதைப் பொறுத்துக் கொள்வதை விட அந்த சினிமாவே மேல். போகலாம் வா" என்றேன்.

மதுராவுக்கு சந்தோஷம் ஏற்பட்டது. என் கழுத்தைச் சுற்றி கையை போட்டு இறுக்கமாக கட்டிக்கொண்டாள்.

"என் அன்பை இவ்வளவு தீவிரமாக வெளிப்படுத்தினால் நான் மேல் உலகத்திற்கு போவது நிச்சயம்." என் கழுத்தைச் சுற்றி அழுத்தியிருந்த அவள் கைகளை விலக்கிக்கொண்டே சொன்னேன்.

"உயிர் சிநேகிதியின் கைகளில் இறந்து போன அதிசயப் பெண் இவள்தான் என்று பேப்பரில் உன் போட்டோவை போட வைக்கிறேன். போதுமா?" கலகலவென்று நகைத்தாள்.

இருவரும் சினிமாவுக்குக் கிளம்பினோம். வழியில் ஒரு கடையிலிருந்து அம்மாவுக்கு போன் செய்தேன். அம்மா எனக்காக காத்துக்கொண்டு இருப்பாள். நான் வருவது தாமதமானால் கவலைப்படுவாள்.

தியேட்டருக்குப் போனோம். ரொம்ப கூட்டமாக இருந்தது. டிக்கெட் கிடைப்பதே பெரும்பாடாகி விட்டது.

உள்ளே போகும் போது வயதான நபர் ஒருவர் எங்கள் மீது மோதிக் கொள்ளப் போய் "ஸாரி" என்று சொல்லிவிட்டு நகர்ந்தார். நாங்கள் இருவரும் உள்ளே போகும் போது அவர் வியப்புடன் என் பக்கமே பார்த்துக்கொண்டிருந்தார்.

"கிழவன் உன்னையே பார்த்துக்கொண்டு இருக்கிறான்." மதுரா முழங்கையால் என்னை இடித்துக்கொண்டே சொன்னாள்.

கிளை நூலகம்,
தூத்துக்குடி



சினிமா தொடங்குவதற்கு இன்னும் நேரம் இருந்ததால் வெளியில் போட்டிருந்த சோபாவில் அமர்ந்து கொண்டோம். அந்தப் பெரியவர் மறுபடியும் எங்களை நோக்கி வந்தார்.

"எக்ஸ்க்யூஸ் மீ" என்றார். நான் காதில் வாங்கிக் கொள்ளாதது போல் எங்கேயோ பார்த்துக்கொண்டிருந்தேன்.

மதுரா அவரைப் பார்த்து "என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

அவர் என்னை சுட்டிக் காட்டிக்கொண்டே "இந்தப் பெண்ணின் பெயர் பிரியம்வதாவா?" என்றார்.

"ஆமாம்."

என்னுடைய பெயரைக் கேட்டதும் நான் அவர் பக்கம் பார்த்தேன்.

அவர் என் பக்கம் திரும்பி "பிரியா! நான்தான் ஜோசப் அங்கிள்" என்றார்.

கேள்விக் குறியுடன் அவரை நோக்கினேன்.

"நான்தாம்மா ஜோசப் அங்கிள். உங்க அம்மா இறந்து போன பிறகு எங்கள் வீட்டில் தங்கியிருந்தாய். பிறகு உன்னை கிராமத்தில் உன் மாமா வீட்டில் விட்டு விட்டு வந்தேன். எவ்வளவு பெரிய பெண்ணாக வளர்ந்து விட்டாய்? ஆனால் சின்ன வயதில் இருந்த அதே ஜாடை. அதான் பார்த்ததும் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. ஆறு மாதங்கள் கழித்து நான் மறுபடியும் அந்த ஊருக்கு வந்தேன். நீ அங்கே இல்லை. பங்கஜம் என்பவள் உன்னை வளர்த்து வருகிறாள் என்று சொன்னார்கள். அந்த முகவரி கிடைக்கவில்லை. சௌக்கியமாக இருக்கிறாயாமா?"

தலையை அசைத்தேன். மங்கலாக பழைய காட்சிகள் நினைவுக்கு வந்தன. கிராமத்து பஸ் ஸ்டாண்டில் "என்னை விட்டுவிட்டு போகாதீங்க" என்று நான் அழுதது இவர் பஸ்

ஏறி போனது......

"நான் உன்னை மறக்கவே இல்லை பிரியா." ஜோசப் அங்கிள் சொன்னார்.

"அங்கிள்! டிக்கெட் கிடைத்துவிட்டது" என்று சொல்லி கொண்டே இளைஞன் ஒருவன் அங்கே வந்தான். மாநிறம். உயரமாக இருந்தான். கண்கள் சிறியதாக இருந்தாலும் சுறுசுறுப்பாக இருந்தன.

ஜோசப் அங்கிள் அவனை சுட்டிக் காட்டி விட்டு "பிரியா! இவன் என்னுடைய அக்காவின் மகன். பெயர் டானி. இந்த சினிமாவுக்கு இசையை அமைத்தது இவனுடைய நண்பன். அதான் என்னையும் படம் பார்க்க இழுத்து வந்திருக்கிறான். உனக்குத்தான் தெரியுமே... நான் அதிகமாக சினிமா, டிராமா என்று போகமாட்டேன். டானி! இவள்தான் பிரியம்வதா. நம் வீட்டில் சின்னவயதில் எடுத்த போட்டோ இருக்கிறது. உன்னிடம் கூட சொல்லியிருக்கிறேன்." என்றார்.

"ஓ... கிளாட் டு மீட் யூ. மதுராவை பார்த்துக்கொண்டே சொன்னான்."

அவள் என் பக்கம் சுட்டிக் காட்டினாள்.

டானி எனக்கு வணக்கம் தெரிவித்தான்.

வேறு வழியில்லாத நிலையில் பதில்வணக்கம் தெரிவித்தேன்.

"இந்தப் பெண் யாரு?" ஜோசப் அங்கிள் கேட்டார்.

"என்னுடைய சினேகிதி மதுரா" என்றேன்.

"பெயர் ரொம்ப இனிமையாக இருக்கிறது." டானி சொன்னான்.

"தாங்க்யூ" மதுரா சொன்னாள்.

அந்த நிமிடம் ரொம்ப பயங்கரமானது. ஏன் என்றால், எத்தனையோ விதமாக எனக்கு உதவி செய்த மதுராவிற்கு



டானி போன்று, மனித உருவில் இருக்கும் கொடூரமான விலங்கின் அறிமுகம் என்மூலமாக ஏற்பட்டது என் வாழ்க்கையில் ரொம்பவும் துரதிர்ஷ்டமான விஷயம்.

மதுராவின் வீழ்ச்சிக்கு ஒருவிதமாக நானே காரணமாகி விட்டேன்.

# 9

டானி அதற்குப் பிறகு எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தான். நான் முகம் கொடுத்து பேசாமல் மௌனமாக இருந்தாலும் பொருட்படுத்தமாட்டான். முதலில் அம்மாவும் அவன் வருகையை விரும்பாதவள் போல் நடந்துகொண்டாள். ஆனால் டானி விக்ரமாதித்யனைப் போல் மறுபடியும் மறுபடியும் வந்து கொண்டிருந்தான். அவனுடைய கலகலப்பான பேச்சும், எதிராளியை எப்போதும் சிரிக்க வைக்கும் சுபாவமும் அம்மாவின் மனதில் ஆழமாக படிந்திருந்த கடினத்தன்மையை கொஞ்சம் கொஞ்சமாக கரைத்துவிட்டன.

மதுரா எப்போதும் எங்கள் வீட்டிலேயே இருந்து வந்தாள். டானி மதுராவிடம் அதிகமாக பேச மாட்டான்.

ஒருமுறை கிருஸ்துமஸ் என்று டானி என்னை தங்கள் வீட்டுக்கு வரச் சொல்லி அழைப்பு விடுத்தான். "என்னால் வர முடியாது. வேலை இருக்கிறது." என் விருப்பமின்மையை வெளிப்படுத்தினேன்.

"அப்படி என்ன வேலை? நண்பனின் அன்பான அழைப்பையும் மறுக்கும் அளவுக்கு பெரிய வேலையா?" என்றான்.

நான் பேசவில்லை. டானி நேராக அம்மாவிடம் சென்று "நீங்களாவது சொல்லுங்கள் ஆன்ட். பிரியா எங்கள் வீட்டுக்கு

வந்தால் எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கும். இந்த பார்ட்டி ஏற்பாடு செய்ததே அவளுக்காகத்தான். மற்ற எல்லோரும் வந்தாலும் அவள் வரவில்லை என்றால் எனக்குக் கொஞ்சம் கூட சந்தோஷம் இருக்காது. ப்ளீஸ் ஆன்ட்'' என்று வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருந்தான்.

பக்கத்து அறையில் அமர்ந்துகொண்டு புத்தகத்தை புரட்டிக் கொண்டிருந்த எனக்கு அவன் சொன்னதெல்லாம் காதில் விழுந்துகொண்டுதான் இருந்தது.

அம்மா அவனுடைய வேண்டுகோளை ஏற்றுகொண்டு விட்டாள். "கவலையை விடு டானி. பிரியாவை அனுப்பி வைக்கும் பொறுப்பு என்னுடையது. போதுமா?"

"தாங்க்யூ ஆன்ட். தாங்க்யூ வெரிமச்." எழுந்துகொண்டே சொன்னான்.

டானி கிளம்பிப் போய்விட்டான்.

"மம்மீ... ஏன் அவனிடம் அப்படிச் சொன்னாய்?" சிணுங்கினேன்.

"நீ அந்த பார்ட்டிக்கு போக வேண்டும் என்றுதான்."

"எனக்கு விருப்பம் இல்லை மம்மீ."

அம்மா என் கையைப் பற்றிக்கொண்டாள். "பிரியா... நீ வீட்டை விட்டு வெளியில் போவதையே நிறுத்திவிட்டாய். வெளி உலகில் என்ன நடக்கிறது என்று தெரிந்துகொள்ள வேண்டாமா? நாளைக்கு எனக்கேதாவது ஆகி விட்டால், அப்போது..."

சட்டென்று கையை நீட்டி அம்மாவின் வாயை பொத்தினேன். கண்களை அகலமாக விரித்து வாயடைத்து விட்டது போல் நின்றுவிட்டேன். மம்மிக்கு ஏதாவது ஆகிவிட்டால் ...

இந்த உலகத்தில் என்னால் தனியாக வாழ முடியுமா? என் இதயம் நடுங்கியது.



"ஏன்? என்னவோ போல் ஆகிவிட்டாய்?" அம்மா என் கையைப்பற்றி அருகில் இழுத்துக்கொண்டாள். நான் அம்மாவின் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு" அம்மா ... அம்மா..." அழுகை கலந்த குரலில் முணுமுணுத்தேன். எனக்குள் மறைந்திருந்த சின்னக் குழந்தை மறுபடியும் குரலெடுத்து அழுவது போல் இருந்தது. அந்தத் தனிமை, அந்த பயம் மறுபடியும் அனுபவிக்கவேண்டுமா? வேண்டாம்... வேண்டாம். பகையாளிக்கும் அந்த நிலைமை வரக்கூடாது. அம்மா என் தலையை வருடிக்கொண்டே சொன்னாள். "பிரியா ... நீ இன்னும் சின்னக் குழந்தை இல்லை. பெரியப் பெண்ணாக வளர்ந்து விட்டாய். உலகத்துடன் நேருக்குக்கு நேர் சந்திக்கும் துணிச்சல் இருந்தால்தான் வாழ்க்கை நிம்மதியாக இருக்கும். கஷ்டமோ, நஷ்டமோ இறுதி முடிவு நம்முடையதாகத்தான் இருக்கவேண்டும். சின்ன வயதில் குழந்தைக்கு நடக்கக் கற்றுக்கொடுக்கும்போது எப்படி ஒரு தாய் கொஞ்சம் கொஞ்சமாக தன் பிடியை விட்டுவிடுவாளோ, வளர்ந்த பிறகும் அதே போல் செய்யவேண்டும். தொடக்கத்தில் எந்த விஷயத்திலாவது முடிவு செய்ய வேண்டியிருந்தால் நல்லது கெட்டது எடுத்துச் சொல்ல வேண்டும். போகப் போக அவர்களே முடிவு எடுக்கும் வாய்ப்பைத் தர வேண்டும். நான் உன்னை ரொம்பவும் என் விருப்பு வெறுப்புகளுக்காகச் சிறைப்படுத்திவிட்டது போல் தோன்றுகிறது. எனக்கு விருப்பம் இருக்காது என்பதால், நான் தனியாக இருப்பேன் என்பதால் நீ என்னை விட்டு எங்கேயும் போக மாட்டாய். அப்படித்தானே."

"இல்லை மம்மீ. இல்லை," மறுப்பது போல் தலையை குறுக்காக அசைத்தேன்.

"நீ ஏன் உன் சிநேகிதிகளுடன் நெருங்கிப் பழக மறுக்கிறாய்?"

"எனக்கு விருப்பம் இல்லை. அவர்களுடைய பேச்சும், பழக்க வழக்கங்களும் எனக்குப் பிடிக்காது."

"ஏன் அப்படி? அவர்களும் உன் வயதை ஒற்றவர்கள் தானே?"

"ஏனோ தெரியவில்லை. அவர்கள் எல்லோரும் ரொம்ப பெரியவர்களைப் போல் தங்களுடைய பெற்றோர்களின் விஷயங்களை பேசுவார்கள். இல்லையா தங்களுடைய வீட்டுப் பெருமையை பீற்றிக்கொள்வார்கள். சினிமாவைப் பற்றி கேட்கவே வேண்டாம். மணிக்கணக்காய் பேசிக்கொண்டே இருப்பார்கள். இந்த விஷயங்களில் எனக்குக் கொஞ்சம்கூட உடன்பாடு இல்லை. ஒருக்கால் எனக்கும் அவர்களுக்கும் வளர்ந்த விதத்திலேயே ரொம்ப வித்தியாசம் இருக்கோ என்னவோ. உன்னைப் பற்றிப் பேசுவதோ நம் வீட்டு விஷயங்களை வெளிப்படுத்துவதோ எனக்குப் பிடிக்காது. நான் மதுராவிடமே நம் விஷயங்களை பேசமாட்டேன் மம்மீ."

அம்மா ஒரு நிமிடம் என் பக்கம் பார்த்தாள். பிறகு என் தலையை வருடிவிட்டு என் நெற்றியில் மென்மையாக முத்தம் பதித்தாள்.

அதற்குள் மதுரா வந்தாள்.

அம்மா என் நெற்றியில் முத்தம் பதித்த காட்சியைப் பார்த்ததும் கைகளை தட்டிக்கொண்டே "அடடா ... இப்போ என் கையில் காமெரா இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?" என்றாள்.

அம்மா முறுவலித்தாள். "எல்லாவற்றையும் போட்டோ எடுக்கத்தான் வேண்டுமா?"

"ஆமாம் ஆன்ட். எனக்கென்னவோ நம்முடைய ஒவ்வொரு அசைவையும் போட்டோவாக எடுத்து பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும் என்று தோன்றும். ஆன்ட் .. உங்க இருவரையும் பார்க்கும்போது எனக்கு ரொம்ப பொறாமையாக இருக்கிறது."

"எங்களைப் பார்த்தால் உனக்குப் பொறாமையா இருக்கிறதா? ஏன்?" அம்மா வியப்புடன் கேட்டாள்.



"அம்மா. பிரியா உங்களுடைய சொந்த மகள் இல்லை என்று கேள்விப்பட்டேன். அப்படி இருந்தும் நீங்கள் இருவரும் எத்தனை அன்பாக இருக்கீங்க? நானும் எங்க அம்மாவும் ஒரு நாளாவது இப்படி இருக்கிறோமா? எப்போதும் சண்டைதான்."

பிரியா உங்களுடைய சொந்த மகள் இல்லை என்ற வார்த்தையை மதுராவின் வாயிலிருந்து கேட்டதும் அம்மாவின் முகம் வெளிறிப் போய்விட்டது. நான் உடனே சமாளித்துக் கொண்டேன். முறுவலுடன் அம்மாவை நெருங்கி அணைத்துக் கொண்டேன்.

"எனக்கும், அம்மாவுக்கும் ஒரு நிமிடம்கூட ஒத்துப் போகாது ஆன்ட்" மதுரா சொன்னாள்.

"ஒத்துப் போகாது என்று முகத்தைத் திருப்பிக்கொள்வதை விட ஏன் ஒத்துப் போகவில்லை என்று யோசிக்கலாம் இல்லையா?" அம்மா நயமாக கேட்டாள்.

"நானா? நான் எதற்காக யோசிக்கவேண்டும்? நான் எது செய்தாலும் அம்மாவுக்குப் பிடிக்காது. என் உடைகளைக் கண்டால் எரிந்து விழுவாள். அவள் செய்யும் பூஜைகள், விரதங்கள் என்றால் எனக்கு போர். ஆன்ட்... உண்மையைச் சொல்கிறேன். எனக்குத் திருமணமாகி புகுந்த வீட்டுக்குப் போனால் செத்தாலும் சரி நான் அம்மாவைப் பார்க்க வரமாட்டேன்."

"மதுரா... இவ்வளவு கடினமாகப் பேச உனக்கு மனம் எப்படி வந்தது?"

"எங்க அம்மாவைப் பற்றி உங்களுக்குத் தெரியாது ஆன்ட். எதுவும் தன் விருப்பத்தின்படிதான் நடக்கவேண்டும் என்பாள். சின்ன வயதில் அவள் சொன்னதைக் கேட்கவில்லை என்பதற்காக எத்தனையோ முறை என்னை விளாசி இருக்கிறாள். அதுவே இப்போ என்றால் ஒரு தள்ளு தள்ளினால் போய் அந்தப் பக்கம் விழுவாள். என் சிநேகிதிகள் வீட்டுக்கு

வருவதற்கு அனுமதிக்க மாட்டாள். என்னையும் அவர்களுடைய வீட்டுக்குப் போகக்கூடாது என்று தடுத்து விடுவாள். எப்போதும் வீட்டிலேயே உட்கார்ந்திருக்க வேண்டும் என்பாள். எங்கேயும் வெளியில் சுதந்திரமாக சுற்ற விடமாட்டாள். எங்க டாடீ அப்படி இல்லை. எனக்கு விருப்பமானவற்றை அவரும் சப்போர்ட் செய்வார்." நீளமாக சொல்லி முடித்த மதுரா என் கையைப் பற்றிக்கொண்டே "பிரியா ... இந்த வியாழக்கிழமை நாம் சினிமாவுக்குப் போகப் போகிறோம்" என்றாள்.

"வியாழக்கிழமையா? முடியாது மதுரா" என்றாள் அம்மா.

"ஏன் ஆன்ட்?" வியப்புடன் கேட்டாள். மம்மீ என்னை எப்போதும் வெளியில் போகச் சொல்லி உற்சாகப் படுத்துவாளே தவிர வேண்டாம் என்று மறுத்ததே இல்லை.

"வியாழக்கிழமை அன்று கிருஸ்துமஸ், டானி பிரியாவை வரச் சொல்லி அழைத்திருக்கிறான். அங்கே போக வேண்டும்."

"அப்படியா, அதனால் என்ன? நானும் பிரியாவுடன் போகிறேன்" என்றாள் மதுரா.

அம்மாவும் நானும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டோம்.

மதுரா அம்மாவின் அருகில் வந்தாள். "ஆனால் நீங்க வந்து கேட்க வேண்டும். நீங்க கேட்டால் அம்மா மறுக்க மாட்டாள், ப்ளீஸ் ஆன்ட்" என்றாள்.

"ஆகட்டும் மதுரா" என்றாள் அம்மா.

## 10

நானும், மதுராவும் டானி வீட்டுக்குப் போனோம்.

வீடு முழுவதும் வண்ண விளக்குகளால் அலங்கரித்து இருந்தார்கள். வாசலில் ஸ்கூட்டர்கள் கார்கள் இருந்தன. நிறைய பேர் வந்திருக்கக் கூடும்.



எங்களைப் பார்த்ததும் டானி எதிரே வந்தான்.

"வாங்க... வாங்க. வரமாட்டீங்களோ என்றுதான் நினைத்தேன்" என்றான்.

"பார்த்தீங்களா, நீங்க அழைக்காமலேயே நான் வந்து விட்டேன்." மதுரா சொன்னாள்.

"ஓ காட் ... அப்படிச் சொல்லாதீர்கள். உங்களையும் அழைக்க வேண்டும் என்று என் மனம் தவித்தது உண்மைதான், ஆனால் அழைத்த பிறகு நீங்க வரவில்லை என்றால் ஏமாற்றத்தால் என் இதயம் வேலை செய்வதை நிறுத்தி விடும். அதான் அழைக்கவில்லை."

அவன் பேச்சில் தேவைக்கு மேல் புகழ்ச்சி அதிகமாக இருந்தது. அது தெரிந்த பிறகும் மதுரா கலகலவென்று நகைத்துவிட்டாள்.

டானி எங்களை உள்ளே அழைத்துச் சென்றான். ஜோஸப் அங்கிள் எதிரில் வந்தார். அவர் மனைவி, மகள் எங்களை அன்பாக வரவேற்று உபசரித்தார்கள். என்னை அவர்களுடைய நெருங்கிய உறவினர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார்கள். மதுரா என்னுடனே இருந்தாள். டானியின் நண்பர்களில் இரண்டு மூன்று பேர் மதுராவின் உடையை, அவளுடைய அழகை ரொம்பவும் புகழ்ந்து பேசினார்கள்.

மியூசிக் ஒலித்துக்கொண்டிருந்தது. பார்ட்டி ஆரம்பமாகி விட்டது.

எல்லோரும் கும்பல் கும்பலாக நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். எனக்கு அம்மாவின் நினைவு வந்தது.

உடனே வீட்டுக்கு போக வேண்டும் என்று தோன்றியது.

ஆனால் மதுரா என்னை அங்கிருந்து போக விடவில்லை. கலகலப்பான அந்த சூழ்நிலை, மக்களின் சந்தடி, மெலிதாக ஒலித்துக்கொண்டிருந்த இசை ... மதுராவுக்கு ரொம்ப பிடித்துவிட்டது.

இரவு ரொம்ப நேரமாகிவிட்டது.

இனி கிளம்ப வேண்டும் என்று சொல்லிவிட்டு நான் எழுந்துகொண்டேன். மதுராவுக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் வேறு வழியில்லாமல் எழுந்துகொண்டாள். டானி எங்களை கொண்டு விடுவதற்காக காரை எடுத்தான்.

"தேவையில்லை. ஆட்டோவில் போய்க்கொள்கிறோம்" என்றேன்.

"நல்லாச் சொன்னீங்க, இந்த இரவு நேரத்தில் ஆட்டோவில் போவதாவது?"

"அப்படி ஒன்றும் நேரமாகி விடவில்லை. ஒன்பது மணி ஆகிவிட்டது. அவ்வளவுதானே" என்றேன்.

"ஒன்பது மணிதான் என்றாலும், இளம் பெண்கள், அதிலும் அழகாக இருப்பவர்கள் துணையில்லாமல் பயணம் செய்வது சரியில்லை."

அவன் பேச்சு எனக்கு சலிப்பை ஏற்படுத்தியது. இன்று மாலை இங்கு வந்தது முதல் அவன் வாயிலிருந்து அழகைப் பற்றியும், இளமையைப் பற்றியும் கேட்டுக் கேட்டு சலிப்பு வந்துவிட்டது.

மதுரா என் கையைப் பற்றிக்கொண்டு "பிரியா... டானி சொன்னது உண்மைதான். நாம் தனியாகப் போக வேண்டாம். நான் வேறு வைர நகைகளை அணிந்து கொண்டிருக்கிறேன். ஆண் துணையில்லாமல் பயணம் செய்வது சரியில்லை" என்றாள்.

"இனி எதுவும் பேசாதீங்க, காரில் ஏறுங்கள்." இம்முறை டானியின் குரலில் உரிமையும், அதிகாரமும் கலந்திருந்தன.

இருவரும் போய் பின்னால் சீட்டில் உட்கார்ந்து கொண்டோம்.

கார் நகர்ந்தது. டானி வ்யூ மிர்ரரை அட்ஜெஸ்ட் செய்து அதன் வழியாக எங்கள் இருவரையும் பார்த்துக்கொண்டிருந்தான்.



"மிஸ்டர் டானி... எனக்கு உங்கள் வீட்டு பார்ட்டி ரொம்ப பிடித்திருந்தது." மதுரா சொன்னாள்.

"தாங்க் யூ" என்றான்.

"உங்கள் இனத்தில் எல்லோரும் ரொம்ப சுதந்திரமாக, சிரிப்பும், கொண்டாட்டமாக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். எங்கள் சமுதாயத்தில் இந்த வாய்ப்பே இல்லை. எப்போதும் பூஜைகள், மடி, ஆசாரம். பெரியவர்கள் இளசுகளை மகிழ்ச்சியாக இருக்க அனுமதிக்கவே மாட்டார்கள். எப்போ என்ன ஆகிவிடுமோ என்று கண்காணித்துக்கொண்டே இருப்பார்கள். திருமணம் ஆவதற்கு முன் பெற்றோர்களின் காவல், ஆன பின் கணவரின் கட்டுப்பாடு, சுதந்திரமாக இருப்பது என்றால் என்னவென்று எங்களுக்குத் தெரியவே தெரியாது" என்றாள்.

"எங்கள் சூழ்நிலை, எங்கள் வீட்டு மனிதர்கள் உங்களுக்குப் பிடித்திருந்ததற்கு ரொம்ப சந்தோஷம்" என்றான் டானி.

மதுரா மேலும் ஏதோ பேசிக்கொண்டே இருந்த போது. தடுக்கும் எண்ணத்துடன் நான் அவள் கையை மெதுவாக கிள்ளினேன்.

"பார்த்தீங்களா, பேசியது போதும், இனி வாயை மூடிக்கொள் என்பது போல் பிரியா என் கையை கிள்ளுகிறாள்" என்று சொல்லிவிட்டாள்.

என்னால் பதில் பேச முடியவில்லை.

மதுரா ரொம்ப உற்சாகமாக இருந்தாள். ஏற்கனவே வெளிப்படையாகப் பேசுபவள். இப்போ அவள் இருக்கும் சந்தோஷமான நிலையில் எது சொன்னாலும் பிரயோஜனம் இருக்கப் போவதில்லை.

டானி என்னை வீட்டில் இறக்கி விட்டு, மதுராவை கொண்டு விடுவதற்காக கிளம்பினான். நான் உள்ளே வந்தேன். அம்மா விழித்துக்கொண்டுதான் இருந்தாள்.

"மம்மீ..." அருகில் சென்றேன். "ரொம்ப நேரமாகி விட்டதா?"

"இல்லை" என்றாள்.

"நான் அங்கே இருந்தாலும் என் மனம் முழுவதும் உன்னிடம்தான் இருந்தது" என்றேன்.

"பைத்தியக்காரி." அம்மா புன்முறுவலித்தாள். அந்தக் கண்களில் அன்பும், பரிவும் வெளிப்படையாக தென்பட்டன.

"நான் இருக்கும் வரையில் நீ யாரையுமே விரும்பப்பட மாட்டாய். அப்படித்தானே." அம்மா சொன்னாள்.

"ஏன் மம்மீ அப்படிச் சொல்கிறாய்?"

"ஏனோ எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது" என்றாள்.

"உன் உடல்நலம் எப்படி இருக்கு?"

"நன்றாகத்தான் இருக்கிறேன்."

"பொய். உன் கண்களுக்குக் கீழே கரு வளையங்கள் வருவானேன்?"

"சரியான தூக்கம் இல்லை, அதான்."

"தூக்கம் வராமல் இருப்பானேன்?"

"பயம்தான்."

"பயமா? எதுக்கு?"

"தனிமையைப் பற்றிய பயம்."

"தனிமையா? நான் இருக்கும்போது தனிமை எங்கிருந்து வந்தது?" பொய்க் கோபத்துடன் சொன்னேன்.

அம்மா என் தலையை வருடிவிட்டாள். "என் மீது கோபம் வந்துவிட்டதா?"



அம்மாவை இறுக்கமாக அணைத்துக்கொண்டேன். "அதிகமாக யோசிக்காதே மம்மீ, நிம்மதியாக படுத்து தூங்கு" என்றேன்.

சமீபகாலமாக அம்மா இது போல் அடிக்கடி பேசுகிறாள். காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை.

மறுநாள் கல்லூரிக்குக் கிளம்பினேன். மதுராவின் வீட்டுக்குப் போன போது அவள் உடைகளை மாற்றிக்கொண்டிருந்தாள்.

மதுராவின் தாய் என்னைப் பார்த்ததும் "பிரியா... இனி ஒருநாளும் இரண்டாவது ஆட்டம் சினிமாவுக்கு போகாதீங்க. ஏற்கனவே காலம் கெட்டுக் கிடக்கிறது" என்றாள்.

"இரண்டாவது ஆட்டமா?" என்றேன் வியப்புடன்.

"நேற்று இரவு பார்ட்டி முடிந்த பிறகு செகண்ட் ஷோ சினிமாவுக்குப் போனீங்களாமே, அதைத்தான் சொல்கிறேன்."

நான் திகைத்துப் போனவளாய்ப் பார்த்தேன். அதற்குள் போன் மணி ஒலித்தது. அந்த அம்மாள் போய் விட்டாள்.

மதுரா சட்டென்று என் காது அருகில் குனிந்து ரகசியமாக "செகண்ட் ஷோ சினிமாவுக்கு போயிருந்தோம் என்று சொல்லு. போகவில்லை என்று சொன்னால் அம்மா என் கழுத்தை நெரித்துக் கொன்றுவிடுவாள்" என்றாள்.

அந்த அம்மாள் வரும் முன்பே இருவரும் அவசர அவசரமாக கல்லூரிக்குக் கிளம்பிவிட்டோம்.

வழியில் மதுராவிடம் கேட்டேன், "இரவு ரொம்ப நேரம் ஆகவில்லையே?"

"அது வந்து... உன்னை இறக்கி விட்ட பிறகு நானும் டானியும் காரில் கொஞ்ச நேரம் ஊர் சுற்றிக்கொண்டிருந்தோம். முதலில் வீட்டில் இறக்கி விடுவதாகத்தான் சொன்னான். உடனே வீட்டுக்கு போவதில் எனக்கு விருப்பம் இல்லை என்றேன். அவன் உடனே "எனக்கும் இல்லை" என்றான்.

"எங்கேயாவது போவோமா?" என்றேன்.

"ஓ.கே." என்றான். காரில் ஊர் முழுவதும் சுற்றினோம்.

"இரவு வேளையில் அப்படி காரில் போய்க்கொண்டிருந்த போது எவ்வளவு நன்றாக இருந்தது தெரியுமா?" ஏதோ மயக்கத்தில் ஆழ்ந்துவிட்டவள் போல் சொன்னாள் மதுரா.

நான் பதில் எதுவும் சொல்லவில்லை. எனக்கு மதுராவின் மீது கோபம் வந்தது. காரணம்தான் தெரியவில்லை.

அதற்குப் பிறகு டானியைச் சந்தித்த போது நன்றாக திட்டினேன். காரணம் புரியாமல் முதலில் குழப்பமாக பார்த்தான். பிறகு கலகலவென்று நகைத்தான்.

"இது நன்றாகத்தான் இருக்கு, ஒரு பெண் தானாக வந்து கம்பெனி கொடுப்பதாக சொன்னால், இளமையும், கையில் காரும் இருக்கும் எந்த ஆண்மகனால் மறுக்க முடியும்? நீயே சொல்லு" என்றான்.

எனக்கு அவன் மீது இருந்த கோபம் இருமடங்காக மாறியது.

## 11

அன்று நான் கல்லூரியிலிருந்து திரும்பி வந்த போது அம்மாவின் எதிரில் வயதான பெண்மணி ஒருத்தி உட்கார்ந்திருந்தாள். அந்த அம்மாள் நல்ல சிவப்பாக, குண்டாக இருந்தாள், கரும்பச்சை நிறத்தில், ஜரிகை வேலைபாடு செய்த சில்க் புடவையை உடுத்தியிருந்தாள். கழுத்து நிறைய நகைகள் அணிந்திருந்தாள்.

அம்மா என்னைப் பார்த்ததும் "அதோ... மகள் வந்துவிட்டாள்" என்று அந்த அம்மாளிடம் சொல்லிவிட்டு என் பக்கம் திரும்பி "பிரியா... வாம்மா. இந்த அம்மாளின் பெயர் பாத்திமா பேகம். உன் தந்தையின் சகோதரி. உனக்கு அத்தை



முறை ஆகவேண்டும். பம்பாயிலிருந்து இந்த ஊருக்கு வந்தாளாம். உன்னைப் பார்க்கவேண்டும் என்று வந்திருக்கிறாள்" என்றாள்.

நான் அம்மா உட்கார்ந்திருந்த நாற்காலியின் பின்னால் நின்று கொண்டேன்.

அந்த அம்மாள் வியப்பும், மகிழ்ச்சியுமாக என்னை ஏற இறங்க பார்த்தாள். "எங்க ரபீயின் ஜாடை அப்படியே இருக்கு. அல்லா... அல்லா... அந்த மூக்கும், கன்னமும் அவனேதான். பார்த்தாலே தெரிகிறது." ஏற்கனவே பெரிதாக இருந்த அந்த அம்மாளின் கண்கள் மையிட்டுக் கொண்டதால் மேலும் விசாலமாக தென்பட்டன. ஒற்றைக்கல் வைர மூக்குத்தி விளக்கு வெளிச்சத்தில் மின்னிக்கொண்டிருந்தது.

டீபாய் மீது வெற்றிலைப்பெட்டி இருந்தது. அந்த அம்மாள் வெற்றிலையில் சுண்ணாம்பு தடவி வாயில் போட்டு மென்று கொண்டிருந்தாள்.

அந்த அம்மாள் பாதி தமிழ் பாதி உருது என்று இருமொழிகளையும் கலந்து பேசிக்கொண்டிருந்தாள். நான் குனிந்து அம்மாவின் கன்னத்தில் முத்தம் பதித்தேன்.

"அம்மா... இன்னிக்கு உன் உடல்நலம் எப்படி இருக்கு?" என்றேன்.

"பரவாயில்லை. நீ போய் உடைகளை மாற்றிக்கொண்டு வா. நான் உள்ளே போய் டீ கலந்து எடுத்து வருகிறேன்." அம்மா எழுந்து கொள்ளப்போனாள்.

நான் அம்மாவின் தோளில் கைகளைப் பதித்து வலுக்கட்டாயமாக நாற்காலியில் உட்கார வைத்தேன். "நான் டீ கலந்து எடுத்து வருகிறேன். நீ இங்கேயே உட்கார்ந்துகொள்." உரிமையுடன் சொன்னேன்.

அம்மா இயலாமையுடன் பார்த்தாள்.

பாத்திமாபேகம் எங்க இருவரையும் கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். வாய் பாட்டுக்கு வெற்றிலையை மென்றுகொண்டிருந்தாலும், பார்வை மட்டும் என்னைத் துளைத்தெடுப்பது போல் இருந்தது.

நான் உடைகளை மாற்றிக்கொண்டு சமையல் அறைக்கு வந்தேன். டீயை கலந்துகொண்டிருக்கும் போது அம்மா உள்ளே வந்தாள்.

"பிரியா... அந்த அம்மாள் உன்னை அழைத்துப் போவதற்காக வந்திருக்கிறாள்."

"என்னையா?" சர்க்கரை டப்பாவை எடுக்கப் போன நான் அதை மறந்துவிட்டு வியப்புடன் திரும்பிப் பார்த்தேன்.

அம்மா ஆமாம் என்பது போல் தலையை அசைத்துவிட்டு மேலும் சொன்னாள்.

"அந்த அம்மாளுக்கு உன்னைப் பற்றிய தகவல் இப்பொழுது தான் தெரிந்ததாம். அவளுக்கு தன்னுடைய தம்பியிடம், அதான் உன் அப்பாவிடம் பிரியம் அதிகமாம். நீ பிறந்த பிறகு உன் அப்பா தன்னுடைய அக்காவுக்குக் கடிதம் எழுதியிருந்தாராம். ஒருக்கால் தனக்கேதாவது ஆகிவிட்டால் உன்னையும், தன்னுடைய மனைவியையும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தாராம். அதான் அந்த அம்மாள் உன்னை அழைத்துப் போவதற்காக வந்திருக்கிறாள்."

"அம்மா... உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? உன்னை விட்டுவிட்டு நான் போய் விடுவேன் என்று நினைத்தாயா?" என்றேன்.

அம்மா வாசற்படியில் சாய்ந்துகொண்டு நின்றிருந்தாள். அவள் கண்களில் ஏதோ வெறுமை.

"நீ அந்த அம்மாளுடன் போவதுதான் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது". நினைவு வேறு எங்கேயோ இருப்பது போல் பேசினாள்.



அம்மா சொன்னதைக் கேட்டதும் ஓடிப்போய் அவளை கட்டிப்பிடித்துக்கொண்டேன். "உனக்கு நிஜமாகவே மூளை கலங்கிப் போய் விட்டது, இல்லை என்றால் இப்படியெல்லாம் பேசி என்னை பயமுறுத்தமாட்டாய்."

அம்மா என்னுடைய தலையை கோதிவிட்டாள். "பிரியா ... உண்மையிலேயே எனக்கு மூளை கலங்கிப் போய் விட்டால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்?"

"என்ன நடந்தது? ஏன் இப்படிப் பேசுகிறாய்?"

"என் வேதனை உனக்குப் புரியாதும்மா?"

"நான் உன் அருகில் இருக்கிறேன் என்ற தைரியம் அந்த வேதனையைத் தாங்கிக் கொள்ளும் சக்தியை உனக்குத் தராதா அம்மா." அப்பாவியாகக் கேட்டேன்.

"பிரியா... நீ இன்னும் சின்னப் பெண், சில விஷயங்கள் இப்போ உனக்குப் புரியாது." அம்மாவின் இதழ்களில் முறுவல் மலர்ந்தது. அம்முறுவலில் ஏதோ விரக்தி.

அம்மாவுக்கு என்ன ஆகிவிட்டது?

"இனியும் தாமதம் செய்யாதே. ஹாலுக்கு வா. அந்த அம்மாள் உன்னுடன் பேச வேண்டும் என்று தவித்துக்கொண்டிருக்கிறாள்" என்றாள்.

"நான் வர மாட்டேன்" என்றேன் பிடிவாதமாய்.

"பிரியா ரொம்ப நல்ல பெண். அம்மா சொன்னபடி கேட்பாள். புதிய மனிதர்களுக்கு முன்னால் நம் இருவருக்கும் கருத்து ஒத்துப் போகவில்லை என்று வெளிப்பட்டால் அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது."

"சரிம்மா. இதோ வருகிறேன்" என்றேன்.

"வரும் போது எங்களுக்கும் டீயை கொண்டு வா" என்றாள்.

ட்ரேயில் டீயை எடுத்துக்கொண்டு ஹாலுக்கு போனேன்.

பாத்திமாபேகம் என்னைப் பார்த்ததும் "ஆவோ பேட்டீ, பைட்டோ" என்று சற்று நகர்ந்து சோபாவில் எனக்கு இடம் தந்தாள்.

நான் அமர்ந்துகொண்டேன். நான் கொடுத்த டீயை பருகிக்கொண்டே பாத்திமாபேகம் பேசத் தொடங்கினாள்.

"இத்தனை நாட்கள் நாங்க இருந்தும் இல்லாதவர்கள் போல் ஆகிவிட்டோம், எனக்கு உன்னைப் பற்றிய தகவல் எதுவும் தெரியவில்லை. இத்தனை நாட்கள் உன்னை நல்லபடியாக வளர்த்து வந்ததற்கு உன் அம்மாவுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

பிறகு என் படிப்பு பற்றிய விவரங்களை கேட்டுத் தெரிந்துகொண்டாள். ரொம்ப நாட்களாக பழகியவள் போல் உரிமையாக பேசினாள். "நம் வீட்டில் உனக்கு நன்றாக பொழுது போகும். ஜமேலா, சல்மா உன் வயதை ஒற்றவர்கள்தான். படிப்பில் சிரத்தை இல்லாததால் எட்டாவது வகுப்புடன் நிறுத்திவிட்டார்கள். தையல் வேலை, எம்பிராய்டரி வேலை நன்றாக செய்வார்கள். சல்மாவுக்கு அலங்காரம் செய்துகொள்வதில் விருப்பம் அதிகம். அழகாகவும் இருப்பாள். உனக்கும் அவளுக்கும் ஒரே ஜாடைதான், நீ தான் வருகிறாயே, நேரில் பார்த்து தெரிந்துகொள்" என்றாள்.

ஜமேலாவுக்கு திருமணம் நிச்சயமாகிவிட்டதாம். பாத்திமாபேகம் மேலும் ஏதோ சொல்லிக்கொண்டே இருந்தாள்.

மனதில் எந்த விஷயமும் பதியாவிட்டாலும் வலுக்கட்டாய மாக பொறுமையை வரவழைத்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருந்தேன். இந்த அம்மாள் எப்போ கிளம்பிப் போவாளோ என்று உள்ளூர எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.

அன்று இரவு அம்மா என்னுடைய உடைகளை சூட்கேஸில் எடுத்து வைத்துக்கொண்டிருந்தாள். மறுநாள் முதல் எனக்கு ஒரு மாத காலம் விடுமுறை இருந்தது.



"அம்மா... நான் அவளுடன் போக மாட்டேன்" என்றேன்.

"ஒரு முறை போய்ப் பார்த்துவிட்டு வா பிரியா. அவர்கள் உன் உறவினர்கள்."

"யாராக இருந்தாலும் எனக்குத் தேவையில்லை."

"அப்படிச் சொல்லாதே பிரியா, எனக்கேதாவது ஆகிவிட்டால்..."

"உனக்கு எதுவும் ஆகாது."

அம்மாவின் இதழ்களில் விரக்தி கலந்த புன்முறுவல் மலர்ந்தது. "பிரியா... நான் சொல்வதைக் கொஞ்சம் காது கொடுத்து கேட்டுக் கொள். இந்த உலகத்தில் எந்த மனிதனுக்காகட்டும் தனக்கு என்று ஒரு வீடு இருப்பது எவ்வளவு முக்கியமோ, தன்னுடைய மனிதர்கள் என்று சிலர் இருப்பதும் முக்கியம், மனிதனால் பணத்தை சம்பாதிக்க முடியும். பெயர், புகழ் சம்பாதித்துக்கொள்ள முடியாது. கஷ்டமோ சுகமோ நெருக்கமானவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் போது இருக்கும் திருப்தி வேறு எதிலும் கிடைக்காது. அது போன்ற சுகம் எப்படி இருக்கும் என்று தெரிய வாய்ப்பு இல்லாத இனத்தில் பிறந்தவள் நான். எப்போதும் தனிமைதான். மற்றவர்களைச் சார்ந்து வாழும் வாழ்க்கைதான் தெரு நாயை விட ஹீனமான வாழ்க்கை இது."

நான் அம்மாவையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

அம்மா ஏதோ வேதனையை அனுபவித்து வருகிறாள். அந்த வேதனைக் காட்டுத் தீயாய் அவளை தகித்துக் கொண்டிருந்தது.

பெற்றதாயை விட அதிகமாக அன்பு செலுத்தி, அபூர்வமாக என்னை வளர்த்து ஆளாக்கினாள்.

இப்பொழுது என்னை இப்படி தன்னிடமிருந்து தொலைவாக யாருடனோ அனுப்பிவிட வேண்டும் என்று நினைப்பானேன்? சின்ன வயதிலிருந்து என்னை வளர்த்து வந்த

அம்மாவை விட இப்பொழுது வந்த பாத்திமாபேகம் எனக்கு நெருக்கமானவள் எப்படி ஆவாள்?

அம்மாவை கோபித்துக்கொண்டேன். பட்டினிக் கிடந்து பிடிவாதம் பிடித்தேன். பேசாமல் மௌனமாக இருந்து என் எதிர்ப்பை தெரிவித்தேன். அப்படியும் அம்மா தன் பிடிவாதத்தைத் தளர்த்தவில்லை. கடைசியில அம்மாவுக்கு வேதனையை தருவதை விரும்பாமல் சமாதானமாகி விட்டேன். அம்மாவின் திருப்திக்காக, வேறு வழியில்லாத நிலையில் நான்கு நாட்களுக்காக பாத்திமாபேகத்துடன் கிளம்பினேன்.

பாத்திமாபேகத்தின் வீட்டில் காலடி எடுத்து வைத்த எனக்கு வேறு உலகத்திற்கு வந்து விட்டாற்போல் தோன்றியது. அங்கே என் வயதை ஒற்ற பெண்கள் பத்துபேர் வரையில் இருந்தார்கள். அவர்களைத் தவிர ஆண், பெண், குழந்தைகள் எல்லோருமாக சேர்ந்து பதினைந்து பேர் இருந்தார்கள்.

சத்திரத்தில் இருப்பது போல் எப்போதும் சந்தடியாக இருந்தது. சமையலுக்கு, வீட்டு வேலைகளுக்கும் ஆட்கள் இருந்தார்கள். ரொம்ப பெரிய வீடு, மாடியிலேயே எட்டு அறைகள் இருந்தன.

எனக்கு பம்பாயை விட இந்த வீடே அதிசயமாக, வித்தியாசமாகத் தோன்றியது. பாத்திமாபேகத்தின் கணவர் கான்ட்ராக்டராக இருந்தார். அவரைப் பார்க்க வந்து போகும் மக்கள்.

இந்த வீட்டில் எல்லோருக்கும் ஒரு தனி உலகம் இருந்தது. பெரியவர்களுக்கும், சிறியவர்களுக்கும் எல்லோருக்கும் தனித் தனியாக நண்பர்கள் வட்டம் இருந்தது.

எனக்கு எல்லாமே புதுமையாகவும், பதட்டமாகவும் இருந்தது. சிறையில் நான்கு சுவர்களுக்கு நடுவில் இருந்தவள் திடீரென்று மக்கள் கூட்டத்திற்கு இடையில் சிக்கிக்கொண்டு விட்டது போல் தோன்றியது.



பெரியவர்கள் எல்லோரும் என்னை ரொம்ப அன்புடன் நடத்தினார்கள். என்னுடைய அப்பா ரபீ அவர்களுக்கு செல்லக் குழந்தையாம். அம்மா வேறு மதத்தைச் சேர்ந்தவள் என்பதால் அவர்கள் அப்பாவின் திருமணத்திற்கு சம்மதிக்கவில்லையாம். அப்பா வந்து நயமாக எடுத்துச் சொன்ன பிறகு சமாதானமாகி விட்டார்களாம். அம்மாவையும் என்னையும் அழைத்து வரச்சொல்லி சொன்னார்களாம். விபத்தில் அப்பா இறந்து போன பிறகு அம்மா வீடு மாறி விட்டதால், அவர்களால் எங்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லையாம், அவர்கள் வீட்டு ஆல்பத்தில் எங்களுடைய புகைப்படங்கள் இருந்தன. அப்பா அவர்களுடன் எடுத்துக்கொண்ட போட்டோக்களும் இருந்தன.

சல்மா கிட்டத்தட்ட என் உயரம் இருந்தாள். இருவரின் உடல்வாகும் ஒன்றுபோல் இருந்தது. அவளுடைய உடைகள் எனக்கு சரியாகப் பொருந்தின. அவர்கள் போட்டுக் கொள்வது போல் சல்வார், கமீஜ் என்னை அணிந்துகொள்ளச் சொன்னார்கள். கோணலாக வகிடு எடுத்து ஜடையை பின்னிவிட்டார்கள். நெற்றிச்சுட்டி, காதில் பெரிய லோலாக்குகளை அணிவித்தார்கள்.

"நீ இப்பொழுது ஹிந்து பெண் இல்லை. முஸ்லீம் பெண்ணாக மாறிவிட்டாய்" என்று சொல்லிக் கொண்டே சல்மா என்னுடைய நெற்றிப் பொட்டை அழித்துவிட்டாள்.

இறுக்கமான சில்க் உடைகள், உடல் முழுவதும் நகைகள், குங்குமம் இல்லாத முகம்... எனக்கு நானே வேறு நபர் போல் தோன்றியது. இப்பொழுது அம்மா என்னைப் பார்த்தால் அடையாளம் கண்டு கொள்ள முடியாதோ என்னவோ.

பணக்காரர்கள் என்பதால் அந்த வீட்டில் உணவுக்கும், கேளிக்கைகளுக்கும் எந்த குறையும் இருக்கவில்லை. வரவுக்கும், செலவுக்கும் கணக்கே இல்லை. யாராவது வந்து

போய்க் கொண்டே இருப்பார்கள். அடிக்கடி விருந்துகள் நடக்கும். அதில் குடியும் உண்டு.

இதுதான் அவர்கள் வாழும் முறை.

அது வரையில் வேறு விதமான சூழ்நிலையில், கட்டுபாடாய் வளர்ந்து வந்த நான் திடீரென்று இந்த மாறுபட்ட சூழ்நிலைக்கு வந்ததும் திக்குமுக்காடி விட்டேன்.

உயிரோடு இருக்கும் போதே இன்னொரு பிறவி எடுத்தாற் போல் இருந்தது. முக்கியமாக உணவு விஷயத்தில் என்னால் அவர்களுடன் ஒத்துப் போக முடியவில்லை. குழம்பு, பருப்பு, காய்கறி என்று சாப்பிட்டு வளர்ந்த எனக்கு சிக்கன், மட்டன் என்ற பெயரைக் கேட்டால் கூட அருவருப்பாக இருந்தது. முதல் நாள் எல்லோருடன் சாப்பிட உட்கார்ந்தபோது அந்த உணவு வகைகளை பார்க்கும் போதே வயிற்றை பிரட்டிக்கொண்டு வந்தது. என் சங்கடத்தை புரிந்துகொண்ட பாத்திமாபேகத்தின் கணவர் எனக்குத் தனியாக உணவு வழங்கச் சொன்னார். எனக்காகத் தனியாக சமையல் செய்ய ஏற்பாடு செய்தார். சல்மாவையும் என்னுடன் சேர்ந்து சாப்பிடச் சொல்லி ஆணையிட்டார்.

அவர்களைச் சேர்ந்தவள் என்று நினைத்துத்தான் அவர்கள் என்னை இங்கே அழைத்து வந்தார்கள். எனக்கும் அவர்களுக்கும் ரத்தசம்பந்தம் இருக்கிறது. ஆனாலும் அவர்களால் என்னிடம் இயல்பாக பழக முடியவில்லை. எனக்கும் அப்படித்தான் இருந்தது. என் தந்தையின் தாய் மட்டும் என்னிடம் ஆதரவு காட்டினாள். அந்த அம்மாளுக்கு காது சரியாக கேட்காது. இங்கே எனக்கு எந்தக் குறையும் வராமல் பார்த்துக்கொள்ளச் சொல்லி சல்மாவிடம் ஆணையிட்டாள், சல்மா பாட்டியின் முன்னால் அன்பாக இருப்பது போல் நடிப்பாள். பாட்டியின் தலை மறைந்ததும் முகத்தைக் காட்டுவாள்.

கரையில் விழுந்த மீன் போல் என் உள்ளம் தத்தளித்துக் கொண்டிருந்தது. அம்மாவிடம் போக வேண்டும் என்ற தவிப்பு



ஏற்பட்டது. இத்தனை நாட்கள் இந்து மதத்தின் பழக்க வழக்கங் களை கடைபிடித்து வந்த என்னால் முஸ்லீம் சம்பிரதாயத்துடன் ஒத்துப் போக முடியவில்லை.

தன்னை அறியாமலேயே மனிதன் சம்பிரதாயங்களுக்கு, கலாசார பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகி விடுகிறான். தினமும் காலையில் காபி சாப்பிட பழகிவிட்ட நாக்கு அதையே விரும்புவது போல் மனிதனின் மனமும் பழக்கப்பட்ட சூழ்நிலையைத்தான் விரும்பும் போலும்.

நான் ஹைதராபாத்துக்கு திரும்பி வந்தேன். நான் வரும் போது அம்மா ஆஸ்பத்திரியில் இருந்தாள்.

ஆஸ்பத்திரிக்கு விரைந்தபோது, அம்மா மரணத்தின் விளிம்பில் இருந்தாள்.

டாக்டரைப் பார்த்தேன். அவர் சொன்னதைக் கேட்ட போது அதிர்ச்சியாக இருந்தது.

அம்மாவுக்கு கான்சர். சமீபகாலமாக அம்மா ஒரு மாதிரியாக, விரக்தியுடன் இருந்தது ஏன் என்று புரிந்தது. கிட்டத்தட்ட ஒரு வருடமாக அம்மா இந்த நோயால் அவதிப் பட்டுக்கொண்டிருந்தாள், இந்த விஷயத்தை என்னிடம் கூட சொல்லவே இல்லை.

"ஏம்மா இப்படிச் செய்தாய்?" அம்மாவை கட்டிப்பிடித்துக் கொண்டு ஹோவென்று கதறிவிட்டேன்.

"தெரிந்துகொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்?" பலவீனமாக குரலில் சொன்னாள். என் முதுகில் கையை வைத்து ஆதரவுடன் வருடிவிட்டாள்.

"பிரியா... இத்தனை நாட்களும் எனக்கென்று யாருமே இல்லை என்று தவித்துக்கொண்டே வாழ்ந்தேன். என் வாழ்க்கையில் நீ வந்தாய். அன்புக்காக ஏங்கிக்கொண்டிருந்த என் மனம் ஆறுதல் அடைந்தது. வாழ்க்கைக்கு பற்றுகோல்

கிடைத்துவிட்டது போல் தோன்றியது. உனக்குத் திருமணம் முடித்து உன் நிழலில் என் கடைசி காலத்தைக் கழிக்க வேண்டும் என்று நினைத்தேன். என் வாழ்க்கையே முடிந்துவிடப் போகிறது. கடவுளின் முடிவு இதுதான் என்ற போது நாம் என்ன செய்ய முடியும்?"

"அம்மா... பலவீனமாக இருக்கிறாய். அதிகமாக பேசாதே" என்றேன்.

"பிரியா .. பாம்பேக்கு போகச் சொன்னேன் என்று என் மீது உனக்குக் கோபம் கூட வந்தது இல்லையா. எனக்கு இந்த நோய் இருப்பதாக தெரிந்தது முதல் உனக்குக் கல்யாணம் முடித்து விட வேண்டும் என்றுதான் நினைத்தேன். ஆனால் அந்த அளவுக்கு பணவசதி இல்லாததால் அந்தக் காரியத்தை செய்ய முடியவில்லை. சொந்த மனிதர்களுடன் உன்னைச் சேர்த்து விடவேண்டும் என்று அவர்களுக்காக விசாரித்தேன். உன் தந்தையின் தூரத்து உறவினரை யதேச்சையாக சந்தித்தேன். அவரிடமிருந்து உன் பாட்டி, தாத்தாவின் முகவரி பெற்றுக்கொண்டு கடிதம் எழுதினேன். நீ என்னிடம் வளர்ந்து வருவதாகவும், முடிந்தால் வந்து உன்னை அழைத்துப் போகும்படியும் வேண்டுகோள் விடுத்தேன்."

"அவர்கள் முஸ்லீம் இனத்தைச் சேர்ந்தவர்கள் அம்மா."

"அவர்கள் உன் அப்பா வழி உறவினர்கள் என்பதை மறந்துவிட்டாயா?"

"அந்தச் சூழ்நிலையில் என்னால் இருக்க முடியாது."

"எதுவும் நாம் நினைத்துக்கொள்வதில்தான் இருக்கிறது. அவாகள் உன்னை தங்களுடன் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்கள். பிரியா... இந்த வயதில் நீ தனியாக இருப்பது சரியில்லை. ஒருத்தருடைய பாதுகாப்பில் இருப்பதுதான் நல்லது."



அம்மா மனதில் இருந்த எண்ணம் எனக்குப் புரிந்தது. அம்மா போன பிறகு நான் தனியாக இருக்கக் கூடாது. தான் போன பிறகு நான் கஷ்டப்படக்கூடாது என்று நினைத்து, அப்பா வழி உறவினர்களிடம் என்னை ஒப்படைக்க தீர்மானித்துவிட்டாள்.

அம்மாவைப் பார்ப்பதற்காக மதுரா வந்தாள். நான் மதுராவிடம் இதைப் பற்றிச் சொன்னேன்.

மதுரா ஒரு நிமிடம் கூட யோசிக்கவில்லை. "உனக்கு பம்பாய்க்கு போவதில் விருப்பம் இல்லாவிட்டால் எங்கள் வீட்டில் தங்கிக் கொள்" என்றாள்.

நான்கு நாட்கள் கழித்து அம்மா இறந்து போனாள். அவளுடைய உயிர் போகும் போது நான் அருகிலேயே இருந்தேன்.

அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டிருந்தேன். நல்ல தூக்கத்தில் இருப்பது போல் தென்பட்டாள். டாக்டர் வந்து "எல்லாம் முடிந்துவிட்டது" என்று தெரிவித்தார்.

நான் ஹோவென்று கதறவில்லை. என் கண்ணிலிருந்து கண்ணீர் வரவில்லை. சின்ன வயது முதல் எனக்கு எந்த விதமான கஷ்டங்களும் வராமல் என்னைக் காப்பாற்றி வந்த நபர் இனி இந்த உலகில் இல்லை. அம்மாவின் மரணத்துடன் என் கடந்த கால வாழ்க்கை முடிந்துவிட்டது. இந்த நிமிடம் முதல் நான் தனியள்.

## 12

நான் ஹாஸ்டலில் சேர்ந்தேன். நெருக்கடியான இந்தச் சமயத்தில் மதுரா எனக்கு உறுதுணையாக இருந்தாள்.

"பிரியா! நீ படிப்பை நிறுத்த தேவை இல்லை. உன் படிப்புக்கு எந்த விதமான குறையும் வராமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு என்னுடையது" என்று என்னைத் தேற்றினாள்.

மதுராவின் ஆறுதல் மொழிகள் எனக்கு தெம்பை அளித்தன. என் மனதை படிப்பில் செலுத்த முயன்றேன். ஏன் என்றால் என்னைப்போன்றவர்களுக்கு படிப்புதான் வாழ்க்கைக் கடலில் நீந்துவதற்கு ஆதரவாக இருக்கப்போகிறது.

மதுராவும் டானியும் சேர்ந்து ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். ஒருமுறை நான் மதுராவை எச்சரித்தேன்.

"மதூ! அவனுடைய நடத்தை எனக்குக் கொஞ்சம் கூட பிடிக்கவில்லை. நண்பர்கள் நல்லவர்களாக இல்லை என்றால் வாழ்க்கை நாசமாகிவிடும்" என்றேன்.

மதுரா சிரித்துவிட்டாள். என் அறிவுரைகளை சீரியஸாக எடுத்துக்கொள்ளவில்லை. கல்லூரிக்கும் மட்டம் போடத் தொடங்கினாள். வாழ்க்கையை விளையாட்டாக எடுத்துக் கொண்டுவிட்டாள்.

தேர்வுகள் நெருங்கி விட்டன.

"பிரியா! சினிமாவுக்கு போகலாம். வர்றியா?" மதுரா ஒரு நாள் வந்து கேட்ட போது மறுத்து விட்டேன்.

ஏற்கனவே அம்மாவை இழந்ததால் ஏற்பட்ட துக்கம், வெறுமையினால் படிப்பில் கொஞ்சம் கவனம் குறைந்திருந்தது. இந்தத் தேர்வுகளில் எப்படியும் வெற்றிபெறவேண்டும் இல்லா விட்டால் ஒரு வருடம் வியர்த்தமாகி விடும்.

தேர்வுகள் முடியும் நேரம், மதுராவின் தந்தை ஹார்ட் அட்டாக் வந்து இறந்து போய்விட்டார். அந்தக் குடும்பத்தின் மீது பெரிய இடி விழுந்துவிட்டது. பண வசதிக்கு குறைவு இல்லாத காரணத்தினால் ஆள் இல்லாத குறையே தவிர மற்றபடி வாழ்க்கை நடத்துவதில் பிரச்னை இருக்கவில்லை.

தந்தை இறந்து போய் ஒரு மாதம் முடிவதற்குள் மதுரா டானியை பதிவுத் திருமணம் செய்துகொண்டு விட்டாள். யாரிடமும் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை. இந்தச் செய்தியைக் கேட்டதும் சுசிலாமாமி நினைவு தப்பி கீழே விழுந்து விட்டாள்.



அந்த அம்மாளை பார்க்க வீட்டுக்குப் போன போது அழுது தீர்த்தாள். "என்னைப் பொறுத்தவரையில் மகள் செத்துவிட்டாள்" என்று திட்டினாள். மகளை எந்த அளவுக்கு நேசித்தாளோ அதைவிட அதிகமாக வெறுக்கத் தொடங்கினாள்.

மதுரா தாயின் வெசவுகளை, வெறுப்பை கொஞ்சம் கூட லட்சியப்படுத்தவில்லை. கணவனுடன் சேர்ந்து சொத்துக்காக தாய் மீது வழக்கு போட்டாள்.

ஒரு முறை நானே அவளைச் சந்திப்பதற்காகச் சென்றேன்.

என்னைப் பார்த்ததும் மதுரா ஓடி வந்தாள். நைட்டியில் இருந்த மதுராவைப் பார்த்ததும் இந்தத் திருமணத்திற்கு அவள் அவசரப் பட்டது ஏன் என்று புரிந்துவிட்டது. மதுரா தாய் ஆகப் போகிறாள். வயிறு லேசாக மேடிட்டு இருந்தது.

என்னைப் பார்த்ததும் இறுக்கமாக அணைத்துக் கொண்டாள்.

"பிரியா! என் மீது உனக்குக் கோபமா?" என்றாள்.

"ஆமாம். கோபம்தான்."

மதுராவின் கண்களில் நீர் தளும்பியது.

"நீ இப்படித்தான் சொல்வாய் என்று எனக்குத் தெரியும். உனக்குக் கோபம் வருவதும் நியாயம்தான். அதற்காக நான் வேதனைப்படவில்லை. நான் செய்த தவறு என்னவென்று எனக்குத்தான் தெரியுமே. உட்கார்ந்து கொள்."

இருவரும் உட்கார்ந்துகொண்டோம்.

"திருமணத்தை பொறுத்தவரையில் உன் வாழ்க்கை உன் விருப்பம், ஆனால் சொத்துக்காக பெற்ற தாய் மீது வழக்கு போடுவானேன்?" என்றேன்.

மதுரா தலையைக் குனிந்துகொண்டாள். "பிரியா! வாழ்க்கையே எனக்குக் குழப்பமாகிவிட்டது. டானியுடன்

ஜாலியாக பொழுதை போக்குவதற்காக ஊரைச் சுற்றினேன். கோரிக்கைகளுக்கு அடிமையாகி விட்டேன். கண நேர சுகத்திற்காக முன்பின் யோசிக்காமல் அவசரப்பட்டு விட்டேன். தாயாகப் போகிறேன் என்று தெரிந்ததும் எனக்கு மூளையே கலங்கிவிட்டது போல் ஆகிவிட்டது. அபார்ஷன் செய்து விடலாம் என்று நினைத்தேன். டானி மறுத்துவிட்டான். திருமணம் செய்துகொள்வோம் என்றான். இப்பொழுது தோன்றுகிறது. ஒரு தவறு செய்தால் அதைத் தொடர்ந்து மறுபடியும் தவறுகளை செய்ய வேண்டிய நிர்பந்தம். அம்மாவிடம் பணம் கேட்டால் தரமாட்டாள். அதான் அம்மாவுக்கு வேதனை தருகிறேன் என்று தெரிந்தும் இந்த வழக்கை போட வேண்டிய கட்டாயம்."

மதுராவின் இயலாமையை என்னால். புரிந்துகொள்ள முடிந்தது. "அம்மாவிடம் வந்து பேசு" என்றேன்.

மதுராவை வற்புறுத்தி சுசீலா மாமியிடம் அழைத்துப் போனேன். விருப்பம் இல்லாவிட்டாலும் மதுரா என்னுடன் வந்தாள். என்னுடன் சேர்ந்து வீட்டில் காலடி எடுத்து வைத்த மதுராவை பார்த்ததும் சுசீலா மாமி எரிந்து விழுந்தாள்.

"பாவி மகளே! எந்த முகத்தை வைத்துக்கொண்டு இந்த வீட்டுக்குள் வருகிறாய்? நீ மனுஷியே இல்லை. பத்து பேருக்கு நடுவில் என்னை தலை நிமிர்ந்து நடக்கமுடியாமல் செய்து விட்டு, உன் சந்தோஷத்தை தேடிக்கொண்டு போய்விட்டாய். என் வயிற்றெரிச்சல் உன்னை சும்மா விடாது. இளமையின் வேகம் உன் கண்ணை மறைத்துவிட்டது. பத்து வருடங்கள் போன பிறகு தெரியும் உனக்கு. யாருமே இல்லாத அனாதையாக, எல்லோருக்கும் முன்னால் இளக்காரமாய் ...."

"ஆன்ட்! என்ன இது?" சுசீலா மாமியின் கையைப் பற்றிக் கொண்டு ஆவேசமாகச் சொன்னேன்.

"நீங்க பேசுவது என்னவென்று புரிந்துதான் பேசுகிறீங்களா? பெற்றதாயே மகளுக்கு இப்படி சாபம் கொடுக்கலாமா?"



"சாபம் கொடுப்பதா! அவளுடைய கையை காலை வெட்டிப் போட்டால்தான் எனக்கு நிம்மதி." சுசீலா மாமி என்னை தள்ளிவிட்டு மதுராவின் பக்கம் திரும்பினாள். மதுரா அங்கே இருக்கவில்லை. குன்றிப்போன மனதுடன், அம்மாவுக்கு எப்படி முகம் காட்டுவது என்று தயங்கிக் கொண்டே வந்தாள். தாயின் சொற்கள் வெந்தபுண்ணில் வேலை பாய்ச்சியது போல் இருந்திருக்க வேண்டும். அதான் போய்விட்டாள்.

"ஆன்ட்! நீங்க என்ன செய்தீங்க தெரியுமா? வீட்டுக்கு வந்த மதுராவை துரத்தி விட்டீங்க."

"அவள் செய்த காரியத்திற்கு ஆரத்தி எடுத்து வரவேற்கச் சொல்கிறாயா?"

"ஆன்ட்! உங்கள் கோபத்தைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டு சாதாரணமாக பேசியிருந்தால், எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? தான் செய்த தவறுக்கு மதுரா வருத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறாள். அவள் ஒரு விஷ வளையத்திற்குள் சிக்கிக் கொண்டு விட்டாள். தவறை உணரும் போது விஷயம் ரொம்ப தூரத்திற்கு போய்விட்டது. தவறை உணர்ந்துகொண்டு அதிலிருந்து வெளியேறுவதற்காக உங்களுடைய உதவியை நாடி மதுரா இங்கே வந்தாள். வந்தவளுடன் அன்பாக நாலு வார்த்தை பேசுவதை விட்டுவிட்டு வாய்க்கு வந்தபடி பேசி விட்டீர்கள். மகள் உங்களை விட்டு போய் விட்டாள் என்ற வருத்தத்தைவிட குடும்ப கௌரவத்திற்கு இழுக்கு வந்து விட்டதே என்ற கவலை உங்களுக்கு. அந்த ஆத்திரத்தை அவள் மீது காட்டியிருக்கீங்க. குழந்தைகள் விஷயத்தில பெற்றோர்கள் இப்படி நடந்து கொள்ளக் கூடாது ஆன்ட். குழந்தைகள் வழி தவறி போய்விடாமல் உலகத்தின் கஷ்ட நஷ்டங்களைப் பற்றி அவர்களுக்கு புரிய வைக்க வேண்டும். ஒருக்கால் இளமையின் வேகத்தினாலோ, அப்பாவித்தனத் தினாலோ அவர்கள் தவறு செய்துவிட்டால் மற்றவர்களுடன் சேர்ந்து நாமும் அவர்களை பழிக்கக் கூடாது. முடிந்தால் அந்தப்

புதைகுழியிலிருந்து வெளியேறுவதற்கு உதவிக்கரம் நீட்ட வேண்டும். நீங்க இப்படி செய்வீர்கள் என்று தெரிந்தால் மதுராவை இங்கே அழைத்து வந்திருக்கவே மாட்டேன்." ஆவேசமும், வேதனையும் கலந்த குரலில் சொன்னேன்.

சுசீலா மாமியின் ஆவேசம் அப்படியே அடங்கிவிட்டது. சோபாவில் சரிந்து அழத் தொடங்கினாள்.

மதுரா அன்று மாலையே அந்த ஊரை விட்டுப் போய் விட்டாள். இரண்டு நாட்கள் கழித்து அவளிடமிருந்து கடிதம் வந்தது.

பிரியா,

பெண்களுக்கென்று சில கட்டுபாடுகளை, கொள்கைகளை சமுதாயம் ஏற்படுத்தியிருக்கிறது. அவற்றை எந்தப் பெண்ணும் மீறக் கூடாது. மீறினால் அவளுக்கு மன்னிப்புக் கிடையாது. பெற்றோர்கள்கூட மன்னிக்கமாட்டார்கள்.

சரியான பாதையை தேர்ந்தெடுக்கும் பக்குவம், விவேகம் எத்தனை பெண்களுக்கு இருக்கும் என்று நினைக்கிறாய்? தவறு செய்தால் அதன் விளைவுகளை அவர்கள்தான் அனுபவிக்க வேண்டும்.

திரும்பி வந்து விடலாம் என்றும், அம்மாவிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டு அவள் மடியில் சரணடைந்து விடலாம் என்றும் நினைத்தேன். அம்மா என்னை மன்னிக்க மாட்டாள் என்று புரிந்துவிட்டது. இதில் அவளுடைய தவறு எதுவும் இல்லை. அந்த அளவுக்கு நான் அவளுக்கு வேதனையை தந்து விட்டேன்.

நான் போகிறேன் என் வாழ்க்கையில் இனி பின்னால் திரும்பிப் பார்க்கமாட்டேன்.

உன்
மதுரா

அந்தக் கடிதத்தை பார்த்ததும் நான் திகைத்து விட்டேன்.



மதுராவின் எதிர்காலம் எவ்வளவு சிறப்பாக அமைந்திருக்க வேண்டியது? எல்லா வசதிகள் இருந்தும் அவள் வாழ்க்கை இப்படி சீர்கெட்டுப் போவானேன்? இதைத் தடுக்கவே முடியாதா?

ஆயிரம் எண்ணங்கள் என் மனதில் கடல் அலைகளை போல் கொந்தளித்துக்கொண்டு இருந்தன.

# 13

மதுராவும், டானியும் ஹனிமூன் என்ற பெயரில் ஊர்களை சுற்றிக்கொண்டிருந்தார்கள். எங்கே இருந்தாலும் மதுரா எனக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருந்தாள். பணத்திற்காக நான் கஷ்டப்படக்கூடாது என்று என் பெயரில் வங்கியில் பணம் போட்டு வைத்திருந்தாள்.

கல்லூரிக்குப் போய் வருவது, படிப்பில் கவனம் செலுத்துவது... இவைதான் என் வாழ்க்கையில் முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டன.

சில சமயம் இரவு வேளையில் கட்டில்மீது படுத்துக் கொண்டதும் அம்மாவின் நினைவு வந்து விடும். தூக்கமே வராது. இந்த உலகில் சொந்தம் என்று சொல்லிக்கொள்ள எனக்கு யாருமே இல்லை. நான் உயிரோடு இருந்தால் சந்தோஷப்படுவதற்கோ, இறந்து போனால் அழுபவர்களோ கிடையாது. வேதனை ஏற்பட்டால் ஆறுதல் சொல்லவும் யாருமே இல்லை. என்னை நானே தேற்றிக்கொள்ள வேண்டியதுதான். மதுரா என்னுடைய சிநேகிதி என்பது உண்மைதான். என்னுடைய தேவைகளை பூர்த்தி செய்ய பண உதவி செய்வது மட்டும்தான் அவள் பங்கு. அதற்குமேல் என் எண்ணங்களைப் புரிந்துகொள்ளும் பொறுமையோ, திறமையோ அவளுக்குக் கிடையாது. என் தனிமை அவளுக்குப் புரியாது. நான் அவளுக்குத் துணையாக இருக்க முடியுமே தவிர என்

தனிமையை போக்கி ஆறுதல் சொல்லும் பக்குவம் அவளிடம் இல்லை. சின்னக் குழந்தையை போன்று அழுது அடம் பிடித்து தனக்கு வேண்டியதை சாதித்துக்கொள்ளும் சுபாவம்.

டானி மதுராவுக்கு உடல் ரீதியாக முழு திருப்தியை அளித்துக்கொண்டிருந்தான். அதான் மதுராவுக்கு டானியிடம் ஈர்ப்பு ஏற்பட்டது. நான் வேண்டாமென்று மறுத்தாலும் மதுரா தனக்கும் டானிக்கும் இடையில் நிகழ்ந்த உரையாடலைப் பற்றி விலாவாரியாக சொல்லிக்கொண்டிருப்பாள். அவன் அவளை புகழ்ந்து பேசியது, வாங்கிக் கொடுத்த பரிசுகள் எல்லாம் பட்டியல் போட்டு ஒப்பித்து விடுவாள்.

மதுராவின் போக்கை பார்க்கும்போது எனக்கு ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்தது. மதுரா ஒரு விதமான ட்ரான்ஸில், சுய உணர்வற்ற நிலையில் இருந்தாள். டானி அவள் அழகைப் புகழ்ந்து பேசுவது, "அவள் இல்லாமல் தன்னால் உயிரோடு இருக்கமுடியாது" போன்ற இனிப்பான பேச்சுக்கள்... இவையெல்லாம் சேர்ந்து அவளை ஒரு விதமான மயக்கத்தில் ஆழ்த்தி விட்டன. தான் மற்ற பெண்களை போல் இல்லை என்றும், தன்னை டானி காதலிப்பது மிக அபூர்வமான விஷயம் என்று மகிழ்ந்து போனாள். மதுரா தன்னிலை மறந்தவள் போல் அந்தப் பேச்சுகளை சொல்லும்போது சிலசமயம் எனக்கு பொறாமை கூட ஏற்பட்டது உண்டு. உண்மையிலேயே நம்மை அந்த அளவுக்கு விரும்புகிறவர்கள் கிடைப்பது உண்மையிலேயே அதிர்ஷ்டம்தான்.

ஏனோ தெரியவில்லை. என்னால் டானியின் பேச்சுக்களை நம்ப முடியவில்லை. அவன் பேச்சில் ஏதோ போலித்தன்மை யிருப்பது போல் தோன்றியது. மதுராவை அவன் உண்மையாக காதலிக்கவில்லை என்றும், அதன் பின்னணியில் ஏதோ சுயநலம் மறைந்திருக்கிறது என்ற நினைப்புதான் என் மனதில் மேலோங்கியிருந்தது. ஒருவரை நாம் மனப்பூர்வாக விரும்பினால், அதை திரும்பத்திரும்ப பேச்சுக்களில், செயல்களில் வெளிப்படுத்தத் தேவையில்லையே.



எனக்கு மதுராவின் மீது கோபம் வந்தது. அவளுக்கும், டானிக்கும் இடையில் நடந்த விஷயங்கள் அவர்களுக்குள் மட்டுமே இருக்க வேண்டும். மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடாத அபூர்வமான விஷயங்கள் அவை. மதுரா அவற்றை வெளிப்படையாக சொல்வதை அதி புத்திசாலித்தனமாக எடுத்துக் கொள்வதா இல்லை பெருமையை பறைச்சாற்றிக்கொள்ளும் நோக்கமா? அப்படியும் அந்தரங்க விஷயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வது சரியில்லை என்று மதுராவிடம் ஓரிரு முறை ஜாடையாக சொல்லிப் பார்த்தேன். அதற்குமேல் அவளைக் கடிந்து கொள்ள என்னால் முடியவில்லை. மதுரா என்னுடைய சிநேகிதி. வெளிப்படையாக பேசுவது அவளுடைய பலவீனம் என்றால் அதையும் நான் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

மதுரா இந்த ஊருக்கு வரும்போதெல்லாம் ஹோட்டலில் தங்குவாள். டானி மதுராவிடம் கடன் பெற்றுக்கொண்டு மதுராவுக்கு மோதிரம் பரிசாகத் தந்தானாம். மதுரா அந்த மோதிரத்தை பெருமையாக காண்பித்தாள்.

"பிரியா! ஒருக்கால் நான் இறந்து போனாலும் என் விரலிலிருந்து இந்த மோதிரத்தை எடுக்க வேண்டாம். இந்த இனிமையான நினைவுப் பரிசுடனே என்னை புதைத்து விடுங்கள்." விழிகளில் நீர் தளும்ப சொன்னாள்.

"என்ன பேச்சு இது மதுரா?" என்று கடிந்துகொண்டேன்.

மதுரா வந்தால் படிப்புக்கு முற்றுப்புள்ளிதான். டானி வேலை விஷயமாக வெளியில் போனால் தனக்குத் துணையாக இருக்கச் சொல்லி மதுரா என்னை வற்புறுத்துவாள்.

அன்றும் வழக்கம்போல் நான் மதுராவிடம் போனேன். எப்போதும் 'கலகலப்பாக இருப்பவள் இன்று ஏனோ சோம்பியிருந்தாள்.

"என்ன ஆச்சு?" பதட்டத்துடன் கேட்டேன்.

டானியும் மதுராவும் சண்டை போட்டுக்கொண்டு விட்டார்களா? அப்படி ஏதாவது நடந்தால் சந்தோஷப்படுவேனே தவிர வருத்தப்படமாட்டேன். மதுராவுக்கு எப்படியாவது எடுத்துச் சொல்லி அம்மாவிடம் அவளைச் சேர்பித்துவிடுவேன்.

"என்ன ஆச்சு? சொல்லு மதுரா"

மதுரா தலையைத் திருப்பி என் பக்கம் பார்த்தாள். அந்தப் பார்வை எப்போதும் போல் ஒளி வீசவில்லை. எதையோ இழந்தாற்போல் சோகமாக இருந்தது.

"பிரியா! டாக்டரிடம் போயிருந்தேன்."

கேள்விக்குறியுடன் பார்த்தேன்.

"எனக்கு மூன்றாம் மாதம்."

"உண்மையாக்வா! கங்கிராட்சுலேஷன்ஸ்." மகிழ்ச்சியுடன் அவள் கையைப் பற்றிக்கொள்ளப் போனேன்.

மதுரா என் கையை தள்ளிவிட்டு சரேலென்று எழுந்து கொண்டாள்.

"பிரியா! நான் அபார்ஷன் செய்து கொள்ளப் போகிறேன்."

"என்ன!" அதிர்ச்சி அடைந்துவிட்டவள் போல் பார்த்தேன். "மூளை இருந்துதான் பேசுகிறாயா?"

"நீ இப்படிச் சொல்வாய் என்று எனக்குத் தெரியும், அதான் உன்னிடம் சொல்லவே கூடாது என்று நினைத்தேன். ஆனால் ஆஸ்பத்திரியில் நீதானே எனக்குத் துணையாக இருக்கவேண்டும். அதான் சொன்னேன்."

"சுய உணர்வோடுதான் பேசுகிறாயா மதுரா?"

"ஏன்? அப்படி சொல்லக்கூடாத விஷயத்தை நான் என்ன சொல்லி விட்டேன்?"

"பின்னே? நீ டானியுடன் திருட்டுத்தனமாக ஊர் சுற்றவில்லையே? சட்டப்படி நீயும் அவனும் கணவன் மனைவி.



அப்படியிருக்கும் போது அபார்ஷன் செய்துகொள்ள வேண்டிய அவசியம் என்ன?"

மதுராவின் பார்வை தரையில் பதிந்தது. "நீ சொல்வது உண்மைதான். இருந்தாலும் நாங்க வாழ்க்கையை இன்னும் அனுபவிக்கவே இல்லை. அதற்குள் குழந்தை என்றால் கஷ்டம் தானே. டானிக்கும் விருப்பம் இல்லை. நானும் விரும்பவில்லை. எந்தக் கவலையும் இல்லாமல் சுதந்திரமாக வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்று நினைக்கிறோம். இப்பொ பாரு, இதன் காரணமாக எங்களுடைய பாம்பே பயணம் தடைப்பட்டு விட்டது."

சலித்துக்கொள்வது போல் சொன்னாள்.

நான் மதுராவை கூர்ந்து பார்த்தேன். இப்பொ மதுரா சொன்னது அவள் மனதிலிருந்து வந்த கருத்துக்கள்தானா? இதில் டானியின் வற்புறுத்தல் எந்த அளவுக்கு இருக்கக்கூடும் என்று யோசித்துக்கொண்டிருந்தேன்.

மதுரா திடீரென்று பின்பக்கமாக வந்து என் கழுத்தைச் சுற்றி கைகளை போட்டு அணைத்துக்கொண்டாள்.

"பிரியா! என்னைத் தவறாக நினைக்காதே. எனக்கு உடனே குழந்தையை பெற்றுக்கொள்வதில் விருப்பம் இல்லை."

"அப்பொ கவனமாக இருந்திருக்கலாமே?"

மதுராவின் இமைகள் படபடத்தன. "உண்மைதான். தவறு நேர்ந்து விட்டது. இனிமேல் கவனமாக இருந்துகொள்கிறேன்." என்றாள்.

மதுரா அபார்ஷன் செய்துகொள்வதாக முடிவு செய்து விட்டாள். இது டானியின் உத்தரவு. அதற்கு மறுப்பு சொல்லும் துணிச்சல் அவளுக்கு இல்லை.

மறுநாள் மதுராவுக்கு மருத்துவமனையில் அபார்ஷன் நடந்தது. கட்டில் மீது நினைவற்ற நிலையில் சோர்வாக படுத்துக் கொண்டிருந்த மதுராவைப் பார்க்கும் எனக்கு இரக்கம்தான் ஏற்பட்டது.

என் மனம் பலவிதமாக யோசித்துக்கொண்டிருந்தது. முன்னைப்போல் இந்தக்கால பெண்களுக்கு கல்வி அறிவு இல்லாமல் இல்லை. இந்தக் காலத்தில் பெண்கள் நன்றாக படிக்கிறார்கள்.

வாழ்க்கையை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும் என்று திட்டம் போடுகிறார்கள். ஆனால் மதுரா படித்தப் பெண்ணாக இருந்தும் வாழ்க்கையை சரியாக திட்டமிட வில்லை. மோகம் அவள் கண்ணை மறைத்துவிட்டது. ஜாலியாக இருப்பதுதான் வாழ்க்கை என்று நினைத்துக் கொண்டு இருக்கிறாள்.

வாழ்க்கையில் மகிழ்ச்சி அவ்வளவு சுலபமாக கிடைத்துவிடாது. அதைப் பெறுவதற்காக நாம் கஷ்டப்பட்டு உழைத்தாக வேண்டும். முன்பின் யோசிக்காமல் துணையை தேர்ந்து எடுத்தால், வாழ்க்கையையே தொலைத்துவிடும் ஆபத்து இருக்கிறது. மதுராவுக்கு இப்பொ எது சொன்னாலும் புரியப் போவதில்லை. டானி தன்னை உயிருக்கும் மேலாக காதலிக்கிறான் என்று பெருமைப்பட்டுக்கொள்கிறாளே. அபார்ஷன் ஆகி ஆஸ்பத்திரியில் இருப்பவளைப் பார்ப்பதற்கு ஒருமுறை கூட வரவில்லையே? ஒன்பது மணிக்கு வருவதாக சொன்ன டானி இதுவரையில் வரவில்லை.

## 14

மதுராவின் உடல் நலம் தேறுவதற்கு ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. டானி மதுராவுக்காக வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். புதிதாக பிசிநெஸ் தொடங்கப் போகிறானாம். அதற்காக பெங்களூர், சென்னை, கல்கத்தா என்று ஊர் ஊராக சுற்றிக்கொண்டிருந்தான். மதுராவுக்கு துணையாக இருப்பதற்காக நான் அடிக்கடி அந்த வீட்டுக்குப் போக வேண்டியிருந்தது.

மதுரா சிலசமயம் என் படிப்பு கெட்டுப் போகிறதே என்று வருத்தப்பட்டுக்கொள்வாள்.



"பிரியா! என் காரணமாக உன் படிப்பு ..." என்று மேலும் ஏதோ சொல்லப் போனவளை தடுத்துவிட்டேன்.

"போதும் நிறுத்து. உன்னை விட எனக்கு படிப்பு முக்கியம் இல்லை" என்பேன்.

மனம் லயித்து இரண்டு மணி நேரம் படித்தால் போதும் எனக்கு. கடவுள் ஒவ்வொருவருக்கும் ஒரு விதமான ஆற்றலை தருவாராயிருக்கும். எனக்கு நினைவாற்றலை தந்திருக்கிறார்.

தெருவில் நடக்கும்போது எந்தப் பெண்ணாவது குழந்தையை தூக்கிக்கொண்டு போகும் காட்சி கண்ணில் பட்டால் எனக்கு மதுராவின் நினைவுதான் வரும். மதுராவுக்கு மகனோ, மகளோ பிறந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? எனக்கு பிறக்கப் போகும் குழந்தைகளைப் பற்றி நான் நினைத்துக் கூடப் பார்த்தது இல்லை. ஏனோ எனக்கு அந்த எண்ணமே ஏற்பட வில்லை. முக்கியமாக திருமணத்தைப் பற்றி எந்த விதமான எதிர்பார்ப்புகளையும் வைத்துக்கொள்வதை நான் விரும்பவில்லை. கடவுள் என் தலையில் என்ன எழுதியிருக்கிறாரோ அதை அப்படியே ஏற்றுக்கொள்ள முடிவு செய்தேன். திருமணம் ஆகவில்லையென்றாலும் கவலைப்பட மாட்டேன். அதற்காக வருத்தப்படவும் மாட்டேன். ஏன் என்றால், இந்த உலகில் தாய் தந்தை, பணம், கௌரவம், படிப்பு, அழகு எல்லாம் இருக்கும் போதே பெண்களுக்கு திருமணம் நடப்பது கஷ்டமாக இருக்கிறது. அப்படியிருக்கும்போது இவற்றில் எதுவும் இல்லாத எனக்கு திருமணம் எப்படி நடக்கும்? அதனால்தான் மதுராவின் வாழ்க்கை நல்லவிதமாக ஸ்திரப்பட்டுவிட்டால் அவளுடைய நிழலில் எனக்கு சிறிய இடம் தேடிக்கொள்ள வேண்டும் என்று விரும்பினேன். கணவன், குழந்தைகளுடன் அவள் நிறைவாக வாழ்ந்தால் உயிர் சிநேகிதியாய் அவள் வாழ்க்கையுடன் என்னையும் பிணைத்துக் கொள்ள வேண்டும் என்று தவித்தேன்.

மதுரா என்னிடம் காட்டும் இந்த அன்பு என் வாழ்க்கைக்கு ஒரு பற்றுகோலாக இருக்கலாம் இல்லையா. அம்மா போன

பிறகு என்னை அறியாமலேயே மதுராவிடம் நெருங்கி விட்டேன். தாயை விட்டுப் பிரிந்த பிறகு மதுராவும் ஒரு விதமான தனிமையை அனுபவித்துக்கொண்டு இருந்தாள்.

டானி வீட்டில் இருக்கும் வரையில் சிரிப்பும், சிருங்காரமுமாக பொழுது போவதே தெரியாதாம். அவன் வெளியில் போன பிறகு பொழுதை தள்ள வேண்டியிருக்கிறதாம். என்ன செய்வது என்று யோசித்தாளாம். வேலைக்குப் போனால் என்ன என்று டானியிடம் கேட்டாளாம். "என் மனைவி வேலைக்குப் போவதாவது? வீட்டில் இருந்தபடியே வருமானத்தைத் தேடிக் கொள். அது போதும்." என்று சொல்லி விட்டானாம்.

"அவனுடைய பிசிநெஸ் சூடு பிடித்து விட்டால் போதும். பங்களா, கார், வேலையாட்கள் என்று இந்திரலோகத்திற்கு சமமான வாழ்க்கையை அனுபவிக்க முடியும். இப்பொ நாங்கள் படும் இந்த கஷ்டங்கள் ரொம்ப நாட்களுக்கு இருக்கப் போவதில்லை." மதுரா கனவுலகில் மிதப்பவள் போல் சொல்லிக் கொண்டே போனாள்.

அன்று கல்லூரி விடுமுறை. மதுராவை பார்க்கப் போனேன். டானியின் ஸ்கூட்டர் வெளியில் தென்படவில்லை. நிம்மதியாக மூச்சை விட்டுக்கொண்டேன். அவன் இல்லை என்றால் மதுராவிடம் சுதந்திரமாகப் பேசமுடியும். டானி இருந்தால் ஏனோ முட்கள் மேல் அமர்ந்திருப்பது போல் தோன்றும். அந்த இடத்தை விட்டு உடனே கிளம்பி விட வேண்டும் என்று உடலும், உள்ளமும் பரபரக்கும்.

நான் உள்ளே போன போது மதுரா ஹாலில் இருக்கவில்லை.

"மதுரா!" அழைத்துக்கொண்டே உள்ளே சென்றேன்.

மதுரா பெட்ரூமில் கட்டில் மீது குப்புறப் படுத்துக்கொண்டு அழுதுகொண்டிருந்தாள்.



"மதுரா!" அருகில் சென்று முதுகின் மீது கையை வைத்தேன்.

மதுராவின் அழுகை மேலும் அதிகரித்தது.

"என்ன நடந்தது?" வலுக்கட்டாயமாக அவளை என் பக்கம் திருப்பிக்கொண்டே கேட்டேன்.

மதுரா என் பக்கம் திரும்பிப் பார்த்தாள். அவள் கண்கள் சிவந்து, கலங்கியிருந்தன.

வெகு நேரமாக அழுதிருப்பது போல் உப்பியிருந்தன. மதுராவை அந்த தோற்றத்தில் பார்க்கும்போது என் இதயம் இளகிவிட்டது.

"என்ன நடந்தது மதுரா?"

மதுரா என் மடியில் முகம் புதைத்துக்கொண்டு ஹோவென்று கதறினாள். ஆறுதல் தருவது போல் முதுகை வருடிகொடுத்தேன். சற்று நேரம் தைரியம் சொல்லி மறுபடியும் கேட்டபிறகு மதுரா சொன்னாள்.

முதல்நாள் இரவு வீட்டில் பார்டி நடந்ததாம். டானியின் நண்பன் ஒருவன் வந்திருந்தானாம். இரவு இங்கேயே தங்கி விட்டானாம். டானியும், அவனுமாக சேர்ந்து நன்றாக குடித்திருக்கிறார்கள். டானி ஹால் சோபாவிலேயே உறங்கி விட்டான். அந்த நண்பன் படுக்கை அறைக்குள் நுழைந்து மதுராவிடம் தவறாக நடந்துகொள்ள முயன்றிருக்கிறான். மதுரா கத்தி, கூச்சல் போட்டும் அவன் போகவில்லை. டானியின் சம்மதத்துடன்தான் வந்தேன் என்றானாம். அவள் நம்பவில்லை. அவன் தன்னுடைய மிருகபலத்துடன் மதுராவை அடக்கி விட்டானாம்.

காலையில் அவன் போன பிறகு மதுரா டானியிடம் நடந்ததை சொல்லி அழுதிருக்கிறாள். டானி மதுராவின் புலம்பலை, வேதனையை கொஞ்சம்கூட லட்சியப்படுத்த வில்லை. நிதானமாக ஷேவ் செய்துகொண்டே "இதில்

இவ்வளவு வருத்தப்பட வேண்டியது என்ன இருக்கு? வெளியில் யாருக்கும் தெரியப்போவதில்லை. நீயும் மறந்துவிடு அனாவசியமாக கத்தி ரகளை செய்யாதே" என்றானாம்.

இவ்வளவு கொடுமையான நிகழ்ச்சி நடந்திருக்கு என்று சொன்னபிறகும் டானி அந்த நண்பன் மீது கோபம் கொள்ளவில்லை. அவனை ஒரு கை பார்க்கிறேன் என்று ஆவேசமாக உடனே கிளம்பவில்லை. அது மட்டுமே இல்லை. ஷேவ் செய்து முடித்தபிறகு அந்த நண்பனுக்கு போன் செய்து "குட் மார்னிங் ஷியாம்! எப்படி இருக்கிறாய்?" என்று குசலம் விசாரித்திருக்கிறான்.

"தாங்க்யூ... தாங்க்யூ வெரிமச்" என்று போனை வைத்து விட்டானாம்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மதுராவுக்குக் கோபத்தால் உடல் நடுங்கிக்கொண்டு இருந்தது. டானி மதுராவிடம் வந்து "கங்கிராட்சுலேஷன்ஸ் டியர்! ஷியாம் வியாபாரத்தில் பார்ட்னர் ஆக சேர சம்மதித்து விட்டான். அக்ரிமெண்ட் பேப்பர்களில் கையெழுத்து போடுவதற்காக உடனே வரச் சொல்லி விட்டான்" என்று சொல்லி விட்டு அவள் கன்னத்தில் முத்தம் பதித்தான். "உன்னால்தான் இந்த காரியம் முடிந்தது. ஷியாம் கூட்டு சேருவானா இல்லையா என்று தவித்துக்கொண்டே இருந்தேன். என் கனவுகளை நிறைவேற்றிக்கொள்ள முதல்படி ஏறிவிட்டேன்." என்று உற்சாகம் பொங்கும் குரலில் சொன்னான்.

மதுரா அவனை அருவருப்புடன் பார்த்தாள்.

"நீ மனிதன்தானா?" கோபமாக கேட்டாள்.

"மனிதனேதான். இந்த உலகில் சுகமாக, சந்தோஷமாக வாழ நினைப்பவன்."

"என்னிடம் தகாதமுறையில் நடந்துகொண்ட அந்தக் கயவனுடன்..." மதுரா மேலும் ஏதோ சொல்லப் போனபோது டானி அவள் வாயை பொத்திவிட்டான்.



"தகாத முறையில்... கயவன் என்று நாடக பாணியில் வசனம் பேசாதே. இந்த நிகழ்ச்சிக்கு நீ முக்கியத்துவம் தரவேண்டிய அவசியமே இல்லை என்று முன்பே சொல்லி விட்டேன். அதிலும் எனக்கு இல்லாத வேதனை உனக்கெதுக்கு?"

"உன் மனைவியை கெடுத்தவனுடன் கூட்டு சேர நினைக்கிறாயே. இது அநியாயம் இல்லையா?"

"அநியாயமா?" அவன் உரத்தகுரலில் சிரித்துவிட்டு மதுராவை அருகில் இழுத்துக்கொண்டான். "உன் மிடில் கிளாஸ் நியாயங்களை என்னிடம் சொல்லாதே. நாம் அதை விட ஒருபடி மேலே இருக்கிறோம். இன்னும் சொல்லப் போனால் ஒரு தனிப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள் நாம். இங்கே இது போன்ற நிகழ்ச்சிகள் ரொம்ப சகஜம். இன்னும் சில நாட்கள் போனால் உனக்கே புரியும், நாளைக்கு நானே ஷியாமின் மனைவியுடனோ தங்கையுடனோ இதுபோல் நடந்து கொண்டால் நீ கத்தி கூச்சல் போடக்கூடாது. புரிந்ததா?"

"ச்சீ... ச்சீ..." மதுரா அவனைத் தள்ளிவிட்டாள்.

டானிக்குக் கோபம் வந்து விட்டது. "இதில் உனக்கு சம்மதம் என்றால்தான் நாமிருவரும் ஒன்றாக இருக்க முடியும். இல்லையா உன் வழி உனக்கு, என் வழி எனக்கு. நான் போகிறேன்" என்று கிளம்பிவிட்டான். போகும் முன் "நீ மனதை மாற்றிக்கொண்டு நான் சொன்னதற்கு சம்மதித்தால் எனக்கு போன் செய். நான் திரும்பி வருகிறேன். இல்லையா இப்போதே குட் பை" என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.

"பிரியா! நான் என்ன செய்யட்டும்?" மதுரா அழுதுகொண்டே கேட்டாள்.

நான் கற்சிலையாகி விட்டேன்.

மதுரா என் தோள்களைப் பற்றிக்கொண்டு உலுக்கினாள். "எந்தப் பெண்ணாவது இதுபோன்ற நிபந்தனைக்கு ஒப்புக்கொள்வாளா? நீயே சொல்லு."

மாட்டாள் என்பது போல் தலையை குறுக்காக அசைத்தேன்.

"தற்கொலை செய்து கொள்வதைத்தவிர எனக்கு வேறு வழியில்லை. சாவை நினைத்து நான் பயப்படவில்லை. ஆனால் டானி என்னை இப்படி விட்டுவிட்டு போய்விட்டான் என்று நினைக்கும் போது..." மேற்கொண்டு பேசமுடியாமல் அழுகை பொங்கிக்கொண்டு வந்தது மதுராவுக்கு. "தான் சொன்னதற்கு சம்மதிக்கவில்லை என்ற கோபம் டானிக்கு. வேறு எந்த விஷயமாக இருந்தாலும் ஒப்புக்கொண்டு இருப்பேன் ஆனால் இந்த விஷயத்தில் எப்படி ஒத்துப் போவது? நீயே சொல்லு."

என்னால் என்ன செய்யமுடியும்? கணவன் மனைவிக்கு இடையில் வேறு ஏதாவது பிரச்னை வந்தால் சமாதானமாக போவது நல்லது என்று சொல்லலாம். ஆனால் ஒழுக்கத்திற்கும் கேடு விளைவிக்கும் இந்த விஷயத்தில் ஒத்துப் போவதாவது!

மதுரா எழுந்து உட்கார்ந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள். "பிரியா! மனம் கலங்கி இருக்கிற இந்த நிலையில் என்னால் சரியாக யோசிக்க முடியவில்லை. ஒன்று மட்டும் உண்மை. டானி இல்லாமல் என்னால் வாழமுடியாது."

"அவனும் அந்த அளவுக்கு தீவிரமாக உன்னை விரும்பியிருந்தால் இது போன்ற கிராதகமான செயலுக்கு ஆதரவு தருவானா?" இரட்டிப்பதுபோல் கேட்டேன். பதில் சொல்ல முடியாமல் மதுரா தலையைக் குனிந்துகொண்டாள்.

டானி ரொம்ப புத்திசாலி. மதுராவிடம் தனக்கு எல்லையில்லாத அன்பு இருப்பது போல் அவளை நம்ப வைத்துவிட்டான். ஆனால், அவளுடைய உடலை மூலதனமாக பயன்படுத்தி வியாபாரத்தைத் தொடங்க திட்டம் போட்டிருக்கிறான். அப்பாவியான மதுராவுக்கு இதெல்லாம் புரியவில்லை.



டானி சொன்னதில் மதுராவுக்கு உடன்பாடு இல்லை. ஆனால் அவனை விட்டு பிரிந்திருக்க முடியாத பலவீனம் அவளுக்கு.

"டானியை விட்டு விலகியிருப்பதுதான் நல்லது. அவனுடன் ஏற்பட்ட இந்த உறவை கெட்ட கனவாக நினைத்து மறந்து விடு" என்றேன்.

"அது என்னால் முடியாது. ஒரு மணிநேரம் அவனைப் பார்க்கவில்லை என்றால் தவித்துப்போய் விடுவேன். அப்படியிருக்கும்போது அவனை விட்டு பிரிவதாவது?" இயலாமையுடன் பார்த்தாள்.

"மதுரா! இதற்குப் பெயர் காதல் இல்லை. இது ஒரு விதமான நோய். யார் மீதும் அளவு கடந்த அன்பை வைக்கக்கூடாது. அப்படி வைத்தால் எதிராளியை விட நமக்கு நாமே தீங்கை விளைவித்துக்கொள்வது போல் ஆகிவிடும்."

"பிரியா! நீ என்ன வேண்டுமானாலும் சொல்லு. டானியை விட்டுவிட்டு என்னால் இருக்க முடியாது. என் வழிக்கு அவனைக் கொண்டுவருவதற்கு ஏதாவது ஐடியா சொல்லு."

"நீ அவனுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்றால், அவன் வழிக்கு நீதான் போக வேண்டும்."

"நல்ல விதமாக பேசி அவனை மாற்ற முயற்சி செய்தால்?"

"புலி தன்னுடைய இயற்கையான குணத்தை அவ்வளவு சீக்கிரமாக மாற்றிக்கொள்ளாது. நான்கு நாட்கள் போன் செய்யாமல் இருந்துபாரு. உன் மீது அவனுக்கு உண்மையிலேயே அன்பு இருந்தால் தானாகவே உன்னைத் தேடிக்கொண்டு வருவான்."

"சரி. நீ சொன்னபடியே செய்கிறேன்." உறுதிமொழி தருவது போல் சொன்னாள் மதுரா.

நான் ஹாஸ்டலுக்கு வந்துவிட்டேன்.

கல்லூரியின் சார்பில் சென்னைக்கு போக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சென்னை பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பிவரும் போது நான்கு நாட்கள் முடிந்துவிட்டன.

சென்னையில் இருக்கும் போதும், மற்ற மாணவிகளுடன் சேர்ந்து சுற்றும் போதும் மதுராவின் நினைவுதான்! மதுரா எப்படி இருக்கிறாளோ என்னவோ.

டானி வந்திருப்பானா?

டானி வந்துவிட்டால் பரவாயில்லை. வரவில்லை என்றால்? மதுராவால் இந்த ஏமாற்றத்தை தாங்கிக்கொள்ள முடியுமா? இந்தச் சமயத்தில் அவளை தனியாக விட்டுவிட்டு வந்தது சரி இல்லையோ. டானி வரவில்லை என்று மதுரா ஏதாவது விபரீதமாக முடிவு செய்து விட்டால்? யோசிக்க யோசிக்க எனக்கு இருப்பு கொள்ளவில்லை.

ஊருக்குள் வந்ததும் ஹாஸ்டலில் பெட்டி படுக்கையை வைத்துவிட்டு மதுராவின் வீட்டுக்கு ஓடினேன். அவளைப் பார்க்கும் போது என் வியப்பிற்கு அளவே இல்லை. ரொம்ப நேர்த்தியாக அலங்காரம் செய்துகொண்டிருந்தாள். ஜரிகை வேலைப்பாடு செய்த ஷிபான் புடவை, கையில்லாத ரவிக்கை அணிந்திருந்தாள். புதுமாதிரியான சிகை அலங்காரம். மகிழ்ச்சியாக இருப்பது போல் தென்பட்டாள். என்னைப் பார்த்ததும் அவள் முகம் களை இழந்தது. ஆனால் உடனே சமாளித்துக்கொண்டாள். புன் முறுவலுடன் வரவேற்றாள்.

"வா பிரியா! ஊரிலிருந்து எப்பொழுது வந்தாய்?"

"சற்று முன்தான்" நாற்காலியில் அமர்ந்துகொண்டே சொன்னேன். "உன்னை இப்படி சந்தோஷமான நிலையில் பார்க்கும்போது எவ்வளவு நிம்மதியாக இருக்கு தெரியுமா? சென்னைக்கு போனேனே தவிர என் மனம் ஒரு நிலையில் இருக்கவில்லை." என்றேன்.



"அவ்வளவு கவலைப்படுவானேன்?"

"கவலைப்படுவதா! நான் ஊருக்கு போகும் முன் நீ இருந்த நிலையை மறந்து விட்டாயா? சொல்லு. டானி வந்து விட்டான் இல்லையா?" என்றேன்.

"உனக்கு எப்படி தெரியும்?" வியப்புடன் கேட்டாள்.

"உன் முகத்தைப் பார்த்தாலே புரிகிறதே."

சட்டென்று தலையைக் குனிந்து கொண்டாள். "டானி வந்தது உண்மைதான். ஆனால்..." பாதியிலேயே நிறுத்திவிட்டாள்.

"ஆனால்?" கேள்விக் குறியுடன் நோக்கினேன்.

"அவனாக வரவில்லை நான்தான் போன் செய்தேன்."

"நீ... நீ போன் செய்தாயா?"

"ஆமாம். நீ சொன்னது போல் போன் செய்யாமல் நான்கு நாட்கள் காத்திருக்கவேண்டும் என்றுதான் நினைத்தேன். ஆனால் இருக்க முடியவில்லை. நேரம் ஆக ஆக என் பதட்டம் அதிகரித்தது. அவன் என்னை விட்டுவிட்டு போய்விட்டால் என் கதி? அம்மாவிடமும் போகமுடியாது. கஷ்டமோ நஷ்டமோ என் வாழ்க்கை அவனுடன்தான். அவன் சொன்னது போல் அவனுக்கு இல்லாத வேதனை எனக்கு ஏன்? அதான் உடனே போன் செய்து மன்னிப்பு கேட்டுக்கொண்டேன். அவன் வந்து விட்டான். அவன் சொன்னது போல் நடந்துகொண்டால் எங்களுடைய எதிர்காலம் நன்றாக இருக்குமாம். பிரியா! எது எப்படி போனாலும் சரி. அவனுக்கு விருப்பமான விதமாக நடந்துகொண்டு என் அன்பை நிரூபித்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்துவிட்டேன்."

மதுரா என்னுடன் பேசிக்கொண்டிருந்தாலும் பார்வை மட்டும் அடிக்கடி வாசல் பக்கம் பதிந்து திரும்பிகொண்டிருந்தது. யாருக்காகவோ வழி மீது விழி வைத்து காத்திருப்பதுபோல் பரபரப்புடன் தென்பட்டாள்.

"என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

"பத்து நிமிடங்களில் டானி வரப்போகிறான். இருவரும் சேர்ந்து பார்டிக்கு போகப் போகிறோம்" என்றாள்.

நாற்காலியிலிருந்து எழுந்துகொண்டேன். நான் அறிந்த மதுரா இவள் இல்லை. டானி என்ற பிசாசு மதுராவின் உடலுக்குள் புகுந்து அவளை ஆட்டுவித்துக்கொண்டிருந்தது. இவளுக்கு சுயமாக முடிவு செய்யும் திறமை இல்லை. டானி சொன்னது தான் இவளுக்கு வேதவாக்கு.

"போய் வருகிறேன்." என்றேன். தலை அசைத்து விடை கொடுத்தேன்.

நான் வெளியில் வரும்போது டானி எதிரே வந்தான். வெறுப்பு கலந்த பார்வையுடன் என்னை ஏற இறங்க பார்த்து விட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

ஹாஸ்டலுக்கு திரும்பி வரும்போது மதுராவின் மீதுதான் கோபம் வந்தது. இவ்வளவு முட்டாள்தனமாக யாராவது யோசிப்பார்களா?

இவ்வளவு பலவீனமான மனம் இருந்தால் எப்படி? அதான் டானி அவளை தன் விருப்பம் போல் ஆட்டுவிக்கிறான். டானிக்காக மதுரா தன் மனதையும் கொன்று புதைக்கத் தயாராக இருக்கிறாள். மதுரா நாதியற்றவள் இல்லை. கல்வி அறிவு இல்லாதவள் இல்லை. ஏன் இப்படி மோகவலையில் சிக்கிக் கொண்டு விட்டாளோ புரியவில்லை. டானிக்காக மதுரா தன் சொந்த மனிதர்களை எல்லாம் துறந்து விட்டாள். டானி மட்டும் தன் வீட்டாருடன் போக்குவரத்துக் கொண்டிருந்தான்.

எப்படியாவது மதுராவை இந்த புதைகுழியிலிருந்து வெளியில் கொண்டு வரவேண்டும். அவள் வாழும் வாழ்க்கை சரியானது இல்லை என்று எடுத்துச் சொல்ல வேண்டும். ஆனால் என் பேச்சு மதுராவின் காதுகளுக்கு எட்டுமா?



நாளைக்கு எப்படியாவது மதுராவை அழைத்து வந்து என்னுடன் இரண்டு நாட்கள் தங்கவைத்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தேன்.

# 15

மறுநாள் கல்லூரியிலிருந்து நான் திரும்பி வந்த போது என் பெயருக்குக் கடிதம் ஒன்று வந்திருந்தது. மதுராதான் எழுதியிருந்தாள்.

பிரியா,

நான் சொல்லப் போகும் விஷயமே உனக்குப் பிடிக்காது என்று எனக்குத் தெரியும். வேறு வழி இல்லாதநிலை. என்னை மன்னித்துவிடு.

இன்று காலையில் உன் விஷயமாக எங்கள் இருவருக்கும் நடுவில் சண்டை வந்தது. டானிக்கு ஏனோ உன்னைப் பிடிக்கவில்லை. உன்னிடம் பேசமாட்டேன் என்றும், சந்திக்க மாட்டேன் என்றும் டானிக்கு வாக்குக்கொடுத்து விட்டேன்.

என்னுடைய நிலைமையை புரிந்து கொள். டானிக்கு விருப்பம் இல்லாத எந்த காரியத்தையும் என்னால் செய்ய முடியாது. பிரியா! இந்த கடிதம் எழுத வேண்டிய சூழ்நிலை உருவானதற்கு வேதனைப்படுகிறேன். டானியுடன் என் வாழ்க்கை முடிச்சு போடப் பட்டுவிட்டது. அவன் சொல்படி நடந்து கொள்வதுதான் என் கடமை.

உன் பெயரில் வங்கிக் கணக்கில் மேலும் பணம் போட்டிருக்கிறேன். எந்த விதமான தடங்கலும் இல்லாமல் உன் படிப்பு முடிந்துவிடும் என்று நம்புகிறேன். பட்டப்படிப்பு முடிந்தபிறகு உனக்கு பிடித்தவனை திருமணம் செய்துகொண்டு சந்தோஷமாக இரு.

வாழ்க்கையில் நாமிருவரும் மறுபடியும் சந்தித்துக் கொள்ளும் வாய்ப்புக் கிடைக்குமோ இல்லையோ. பிரியா! நான் ரொம்பவும் நேசிக்கிறேன்.

விடைபெறுகிறேன்.

உன்
மதுரா

கடிதத்தை படிக்க படிக்க என் கோபம் மேலும் கூடியது.

மதுரா என்னிடமிருந்து விலகிப் போவதற்கு முடிவு செய்து விட்டாள். டானிக்கு என்னை பிடிக்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அவள் இந்த முடிவுக்கு வந்து விட்டாள். ஆவேசமும், கோபமும் ஒன்றாகச் சேர வேகமாக படி இறங்கி ஹாலில் இருந்த போனை நோக்கி ஓடினேன். மதுராவின் நம்பரை டயல் செய்தேன். மறுமுனையில் போன் மணி ஒலித்த சத்தம் கேட்டது. ஒரு நிமிடம் கழித்து "ஹலோ" என்ற குரல் கேட்டது. டானியின் குரல்தான். குடி போதையில் இருந்தது போல் ஒலித்தது. "ஹலோ! டானி ஹியர்." அந்த குரலில்தான் எவ்வளவு அதிகாரம்! இதுவரையில் அவன் ஒரு ரூபாய்கூட சம்பாதிக்கவில்லை. அவன் சாப்பிடுவதும், செலவு செய்வது முழுவதும் மதுராவின் பணம்தான். அப்படி இருந்தும் அவளுடைய வாழ்க்கைக்கு தான்தான் யஜமானி என்பது போன்ற இறுமாப்பு.

"நான்தான் பிரியா பேசுகிறேன். மதுராவை அழைக்கமுடியுமா?"

அவன் ஒருநிமிடம் தாமதித்துவிட்டு போனை வைத்துவிட்டான்.

மறுபடியும் போன் செய்தேன்.

"மதுராவிடம் பேச வேண்டும். இந்த முறை போனை வைத்து விட்டால் நேராக வீட்டுக்கு வரவேண்டியிருக்கும்." என்றேன்.



"வந்தால் காலை ஒடித்து விடுவேன். எனக்கு விருப்பம் இல்லாதவர்கள் மதுராவின் சுற்றுவட்டாரத்தில்கூட இருக்கக் கூடாது. புரிந்ததா?" மிரட்டுவது போல் சொல்லி விட்டு போனை வைத்துவிட்டான்.

அந்த மிரட்டலுக்கு அதிர்ச்சி அடைந்தேன். போனை வைத்துவிட்டு பின்னால் திரும்பினேன். ஒவ்வொரு படியாக ஏறி மாடிக்கு வரும்போது இதயம் பாரமாக இருந்தது.

மதுரா ஏன் இப்படிச் செய்தாள்?

எந்தப் பெண்ணும் திருமணம் ஆனதும் தன்னுடைய வாழ்க்கையை கணவனின் கையில் அப்படியே முழுவதுமாக ஒப்படைத்துவிட வேண்டுமா? அப்படிச் செய்தால் தவிர டானிக்கு லாபம் கிடைக்காதோ என்னவோ.

இரவு முழுவதும் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தேன்.

எப்படியாவது மதுராவைக் காப்பாற்ற வேண்டும். தேவைப்பட்டால் போலீஸாரின் உதவியை நாட வேண்டும். என் வகுப்புத் தோழி நர்மதாவின் தந்தை காவல் துறையில் அதிகாரியாக இருக்கிறார். மதுரா செய்து கொண்டது முறையான திருமணம் தானா? அந்தத் திருமணம் சட்ட ரீதியாக செல்லுமா என்று அவரிடம் கேட்க வேண்டும்.

மறுநாளே நர்மதாவின் தந்தையை சந்தித்தேன். திருமணம் நடந்த இடம், சாட்சிகள் இருந்தார்களா போன்ற விவரங்கள் தெரிந்தால் அது சரியான திருமணமாக செல்லுமா இல்லையா என்று தெரிவிப்பதாக சொன்னார்.

மதுராவின் வீட்டுக்கு போனபோது வாசற்கதவில் பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது. டுலெட் போர்ட் மாட்டியிருந்தது. வீட்டு சொந்தக்காரர்களை கேட்டபோது மதுராவும், டானியும் வீட்டை காலி செய்து விட்டார்கள் என்றும், எங்கே போனார்களோ தெரியாது என்றும் சொன்னார்கள்.

12496

உடலும், உள்ளமும் துவண்டு போக தரையில் சரிந்து விட்டேன்.

மதுரா எங்கேயோ போய்விட்டாள்.

'எங்கே' என்று எனக்குத் தெரியவில்லை.

அந்த விதமாக மதுராவுக்கும், எனக்கும் இடையில் சாசுவதமாக பிரிவு ஏற்பட்டு விட்டது.

## 16

வாழ்க்கையில் எனக்கு இருந்த ஒரே பற்றுகோல் மதுராதான். அதையும் கடவுள் என்னிடம் பறித்துக் கொள்வானேன்? பணத்திற்கு எந்த தட்டுபாடும் இல்லை. போகும் முன் மதுரா எனக்கு எந்த பிரச்னையும் வராமல் ஏற்பாடு செய்துவிட்டு போயிருக்கிறாள்.

அப்படியும் என்னால் தைரியமாக இருக்கமுடியவில்லை. மனிதர்களை பொதுவாக இரண்டு விதமாகப் பிரிக்கலாம். ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பணம் இருந்தால் போதும். இந்த உலகில் வேறு யாரும் அவர்களுக்குத் தேவையில்லை. அவர்கள் பணத்தை நேசிப்பார்கள். ஆராதிப்பார்கள். அவர்களுடைய வாழ்க்கையின் குறிக்கோள் பணம் ஒன்றுதான்.

இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர்கள் அப்படி இல்லை. அவர்களுக்கு மற்றவர்களின் துணை வேண்டும். உற்ற துணை இல்லாவிட்டால் அவர்களால் உயிர் வாழமுடியாது. உலகில் மற்ற ஐஸ்வரியங்கள் எதுவும் அவர்களுக்கு திருப்தியை தராது. மகிழ்ச்சி யளிக்காது. நான் அந்தப் பிரிவைச் சேர்ந்தவள். சின்னவயதிலிருந்து எனக்கு என்று சொந்த பந்தம் யாரும் இல்லாததாலோ என்னவோ, யாருக்காவது நெருக்கமாக இருக்க வேண்டும் என்று தவிக்கிறேன். தனக்காக அழுபவர்களோ, அக்கறைக் கொண்டவர்களோ யாரும்



இல்லாத வாழ்க்கை எவ்வளவு பயங்கரமானதோ அதை அனுபவித்தவர்களுக்குத்தான் புரியும்.

மறு நாள் நர்மதாவின் வீட்டுக்குப் போனேன். மதுராவை டானி வலுக்கட்டாயமாக அழைத்துப் போயிருப்பான் என்று நர்மதாவின் தந்தையிடம் சொன்னேன். நான் சொன்னதை எல்லாம் பொறுமையாக கேட்டுக்கொண்ட பிறகு அவர் சொன்னார்.

"இதோ பார் பிரியா! மதுரா, டானி இருவரும் பதிவுத் திருமணம் செய்துகொண்டு இருக்கிறார்கள். சட்டபடி அந்த இருவரும் கணவன் மனைவி. அவன் அவளை எங்கே வேண்டுமானாலும் அழைத்துப்போகலாம். அதைத் தடுக்கவோ மறுக்கவோ யாருக்கும் உரிமை இல்லை."

"ஆனால், டானி நல்லவன் இல்லை. மதுராவை துன்புறுத்தி வருகிறான். அவள் எவ்வளவு வேதனையை அனுபவித்து வருகிறாளோ உங்களுக்குத் தெரியாது." சொல்லும் போதே என் விழிகளில் நீர் சுழன்றது.

அவர் என் தோள்மீது மெதுவாக தட்டினார். "பிரியா! உன் சினேகிதிக்காக நீ படும் கவலை எனக்குப் புரியாமல் இல்லை. ஆனால் ஒரு விஷயத்தை மறந்து விடுகிறாய். அவள் முட்டாள் ஒன்றும் இல்லை. டானியின் மீது இருந்த மோகத்தின் காரணமாகத்தானே சுயமாக நரகத்தை நோக்கி சென்றிருக்கிறாள்." கம்பீரமாக மொழிந்து விட்டு அறையில் நடை பயின்றவாறே மேலும் சொன்னார். "பிரியா! இளம் பெண்கள் முக்கியமாக ஒரு விஷயம் தெரிந்துகொள்ள வேண்டும். வாழ்க்கை என்றால் இளமையில் ஏற்படும் ஈர்ப்பு மட்டுமே இல்லை. திருமணம், குடும்பவாழ்க்கை, குழந்தைகள் வளர்ப்பு, சமுதாயத்தில் மதிப்பும் மரியாதையுடன் வாழ்வது... இவையெல்லாம் சேர்ந்தால்தான் வாழ்க்கை முழுமையடையும். வாழப்போகும் இந்த சொற்ப காலமும் நான்கு பேருடன் சேர்ந்து வாழவேண்டும். சமுதாயத்தை எதிர்த்து வாழ்க்கை நடத்துவது

அவ்வளவு சுலபம் இல்லை. ஒரு கொள்கைக்காக, கடமையை நிறைவேற்றுவதற்காக மனிதன் சமுதாயத்தை எதிர்த்தால் அவனுடைய தனித்தன்மையை மதித்து பாராட்டலாம். ஆனால் சுயநலத்தோடு, இளமையின் வேகத்தில் முன்பின் யோசிக்காமல் தவறான பாதையை தேர்ந்தெடுத்தால் இந்தச் சமுதாயம் அவர்களை எப்போதும் மன்னிக்கப் போவதில்லை." 'என் வாழ்க்கை இது, எப்படி வேண்டுமானாலும் வாழ்வதற்கு எனக்கு உரிமை இருக்கு, என்று யாராவது செயல்பட்டால் அதன் விளைவுகளை அவர்கள்தான் அனுபவிக்க வேண்டும். நீ மதுராவை மறந்து படிப்பில் கவனம் செலுத்து. உன் எதிர்காலத்தைப் பற்றி யோசி. இனி ஒரு நாளும் மதுராவுக்கு உதவி செய்ய வேண்டும் என்று என்னிடம் வர வேண்டாம்." கச்சிதமான குரலில் சொன்னார்.

திகைத்துப் போனவளாய் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

போன் வந்ததும் அவர் அங்கிருந்து போய்விட்டார். நர்மதா என் அருகில் வந்தாள்.

"பிரியா! இப்பொ டாடீ சொன்ன அறிவுரை உனக்கு இல்லை, எனக்கு" என்றாள்.

"உனக்கா?" வியப்புடன் கேட்டேன்.

"ஆமாம். அண்ணாவின் நண்பன் ஒருவனை நான் மனப்பூர்வமாக நேசிக்கிறேன். இருவரும் திருமணம் செய்து கொள்வதாக முடிவு செய்திருக்கிறோம்.

அவன் முஸ்லீம் இனத்தைச் சேர்ந்தவன். இந்த விஷயம் அப்பாவுக்கும் தெரியும். இதைப் பற்றி நானும் அப்பாவும் வெளிப்படையாக பேசிக்கொண்டதில்லை. ஆனால் மதுரா விஷயத்தில் நானும் அப்பா சொன்னதையே சொல்கிறேன். நீ மதுராவை மறந்து போவது நல்லது. அவளுக்கு உன் மீது அன்பு இருந்தால் உன்னை விட்டுவிட்டு போவாளா?" என்றாள்.

நான் ஹாஸ்டலுக்கு வந்து விட்டேன்.



எல்லோரும் திரும்பத் திரும்ப ஒரே வார்த்தையைத்தான் சொல்கிறார்கள்.

மதுராவை மறந்துவிடு!

அவளை மறக்க முடிந்தால் இவ்வளவு தவிப்பு எதற்கு?

என்னால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. உடன் பிறந்தவளை இழந்தவள் போல், குழந்தையை இழந்த தாயை போல் என் மனம் தவிக்கிறது.

மறுநாள் வங்கி மேனேஜரை சந்தித்தேன்.

"உன் பெயரில் என் முகவரிக்கு ஒரு கடிதம் வந்திருக்கும்மா" என்று சொல்லிக்கொண்டே ஒரு கவரை நீட்டினார்.

கவரை அவசர அவசரமாக பிரித்தேன். மதுரா எழுதியதுதான் இரண்டாயிரம் ரூபாய்க்கு டி.டியும் இருந்தது.

பிரியா,

என்னைப் பற்றி எப்பொழுதாவது யோசிக்கிறாயா? தயவு செய்து என் மீது கோபம் கொள்ளாதே. எங்கே இருந்தாலும் என்னால் உன்னை மறக்க முடியாது. நான் உயிரோடு இருந்தாலும் இல்லாவிட்டாலும் என்றுமே உன்னுடைய சிநேகிதிதான்.

டானி வரும் நேரம் ஆகிவிட்டது. உனக்குக் கடிதம் எழுதுவதைப் பார்த்தால் ரகளை ஆகிவிடும். அதான் அவசரஅவசரமாக எழுதுகிறேன். என்னைப் பற்றி கவலைப்பட வேண்டாம்.

அம்மா எப்படி இருக்கிறாள். அவளை நீதான் கவனித்துக் கொள்ளவேண்டும் அம்மாவை விட்டுவிட்டு இப்படி வந்துவிட்டது எவ்வளவு முட்டாள்தனமோ இப்பொழுதுதான் புரிகிறது. எதையும் இழந்தபின்தான் அதனுடைய அருமை புரியுமோ என்னவோ.

பிரியா! நன்றாக படித்து எதிர்காலத்தை நல்ல விதமாக அமைத்துக் கொள். திருமண விஷயத்தில் அவசரப்பட்டு தவறான பாதையை தேர்ந்து எடுத்து விட்டேன். காலம் கடந்தபின் இப்பொழுது வருத்தப்பட்டு என்ன பயன்? விளைவுகளை அனுபவிப்பதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

உன்

மதுரா

பி.கு. உன்னையும், அம்மாவையும் பார்க்க வேண்டும் என்றும், உங்கள் அருகாமையில் இருக்க வேண்டும் என்றும் என் மனம் தவிக்கிறது. ஆனால் செயல்படுத்த முடியாத நிலைமை. நான் ரொம்ப துரதிர்ஷ்டசாலி பிரியா! என்னிடம் மதிப்போ, அன்போ இல்லாதவனுக்காக என்னை உயிருக்கும் மேலாக நேசித்தது அம்மாவையும், உன்னையும் விட்டுவிட்டு வந்து விட்டேன். இதைவிட துரதிர்ஷ்டம் வேறு இருக்க முடியுமா? நீயே சொல்லு.

வாசலில் கார் வந்த சத்தம் கேட்கிறது. டானி வந்து விட்டான் போலும். கடிதத்தை முடித்துக்கொள்கிறேன்.

டி.டி. யை என்னுடைய கணக்கில் வரவு வைத்துக்கொண்டே காஷியர் சொன்னார்.

"நீ ரொம்ப கொடுத்து வைத்தவள் அம்மா. எங்கே இருந்தாலும் உன். சிநேகிதி உனக்காக பணம் அனுப்பி வருகிறாள்."

பெருமூச்சு விட்டுக்கொண்டேன். சினேகிதியிடமிருந்து எல்லா விதமான உதவிகளையும் பெற்றுக்கொண்டு அவளுக்காக எதையும் செய்ய முடியாதவளாக இருக்கிறேன்.

அன்று முதல் என் பெயருக்கு வங்கி கணக்கில் அடிக்கடி மதுராவிடமிருந்து பணம் வந்துகொண்டே இருந்தது.



அந்தப் பணத்தை எண்ணி எண்ணி செலவு செய்து கொண்டிருந்தேன். படிப்பு முடிந்து வேலை கிடைக்கும் வரை எனக்கு அந்தப் பணம்தான் ஆதாரம்.

மதுராவைப் பற்றி நினைக்கும்போது சிலசமயம் அழுகை பொங்கிக் கொண்டு வரும். இன்று ஹாஸ்டல் அறையில் கட்டில் மீது நான் நிம்மதியாக படுத்துக்கொண்டு இருக்கிறேன் என்றால் அவள் செய்த உதவிதான் காரணம்.

இந்தப் பணம் மட்டும் இல்லை என்றால் என் வாழ்க்கை எப்படியெல்லாம் திசைமாறியிருக்குமோ தெரியாது. 'மதுரா! நீ என்னை விட்டு எங்கேயோ போய் விட்டாய் என்று நினைக்கிறேனே அது முற்றிலும் தவறு. நீ எங்கேயும் போகவில்லை. என் அருகிலேயே இருக்கிறாய். எனக்கு இவ்வளவு உபகாரம் செய்திருக்கிறாய். இந்த நன்றிக் கடனை எப்படி தீர்த்துக்கொள்ளப் போகிறேன்?' தலையணையில் முகம் புதைத்துக்கொண்டு அழுது கொண்டிருப்பேன்.

மதுரா போன்ற சினேகிதி கிடைத்த நான் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலி.

## 17

என் படிப்பு முடிந்து விட்டது. மதுராவிடமிருந்து கடிதம், பணம் வருவதும் நின்று விட்டது. வங்கி கணக்கில் என் பெயருக்கு அவள் அனுப்பி வைத்த பணம் ஐம்பதாயிரம் வரையில் இருப்பு இருந்தது. எனக்கு பணம் தேவையில்லை. மதுராவிடமிருந்து கடிதம் ஏன் வரவில்லை? அவளுக்கு என்ன ஆகிவிட்டது? உடல் நலம் சரியாக இல்லையா? எனக்குக் கடிதம் எழுதுவது தெரிந்து டானி அவளை துன்புறுத்துகிறானா? டைவோர்ஸ் கொடுத்து விடுவதாக மிரட்டியிருப்பானோ? குழப்பமாகவும், கவலையாகவும் உணர்ந்தேன்.

தேர்வுகள் முடியும் சமயம். பாம்பேயிலிருந்து அப்பாவின் தம்பி வந்தார். "படிப்பு முடியப் போகிறதே. பிறகு என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டார்.

"ஏதாவது வேலையை தேடிக் கொள்ளப் போகிறேன்."

"வேலையா? உனக்கெதற்கு?"

"எனக்கு என்று நிலையான வருமானம் இருக்க வேண்டும் இல்லையா?"

"பைத்தியக்காரத்தனமான எண்ணங்களை விட்டுவிடு. தேர்வுகள் முடிந்ததும் பாம்பேக்கு வந்துவிடு. அஜீத்துக்காக பெண் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அவனுக்கு உன்னைப் பிடித்திருக்கிறதாம்."

அதைக் கேட்டதும் பார்வையை ஜன்னல் பக்கம் திருப்பினேன். அந்த அஜீத் யாரென்று எனக்கு நினைவு இல்லை.

"என்ன? பதிலையே காணும்?" இரட்டிப்பது போல் கேட்டார்.

"திருமண விஷயம் என்பதால் யோசித்துதான் முடிவு எடுக்க முடியும். என் விஷயத்தில் உங்களுக்கு அந்த சிரமம் தேவையில்லை."

"என்ன? யாரிடம் என்ன பேசுகிறோம் என்று புரிந்துதான் பேசுகிறாயா?" கண்களை உருட்டி விழித்தார்.

"உறவு என்று சொல்லிக்கொண்டு வந்த உங்களிடம்தான் பேசுகிறேன். என் திருமண பிரஸ்தாபனையைக் கொண்டு வந்ததால் என் எண்ணத்தை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது." பணிவான குரலில் பதிலளித்தேன்.

"அதிகம் பேச தேவையில்லை. படித்து பட்டம் பெறுவதால் மட்டும் ஒரு பெண் உயர்ந்துவிட முடியாது."



மேற்கொண்டு உரையாடலை நீடிக்க விரும்பாமல் மௌனமாகிவிட்டேன். இவருடன் வாதம் புரிய வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. என் விருப்பு வெறுப்புகளைப் பற்றி இவருக்கு எந்தக் கவலையும் இல்லை. என் நலனில் அக்கறை கொண்டவராக இருந்தால் அம்மா இறந்து போன பிறகு நான் எப்படி இருக்கிறேன் என்ன செய்கிறேன் என்று ஒரு தடவையாவது வந்து பார்த்தாரா? அவர்களுடைய வீட்டில் ஒருத்தனுக்கு என்னைப் பிடித்து விட்டதாம். என்னை அவனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிட்டால் இவருடைய கடமை முடிந்துவிடும். விருப்பம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நான் அவனுடன் குடும்பம் நடத்தி குழந்தைகளை பெற்றுக்கொள்ளவேண்டும். இவரால் எனக்கு ஏற்படப்போகும் நன்மை இதுதான்.

மறுபடியும் வருவதாக சொல்லிவிட்டு அவர் போய் விட்டார்.

தேர்வுகள் முடிந்த பிறகு ஹாஸ்டலை காலி செய்துவிட்டு வேலை பார்க்கும் பெண்கள் விடுதிக்கு வந்துவிட்டேன்.

இங்கே சூழ்நிலை வேறுவிதமாக இருந்தது. என் வயதை ஒற்ற மற்ற பெண்கள் எல்லோரும் வேலைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

ஹாஸ்டல் வராண்டாவில் தூணில் சாய்ந்துகொண்டு நின்றவாறே யோசித்துக்கொண்டிருந்தேன். என் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது?

படிப்பை மேலும் தொடரவேண்டும் என்றால் பணம் வேண்டும். மதுரா அனுப்பிய பணம் என் பெயரில் இருந்தாலும் அதை பயன்படுத்திக்கொள்வதில் எனக்கு விருப்பம் இல்லை. பணம் இல்லாமல் நான் கஷ்டப்படப் போகிறேன் என்று அவள் டானிக்கு விரோதமாக, அந்த பணத்தை அனுப்பியிருக்கிறாள். அதை ரொம்ப கவனமாக செலவு செய்ய வேண்டும். என் தேவைகளுக்கு அந்தப் பணத்தை பயன்படுத்திக்கொண்டது

உண்மைதான். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் அது கடன்தான். என்னிக்காவது வேலை பார்த்து அந்தப் பணத்தை மறுபடியும் வங்கியில் போட்டுவிட வேண்டும். அது மதுராவின் பணம். என்னிக்காவது அவளிடம் சேர்ப்பித்து விடவேண்டும்.

விடுமுறை முடிந்து தேர்வுகளின் முடிவுகள் வெளியாகி விட்டன. நான் முதல் வகுப்பில் தேர்வு பெற்றுவிட்டேன். வாழ்க்கையில் முதல் லட்சியம் நிறைவேறிவிட்டது.

"பேபி கேர் செண்டரி"ல் எனக்கு வேலை கிடைத்தது. சம்பளம் முன்னூறு ரூபாய்."

நர்மதாவிடம் வேலை கிடைத்த செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்தபோது "சம்பளம் ரொம்ப குறைவு" என்றாள்.

என்னைப் பொறுத்தவரையில் அந்த சம்பளம் போதுமானதாக இருந்தது. முதல் மாத சம்பளம் பெற்றுக் கொள்ளும்போது என் கண்கள் ஈரமாயின. சின்ன வயதில் நான் முதல் அடி எடுத்துவைத்த அன்று ஏற்பட்ட மகிழ்ச்சி எனக்கு நினைவு இருக்க வாய்ப்பு இல்லை. ஆனால் இன்று முதல்முறையாக என் சொந்த கால்களில் நான் நிற்பது போல் உணர்ந்தேன்.

சின்னக் குழந்தைகள் என்றால் எனக்கு ரொம்பவும் பிடிக்கும். அங்கே அதிகமாக வேலையும் இல்லை. இதை நிறுவிய ரூபா தேவிக்கு வேறு எத்தனையோ ஜோலிகள். இந்த செண்டருக்கு தேவையான பணத்தை மாதாமாதம் கொடுத்து விடுவாள். அது சரியான முறையில் பயன்படுத்தப்படுகிறதா என்று மேற்பார்வையிடுவதுதான் என் வேலை. இதில் எனக்கு எந்தக் கஷ்டமும் இருக்கவில்லை. திருப்தியுடன் வேலை பார்த்து வந்தேன்.

ஒருநாள் நர்மதா என்னைப் பார்க்க வந்தாள்.

"நாளை என்னுடைய பிறந்தநாள். கட்டாயம் வா" என்று அழைப்பு விடுத்தாள்.



மறுநாள் அவளுடைய வீட்டுக்கு போனேன். நர்மதாவின் தந்தை ஊரில் இல்லை. தாய் உறவினர் வீட்டு திருமணத்திற்கு சென்றிருந்தாள். இளைய தலைமுறை வைத்ததுதான் அங்கே சட்டம். நிறையபேர் வந்திருந்தார்கள் ஒல்லியாக, உயரமாக இருந்த இளைஞனை நர்மதா எனக்கு அறிமுகப் படுத்தினாள்.

"இவன் என்னுடைய கஸின். பெயர் ராஜ்குமார். எல்லோரும் ராஜ் என்று அழைப்பார்கள்."

"வணக்கம்" என்றேன்.

"கிளாட்டு மீட் யூ" என்றான்.

ஒரு ஓரமாக அமர்ந்துகொண்டு நான் பத்திரிகையை புரட்டிக் கொண்டிருந்தபோது ராஜ் ஒரு தட்டில் உணவு வகைகளை வைத்துக் கொண்டு எடுத்து வந்து கொடுத்தான். ஐஸ்கிரீம் எடுத்து வந்தான். பி.டெக். படித்து வருகிறானாம். தந்தை டாக்டர். சொத்து நிறைய இருக்கிறது. தாய் தந்தை தன்னைக் கண்டு எப்படி நடுங்குவார்களோ விலா வாரியாக சொல்லிக்கொண்டு இருந்தான்.

தாய்மீது கோபித்துக்கொண்டு நான்கு நாட்களாக வீட்டுக்கு போகவில்லையாம். அம்மா கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறாளாம். வீட்டுக்கு வரச் சொல்லி நண்பன் மூலமாக செய்தி அனுப்பி வருகிறானாம். அவனுடைய உபயோகத்திற்காக தனியாக கார் வாங்கி தந்தால் தவிர வீட்டுக்கு போகப் போவதில்லையாம். பெருமை பொங்கும் குரலில் சொல்லும் போது வெறுப்புதான் ஏற்பட்டது.

நான்கு நாட்கள் கழித்து பேபிகேர் செண்டரிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த போது அவன் காரில் எதிரே வந்தான்.

"வாங்க. ஹாஸ்டலில் உங்களை ட்ராப் செய்கிறேன்" என்றான்.

"தேவையில்லை. நான் போய்க்கொள்கிறேன்" என்றேன்.

"பரவாயில்லை. வாங்க'' வற்புறுத்துவது போல் சொன்னான்.

முகத்தில் அடித்தாற்போல் மறுக்க முடியாமல் காரின் பின்பக்க கதவைத் திறக்கப் போனேன். அதற்குள் காரில் ஏறி உட்கார்ந்துகொண்டேன். காரை ஸ்டார்ட் செய்துவிட்டு காசட்டை ஆன் செய்தான்.

"என்னுடைய புதுபறவை எப்படி இருக்கு?" ஸ்டீரிங்கில் தட்டிக் கொண்டே கேட்டான்.

"உங்க அம்மா வாங்கிக் கொடுத்ததுதானே?"

வியப்படைந்தவனாய் பார்த்தான். "அட! உங்களுக்கு எப்படி தெரியும்?"

"நீங்க உங்களுடைய நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்த போது கேட்டேன்."

"ஆமாம். அம்மாதான் வாங்கித் தந்தாள். நீங்களும் நர்மதாவும் சினேகிதிகள்தானே. நர்மதாவின் வீட்டில் உங்களை அதிகமாக பார்த்ததில்லையே. அன்னிக்கு பிறந்தநாள் விழாவிலும் கலகலப்பாக பழகவில்லை." என்றான்.

நான் பதில் பேசவில்லை. நர்மதாவுக்கு சினேகிதியாக இருந்தால் அவளுடைய கஸினுடன் உரிமையாக பழக வேண்டும் என்று சட்டமா என்ன?

காரை வேறு பக்கம் திருப்பினான்.

"ஹாஸ்டல் அந்தப் பக்கம்" என்றேன்.

"மாலை வேளை. குளுகுளுவென்று காற்று வீசுகிறது. கொஞ்ச நேரம் அப்படியே காரில் போய் வரலாமே."

"நோ. தேவையில்லை. முதலில் காரை நிறுத்துங்க." உரத்த குரலில் கத்திவிட்டேன்.



திகைத்துப் போய் உடனே காரை நிறுத்திவிட்டான். உடனே கதவைத் திறந்துகொண்டு இறங்கி விட்டேன். கதவை வேகமாக சாத்திவிட்டு, பின்னால் கூடத் திரும்பிப்பார்க்காமல், நன்றி கூடச் சொல்லாமல் விடுவிடு என்று ஹாஸ்டலை நோக்கி நடந்தேன்.

இரவு படுத்துக்கொள்ளும் போது அன்று மாலை நடந்தது கண்கள் முன்னால் நிழலாடியது. இது போன்ற நட்புகளை, அறிமுகங்களை மேலும் வளர்த்துக்கொள்ளாமல் நம்மை நாம்தான் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

மதுராவின் வாழ்க்கை இப்படித்தானே நூல் அறுந்த காற்றாடியாகிவிட்டது. ராஜ்குமார் இனிக்க இனிக்க பேசியது நினைவுக்கு வந்தது. அவனுடைய பேச்சும், தோற்றமும் நன்றாகத்தான் இருந்தது. கை நிறைய பணமும், காரும் இருக்கிறது. அதை இரையாகக் காட்டி இளம் பெண்களை தன்பக்கம் ஈர்த்துக்கொள்வான். "நீ என்னுடையவளாகி விட்டால் இந்த வசதிகள் எல்லாம் உனக்குத்தான்" என்று வாயால் சொல்லாமல் செயல்களால் உணர்த்துவான். அப்பாவியான இளம் பெண்கள் அவனுடைய வலையில் சுலபமாக சிக்கிக் கொள்வார்கள். கல்யாணம் என்ற கட்டம் வரும்போது மட்டும் பெற்றோரின் அந்தஸ்துக்கு ஏற்ற பெண்ணை, தன்னுடைய நிலையை மேலும் உயர்த்தக்கூடிய நபரின் மகளைத் திருமணம் செய்துகொள்வான். தாயை எமோஷனலாக பிளாக்மெயில் செய்ததுபோல் மனைவியையும் துன்புறுத்துவான்.

தாய் தந்தையை நேசிக்கத் தெரியாதவனுக்கு அன்பு என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரிய நியாயம் இல்லை. பெற்றோர் தன்னிடம் காட்டும் பாசத்தை பலவீனமாக எடுத்துக்கொள்பவன் மற்றவர்களின் வாழ்க்கையுடன் விளையாட கொஞ்சம்கூட அஞ்சமாட்டான்.

மறுநாள் நர்மதா என்னைச் சந்தித்து ராஜ்குமாரிடம் நான் மரியாதை குறைவாக நடந்துகொண்டதற்கு என்னைக் கடிந்து கொண்டாள்.

"அந்தப் பெண் பிரியா தன்னை பேரழகி என்று நினைத்துக் கொண்டு இருக்கிறாள் போலும். ஏதோ உன்னுடைய சிநேகிதியாச்சே. லிப்ட் கொடுப்போம் என்று நினைத்தால் கண்ணகி போல் போஸ் கொடுத்துவிட்டு காரைவிட்டு இறங்கி ஓடி விட்டாள்" என்று நர்மதாவிடம் ராஜ்குமார் புகார் செய்தானாம்.

நான் அழகாக இல்லை என்று ராஜ்குமார் சொன்னதற்கு நான் வருத்தப்படவில்லை. நர்மதாவுடன் நட்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டேன்.

இரவு வேளையில் தனியாக படுத்துக்கொள்ளும்போது அழுகை அழுகையாக வரும். வாழ்க்கையை இப்படியே தனிமையில் கழிக்க வேண்டியிருக்குமோ என்று பயமாக இருந்தது.

எனக்கு வாழ்க்கைத் துணையாக வரப் போகிறவனுக்கு அழகு அந்தஸ்து இல்லாவிட்டாலும் பரவாயில்லை. வாழ்நாள் முழுவதும் எனக்குத் துணையாக இருப்பதாக உறுதிமொழி தந்தால் போதும்.

அன்று பேபி சென்டருக்கு போனதும் ஆயா எதிரே வந்தாள்.

"அம்மா! ரூபாதேவியை பார்ப்பதற்காக யாரோ வந்திருக்கிறார்கள்" என்றாள்.

கையில் இருந்த குழந்தையை ஆயாவிடம் கொடுத்துவிட்டு ஆபீஸ் அறைக்குள் சென்றேன். அங்கே ஜன்னல் வழியாக வெளியில் பார்த்துக்கொண்டு இளைஞன் ஒருவன் நின்றிருந்தான்.

"யார் வேண்டும்?" என்று கேட்டேன்.

அவன் என் பக்கம் திரும்பினான்.

நான் ஒரு நிமிடம் அப்படியே நின்று விட்டேன்.



அவனும் என்னையே பார்த்துக்கொண்டிருந்தான் அதிர்ஷ்ட தேவதை எனக்காக ஒரு அபூர்வமனிதனை அனுப்பி வைத்திருக்கிறாள் என்பதை நான் அந்த நிமிடம் உணரவில்லை. ஏனோ அந்த நிமிடம் என் மனம் முழுவதும் மகிழ்ச்சி பரவியது.

# 18

பிரியா கணவன் பக்கம் திரும்பினாள்.

"விகீ! அந்த நபர் யாரென்று உனக்குப் புரிகிறதா?" என்று கேட்டாள்.

"ஊஹூம். உன் வாயால் சொன்னால் கேட்டுக் கொள்கிறேன்." கைகளை மனைவியின் கழுத்தைச் சுற்றிலும் பிணைத்துக்கொண்டே குறும்பாகச் சொன்னான்.

"அவன் பெயர் விக்ரம். நான் செல்லமாக விகீ என்று ..."

பிரியா சொல்ல வந்ததை முழுவதுமாக முடிக்கவிடாமல் அவன் இதழ்கள் அவள் இதழ்கள் மீது ஆழமாக பதிந்தன. பிரியா மெதுவாக தன்னை விடுவித்துக்கொண்டாள்.

"விகீ! திருமணத்தின் போதே என்னுடைய கடந்த காலத்தைப் பற்றியோ, வாழ்க்கையில் நான் சந்தித்த நபர்களைப் பற்றியோ கேட்கமாட்டேன்னு உறுதி மொழி தந்தீங்க. நினைவு இருக்கா?"

"நன்றாக நினைவு இருக்கு. அந்த உறுதிமொழிக்கு மாறுபட்டு என்றுமே நான் நடந்து கொள்ளவில்லையே?" விக்ரம் சொன்னான்.

"அதான் மதுரா பற்றி உங்களிடம் சொல்லவில்லை."

"நீ அவளைப் பற்றி சொல்லி இருந்தாலும், இல்லாவிட்டாலும் எந்த வித்தியாசமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நம் அன்பு பிணைப்புக்கு எந்த விதமான தடங்களும் வந்திருக்காது." விக்ரமின் குரல் கம்பீரமாக ஒலித்தது.

"நம் திருமணம் ஆனபிறகு மதுராவிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது."

"அப்படியா! என்ன எழுதியிருந்தாள்?"

"இரு. கொண்டு வருகிறேன். நீயே படித்துப் பாரு." பிரியா எழுந்துபோய் கடிதத்தை எடுத்து வந்து கணவனிடம் தந்தாள்.

விக்ரம் மனைவியின் மடியில் படுத்துக்கொண்டே கடிதத்தைப் படிக்கத் தொடங்கினாள்.

அன்புள்ள பிரியா!

இந்தக் கடிதத்தைப் பார்த்ததும் வியப்பு அடைகிறாயோ இல்லை இந்தத் துரோகி இன்னும் உயிரோடு இருக்கிறாளா என்று அருவருத்துக்கொள்கிறாயோ தெரியவில்லை. நான் எங்கே எப்படி இருந்தாலும் என்னை வெறுத்து ஒதுக்கமாட்டாய் என்று ஆழமான நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதான் வாய்ப்பு கிடைத்தால் போதும் நான் உயிரோடுதான் இருக்கிறேன் என்று உனக்குக் கடிதம் எழுத துடிக்கிறேன்.

நான் எங்கே இருக்கிறேன் எப்படி இருக்கிறேன் என்று தெரிந்துகொள்ள ஆவலாக இருக்கிறதா? எங்கே இருந்தால் என்ன? நம் இருவருக்கும் இடையே ஏழுகடல்களுக்கும் மேல் இடைவெளி இருக்கிறது. அதைக் கடக்கும் துணிச்சலோ, தைரியமோ எனக்கு இல்லை. நடைபிணமாய் வாழ்ந்து கொண்டு இருக்கிறேன். இருபது வயது முடிவதற்குள் அறுபது வயது வாழ்ந்த அனுபவம் எனக்குக் கிடைத்துவிட்டது.

அம்மாவிடம் நான் வளர்ந்தது, குழந்தைப் பருவம் எல்லாமே ஒரு கனவு போல் தோன்றுகிறது. என் பெற்றோரைப் பற்றி நினைக்கும் போது சிலசமயம் எனக்குக் கோபம்தான் வருகிறது. தவறான பாதை என்று தெரிந்த பிறகும் அவர்கள் அந்த பாதையில் என்னை போக விட்டது ஏன்? என்னைத் தடுத்து நல்ல வழியில் திசை திருப்பியிருக்கலாம். இல்லையா.

நான் அவர்களுடைய பேச்சை கேட்காமல், எதிர்த்து பேசியது உண்மைதான். ஆனால் அது அறியாமையில் நான் செய்த தவறு. குழந்தைகள் முட்டாள்தனமாக நடந்து கொண்டால் பெற்றோர்கள் அப்படியே விட்டுவிடலாமா? குழந்தைகளிடம் அன்பு, பாசம் வைத்திருந்தால் மட்டும் போறாது. குழந்தைகளை கண்டித்து நல்வழிக்கு கொண்டு வர வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுடையதுதான்.



பிரியா! எனக்கு உன்னிடம் வரவேண்டும் போல் தோன்றுகிறது. இறக்கும் முன் சில நாட்களாவது என்மீது உண்மையான அன்பு வைத்திருப்பவர்களுடன் வாழவேண்டும்.

தினமும் ஒரு புதிய நபர். புதிய ஊர். என் நிலைமையை உன்னால் புரிந்துகொள்ள முடிகிறதா? என் மனம் உன்னிடமே தங்கி விட்டது. உடல் மட்டும் இந்த நரகத்தில் உழன்று கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்துதான் ஆக வேண்டுமா. ஒரு முழம் கயிறோ, கிணறோ கண்ணில் படவில்லையா என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் பிரியா! ஜன்னல் வழியாக பார்க்கும் போது தெரியும் நீலவானம், புதிதாக துளிர் விட்ட மாமரம், ரோஜா மொட்டுகள் எல்லாமாக சேர்ந்து 'நீ ஏன் சாக வேண்டும்?' என்று கேட்பது போல் தோன்றுகிறது. பிரியா! நான் தவறு செய்தது உண்மைதான். என் தவறை உணர்ந்துவிட்டேன். உங்களிடம் வந்து சரணாகதி அடைய வேண்டும் என்று என் உடலும் உள்ளமும் தவிக்கிறது. முன்பு இருந்ததுபோல் நீயும் நானும் ஒன்றாக ஒரே இடத்தில் வாழ முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? என் ஆசை என்றாவது நிறைவேறும் என்று எதிர்பார்ப்புடன் வாழ்ந்து வருகிறேன். நான் திரும்பிவந்தால் எனக்கு ஆதரவு தருவாயோ இல்லை யாரென்று தெரியாதது போல் நடந்து கொள்வாயோ எனக்குத் தெரியாது.

நீ எப்படி இருக்கிறாய்? உன் வாழ்க்கை நன்றாக அமைந்திருக்கும் என்று திடமாக நம்புகிறேன். வாழ்க்கையின் மதிப்பீடுகள் உனக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொரு அடியையும் கவனமாக எடுத்து வைப்பவர்களால்தான் வாழ்க்கையில் முன்னேற முடியும்.

பிரியா! நான் ரொம்ப மாறிவிட்டேன். என்ன மாற்றம் என்று மட்டும் கேட்டு விடாதே. நேரில் பார்த்தால் உனக்கே புரியும். என்னைப் பார்த்தால் உனக்கு அடையாளம் தெரியுமோ இல்லையோ. என் எதிரில் நாமிருவரும் சேர்ந்து இருக்கும் புகைப்படம் ஒன்று இருக்கிறது. கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தபோது எடுத்தது. என் கடந்த கால வாழ்க்கையின் நினைவுச் சின்னமாக அதை போற்றி வருகிறேன். இந்தக் கடிதம் உனக்கு சேருமோ இல்லையோ. வேலைக்காரர்களிடம் எனக்கு நம்பிக்கை இல்லை. இந்தக் கடிதம் உனக்குக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதை எழுதிய திருப்தி என் மனதிற்கு நிம்மதியைத் தருகிறது.

உன் மதுரா.

விகி கடிதத்தை மடித்து பக்கத்தில் வைத்தான். பிரியம்வதா எழுந்து கணவன் பக்கத்தில் அமர்ந்துகொண்டாள். பின்னால் சாய்ந்து உட்கார்ந்திருந்த கணவனின் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

இருவரும் ரொம்ப நேரம் மௌனமாக இருந்து விட்டார்கள். மார்பில் ஈரமாக உணர்ந்த விக்ரம் மனைவியின் முகவாய்க் கட்டையை உயர்த்தினான். அவன் சந்தேகப்பட்டது உண்மைதான். பிரியாவின் விழிகளில் நீர் நிரம்பியிருந்தது.

மனைவியின் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே "எதற்காக இந்தக் கண்ணீர்?" என்று கேட்டான்.

"இது போன்ற பாதுகாப்பும், அமைதியும் நிறைந்த வாழ்க்கை கிடைத்த நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று நினைத்துப் பார்க்கிறேன்.

அவன் மௌனமாக மனைவியின் தலையை வருடிக் கொடுத்தான். சற்று நேரம் கழித்து தோளில் தட்டிக்கொண்டே எழுந்து கொள் பிரியா! இங்கே குளிர்காற்று அடிக்கிறது. உள்ளே போகலாம்."

பிரியா பேசவில்லை.



பிரியாவின் தோளைச் சுற்றிலும் கையை போட்டு உள்ளே அழைத்துவந்து கட்டில் மீது படுக்கவைத்தான். கால் மாட்டில் இருந்த போர்வையை எடுத்து சரியாக போர்த்திவிட்டான். பெரிய விளக்கை அணைத்துவிட்டு விடிவிளக்கை போட்டுவிட்டு வந்தான். பிரியா கண் இமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

இரு கைகளால் மனைவியின் கண்களை பொத்திக் கொண்டே "பிரியா! குட் கர்ல் இல்லையா. கடந்த காலத்தைப் பற்றி யோசித்தது போதும். நன்றாக தூங்கு" என்றான். பிரியாவின் கன்னத்தில் மென்மையாக முத்தம் பதித்துவிட்டு பக்கத்தில் படுத்துக்கொண்டான். "குட் நைட் பிரியா!"

பத்து நிமிடங்கள் கழித்து பார்த்தபோது விக்ரம் ஆழமான உறக்கத்தில் இருப்பது போல் மூச்சு சீராக வந்துகொண்டிருந்தது.

பிரியாவுக்குத்தான் உறக்கம் வரவில்லை.

## 19

பிரியா மேற் கூரையை பார்த்துக்கொண்டே படுத்திருந்தாள். ரெஸ்புட்யூட் ஹோமில் மதுரா இருந்த கோலம் மறுபடியும் மறுபடியும் நினைவுக்கு வந்தது. தான் தவறு செய்துவிட்டாள். கையோடு மதுராவை அழைத்து வந்திருக்கவேண்டும். ஆனால் கணவனிடம் மதுராவைப்பற்றி எந்த விவரமும் சொல்லாமல் எப்படி அழைத்து வரமுடியும்? அவளைப் பார்த்த அதிர்ச்சியில் மூளை கலங்கிவிட்டது. இந்தச் சின்ன வயதில் இவ்வளவு பெரிய மாற்றமா? தனக்கென்று யாரும் இல்லாமல் இருப்பது எவ்வளவு கொடுமை? பார்க்கப் போனால் தான்தான்ம அந்த நிலைமையில் இருந்திருக்க வேண்டும். சொத்தும், பெற்றோர்கள் இருந்தும் மதுராவின் வாழ்க்கை இப்படி சீரழிவானேன்?

கணவன், குடும்பம், குழந்தைகளின் அருமை பிரியாவுக்கு நன்றாகவே தெரியும். இந்த நிமிடம் அதன் மதிப்பு பல மடங்காகி விட்டதுபோல் தோன்றுகிறது.

நாளையே மதுராவை வீட்டுக்கு அழைத்து வந்து டாக்டரிடம் காட்ட வேண்டும். ஒரு வேளை மதுரா இறக்க நேர்ந்தாலும் அவளுக்கு விருப்பமான தன்னுடைய அருகாமையில் அவள் மூச்சு பிரியட்டும். அனாதையாக அவள் சாகக்கூடாது.

பிரியா பக்க வாட்டில் நகர்ந்து கணவனின் கைவளைவில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். கணவனின் ஸ்பரிசம், பக்கத்தில் அவன் இருக்கிறான் என்ற எண்ணம் அவள் மனதிற்கு தைரியத்தைத் தருவதுபோல் இருந்தது.

விக்ரம் தன்னைத் திருமணம் செய்துகொண்டது வாழ்க்கையில்தான் கொஞ்சம் கூட எதிர்பார்க்காத ஒரு நிகழ்ச்சி. இப்பொழுது நினைத்துப் பார்த்தாலும் ஏதோ கனவு போல் தோன்றுகிறது.

தாயின் விருப்பத்திற்கு மாறாக விக்ரம் பிரியாவை கல்யாணம் செய்துகொண்டான். திருமணம் ஆனதும் பிரியா செய்த முதல் காரியம் விக்ரம் தாயின் கோபத்தை குறைத்து, அந்த அம்மாளின் அன்பை பெறுவது.

இப்பொழுது அந்த அம்மாளுக்கு மகனைவிட மருமகளிடம்தான் அன்பு அதிகம்.

"என் மகன் விக்ரம் இருக்கிறானே, சில விஷயங்களில் எவ்வளவு தாராளமாக நடந்து கொள்வானோ, சில விஷயங்களில் ரொம்ப பிடிவாதமாக இருப்பான். சட்டென்று கோபம் வராது அவனுக்கு. வந்தால் லேசில் போகாது. மற்றவர்களை போல் கத்தி, கூச்சல் போடமாட்டான். மௌனச்சாமியாராக ஒதுங்கிவிடுவான். நம்மையும் ஒதுக்கி விடுவான். நீதான் கவனமாக இருக்க வேண்டும்." ரூபாதேவி மருமகளுக்கு அறிவுரை வழங்கினாள்.



"சரி அத்தை" பிரியம்வதா புன்முறுவலுடன் சொன்னாள்.

ரூபா தேவி மகன் மீது உயிரையே வைத்திருந்தாள். சொத்து, சுகம் படைத்த தன் மகனின் தனித்தன்மைக்கு ஏற்ற பெண் கிடைக்கவில்லை என்றால் அவனுடைய வாழ்க்கையுடன் தன்னுடைய வாழ்க்கையும் நரகம் ஆகிவிடும் என்று பயந்தாள்.

எந்த விஷயமாக இருந்தாலும் மாமியாரிடம் கேட்டுக் கொண்டு செய்வதை பிரியா வழக்கமாக வைத்துக்கொண்டாள். மாமியாரும் மருமகளும் நெருக்கமாகிவிட்டார்கள்.

சில சமயம் விக்ரம் "அம்மாவை உன் பக்கம் இழுத்துக் கொண்டு எனக்கு தீராத குறையை ஏற்படுத்திவிட்டாய்" என்று நொந்து கொள்வது போல் சொல்வான்.

"ஏன்? என்ன ஆகிவிட்டது?" பிரியா பதட்டத்துடன் கேட்பாள்.

"அம்மாவின் விருப்பத்திற்கு மாறாக உன்னைத் திருமணம் செய்துகொண்டேன் என்று பெருமை பீற்றிக் கொள்ள முடியாத விதமாக நீ அம்மாவை உன் பக்கம் இழுத்துக்கொண்டு விட்டாயே. அதைத்தான் சொல்கிறேன்."

பிரியா கணவனின் கையைப் பற்றிக்கொண்டாள். "விகீ! உண்மையைச் சொல்லு. என் காரணமாக அம்மா உன்னை விட்டு பிரிந்திருந்தால் வாழ்க்கை இந்த அளவுக்கு உனக்கு நன்றாக இருப்பதாக தோன்றுமா?"

விக்ரம் பிரியாவின் கையை எடுத்து தன் கன்னத்தில் பதித்துக் கொண்டான்.

"ஊஹூம்." என்னுடைய பலவீனம் என்று சொன்னால் அது என் அம்மாதான். அவளை லட்சியம் செய்யாதது போல் வெளியில் தென்படுவேனே தவிர அவள் மனம் எதற்காவது வேதனைப்பட்டால் என்னால் தாங்க முடியாது. பிரியா! உனக்குத் தெரியாது அப்பா சின்ன வயதிலேயே இறந்து போய் விட்டார். அன்று முதல் அம்மா எனக்காகத்தான் வாழ்ந்தாள்.

பேபி கேர் சென்டரில் உன்னைப் பார்த்தபிறகு எனக்குத் தோன்றியது பாரபட்சமில்லாமல் எல்லாக் குழந்தைகளிடமும் ஒரே விதமாக அன்பு செலுத்தும் உன் சுபாவம் என்னை ஈர்த்தது. ஏன் என்றால் என்னுடைய இந்த வாழ்க்கை என் ஒருத்தனை சேர்ந்தது மட்டுமே இல்லை. அம்மா இருக்கிறாள். அப்பாவின் பக்கத்து உறவினர்கள், சித்தப்பா, பெரியப்பா என்று வந்து போகும் மக்கள். அத்தையின் கணவர் இறந்து போன பிறகு அந்தக் குடும்பமும் என்னைச் சார்ந்துதான் இருக்கிறது..." இவர்களைத் தவிர வியாபாரரீதியாக தெரிந்தவர்கள், நண்பர்கள் எல்லோரும் என் வாழ்க்கையுடன் பிணைந்து விட்டார்கள். என்னைச் சேர்ந்தவர்களை தன் மனிதர்கள் என்று மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் பெண்தான் எனக்கு மனைவியாக வர வேண்டும். என் பொறுப்புகளை, கடமையை முழுவதுமாக புரிந்துகொண்டு ஒத்துழைப்பு தரவேண்டும். திருமண வாழ்க்கை என்பது நான்கு சுவர்களுக்குள் அடங்கிவிடும் சமாசாரம் என்றோ, வெளி உலக வாழ்க்கைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்றோ, நான் நினைக்கவில்லை. என் உடலுக்கும், உள்ளத்திற்கும் இதம் தரும் மனைவி வேண்டும்."

பிரியா அவன் சொன்னதை கவனமாக கேட்டுக்கொண்டாள். அன்று முதல் அவன் விருப்பத்திற்கு மாறாக பிரியா எந்தக் காரியமும் செய்தது இல்லை. தன்னிடமிருந்து எதை எதிர்பார்த்து விக்ரம் தன்னை மனைவியாக ஏற்றுக்கொண்டானோ அதற்கு ஏற்றாற் போல் நடந்து கொண்டாள். அவனுடைய பிரச்னைகளை, பொறுப்புகளை பகிர்ந்துகொண்டாள்.

வேலை அதிகமாக இருப்பதால் சிலசமயம் அவனால் சொன்ன நேரத்திற்கு வீட்டுக்கு வரமுடியாமல் போனதுண்டு. அது போன்ற சமயங்களில் கோபித்துக்கொள்ளாமல் இன் முகத்துடன் வரவேற்பாள். "சாரி பிரியா. என்னால் வரமுடியவில்லை." அவன் மன்னிப்பு கேட்டுக்கொண்டால் "சாரி சொல்லும் அளவுக்கு என்ன ஆகிவிட்டது? வாழ்நாள் முழுவதும் சேர்ந்து இருக்கப் போகிறோம். மற்றவர்களுக்குச் செய்வது போல் அப்பாயிண்ட்மெண்ட் பிக்ஸ் செய்து கொள்ள வேண்டுமா என்ன?"



புன்முறுவலுடன் சொல்லும் மனைவியின் கண்களுக்குள் ஊடுருவுவது போல் பார்ப்பான். அந்தக் கண்களில் கொஞ்சம் கூட நடிப்போ, போலித்தனமோ இருக்காது. பிரியா எது சொன்னாலும் மனபூர்வமாகத்தான் சொல்லுவாள்.

அடுத்த நிமிடம் அவனுடைய பலமான கரங்களுக்கு இடையில் சிறைப்பட்டு விடுவாள். தான் எதிர்ப்பார்த்ததைவிட, விரும்பியதைவிட உயர்ந்து விட்ட மனைவியின் தனித்தன்மை இது போன்ற சந்தர்ப்பங்களில் வெளிப்படும்போது அவனுக்கு சந்தோஷமாக இருக்கும். மூச்சு முட்டும் அளவுக்கு இறுக்கமாக அணைத்துக்கொண்டு மனைவியை திக்கு முக்காட வைப்பான்.

"நீ இந்த அளவுக்கு அனுசரணையாக இருப்பாய் என்று நினைக்கவில்லை." விக்ரம் பாராட்டும் போது பிரியாவுக்கு சந்தோஷமாக இருக்கும். இந்த சந்தோஷம் வாழ்க்கையில் கடவுள் தனக்குக் கொடுத்த பரிசு என்று நினைத்துக்கொள்வான்.

கணவன், குடும்பம், மாமியார்... இதுதான் பிரியாவின் உலகம். கணவனிடம் உயிரையே வைத்திருந்தாள். தன்னால் அவனுடைய மதிப்பும் மரியாதையும் மேலும் உயரவேண்டும்.

அப்படியே வருடங்கள் ஓடிவிட்டன. திவ்யா, வருண் பிறந்தார்கள். வீட்டிலும் சரி வெளியிலும் சரி குழந்தைகளை விரும்பாதவர்களே கிடையாது. ஒழுக்கமும், நல்ல பழக்க வழக்கங்களும், புத்திசாலித்தனமும் ஒருங்கே இணைந்து சிறப்பாக விளங்கினார்கள்.

உறவினர்களுக்கு இடையில் விக்ரம், பிரயம்வதாவுக்கு தனி மதிப்பும், மரியாதையும் இருந்தன. நண்பர்கள் கூட பொறாமை படும் அளவுக்கு அவர்களுடைய தாம்பத்திய

வாழ்க்கை சிறப்பாக இருந்தது. பிரியா போன்ற மனைவி கிடைத்தது. விக்ரமின் அதிர்ஷ்டம்தான் என்று நண்பர்கள் அடிக்கடி சொல்லுவார்கள்.

உறவினர்களின் பாராட்டுகளை, விமரிசனங்களை விக்ரம் புன்முறுவலுடன் கேட்டுக்கொள்வான். யார் எப்படி நினைத்துக் கொண்டாலும் அவனுக்குக் கவலை இல்லை. தன்னுடைய வாழ்க்கை இவ்வளவு மகிழ்ச்சியாக இருப்பதற்குக் காரணம் பிரியம்வதாதான் என்று அவனுக்கு நிச்சயமாக தெரியும்.

மறுநாள் காலை 9 மணி. உணவு மேஜை அருகில் விக்ரம், திவ்யா, வருண் நன்றாக அமர்ந்து டிபன் சாப்பிட்டுக்கொண்டு இருந்தார்கள். குழந்தைகள் இருந்தால் போதும் அங்கே கொண்டாட்டம்தான். குழந்தைகளுக்கு ஏற்றவாறு பஞ்ச தந்திர கதைகளை விக்ரம் சொல்லுவான். வருண் முதல் நாள் இரவு ஹோம்வர்க் செய்யாமல் புதிதாக வாங்கி வந்த காமிக் புத்தகங்களை படித்துக்கொண்டு அப்படியே உறங்கி விட்டான். திவ்யா அப்படி இல்லை. வீட்டுப் பாடத்தை முடித்த பிறகுதான் மற்ற வேலைகளை செய்வாள். படுக்கையை சரிசெய்வதில், பொருட்களை ஒழுங்குப் படுத்துவதில் அம்மாவுக்கு உதவியாக இருப்பாள். பென்சில், ரப்பர் போன்றவற்றைத் தொலைக்காமல் பத்திரமாக வைத்துக்கொள்வாள்.

வருண் அப்படி இல்லை. பொருட்களை எங்கே வேண்டு மானாலும் வைத்து விடுவான். தன்னுடையது கிடைக்கவில்லை என்றால் உடனே திவ்யாவுடையதை எடுத்துக் கொள்வான். பிரியம்வதா மகனுக்கு நல்ல விதமாக சொல்லி புரிய வைக்க முயற்சி செய்வாள். இன்னொரு முறை இப்படிச் செய்தால் பேசமாட்டேன் என்று விக்ரம் மகனை மிரட்டுவான். தாயின் கெஞ்சலை விட தந்தையின் மிரட்டல்தான் வருணை பணிய வைக்கும்.

பிரியா காபி கலந்து எடுத்து வந்து கணவனிடம் கொடுத்தாள். "நான் பத்து மணிக்கு மேல் மதர் தெரஸா ஹோமுக்கு போய் வருகிறேன்" என்றாள்.



விக்ரம் கேட்டுக்கொண்டானே தவிர பதில் எதுவும் சொல்லவில்லை.

குழந்தைகள் ஸ்கூல் பேக்கை எடுத்து வருவதற்காக உள்ளே போனார்கள். பிரியா கணவனின் அருகில் வந்தாள். குழந்தைகள் எதிரில் கணவனுடன் நெருக்கமாக இருப்பதை பிரியா விரும்ப மாட்டாள்.

விக்ரமின் தோளில் கையைப் பதித்துக்கொண்டே "விகி! நான்... நான்" மேற்கொண்டு சொல்லமுடியாமல் பாதியிலேயே நிறுத்தினாள்.

"என்ன விஷயம்?" நயமான குரலில் கேட்டான்.

"மதுராவை நம் வீட்டுக்கு அழைத்து வருகிறேன். என்னால் முடிந்த உதவியை செய்கிறேன். ஒருகால் குணமடையா விட்டாலும், கடைசி காலத்தை என்னிடம் கழித்த திருப்தியாவது கிடைக்கட்டும்."

விக்ரம்க்கு மனைவியின் மனநிலை புரிந்தது. தன்னுடைய படிப்புக்கு உதவிசெய்த சிநேகிதிக்கு ஆதரவு தர வேண்டும் என்று பிரியா நினைப்பது தவறு இல்லையே. தோளில் படிந்திருந்த பிரியாவின் கையை ஆதரவுடன் அழுத்தினான்.

"பிரியா! உன் சிநேகிதியின் நிலைமை ரொம்பவும் மோசமாக இருக்கிறது. இந்த நிலையில் அவளை நம் வீட்டில் வைத்துக் கொள்வது சரி இல்லை. அந்த போனை எடு" என்றான்.

பிரியம்வதா போனை எடுத்து வந்தாள்.

அவன் நம்பரை டயல் செய்து விட்டு "ஹலோ! அருணா நர்ஸிங் ஹோம்" என்றான். மறுமுனையில் போனை எடுத்ததும் டாக்டர் மூர்த்தியை அழைக்கச் செய்து மதுராவை ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்கான ஏற்பாடுகளை செய்யச் சொன்னான். போனில் பேசி முடித்த பிறகு மனைவியின் பக்கம் திரும்பினான்.

"பிரியா! மதுரா பற்றி இனி நீ கவலைப்பட வேண்டியது இல்லை. அவளை தனியார் நர்ஸிங் ஹோமில் சேர்ப்பதற்கான ஏற்பாடுகளை டாக்டர் மூர்த்தி கவனித்துக்கொள்வார். மதியம் ஒரு மணிக்கு நான் வருகிறேன். இருவருமாக சேர்ந்து போய் பார்த்துவிட்டு வருவோம் என்றான்.

பிரியம்வதா தலையை அசைத்தாள். அவள் கண்களில் ஈரமும், முகத்தில் மகிழ்ச்சியும் பரவியிருந்தன.

குழந்தைகள் ஓடி வந்தார்கள். "பை மம்மீ!"

தாயின் கன்னத்தில் முத்தம் பதித்துவிட்டு காரை நோக்கி ஓடினார்கள். அவர்களுடன் போகப் போன விக்ரம் பின்னால் திரும்பிப் பார்த்தான். பிரியா அப்படியே நின்றிருந்தாள். அருகில் சென்று மனைவியின் கன்னத்தில் முத்தம் பதித்துவிட்டு. "வரட்டுமா" தாழ்ந்தகுரலில் சொன்னான்.

"தாங்க்ஸ்"

"எதற்கு?"

"மதுராவுக்கு உதவி செய்ததற்கு."

"உன் சிநேகிதி என்பதால் அவளுக்கு உதவி செய்யும் கடமை எனக்கும் இருக்கிறது இல்லையா. ரொம்பவும் நன்றிக்கடன் பட்டுவிட வேண்டாம். மகாராணியை போல் ஆணையிட்டு இந்த சேவகனிடம் வேலை வாங்கிக் கொள். ஓ.கே.வா."

லேசாக குனிந்து கையை மடக்கி அவன் சொன்ன விதத்தைக் கண்டு பிரியா சிரித்து விட்டாள். வெளியிலிருந்து குழந்தைகள் கார் ஹாரனை அழுத்தும் சத்தம் கேட்டது.

"போய் வருகிறேன். ஒரு மணிக்கு வந்து விடுகிறேன்." மனைவியிடம் விடை பெற்றுக்கொண்டு விக்ரம் ஓட்டமும் நடையுமாக விரைந்தான்.

பிரியம்வதா வராண்டாவுக்கு வந்தாள்.



விடாமல் ஹாரனை அழுத்திக்கொண்டிருந்த வருண் தந்தை வருவதை பார்த்துவிட்டு நிறுத்தினான்.

விக்ரம் டிரைவிங் சீட்டில் அமர்ந்துகொண்டு காரைக் கிளப்பினான். குழந்தைகள் கையை ஆட்டினார்கள்.

அவர்கள் போன பிறகும் பிரியா அங்கேயே நின்றிருந்தாள்.

# 20

சொன்னது போல் விக்ரமால் மதியம் வரமுடியவில்லை. அலுவலகத்திலிருந்து போன் செய்தான்.

"பிரியா! என்னால் வரமுடியாது. ராஜேஷின் டிரைவருடன் காரை அனுப்புகிறேன். சற்றுமுன்தான் ஆஸ்பத்திரிக்கு போன் செய்தேன். மதுராவை அழைத்து வந்து விட்டார்களாம். நீ போய்ப் பார்த்துவிட்டு வா" என்றான்.

"சரி" என்றாள்.

விக்ரம் போனை வைத்துவிட்டான். பிரியா நகரப் போனாள். மறுபடியும் போன் மணி ஒலித்தது.

"ஹலோ" என்றான்.

விக்ரம்தான் பேசினான். "சொல்ல மறந்துட்டேன் பிரியா. இரவு டின்னருக்கு மூர்த்தி, ஜெயின் மற்றும் இருவர் நம் வீட்டுக்கு வரப் போகிறார்கள். ஸ்பெஷலாக எதுவும் செய்யத் தேவை இல்லை. வழக்கம் போல் செய்தால் போதும்" என்றான்.

"ஓ.கே."

பிரியா போனை வைத்துவிட்டு சமையல் அறைக்குச் சென்றாள். சமையல் காரியிடம் இரவு டின்னருக்கு விருந்தாளிகள் வரப்போவதாகவும், என்ன என்ன சமைக்க வேண்டும் என்று மெனுவை சொன்னாள். விகி அழைத்து வரும் விருந்தாளிகளின்

எண்ணிக்கை சில சமயம் கூடவும் வாய்ப்பு உண்டு. அதனால் எப்போதும் இரண்டு பேருக்கு அதிகமாகவே செய்யச் சொல்வது வழக்கம்.

பிரியா அவசர அவசரமாக புடவையை மாற்றிக் கொண்டிருக்கும்போது வாசலில் கார் ஹாரன் சத்தம் கேட்டது. பிரியா ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். டிரைவர் கபூர் வந்து கொண்டிருந்தான்.

பிரியா சமையல்காரியை அழைத்து வீட்டின் பொறுப்பை ஒப்படைத்தாள். "குழந்தைகள் வந்ததும் பிஸ்கெட், பாலையும் கொடு. டிபன் சாப்பிடாமல் படுத்திடப் போகிறார்கள். மம்மீ வேலையாக வெளியில் போயிருக்கிறாள் என்று சொல்லு. அவர்கள் வரும் நேரத்திற்குள் வந்து விடுவேன் என்று நினைக்கிறேன்." பேக்கை கையில் எடுத்துக்கொண்டே சொன்னாள்.

"சரிங்கம்மா" அம்புஜம் தலையை ஆட்டினாள். பிரியா தனியாக சொல்ல வேண்டிய தேவையே இல்லை. குழந்தைகளுக்கு எப்பொ என்ன கொடுக்க வேண்டும் என்று அவளுக்கு நன்றாகவே தெரியும்.

கபூர் பிரியாவைப் பார்த்ததும் வணக்கம் தெரிவித்தான், பிரியா ஏறுவதற்கு வசதியாக கார் கதவை திறந்து பிடித்துக்கொண்டான். பிரியா உட்கார்ந்து கொண்டதும் டிரைவர் சீட்டில் அமர்ந்துகொண்டு ஓட்டத்தொடங்கினான்.

"கபூர்! உன் மனைவி எப்படி இருக்கிறாள்? குழந்தை நன்றாக இருக்கிறானா?" பிரியா கேட்டாள்.

"இரண்டு பேரும் நல்லா இருக்காங்கம்மா. எல்லாம் அய்யா போட்ட பிச்சை. இருபத்தோராவது நாள் ஆன பிறகு குழந்தையை அழைத்துக்கொண்டு உங்கள் வீட்டுக்கு வருவதாக இருக்கிறோம்."

பிரியீா புன்முறுவலுடன் தலையை அசைத்தாள்.



நான்கு நாட்களுக்கு முன் நள்ளிரவில் கபூர் போன் செய்தான். ராஜேஷ் ஊரில் இல்லையாம், அவன் மனைவிக்கு டாக்டர் சொன்ன தேதியை விட பத்து நாட்களுக்கு முன்னதாகவே இடுப்புவலி எடுத்து விட்டது. இதற்கு முன் நான்கு குழந்தைகள் பிறந்தாலும் ஒன்றுகூட தங்கவில்லை. வழக்கமாக பார்க்கும் டாக்டரும் வெளியூருக்கு போயிருக்கிறாள்.

அத்தனை தூக்கக் கலக்கத்திலும் விக்ரம் கபூர் சொன்னதை கவனமாக கேட்டுக்கொண்டான். "கவலைப்பட வேண்டாம். காரை எடுத்துக்கொண்டு நானே வருகிறேன்" என்று சொல்லி விட்டு கார் சாவியை எடுத்துகொண்டு கீழே இறங்கினான்.

விக்ரம் ஒரு மணி நேரம் கழித்து திரும்பினான். அவன் வரும் வரையில் பிரியா விழித்துக்கொண்டுதான் இருந்தாள்.

கபூரின் மனைவியை டாக்டர் மூர்த்தியின் மனைவி வள்ளியின் நர்ஸிங் ஹோமில் சேர்த்தார்களாம். ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று டாக்டர் சொல்லியிருக்கிறாள். விக்ரம் கபூரிடம் கொஞ்சம் ரொக்கம் கொடுத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பியிருக்கிறான்.

விடியற்காலை நாலரை மணிக்கு போன் மணி ஒலித்தது. பிரியா எடுத்தாள். கபூர்தான் பேசினான்.

"ஆபரேஷன் செய்து குழந்தையை எடுத்தார்கள். ஆண் குழந்தை, தாயும் சேயும் நலம். அய்யாவுக்கு என் நன்றியை, வணக்கத்தை சொல்லுங்கம்மா" கபூரின் குரல் தழுதழுத்தது. "இந்த இரவு வேளையில் அய்யாவே சுயமாக காரில் வந்து உதவி செய்திருக்காங்க."

பிரியா போனை வைத்துவிட்டு விகியின் அருகில் வந்து செய்தியை தெரிவித்தாள்.

"நன்றாக இருக்கிறது. சமயம் என்று வந்தால் ஒருத்தருக்கு ஒருத்தர் உதவி செய்து கொள்ளாவிட்டால் எப்படி?" விக்ரம் சொன்னான். கபூரிடமிருந்து போன் வரும் வரையில் அவன்

விழித்துக்கொண்டுதான் இருந்தான். யாருக்காவது உதவி செய்யும் போது அவன் எடுத்துக் கொள்ளும் கவனம், அக்கறை அப்படிப்பட்டவை.

கபூரின்மனைவி மனதளவில் ரொம்பவும் தளர்ந்து போயிருந்தாள். ஹிஸ்டீரியா வந்ததுபோல் நடந்துகொண்டாள். விக்ரம், பிரியா ஆஸ்பத்திரிக்கு போய் அவளைப் பார்த்து தைரியம் சொல்லிவிட்டு வந்தார்கள். அதற்குப் பிறகு இப்பொழுதுதான் கபூரைப் பார்க்கிறாள்.

கார் நர்ஸிங் ஹோம் வாசலில் நின்றது.

"நீ போய்க் கொள்ளலாம். அய்யாவை நேராக இங்கே வரச் சொல்லு" என்றாள்.

கபூர் தலை அசைத்து விட்டு காரைக் கிளப்பினான்.

பிரியா நர்ஸிங் ஹோமுக்குள் நுழைந்து ரிசெப்ஷனில் விசாரித்தாள்.

"இரண்டாம் நம்பர் அறையில் இருக்கிறாள்." ரிசெப்னிஸ்ட் சொன்னாள்.

பிரியா இரண்டாம் நம்பர் ரூம் கதவை மெதுவாக திறந்தாள். மதுரா கட்டில் மீது நினைவற்ற நிலைமையில் இருந்தாள். கையில் சலைன் ஏறிக்கொண்டிருந்தது. நர்ஸ் ஊசி அசையாமல் கையை பிடித்துக்கொண்டிருந்தாள்.

பிரியா அருகில் சென்று மதுராவை அழைத்தாள். மதுரா பதில் பேசவில்லை. மதுராவின் உடைகளை மாற்றியிருந்தார்கள். சுத்தமான படுக்கை விரிப்பு.

பிரியா நர்ஸை நகரச் சொல்லிவிட்டு மதுராவின் கை அசையாமல் பிடித்துக்கொண்டாள்.

நர்ஸ் பார்வையாலேயே நன்றியைத் தெரிவித்துவிட்டு வெளியில் சென்றாள்.



மதுராவின் இதழ்கள் ஏதோ சொல்ல முயல்வது போல் அசைந்தன.

"மதுரா! மதுரா!" பிரியா குனிந்து அழைத்தாள்.

இந்த உலகிலேயே இல்லாததுபோல் மதுரா பேசவே இல்லை. நர்ஸ் ஓரிரு முறை வந்து ஊசி போட்டு விட்டு போனாள்.

சற்று நேரம் கழித்து நர்ஸ் மறுபடியும் வந்து "உங்களுக்கு போன் வந்திருக்கும்மா" என்றாள்.

போன் வெளியில் இருந்தது. பிரியா எழுந்து போனாள்.

"ஹலோ" என்றாள்

"ஹலோ பிரியா." விக்ரம் பேசினான்.

"சொல்லுங்க." கணவனின் குரலைக் கேட்டதும் பழக்கப் பட்ட கதியில் சொன்னாள்.

"நீ இன்னும் அங்கேயே இருக்கிறாயா? வீட்டுக்கு வரவே இல்லையே? ஏன்?"

பிரியா திடுக்கிட்டவள் போல் சுற்றிலும் பார்வையை சுழற்றினாள். ஹாஸ்பிடல் முழுவதும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. ட்யூட்டி முடிந்து நர்ஸுகள் மாறி இருந்தார்கள்.

"டைம் என்ன ஆகிறது?"

"டைம் என்னன்னு கேட்கிறாயா? நீ இந்த உலகிலேயே இல்லையா என்ன? இரவு ஒன்பது மணி ஆகிறது. டின்னருக்கு விருந்தாளிகளை அழைத்து வரப் போவதாக சொன்னதை மறந்து விட்டாயா?"

"அடடா! ஒன்பது மணி ஆகி விட்டதா! நான் கவனிக்கவே இல்லை. என் வாட்சி நின்று விட்டது. நீங்க வருவீங்க என்று காத்துகிட்டு இருந்தேன்.

"கிளம்பும்போது ஜெயின் வந்தான். வரமுடியவில்லை."

"நான் இப்பொழுதே கிளம்பி வருகிறேன்." பதட்டத்துடன் சொன்னாள்.

"எப்படி வரப் போகிறாய்? விருந்தாளிகள் இருப்பதால் என்னால் வர முடியாது."

"நான் ஆட்டோவில் வந்து விடுகிறேன்.

"அவ்வளவு கஷ்டப்படத் தேவையில்லை. டாக்டர் மூர்த்தியிடம் சொல்கிறேன். அவர் உன்னை வீட்டில் ட்ராப் செய்துவிடுவார்." விக்ரம் குரலில் எரிச்சல் வெளிப்பட்டது. வேறு எதுவும் சொல்லாமல் போனை வைத்து விட்டான்."

பிரியா குழப்பமாக உணர்ந்தாள். விருந்தாளிகள் வரப் போகிறார்கள் என்ற விஷயத்தை எப்படி மறந்து போனோம்? நேரமாகி விட்டதே?

பிரியா மறுபடியும் மதுராவிடம் வந்தாள். மதுரா லேசாக கையை அசைத்தாள். பிரியா சட்டென்று குனிந்து மதுராவின் கையைப் பற்றிக்கொண்டு "மதுரா!" என்று அழைத்தாள்.

"ஊம்." மதுராவின் குரல் பாலவீனமாக ஒலித்தது.

"மதுரா!" சந்தோஷம் நிரம்பிய குரலில் பிரியா அழைத்தாள்.

மதுரா பற்றுகோலை தேடுவதுபோல் பிரியாவின் கையைப் பிடித்துக்கொண்டாள்.

கதவு அருகில் அரவம் கேட்டது. டாக்டர் மூர்த்தி வந்திருந்தார். பிரியா விருப்பம் இல்லா விட்டாலும் மதுராவின் பிடியிலிருந்து தன்கையை மெதுவாக விடுவித்துக்கொண்டு எழுந்தாள்.

"கவனமாக பார்த்துக்கொள்ளுங்கள். வீட்டுக்குப் போன பிறகு போன் செய்கிறேன். எப்படி இருக்கிறாள் என்று சொல்லுங்க." நர்ஸ் சொன்னாள்.



நர்ஸ் தலையை அசைத்தாள். பத்தாவது நிமிடம் பிரியா வீட்டுக்கு வந்து விட்டாள். மதுராவிடம் இருக்கும்போது நினைவு வரவில்லையே தவிர இப்பொழுது வீட்டின் நினைப்பு வந்ததும் பதட்டமாக இருந்தது. விருந்தாளிகள் வரும் சமயத்தில் தான் வீட்டில் இல்லாமல் போனது குற்றம் செய்து விட்டது போல் தோன்றியது. அம்புஜம் நன்றாகத்தான் சமைப்பாள். ஆனால் மறதி அதிகம். சிலசமயம் உப்பு போட மறந்து விடுவாள். இல்லையா இரண்டு முறை போட்டு விடுவாள். பிரியா அருகில் இருந்து மேற்பார்வையிட்டுக்கொண்டே இருப்பாள்.

ஹாலில் எல்லோரும் அமர்ந்திருந்தார்கள். பிரியா உள்ளே வருவதை பார்த்துவிட்டு "இதென்ன? அண்ணி இத்தனை நேரம் வீட்டில் இல்லையா?" ராஜேஷ் வியப்புடன் கேட்டான்.

பிரியா பொதுவாக மன்னிப்பு கேட்டுக்கொண்டு உள்ளே போய்விட்டாள். உடைகளை மாற்றிக்கொண்டு டைனிங் ஹாலுக்கு வந்தாள். உணவு மேஜைமீது தட்டுகளை எடுத்து வைக்கும்போது அம்புஜம் சொன்னாள்.

"அவங்க வந்து ரொம்ப நேரமாகி விட்டதம்மா. அய்யா உள்ளே வந்துதானே காபி கலந்து எடுத்தும் போனார்."

"அடடா!"

"பாப்பாவுக்கு அய்யாவே சாப்பாடு போட்டாங்க. வருண் தம்பி அம்மா வந்தால் தவிர சாப்பிட மாட்டேன்னு பிடிவாதம் பிடித்தான்."

"அப்படியா? அவன் எங்கே?"

"சித்த முன்னதான் தூங்கிவிட்டான்."

பிரியா குழந்தைகளின் அறைக்குப் போனாள். குழந்தைகள் இருவரும் நல்ல தூக்கத்தில் இருந்தார்கள். பிரியா மகனை எழுப்ப முயற்சி செய்தாள். வருண் மறு பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டானே தவிர எழுந்து கொள்ளவில்லை. அதற்குள் விக்ரம் அங்கே வந்தான்.

"திவ்யா சாப்பிட்டு விட்டாள். வருண் உன் கையால் பரிமாறினால் தவிர சாப்பிட மாட்டானே. அவனை எழுப்பிக் கொள்ளலாம். முதலில் வந்தவர்களை கவனி." விக்ரம் அவசரப்படுத்தினான்.

பிரியா உணவுவகைகளை மேஜை மீது எடுத்து வைத்தாள்.

சாப்பிடும்போது ராஜேஷ் சந்தேகத்தை வெளியிட்டான். "அண்ணி வீட்டில் இல்லை என்றால் நாங்க வந்ததுமே எங்களுக்கு வந்த காபி யார் கலந்தது?"

"நான்தான்." விக்ரம் சொன்னான். ராஜேஷின் கண்கள் வியப்பால் விரிந்தன.

"அந்த காபி கலந்தது நீதானா? அவ்வளவு நன்றாக காபியை கலக்க உனக்குத் தெரியுமா?" இடது கையால் விகியின் கையைப் பற்றி குலுக்கினான்.

"இத்தனை நாளாக உன் திறமையை எனக்குத் தெரியாமல் மறைத்துவிட்டாய். நீ இவ்வளவு நன்றாக காபி போடுவாய் என்று தெரிந்திருந்தால் பிசிநெஸ் பற்றி நான் இவ்வளவு கவலைப்பட்டிருக்க மாட்டேன். பிசிநெஸ் சரியாக இல்லை என்றால் ஷகரான இடம் பார்த்து காபி சென்டர் திறந்து விடலாம்." மேலும் உற்சாகமாக சொன்னான் ராஜேஷ்.

"காபி மட்டும் தானா? சாம்பார், ரசம், அவியல், கூட்டு எல்லாம் கூட எனக்கு செய்யத் தெரியும்." விக்ரம் சொன்னான்.

"அப்பொ நேராக உணவு விடுதியையே தொடங்கி விடலாம்." ராஜேஷின் குரலில் உற்சாகம் பொங்கியது.

"என்ன பேச்சு இது ராஜேஷ்?" பிரியா கடிந்து கொள்வது போல் சொன்னாள்.

"உண்மையிலேயே சொல்கிறேன் அண்ணி. பிசிநெஸ் செய்பவர்களுக்கு வேறு ஒரு தொழிலும் தெரிந்திருப்பது நல்லது. பிசிநெஸ் சரியாக போகவில்லை என்றால், இன்னொரு



தொழிலில் ஈடுபட்டு மனைவி, குழந்தைகளை காப்பாற்ற முடியும் இல்லையா."

ரொம்ப சீரியசயான குரலில் ரமேஷ் சொன்னதைக் கேட்டு எல்லோரும் சிரித்து விட்டார்கள்.

கலகலவென்று பேச்சும், சிரிப்புமாக சாப்பாடு முடிந்தது.

விக்ரம் சிகரெட் பாக்கெட்டுகளுடன் உள்ளே வந்தான். பிரியா போன் அருகில் நின்று பேசிக்கொண்டிருந்தாள்

"ஹலோ! மதுரா தூங்கிக் கொண்டு இருக்கிறாளா. மருந்து நேரத்தோடு கொடுத்தீங்க இல்லையா. ஓ.கே." என்று போனை வைத்து விட்டாள்.

"வந்து ஒரு மணிநேரம் கூட ஆகவில்லையே." விக்ரம் சிகரெட் பாக்கெட்டுகளுடன் உள்ளே சென்று கொண்டே கேட்டான்.

விக்ரம் விருந்தாளிகளுடன் முன் அறையில் பேசிக் கொண்டிருந்தபோது உள்ளே பிரியா அம்புஜத்திடம் கேட்டாள்.

"அம்புஜம்! சமையல் எப்படி செய்தாயோ என்று பயந்து கொண்டே இருந்தேன். நன்றாக இருக்குன்னு எல்லோரும் ஏகமனதாக பாராட்டி விட்டார்கள். நான் அருகில் இல்லை என்றால் பிரம்மாதமாக செய்வாய் போல் இருக்கே."

"அப்படி இல்லை அம்மா. நீங்க கோபித்துக் கொள்ள வில்லை என்றால் ஒரு சின்ன விஷயம்."

"என்ன சொல்லு?"

"சாம்பார், ரசம் எல்லாம் சரியாக இருக்க வேண்டுமே என்று முன்னாடியே ருசி பார்த்து விட்டு தேவைப்பட்டதை போட்டேன். நான் செய்தது தவறுதான் என்றாலும் அய்யாவின் மதிப்பைக் காப்பாற்ற எனக்கு வேறுவழி தெரியவில்லை.

நீங்களாவது வந்து விடுவீர்கள் என்று பார்த்தால் வரும் வழியாக தெரியவில்லை." அம்புஜம் தலையைக் குனிந்து கொண்டு சொன்னாள்.

பிரியம்வதா லேசான சிரிப்பொன்றை உதிர்த்தாள்.

இந்த வீட்டில் அப்படி நடப்பது இதுதான் முதல்தடவை. அம்புஜம் செய்தது தவறுதான் என்றாலும் அதற்குக் காரணம் தான்தானே. இனிமேல் இது போன்று நடப்பதற்கு இடம் கொடுக்கக்கூடாது.

அன்று இரவு வருணை சாப்பிட வைக்க பிரியா செய்த முயற்சி தோல்வி அடைந்தது. பிரியாவுக்கும் சாப்பிட பிடிக்கவில்லை. தன்னால்தான் வருண் சாப்பிடாமல் படுத்துவிட்டான் என்ற வருத்தம் அவள் மனதில் பரவியிருந்தது.

இரவு ரொம்ப நேரமாகிவிட்டது. விருந்தாளிகள் எல்லோரும் போய் விட்டார்கள். அவர்களை வழி அனுப்பிவிட்டு விக்ரம் படுக்கை அறைக்குள் வந்தான். பிரியம்வதா போனில் பேசிக்கொண்டு இருந்தாள். "ரூம் நம்பர் இரண்டு நர்ஸைக் கூப்பிடுங்கள் ப்ளீஸ்."

விகி உடைகளை மாற்றிக்கொண்டு கட்டில்மீது படுத்துக் கொண்டான். வழக்கம் போல் அவன் மார்பில் சாய்ந்துகொள்ள பிரியா வரவில்லை. இரவு எத்தனை நேரம் ஆனாலும் சரி பிரியா கணவனின் மார்பில் தலையை சாய்த்துக்கொண்டு உறங்குவதுதான் வழக்கம். பிறகு எப்பொழுதோ விழிப்பு வந்த போது தலையணையில் சரிந்து படுத்துக்கொள்வாள்.

பிரியா இன்று வரவில்லை. போனில் பேசிக் கொண்டிருந்தாள்.

விக்ரம் தலைக்குக் கீழே கைகளை வைத்துக்கொண்டு மனைவியையே பார்த்துக்கொண்டிருந்தான். டின்னர் முடிந்து,



போகும்போது ராஜேஷ் சொன்னது நினைவுக்கு வந்தது. "பிரதர்! நீ ரொம்ப கொடுத்து வைத்தவன். உங்க வீட்டில் டின்னர் என்றாலே கலகலவென்று பொழுது போய்விடும். என் மனைவியைப் பற்றி நான் குறை சொல்வதாக நினைக்காதே. யாராவது விருந்துக்கு வந்தால் போதும் என்னைப் பற்றி குற்றப் பத்திரிகை படிக்கத் தொடங்கி விடுவாள். கணவனால் தனக்குக் கொஞ்சம்கூட சுகம் இல்லை என்று புலம்புவாள். எனக்கு வாய்த்தவளைப் பார்க்கும்போது கல்யாணமே செய்து கொள்ளக்கூடாது என்று ஆண்களிடம் பிரசாரம் செய்யத் தோன்றும். உன் குடும்பத்தைப் பார்க்கும்போது 'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம்' என்று பாடத் தோன்றும்" என்றான்.

இது போன்ற புகழ்ச்சிகளை அடிக்கடி கேட்பது விகிக்கு வழக்கம்தான். ஆனால் இந்த நிமிடம் பிரியம்வதா இன்னும் அபூர்வமாகத் தோன்றினாள்.

பிரியா இன்னும் போனில் பேசிக்கொண்டிருந்தாள். "நர்ஸ்! நான்தான். பிரியா பேசுகிறேன். பேஷண்ட் எப்படி இருக்கிறாள்?"

மறுமுனையில் சொன்னதை கவனமாக கேட்டுக் கொண்டாள். "அப்படியா? நீங்க கொஞ்சம் கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள்." என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டு பின்னால் திரும்பினாள்.

கட்டில் மீது படுத்திருந்த விக்ரம் புன்முறுவலுடன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். வலுக்கட்டாயமாக தூக்கத்தை அடக்கிக்கொண்டிருப்பது போல் கண்கள் பாரமாக இருந்தன.

"நீங்க வந்து ரொம்ப நேரமாகி விட்டதா? நான் கவனிக்கவே இல்லை" என்றாள்.

"நீ மதுராபுரியில் இருந்தாய். என்னதான் ஆருயிர் சிநேகிதி என்றாலும் கணவன் வந்ததைகூட கவனிக்காவிட்டால் எப்படி?"

பிரியா வந்து கட்டில் மீது அமர்ந்து கணவன் மார்பில் தலையைச் சாய்த்துகொண்டாள்.

"விகி! இன்றிலிருந்து எனக்கு மூன்று குழந்தைகள் வருண், திவ்யாவுடன் அவளும் எனக்கு ஒரு குழந்தைதான். மதுராவை பார்த்துக்கொள்ள வேறு யார் இருக்கிறார்கள்?" என்றாள்.

விக்ரம் மனைவியின் தலையை வருடிவிட்டான். "சிநேகிதியை பார்த்துக்கொள்ளும் மும்முரத்தில் கணவனை மறந்து விடப் போகிறாய்."

"தயவு செய்து மதுராவை ஒன்றும் செல்லாதீங்க. உங்களுக்கு எந்த இடைஞ்சலும் வராமல் நான் பார்த்துக்கொள்கிறேன்." என்றாள்.

விக்ரம்க்கு மனைவியை மேலும் சீண்டிப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. ஆனால் தூக்கம் தூக்கம் கண்களை அழுத்தியதால் அந்த எண்ணத்தை கை விட்டான். அவன் கை பிரியாவின் கழுத்தைச் சுற்றிலும் படிந்தது.

"விகி!"

"ஊம்."

"மதுரா கொஞ்சம் தேறிக்கொண்டதும் அவளை நம் வீட்டுக்கு அழைத்து வருவோம்."

"இப்பொ தூக்கம் வருகிறது. நாளை காலையில் பேசிக் கொள்ளலாம். குட் நைட்."கண்களைத் திறக்காமலேயே சொன்னான்.

பிரியம்வதாவுக்கு உடனே தூக்கம் வரவில்லை. மதுராவைப் பற்றி யோசித்துக்கொண்டு இருந்தாள்.

# 21

மதுராவின் கண் இமைகள் மெதுவாகத் திறந்துகொண்டன. யாரோ அருகில் குனிந்து மதுரா! மதூ" என்று அழைத்துக் கொண்டு இருந்தார்கள்.

"ஊம்." சக்தியை திரட்டிக்கொண்டு சொன்னாள்.

"மதுரா!"

"யாரு?"

"நான்தான் பிரியா. உன் சிநேகிதி. மதூ! என்னை அடையாளம் தெரிகிறதா?" நட்பு கலந்த குரலில் சொன்னாள்.

"பிரியாவா?"

"ஆமாம். என்னைத் தெரிகிறதா? நான் பேசுவது புரிகிறதா?"

"புரிகிறது. பிரியா... நீ...." மதுரா எழுந்து கொள்ளப் போனாள்.

"எழுந்து கொள்ள வேண்டாம். உன் உடம்பில் தெம்பு இல்லை."

"எழுந்துகொள்ள வேண்டாம். உன் உடம்பில் தெம்பு இல்லை."

"நீ... நீ என்னிடம் எப்படி வந்தாய்?" பலவீனமான குரலில் கேட்டாள் மதுரா.

"நீதான் என்னிடம் வந்திருக்கிறாய். உன்னை என்னிடம் அழைத்து வரச் செய்தேன். ஒரு முறை கண்களைத் திறந்து பார். எங்கே இருக்கிறாய் என்று புரியும்."

மதுராவால் கண்களை முழுவதுமாக திறக்க முடியவில்லை. வலுக்கட்டாயமாக திறந்தாலும் பார்வை மங்கலாக தெரிந்தது.

"எங்கே இருக்கிறேன்?" மயக்கம் இன்னும் தெளியாததால் பேச்சு குழறியது.

"எங்க வீட்டில் என் அருகில்"

"உன் வீட்டிலா?"

"ஆமாம்."

மதுரா குழப்பமாக பார்த்தாள். ஒரு முறை நெற்றியைச் சுளித்துவிட்டு "ஊஹூம். நான் கனவு காண்கிறேன்" என்று முணுமுணுத்தாள்.

"இது கனவு இல்லை மதுரா... உண்மையிலேயே நீ என்னிடம்தான் இருக்கிறாய். கண்களைத் திறந்து என்னைப் பார். ஒரு வாய் ஹார்லிக்ஸ் குடி" பிரியா மதுராவை எழுப்பி ஹார்லிக்ஸை குடிக்கச் செய்தாள். கொஞ்சம் ஹார்லிக்ஸ் உள்ளே போனதும் மதுராவுக்கு தெம்பு வந்தது. கண்களுக்குமுன் தூனியம் தென்பட்டதுமாறி இப்பொ காட்சி தெரிந்தது.

அறை முழுவதும் பார்வையை சுழற்றினாள். மேஜை மீது ஏதோ பறக்கிறதே. மேகங்களா? இல்லை ... இல்லை ... ஜன்னல் கர்டென்.

"முழுவதுமாக குடித்துவிடு'' பிரியா வற்புறுத்தி ஹார்லிக்ஸை முழுவதுமாக குடிக்க வைத்தாள்.

மதுராவுக்கு முழுவதுமாக விழிப்பு வந்துவிட்டது. தலையை உயர்த்தி பார்த்தாள். பிரியாவின் மூக்கில் ஒற்றைகல் வைர மூக்குத்தி பளிச்சிட்டது.

"பிரியா!"



"மதுரா! என்னை அடையாளம் புரிந்துகொண்டாயா. அப்பாடா" பிரியா மதுராவை அணைத்துக்கொண்டாள்.

"நான்... நான் உயிரோடுதான் இருக்கிறேனா?"

"உயிரோடுதான் இருக்கிறாயே என் அருகிலதான் இருக்கிறாய்." பிரியா மதுராவின் தோளைச் சுற்றியிருந்த கைகளை மேலும் இறுக்கினாள்.

"மதூ! இன்னிக்கு எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா?"

மதுரா பிரியம்வதாவின் மடியில் முகம் புதைத்துக் கொண்டு அழத் தொடங்கினாள்.

"இது... இது உண்மைதானா?"

"உண்மைதான் மதுரா"

"அப்பொ இனி நான் தனியாள் இல்லை." மதுராவுக்கு மூச்சு இரைத்தது. "இனி நான் செத்துப் போனாலும் கவலை இல்லை. சீக்கிரமாக செத்துப் போனால் நன்றாக இருக்கும்."

"என்ன பேச்சு இது மதுரா?" மதுரா மேலும் விசும்பினாள்," பிரியா என்னை விட்டுவிட்டு போகமாட்டாய் இல்லையா. நான் ரொம்ப நாள் இருக்கப் போவதில்லை. என்னை தனியாக விட்டுவிடாதே பிரியா."

"மதூ! நீ முதலில் தூங்கும்மா. நர்ஸ்! மருந்துகொண்டு வாங்க." பிரியா நர்ஸ்க்குக் குரல் கொடுத்தாள்.

நர்ஸ் கொடுத்த மருந்தை மதுரா குடித்து முடித்தாள்.

"மதுரா! தூங்கு. இங்கே உனக்கு எந்த பயமும் இல்லை."

"நான் உன்னிடமே இருக்கிறேன். எங்கேயும் போக மாட்டேன்." தீனமாக இருந்த மதுராவின் குரல் போகப் போக

கோபமாக ஒலித்தது. கைப்பிடிகளை இறுக்கினாள். "அந்த டானி கண்ணில் பட்டால், கத்தியால் குத்தி கொன்று விடுவேன்."

"நீ இப்போ அமைதியாக தூங்கு. நல்லப் பெண் இல்லை. உனக்கு தெம்பு வந்த பிறகு பேசிக்கொள்ளலாம்."

"என் உடல் முழுவதும் நோய் பரவி இருக்கிறது. செத்துப் போவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை."

"எந்த நோயாக இருந்தாலும் மருந்து சாப்பிட்டால் குணமாகி விடும்."

"என்னைக் கண்டால் உனக்கு அருவருப்பாக இல்லையா."

"அருவருப்பா! உன்னைக் கண்டா? மதுராவிடம் எனக்கு பிரியம் தவிர வேறு எண்ணம் வரமுடியுமா?"

"வாழ்க்கையில் நான் தோற்றுவிட்டேன். எல்லோருமாக சேர்ந்து என்னை ஏமாற்றிவிட்டார்கள். நான் சாக மாட்டேன். அவனைக் கொன்றால் தவிர எனக்கு நிம்மதி இருக்காது. டானி! எங்கே இருக்கிறாய்? உன் உயிரை எடுத்துவிட்டுத்தான் மறுவேலை." மதுரா ஹிஸ்டீரியா வந்தவள் போல் கத்தத் தொடங்கினாள். அவள் கத்தல் வீடு முழுவதும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

நர்ஸ் சட்டென்று ஊசி மருந்தை மதுராவுக்கு செலுத்தினாள்.

"அவனைக் கொன்று விடுகிறேன். அது வரையில் எனக்கு நிம்மதி இருக்காது." மதுராவின் ஆவேசமான குரல் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கி விட்டது. மயக்க ஊசி போட்டதால் விரைவிலேயே தூங்கிவிட்டாள்.

பிரியா நர்ஸிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு வெளியில் வந்தாள்.

ஆபீஸ் அறையில் விக்ரம் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். திவ்யா தந்தையின் மடியில் அமர்ந்துகொண்டு, கழுத்தைக் கட்டிக்கொண்டு மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்தாள்.



"ஏன்? திவ்யாவுக்கு என்ன ஆச்சு?" பிரியா கேட்டாள்.

"உன் சிநேகிதியின் கத்தலை கேட்டு பயந்து விட்டாள்."

தாயின் குரலைக் கேட்டதும் திவ்யா கண்களைத் திறந்து பார்த்தாள். பிரியா மகளைத் தூக்கிக்கொள்ளப் போனாள். விக்ரம் சட்டென்று இடது கையை நீட்டி தடுத்தான்.

"பிரியா! முதலில் குளித்து விட்டு உடைகளை மாற்றிக் கொள்." விக்ரம் சொன்னான்.

"நானா? எதற்கு?"

"நோயாளியிடமிருந்து வருகிறாய். குழந்தைகளுக்கு இன்ஃபெக்ஷன் ஆகிவிடக்கூடாது இல்லையா?" கணக்கு புத்தகத்திலிருந்து தலையை உயர்த்தாமலேயே சொன்னான்.

பிரியம்வதா ஒருநிமிடம் திகைத்துப் போனவளாக பார்த்தாள். பிறகு தன்னுடைய அறைக்குச் சென்று குளித்துவிட்டு உடைகளை மாற்றிக்கொண்டு வந்தாள்.

திவ்யா தந்தையை விட்டுவிட்டு தாயிடம் வந்தாள்.

குழந்தைகள் இருவருக்கும் உணவு அளித்துக் கொண்டிருந்தாள். திவ்யா தாயிடம் கேட்டாள்.

"மம்மீ! அந்தப் பைத்தியம் நம் வீட்டிலிருந்து எப்பொ போவாள்?"

"பைத்தியமா? யாரு?"

"அதான் மாடியில் ஜூரமாக இருக்கிறாளே. அவள்தான்."

பிரியா திவ்யாவின் கன்னத்தில் ஒரு அறை கொடுத்தாள். அப்படிச் சொல்லக்கூடாது என்று எத்தனை முறை சொல்லியிருக்கிறேன். அவள் என்னுடைய சிநேகிதி. ஆன்ட்டீ என்று தான் அழைக்கணும்."

திவ்யா பெரிய குரல் எடுத்து அழத் தொடங்கிவிட்டாள்.

"எதற்காக குழந்தைகளை கடிந்து கொள்கிறாய்? அவர்களுக்கு புரியவில்லை என்றால் விளக்கிச் சொல்லும் பொறுமை உனக்கு இருக்க வேண்டும். வா கண்ணம்மா" விக்ரம் மகளை தூக்கிக்கொண்டு அங்கிருந்து போய் விட்டான்.

வருண் மட்டும் இருந்தான்.

"என்ன வேண்டும் வருண்? சாம்பாரா ரசமா?" கேட்டாள்.

"எதுவும் வேண்டாம்." வருணும் எழுந்து தந்தையின் பின்னாலேயே சென்று விட்டான்.

பிரியா மட்டும் தனியாக உட்கார்ந்திருந்தாள். கணவன், குழந்தைகள் உணவு சாப்பிடாமல், பாதியிலேயே எழுந்து போய் விட்டார்கள். அவளுக்கும் சாப்பிடவேண்டும் போல் தோன்றவில்லை. கணவன் மீது கோபம் கூட வந்தது. குழந்தைகளின் வளர்ப்பு விஷயத்தில் பெற்றோர்கள் நன்றாக இணைந்து செயல்படவேண்டும். ஒருவர் கண்டிக்கும்போது, மற்றவர் ஒத்துழைப்பு தரவேண்டுமே தவிர இரக்கம் காட்டினால் குழந்தைகளுக்கு தங்களுடைய தவறு புரிய வாய்ப்பு இல்லை.

இப்பொழுது என்ன ஆகிவிட்டது? வீட்டில் வேலையாட்கள் கூட தன்னை வித்தியாசமாக பார்க்கிறார்கள். காலையில் குளித்துவிட்டு விக்ரம்க்கு டிபன் எடுத்து வருவதற்காக சமையலறை பக்கம் போனபோது அம்புஜமும் வேலைக்காரியும் குசுகுசுவென்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

"யாரந்த பைத்தியம்? அம்மா வேறு அவளுக்கு விழுந்து விழுந்து உபசாரம் செய்வானேன்?" வேலைக்காரி கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அதுதான் எனக்கும் புரியவில்லை. வேண்டியவளாக இருக்கும்" அம்புஜம் பதில் சொல்வது காதில் விழுந்தது.

"யாருக்கு வேண்டியவளாம்? அம்மாவுக்கா? அய்யாவுக்கா?"



"யாருக்குத் தெரியும்? பெரியவங்க வீட்டு சமாசாரம். நமக்கு ஏன் வீண் வம்பு."

"அவங்க சொல்லாவிட்டால் நமக்கு தெரியாதா என்ன? கண்ணும், காதும் திறந்து வைத்துக்கொண்டால் சமாசாரம் தானா தெரிந்து விடப் போகிறது. விஷயம் தெரிந்ததும் முதலில் உன்னிடம் சொல்கிறேன்."

பிரியா தான் வந்துவிட்டதற்கு அடையாளமாக லேசாக இருமினாள். அம்புஜமும், வேலைக்காரியும் வேலை இருப்பது போல் சட்டென்று வேறு வேறு பக்கம் நகர்ந்தார்கள்.

வேலைக்காரிகளின் போக்கே இப்படித்தான். எவ்வளவு நன்றாக கவனித்துக்கொண்டாலும் வம்பு பேசாமல் இருக்க மாட்டார்கள். பிரியாவுக்கு வேலைக்காரர்களின் நடத்தை வித்தியாசமாக தோன்றவில்லை. ஆனால் காலையிலிருந்து விக்ரம் எரிச்சலுடன் இருப்பது போல் தோன்றியது. காரணம் என்னவாக இருக்கும்?

பிரியா படுக்கை அறைக்குள் வந்தாள். விக்ரம் படித்துக் கொண்டிருந்தான். திவ்யாவும், வருணும் தந்தைக்கு இரு பக்கமும் படுத்து, நன்றாக தூங்கிவிட்டிருந்தார்கள். பிரியா அவர்களைத் தூக்கிக்கொண்டு குழந்தைகளின் அறைக்கு வந்தாள். கட்டில் மீது படுக்க வைத்து போர்வையை போர்த்திவிட்டு மறுபடியும் தங்களுடைய அறைக்கு வந்தாள். விக்ரம் இன்னும் படித்துக் கொண்டு இருந்தான்.

"குழந்தைகள் வயதுக்கு மீறிய பேச்சு பேசுகிறார்கள்." புகார் செய்வதுபோல் பிரியா சொன்னாள்.

"குழந்தைகளின் உலகம் ரொம்ப சின்னது. நாம்தான் அவர்களை புரிந்துகொள்ள வேண்டும்."

"மதுரா விஷயத்தில் திவ்யா அப்படிச் சொல்லலாமா? மதுராவைப் பற்றி அவளுக்கு என்ன தெரியும்?" பிரியாவின் குரலில் ஆவேசம் வெளிப்பட்டது.

"நீ முதலில் உன் ஆவேசத்தை கட்டுப்படுத்திக் கொள் பிரியா." விக்ரம் மூக்குக் கண்ணாடியை கழட்டி பக்கத்தில் வைத்தான். "குழந்தைகளை விட நீ இன்னும் சிறுபிள்ளைத் தனமாக நடந்து கொள்கிறாய். மதுராவை நீ ஆன்ட்டி என்று அவர்களுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறாய். இது வரையில் அவர்கள் பார்த்த உன் சிநேகிதிகள் எல்லோரும் நாகரீகமாக இருப்பவர்கள். அவர்களுடைய எதிர்ப்பார்புகளுக்கும், மதுராவின் தோற்றத்திற்கும் கொஞ்சம்கூட ஒற்றுமை இல்லை. போறாத குறைக்கு வேலைக்காரர்கள் குசுகுசுவென்று பேசிக்கொள்வது அவர்களுடைய பிஞ்சுமனதை மேலும் கலங்க வைத்திருக்கும். நீ மதுராவை வீட்டுக்கு அழைத்து வராமல் வேறு எங்கேயாவது தங்க வைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்."

பிரியா திகைப்புடன் அப்படியே நின்று விட்டாள். "நான் செய்த காரியம் உங்களுக்கு பிடிக்கவில்லையா? மன்னித்து விடுங்கள். நாளையே மதுராவை ஆஸ்பத்திரிக்கோ, அனாதை இல்லத்திற்கோ அனுப்பி விடுகிறேன்."

"இந்த ஆவேசம்தான் கூடாது என்று சொல்கிறேன்." மனைவியின் மனம் காயப்பட்டு விட்டதென்று புரிந்ததும் சட்டென்று குனிந்து அருகில் இழுத்துக் கொண்டான். "பிரியா! நீ எத்தனை பேருக்கு வேண்டுமானும் உபகாரம் செய்யலாம். ஆனால் நம் வாழ்க்கை, நம்மைச் சுற்றியிருப்பவர்கள், குடும்ப மரியாதை எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்க வேண்டும். நாம் நன்றாக இருந்தால் தானே மற்றவர்களுக்கு உதவி செய்ய முடியும்."

"நான் இப்பொ செய்யக்கூடாத காரியம் எதுவும் செய்யவில்லையே. மதுரா அன்று எனக்கு உதவி செய்திருக்காவிட்டால் இன்று நான் இந்த நிலையில் இருந்திருக்க மாட்டேன். அப்படிப்பட்டவளுக்கு உடல் நலம் சரியில்லை என்றால் ஆதரவு தருவது தவறான செயலா? நீங்கள் சொல்லுங்கள்."



விக்ரமால் உடனே பதில் சொல்ல முடியவில்லை.

"சொல்லுங்க. தவறு என்று நீங்க சொன்னால் இந்த நிமிடமே மதுராவை அனுப்பிவிடுகிறேன்."

"பிரியா! நீ எந்த தவறும் செய்யவில்லை." விக்ரம் குரல் திடமாக ஒலித்தது.

பிரியா கணவனின் கண்களுக்குள் எதையோ தேடுவது போல் பார்த்தாள். கொஞ்சம் கொஞ்சமாக அவள் கண்களில் மகிழ்ச்சி பரவியது.

"உங்களுக்கு விருப்பம் இல்லாத காரியத்தை நான் செய்யவில்லை இல்லையா. இப்பொழுது எனக்கு எந்த கவலையும் இல்லை." அவன் கழுத்தைச் சுற்றிலும் கைகளை மாலையாக போட்டாள்.

"குழந்தைகள் விஷயத்தில் நான் கொஞ்சம் ஆவேசமாக நடந்துகொண்டுவிட்டேன். நீங்கள் சொல்வது உண்மைதான். நான் அவர்களை கோபித்துக்கொள்ளாமல் நல்லவிதமாக எடுத்துச் சொல்லியிருக்க வேண்டும். நாளை முதல் அப்படியே செய்கிறேன்." என்றாள்.

"பிரியா!" விக்ரம் அழைத்தான்.

"நாளை மதியம் விஜயவாடாவிலிருந்து உன் சின்ன மாமி யார் வருகிறாள்."

"வரலக்ஷ்மி சித்தியா! எப்பொ வந்தது கடிதம்."

"கடிதம் வரவில்லை. சங்கரன் இன்று காலையில் போன் செய்தான்."

"அவங்க வந்தால் வீடே கலகலப்பாகி விடும். குழந்தைகளுக்கும் நல்ல பொழுதாக போகும்." மகிழ்ச்சியுடன் சொன்னாள். பிரியாவுக்கு புகுந்த வீட்டு மனிதர்களுடன்

என்றுமே பிரச்னை இருந்தது இல்லை. யார் வந்தாலும் இன்முகத்துடன் வரவேற்று நல்லவிதமாக உபசரிப்பாள்.

சற்று நேரத்தில் பிரியா உறங்கி விட்டாள். விக்ரம்க்கு தூக்கம் வரவில்லை. மதுரா விஷயம் எல்லோருக்கும் வியப்பாகத்தான் இருந்தது. அவள் மீது போலீஸ் கேஸ் இருப்பதாக நேற்றுதான் தெரிந்தது. டி.எஸ்.பி. சுதாகர் போன் செய்து தெரிவித்தார்.

"அந்தப் பெண்ணின் நடத்தை சரியில்லை. உங்களுக்கு ஏன் இந்த தலைவலி. கூடிய சீக்கிரம் உங்க வீட்டிலிருந்து அனுப்பி விடுங்கள்" என்று எச்சரித்தார்.

மதுரா இப்பொ இருக்கும் நிலையில் பிரியம்வதா அவளை விட்டு பிரிந்திருக்க மாட்டாள். என்று அவனுக்குத் தெரியும்.

பிரியாவிடம் அவனுக்குப் பிடித்த குணம் அதுதான். அன்பு செலுத்துவது, தவறு செய்தவர்களையும் மன்னித்து ஏற்றுக் கொள்வது. தன்னுடைய அன்பினால் எதிராளியை மூழ்கடித்து விடுவாள். பெண்மைக்கு மெருகேற்றும் அவளுடைய இந்த சுபாவம்தான் அவனை மிகவும் ஈர்த்தது. அவன் வாழ்க்கை சந்தோஷமாக, அமைதியாக கழிந்துகொண்டிருக்கிறது என்றால் பிரியாவின் அமைதி நிறைந்த சுபாவம்தான் காரணம். இப்பொ திடீரென்று அதை மாற்றிக் கொள் என்று சொன்னால் எப்படி? வாழ்க்கையில் தோல்வியைத் தழுவிய சிநேகிதிக்கு ஆதரவு தராமல் அவளால் இருக்க முடியுமா? ஆழமாக யோசித்துப் பார்க்கும்போது இந்தப் பிரச்னை பிரியாவுடையது இல்லை. தன்னுடையது என்று தோன்றியது. மதுராவை இந்த வீட்டில் வைத்துக்கொள்வது அவளுடைய தனித்தன்மைக்கு சவால் விடுவது போலிருந்தது. கூடிய சீக்கிரம் மதுராவின் உடல்நலம் சீரடைந்து இந்த வீட்டை விட்டு போய்விட்டால் தேவலை என்று நினைத்துக்கொண்டான்.

# 22

பிரியவதாவின் மேற்பார்வையில் மதுராவின் உடல் நலம் நாளுக்கு நாள் சீரடையத் தொடங்கியது. இரவும், பகலும் நர்ஸ் விழிப்புடன் நோயாளியை கவனித்துக்கொண்டாள். செலவைப் பற்றிக் கவலையே இல்லை. எந்த மருந்து வேண்டும் என்றாலும் அடுத்த நிமிடம் கைக்கு வந்துவிடும். நேரம் கிடைத்த போதெல்லாம் பிரியா மதுராவிடம் வந்து உட்கார்ந்துகொண்டு கல்லூரி நாட்களில் நடந்த விஷயங்களை சொல்லி சிரிக்க வைக்க முயற்சி செய்வாள். நாளடைவில் மதுராவின் உடலும், உள்ளமும் தேறிக்கொண்டிருந்தது.

அன்றும் வழக்கம் போல் பிரியா கணவனையும், குழந்தைகளையும் அனுப்பிவிட்டு மதுராவின் அறைக்கு வந்தாள். மதுரா கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தாள். தலை நரைத்து, கண்கள் குழி விழுந்து, கன்னம் ஒட்டிப் போயிருந்தது. முன் பற்களில் ஒரு பல் பாதியாக உடைந்திருந்தது. வயதுக்கு மீறிய தோற்றம் மேலும் விகாரமாக எடுத்துக்காட்டியது.

கண்ணாடியில் தெரியும் இந்த முகம் தன்னுடையதுதானா? மதுராவின் கண்கள் பயத்தால் மேலும் விரிந்தன. பைத்தியம் போல் தோற்றமளிக்கும் அந்த உருவம் தன்னுடையதுதானா? அவளால் நம்பவே முடியவில்லை.

அதற்குள் பிரியம்வதா அங்கே வந்தாள். மதுரா கையில் கண்ணாடியைப் பார்த்ததும் இரண்டே எட்டில் அருகில் வந்து அதைப் பிடுங்கிக்கொண்டாள்.

"உன்னிடம் கண்ணாடியைத் தந்தது யாரு?" கோபமாகக் கேட்டாள்.

"நர்ஸிடம் கேட்டு வாங்கிக் கொண்டேன்."

"எங்கே அந்த நர்ஸ்? நர்ஸ்!" பிரியா கோபமாக குரல் கொடுத்தாள்.

மதுரா வேண்டுகோள் விடுவது போல் சொன்னாள். "பிரியா! தயவு செய்து நர்ஸை எதுவும் சொல்லாதே. மாட்டேன் என்று தான் சொன்னாள். நான்தான் கண்ணாடி கொடுத்தால் தவிர மருந்து சாப்பிட மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தேன். ஒரு முறை முகம் பார்த்துக்கொண்டு தந்து விடுகிறேன் என்று கெஞ்சினேன். இதில் அவளுடைய தவறு எதுவும் இல்லை." சொல்லும் போதே மதுராவின் விழிகளில் நீர் தளும்பியது. இதழ்கள் நடுங்க மேலும் சொன்னாள். "பிரியா! எத்தனை முறை கேட்டாலும் நீ என்னிடம் முகம் பார்க்கும் கண்ணாடியைத் தராதது ஏன் என்று இப்பொழுது எனக்குப் புரிகிறது. எவ்வளவு விகாரமாக இருக்கிறேன். கண்ணாடியில் தெரியும் முகம் என்னுடையதுதான் என்றால் என்னால் நம்பமுடியவில்லை. பிரியா! பழைய மதுரா இறந்துவிட்டாள். இப்பொ இருப்பது அவளுடைய பேய். அதான் இவ்வளவு அசிங்கமான தோற்றம்." தன்னைத்தானே அருவருப்புடன் பார்த்துக் கொண்டாள்.

பிரியம்வதா வந்து கட்டில்மீது அமர்ந்துகொண்டாள். "மதுரா! நீ கொஞ்சம் பொறுமையாக ஒத்துழைத்தால் சில நாட்களில் பழைய மதுராவாக ஆகிவிடுவாய்.?"

"பழைய மதுராவாகவா? ஊஹூம். இந்த ஜென்மத்தில் அது நடக்காது. நான் செய்த பாவங்களின் விளைவை இந்தப் பிறவியிலேயே அனுபவிக்க வேண்டாமா?

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"அம்மாவை எப்படியெல்லாம் ஏமாற்றி இருக்கிறேன்? எவ்வளவு வேதனை தந்திருக்கிறேன்? அதற்கு ஆயிரம் மடங்கு வேதனையை இப்பொ அனுபவித்து வருகிறேன். இளமையின் வேகத்தில் இனக்கவர்ச்சியை, ஈர்ப்பை காதல் என்று நம்பி



விட்டேன். என் வாழ்க்கையை எப்படி வேண்டுமானாலும் முடிவு செய்துகொள்ளும் உரிமை எனக்கு இருக்கிறது என்று இறுமாப்புடன் நடந்து கொண்டேன். எதை எதிர்பார்த்து டானி என்னை நெருங்கினான் என்று புரிந்து கொள்ளவில்லை. அழகும், வயதும் கரைந்து போன பிறகுதான் வாழ்க்கையின் மதிப்பு எனக்குப் புரிந்தது." மதுரா சட்டென்று பிரியாவின் கைகளைப் பற்றிக்கொண்டு அவள் கண்களுக்குள் ஊடுருவது போல் "உண்மையச் சொல்லு. என்னைப் பார்க்கும்போது அருவருப்பாக இல்லையா?"

"அருவருப்பா! எதற்கு?"

"நான் இப்படி சீர் கெட்டு, வாழ்க்கையை நாசமாக்கிக் கொண்டதற்கு."

"மதூ! நீ அந்த மாதிரி யோசிக்கக்கூடாது என்று ஆயிரம் தடவை சொல்லியிருக்கிறேன். துணையாக இருப்பான் என்று நம்பியவன் உன்னை ஏமாற்றி விட்டான். தவறான பாதையை விட்டுவிட்டு நல்ல பாதைக்கு திரும்ப முயற்சி செய்ய வேண்டும். அதுதான் உன்னுடைய கடமை."

"ஆனால், எனக்கு ஏற்பட்ட களங்கம்..."

"மதுரா! எப்படிப்பட்ட களங்கமும் பச்சாத்தாபம் என்ற அக்னியில் எரிந்து சாம்பலாகிவிடும். நம் இருவருக்கும் இடையே நட்பை விட நெருக்கமான பந்தம் இருக்கிறது. வாழ்க்கைப் பயணத்தை நாம் இருவரும் ஒன்றாக மேற்கொள்ள வேண்டும் என்று நினைத்தோம். நடுவில் நீ சேற்றில் சிக்கிக்கொண்டு விட்டால், நான் கரம் நீட்டி உன்னை அதிலிருந்து மீட்பதோடு மறுபடியும் தலைநிமிர்ந்து வாழும் அளவுக்கு உனக்கு உதவி செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமல் அருவருப்பு அடைந்தால், உன்னை விட்டுவிட்டு என் வழியை பார்த்துக் கொண்டு போனால் அதை நட்பு என்று எப்படி அழைக்க முடியும்? இதே நிலைமை எனக்கு வந்தால் இதைவிட அதிகமாக நீ எனக்கு உதவி செய்திருப்பாய். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு."

12796



மதுரா சிநேகிதியின் இடுப்பைச் சுற்றிலும் கையைப் போட்டுக் கொண்டு அணைத்துக்கொண்டாள். பிரியாவின் தனித்தன்மையை பார்க்கும்போது அப்படிப்பட்டவள் தனக்கு சிநேகிதியாக கிடைத்தது பெரிய வரமாக நினைக்கத் தோன்றியது. பழைய வாழ்க்கையை ஒரு கெட்ட கனவாக மறந்து எதிர்காலத்தைப் பற்றி ஆசையை தூண்டிவிட்டது.

"பிரியா! உனக்கு எப்படி நன்றியைத் தெரிவித்துக் கொள்ளப் போகிறேன்?" குரல் தழுதழுக்கச் சொன்னாள்.

"எனக்கு எந்த நன்றியும் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் சொன்ன விதமாக நேரத்தோடு சாப்பிட்டு, மருந்து, மாத்திரைகளை ஒழுங்காக எடுத்துக்கொண்டு நலமடைந்து விட்டால் அதுவே போதும்." திடீரென்று பிரியாவின் குரல் கம்பீரமாக ஒலித்தது. "மதுரா! நீ சீக்கிரமாக நலமடைய வேண்டும். கடந்த காலத்து வேதனைகளை எல்லாம் மறக்கச் செய்யும் அளவுக்கு சந்தோஷமாக வாழ வேண்டும். அதை நான் கண்குளிர பார்க்க வேண்டும். நீ மட்டுமே இல்லை. இந்த உலகில் எந்தப் பெண்ணும் துணிச்சலுடன் இருக்க வேண்டும். அவளுடைய அப்பாவித்தனத்தை, தனிமையை வாய்ப்பாக எடுத்துக்கொண்டு எந்த கயவனாவது ஏமாற்றினால் "அடடா! வாழ்க்கை இப்படி ஆகி விட்டதே" என்று துயரக் கடலில் மூழ்கிவிடக் கூடாது. வேறு வழியை தேர்ந்து எடுத்து தைரியமாக முன்னோக்கி போக வேண்டும்.

எதிராளியை சரியாக எடைபோடத் தெரியாத அப்பாவித்தனம்தான் தன்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்தது என்றும், அடுத்தமுறை கவனமாக இருக்க வேண்டும் என்று சங்கல்பம் செய்துகொள்ளவேண்டும். திறமை இருந்தும், அதிர்ஷ்டம் சரியாக இல்லாமல் வாழ்க்கையில் முன்னேற முடியாமல் போகலாம். அந்த நிலைமையிலும் எதிர்நீச்சல் போட்டு வாழ்க்கைப் பயணத்தை நல்ல வழியில் திசை திருப்ப வேண்டும். எல்லாவற்றுக்கும் விடா முயற்சிதான் தேவை. மதுரா! உனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பை நழுவவிடாமல்

தூத்துக்குடி வடக்கு.



முன்னுக்கு வருவதற்கு முயற்சி செய்." பிரியா மூச்சு எடுத்து கொள்வதற்காக ஒரு நிமிடம் தாமதித்து விட்டு மேலும் தொடர்ந்தாள்.

"மதுரா! பெண்ணின் வாழ்க்கையில் இல்வாழ்க்கை ஒரு பகுதி மட்டும்தான். பெண்கள் தனித்தன்மையை வளர்த்துக்கொண்டு சுயமாக முயற்சி செய்து தமக்கு என்று ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ஆணைச் சார்ந்துதான் தன்னுடைய வாழ்க்கை என்று ஒரு பெண் நினைத்தால் அது அடிமைத்தனம். இல்வாழ்க்கையில் கணவன், மனைவி இருவருக்கும் சமபங்கு இருக்கிறது. கணவன் மனைவியை, மனைவி கணவனை மதிக்க வேண்டும். அப்பொழுதுதான் அந்த தாம்பத்தியம் சிறப்பாக இருக்கும். மதுரா! நான் சொல்வதை கவனமாக கேட்டுக் கொண்டு இருக்கிறாயா?"

"ஊம்."

"முதலில் நீ துணிச்சலை வரவழைத்துக்கொள்ள வேண்டும். ஏதோ ஆகி விட்டது என்று நினைத்துக்கொண்டு தாழ்வு மனப்பான்மையுடன் உள்ளேயே ஒதுங்கி இருக்காமல் சாதாரணமாக நடந்து கொண்டால் உன்னைச் சுற்றி இருப்பவர்களும் உன் கடந்த காலத்தை மறந்து விடுவார்கள்."

"உன்னைப் போன்ற சினேகிதி இருப்பது என்னுடைய அதிர்ஷ்டம்."

பிரியா பெருமூச்சுவிட்டுக்கொண்டாள். "நினைவு இருக்கிறதா மதுரா! அந்தக் காலத்தில் இதே வார்த்தையை நான் அடிக்கடி சொல்லி வந்தேன்."

மதுரா தலையை அசைத்தாள். "நான் பெரிதாக என்ன செய்து விட்டேன்? ஏதோ கொஞ்சம் பண உதவி செய்தேன். அவ்வளவுதானே?"

"அந்த சூழ்நிலையில் அதுதான் எனக்கு பெரும் உதவியாக இருந்தது. இன்று அனுபவிக்கும் இந்த சுகம்,

ஸ்ரீ இல நூலகம்



அமைதி, மதிப்பு நிறைந்த வாழ்க்கை... எல்லாமே நீ கொடுத்தது தான்."

"பிரியா! எங்கே இருந்தாலும் உன் நினைவு வந்துகொண்டே இருந்தது. எப்படி இருக்கிறாயோ என்று யோசித்துக்கொண்டே இருப்பேன்."

இருவரும் கல்லூரி நாட்களைப் பற்றிப் பேசிக்கொண்டே இருந்தார்கள்.

"மதுரா! விஜயவாடாவிலிருந்து என் கணவரின் சித்தி வருகிறாள். வளவளவென்று பேசுவாளே தவிர நல்ல சுபாவம். நீ இதுபோல் ஒதுங்கி இருக்காமல் எல்லோருடனும் கலகலப்பாக பழகு."

"சரி."

"சாப்பிடுவோம். வா."

"நான் இங்கேயே சாப்பிடுகிறேன்."

"இப்பொழுதுதானே சொன்னேன். அதற்குள் மறந்து விட்டாயா?"

"என் உடல் ரொம்ப பலவீனமாக இருக்கிறது"

"பலவீனம் என்பது உன்னுடைய பிரமை. நீ நன்றாகத்தான் இருக்கிறாய். எழுந்துவா." பிரியா மதுராவின் கையைப் பிடித்து எழுப்பிவிட்டாள். தோளைச் சுற்றிலும் கையை போட்டு டைனிங் டேபிள் அருகில் அழைத்து வந்தாள்.

அம்புஜம் உணவு வகைகளை மேஜை மீது எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

"அம்புஜம்! உள்ளே வேறு வேலை ஏதாவது இருந்தால் பார்த்துக்கொள். நாங்களே பரிமாறிக்கொள்கிறோம்."

பிரியா சொன்னதும் அம்புஜம் உள்ளே போய்விட்டாள்.



மதுரா தலையைக் குனிந்து கொண்டு உட்கார்ந்திருந்தாள். பிரியா அருகில் இருந்து மதுராவுக்கு உணவு பரிமாறினாள்.

"மாலையில் நாம் கருணாகரன் என்பவரை சந்திக்கப் போகிறோம்."

"அவர் யாரு?"

"பல் டாக்டர். விக்ரம்க்கு தெரிந்தவர்."

"அவரைச் சந்திப்பானேன்.?"

"உன் விஷயமாக அவரிடம் பேசினேன். உடைந்த பல்லை எடுத்துவிட்டு புதிதாக பல்லை பொருத்துவதாக சொன்னார்."

மதுரா ஏதோ சொல்லப் போய் நிறுத்திக்கொண்டாள். பிரியா அதைக் கவனிக்காதவள் போல் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

ஏழுநாட்கள் போவதற்குள் மதுராவின் தோற்றத்தில் நல்ல மாறுதல் தெரிந்தது. புதிதாக பல்லை பொருத்தியதில் பழைய அழகு வந்துவிட்டது போல் தோன்றியது. நரைத்திருந்த தலைமுடிக்கு நர்ஸ் கறுப்புச் சாயம் பூசியதில் வயதுக்கு மீறிய தோற்றம் மறைந்து ஓரளவுக்குப் பழைய மதுராவாக காட்சி அளித்தாள்.

# 23

விக்ரம், குழந்தைகள் வீட்டில் இருக்கும் வரையில் மதுரா அறையைவிட்டு வெளியில் வரவே மாட்டாள். விக்ரம்க்கு மதுரா வீட்டில் இருப்பதே தெரியாத அளவுக்கு ஒதுங்கியிருப்பாள்.

அவர்கள் வெளியில் போனதும் பிரியா மதுராவிடம் வருவாள். இருவரும் சேர்ந்து சாப்பிடுவார்கள். மதுரா புதிதாக நடைபழகும். குழந்தையை போல் தட்டுதடுமாறி வீட்டில் வளையம்

வருவாள். போன் மணி ஒலித்தால் கார்ட்லெஸ் போனை எடுத்து வந்து பிரியாவிடம் நீட்டுவாள்.

"நீ பேசு மதூ! யாரென்று கேள்." பிரியா சொன்னால் மறுப்பதுபோல் தலையை அசைப்பாள்.

ஊரிலிருந்து வரலக்ஷ்மி சித்தி வந்துவிட்டாள். ஒரு நிமிடம் கூட வாய் மூடாமல் பேசிக்கொண்டே இருந்தாள். "இந்தாம்மா மருமகளே" என்று பிரியாவை அடிக்கடி அழைத்து ஊர் சமாசாரங்களை சொல்லிக்கொண்டிருந்தாள். இல்லை விகியை அழைத்து எதைப் பற்றியாவது கேட்பாள். குழந்தைகளை உரிமையுடன் அழைத்து பாட்டு கற்றுத்தருகிறேன் என்று உட்கார வைப்பாள்.

மதுராவைப் பார்த்ததும் "யாரிந்த பெண்?" என்று கேட்டாள்.

"என்னுடைய சிநேகிதி." பிரியா சொன்னாள்.

"திருமணம் ஆகிவிட்டதா?"

"இல்லை."

"இன்னும் திருமணம் ஆகவில்லையா? வயதும் ஆகியிருக்கும் போல் இருக்கே. அப்பா, அம்மா இருக்கிறார்களா?"

"இல்லை."

"அடப்பாவமே. நல்ல வரனை பார்த்து இந்தப் பெண்ணை கரை ஏற்ற வேண்டிய பொறுப்பு உன் மீது இருக்குன்னு சொல்லு."

திருமண பேச்சு வந்ததும் மதுரா அந்த இடத்தை விட்டுப் போய்விட்டாள்.

"அந்தப் பெண்ணின் பெயரில் ஏதாவது சொத்து, பணம் இருக்கா?" பிரியாவிடம் கேட்டாள் சித்தி.

"ஊம்."

"எவ்வளவு தேறும்?"



பிரியம்வதா சொன்ன பதிலைக் கேட்டதும் "அப்போ கவலைப்படத் தேவையே இல்லை. நல்ல பையன் கிடைப்பான்" என்றாள். வரன் பார்த்து சொல்வதில் அந்த அம்மாளுக்கு மிஞ்சிய ஆள் இல்லை என்று உறவினர்களுக்கு இடையே நல்ல பெயர் இருந்தது.

மூன்றாவது நாள் வரலக்ஷ்மி சித்தி இளைஞன் ஒருவனை அழைத்துக்கொண்டு வந்தாள். "பிரியா! இவன் பெயர் சுந்தரம். என் நாத்தனாரின் கணவருக்கு ஒன்று விட்ட அத்தையின் பேரன். நெருங்கிய உறவுதான். எம்.ஏ.பாஸ் செய்திருக்கிறான்." என்றாள்.

அவனுக்கு திக்குவாய் இருந்தது.

"வ......வணக்கம்" என்றான்.

மதுரா உள்ளே போய் கதவைச் சாத்திக்கொண்டு விட்டாள். பிரியா போய் கதவைத் திறக்கச் சொன்ன பிறகும் திறக்கவில்லை.

"கலி ரொம்ப முற்றிவிட்டது." சித்தி முகவாய்க் கட்டையை தோளில் இடித்துக்கொண்டாள்.

"அவள் சுபாவமே அப்படித்தான்." சித்தியை சமாதானப்படுத்துவது போல் பிரியா சொன்னாள்.

மதுராவிடம் பேச வேண்டும். பழகவேண்டும் என்று உற்சாகமாக வந்த சங்கரனுக்கு ஏமாற்றம்தான் கிடைத்தது.

மாலையாகிவிட்டது. வரலக்ஷ்மி சித்தி சங்கரனுடன் கிளம்பிப் போய்விட்டாள்.

பிரியா மதுராவின் அறைக்கதவைத் தட்டினாள்.

"அவர்கள் போய் விட்டார்களா?" மதுரா கேட்டாள்.

"போய் விட்டார்கள்."

கதவுகள் திறந்து கொண்டன. ரொம்ப நேரமாக அழுதிருப்பது போல் மதுராவின் கண்கள் சிவந்து உப்பியிருந்தன.

"நீ இப்படி கதவைச் சாத்திக்கொண்டு சிறையில் உன்னை அடைத்துக் கொள்வது எனக்குப் பிடிக்கவில்லை." பிரியா கோபமாகச் சொன்னாள்.

"பிரியா! அந்த அம்மாள் பேசியதைக் கேட்டாயா? எனக்கு வரன் பார்க்கிறாளாம். எனக்குத் திருமணமா?" இதழ்கள் நடுங்க மதுரா கேட்டாள்.

"எனக்குத் தெரியாதா மதுரா! அந்த அம்மாள் ஏதாவது சொன்னால் அதைப் பொருட்படுத்துவானேன்? சற்று நேரம் உட்கார்ந்து பேசி அனுப்பி விட்டால் வேலை முடிந்தது. வந்தவர்களுக்கு என்ன பதில் சொல்ல வேண்டும் என்று எனக்குத் தெரியாதா? நீ மனிதர்களைக் கண்டு ஓடி ஒளிந்து கொள்வதை முதலில் நிறுத்து."

"ஸாரி பிரியா! ஏனோ தெரியவில்லை. என்னால் இயல்பாக பழகமுடியவில்லை. நான்கு பேருக்கு முன்னால் வரவேண்டும் என்றால் கூச்சமாகவும், பயமாகவும் இருக்கிறது."

"அந்த பயத்தைதான் முதலில் ஒழிக்க வேண்டும்."

"முயற்சி செய்கிறேன்."

"இன்று மாலை நாம் எல்லோரும் சேர்ந்து சினிமாவுக்குப் போகிறோம். விக்ரம் டிக்கெட் ரிசர்வ் செய்துவிட்டான்."

"நானா?"

"ஆமாம். நீயும் எங்களுடன் வருகிறாய்." பிரியம்வதா சொல்லிவிட்டு போய்விட்டாள்.

மதுரா அந்த இடத்திலேயே நின்று விட்டாள்.

பிரியா சொன்னது உண்மைதான். மற்றவர்களுடன் தான் சகஜமாக பேசி பழக வேண்டும். ஆனால் நினைக்கும் அளவுக்கு அது எளிதான காரியம் இல்லை. விகி, குழந்தைகள் இருந்தால் அவர்கள் முன்னால் வருவதற்கும், நடமாடுவதற்கும் தயக்கமாக இருந்தது.



தன்னுடைய உடல்நலம் சீரடைந்து விட்டது. ஏதாவது வேலையை தேடிக்கொண்டு கூடிய சீக்கிரம் இந்த இடத்தை விட்டு போய்விட வேண்டும். பிரியம்வதாவை பார்க்கும்போது சந்தோஷமாக இருந்தது.

சொந்தம்பந்தம் என்று யாரும் இல்லாத பிரியம்வதாவுக்கு எவ்வளவு நல்ல இல்லறம் அமைந்திருக்கிறது? அன்பான கணவன், மணி மணியாக இரண்டு குழந்தைகள். வந்து போகும் உறவு மக்கள்.

ஆனால் தன்னுடைய வாழ்க்கை? பெற்றோர்கள், சொத்து, சுகம் எல்லாம் இருந்தும் தன்னுடைய வாழ்க்கை தடம் புரண்டு விட்டது. இதற்கு யாரோ காரணம் இல்லை. தன்னுடைய அறியாமை தான் இதற்குக் காரணம்.

டானியின் அறிமுகம்தான் தன்னை புதைகுழியில் தள்ளிவிட்டது.

# 24

தாயின் புடவைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டு அலையும் சிறு குழந்தையை போல் மதுரா பிரியாவுடனேயே இருந்தாள்.

காலையில் ப்ரேக் ஃபாஸ்ட் நேரத்தில் விகி, குழந்தைகள், பிரியா எல்லோரும் ஒன்றாக அமர்ந்திருந்தார்கள். மதுராவையும் வரச் சொல்லி வேலைக்காரி அழைத்தபோது மதுரா மறுத்து விட்டாள். பிரியா போய் கூப்பிட்டபோது வரவில்லை. கடைசியில் விக்ரம் "மதுரா! எல்லோரும் சேர்ந்து சாப்பிடுவோம் வா'' என்று குரல் கொடுத்த பிறகு தயங்கிக்கொண்டே எழுந்து வந்தாள்.

விகி ஏதாவது ஜோக் சொல்லி குழந்தைகளை சிரிக்க வைத்துக் கொண்டு இருந்தான். மதுராவும் இதழ்களை லேசாக

விரித்து புன்முறுவல் செய்தாள். அதைப் பார்க்கும்போது பிரியாவுக்கு சந்தோஷமாக இருந்தது. தன்னுடைய முயற்சிகளுக்கு தகுந்த பலன் கிடைத்து விட்டது போல் தோன்றியது.

விகி, குழந்தைகள் கிளம்பிப் போன பிறகு பிரியாவும், மதுராவும் ஷாப்பிங் செய்ய போனார்கள்.

மறுபடியும் இது போல் தலை நிமிர்ந்து நடக்க முடியும் என்று மதுரா கனவில்கூட நினைத்துப் பார்க்கவில்லை. புதிதாக கிடைத்த இந்த வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடத்தையும் அபூர்வமாக நினைத்து அனுபவித்துக்கொண்டு இருந்தாள்.

பிரியம்வதா வரவில்லை என்றால்தான் இந்நேரம் எங்கே எப்படி இருந்திருப்பாள்?

அந்த ரெஸ்டிட்யூட் ஹோமில் யாருமே இல்லாத அனாதையாக உடல் நலம் குன்றி, குறுகி.... நினைக்கும் போதே மதுராவுக்கு முதுகுத்தண்டில் நடுக்கம் ஏற்பட்டது.

தான் அனுபவிக்கும் இந்த வாழ்க்கை கனவா இல்லை நினைவா?

மதுரா சட்டென்று ஓடிவந்து பின்னாலிருந்து பிரியாவின் கழுத்தைச் சுற்றிலும் கைகளை இணைத்து, தோளில் தலையை சாய்த்துக்கொண்டாள்.

விகியின் ஷர்டில் பிய்ந்து போன பொத்தானை தைத்துக் கொண்டிருந்த பிரியா பதட்டமடைந்து திரும்பினாள். "ஏன்? என்ன ஆகி விட்டது?"

"நான் உயிரோடுதான் இருக்கிறேனா இல்லை செத்துப் போய் கனவு காண்கிறேனா?" மதுரா கேட்டாள்.

"மதுரா!" நயமான குரலில் அழைத்தாள் பிரியா. "மனதை தளரவிடாதே என்று எத்தனை முறை சொல்லியிருக்கிறேன்? மறந்து விட்டாயா?"



"நான் சந்தோஷமாக இருக்கலாம் இல்லையா?"

"எதனால் அந்த சந்தேகம் வந்தது?"

"தவறு செய்தவர்களுக்கு சந்தோஷமாக வாழும் தகுதி இல்லையோ என்று..."

பிரியா பாதியிலேயே தடுப்பது போல் சொன்னாள். "யார் சொன்னது? தவறு செய்தாலும், செய்யாவிட்டாலும் வாழ்க்கையை சந்தோஷமாக அனுபவிக்கும் தகுதி எல்லோருக்கும் இருக்கும். தவறு செய்தால் சம்பந்தப்பட்ட நபருக்கு குற்ற உணர்வு ஏற்பட்டு நிம்மதியாக வாழ முடியாமல் போய் விடும். நிம்மதியை இழந்த பிறகு மகிழ்ச்சி எங்கிருந்து கிடைக்கும்? அதான் பெரியவர்கள் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள், மதுரா! கடந்த காலத்தையே நினைத்துக்கொண்டு இருந்தாயானால் உனக்கு புதிய வாழ்க்கை கிடைக்காது. கிடைத்த இந்த வாய்ப்பையும் முட்டாள்தனமாக நழுவவிடாதே. இதை நீ வேண்டுகோளாக எடுத்துக் கொண்டாலும் சரி. மிரட்டுவதாக நினைத்தாலும் சரி."

"தாங்க்யூ பிரியா."

வாசலில் யாரோ வந்ததால் பிரியா எழுந்து போனாள்.

மதுரா யோசித்துக்கொண்டு அங்கேயே நின்றிருந்தாள்.

பிரியா மட்டுமே இல்லை. விக்ரம்கூட மதுராவின் வாழ்க்கை சீரடைய வேண்டும் என்று தன்னால் ஆன முயற்சியை செய்து கொண்டிருந்தான். அவர்கள் தன்னிடம் காட்டும் அன்புக்கும் ஆதரவுக்கும் ஏற்றாற்போல்தான் நடந்துகொள்ள வேண்டும்.

மதுராவின் மனதில் இந்த எண்ணம் மெள்ள மெள்ளமாக வலுவடையத் தொடங்கியது. அந்த நேரத்தில் போன் மணி ஒலித்தது. மதுரா போய் எடுத்தாள். மறுமுனையில் யாரோ விக்ரம்

எப்பொ வருவான் என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். மதுரா தயங்காமல், தடுமாறாமல் பதில் சொல்லிவிட்டு போனை வைத்து விட்டாள்.

விகி, பிரியாவுடன் சேர்ந்து சினிமா, பார்ட்டி என்று வெளியில் போய் வர மதுரா பழகிக்கொண்டாள்.

தொடக்கத்தில் மதுராவைப் பார்த்து குசுகுசுவென்று பேசிக் கொண்டார்கள். மதுரா சட்டென்று அந்த இடத்திலிருந்து நகரப் போனாள். ஆனால் பிரியா மதுராவின் கையைப் பற்றிக்கொண்டு தன் அருகிலேயே இருக்கச் செய்தாள்.

திருமணம் ஆகாத ஓரிரு இளைஞர்கள் மதுராவிடம் நெருங்கி ஜாலியாக பேச முயற்சி செய்தார்கள். மதுரா நாசூக்காக அவர்களைத் தவிர்த்து விட்டு நகர்ந்துகொண்டாள்.

"யாரிந்தப் பெண்?" எல்லோர் மனதிலும் ஒரே கேள்வி.

"விக்ரமுக்கு உறவாக இருக்குமோ?"

"இல்லை. அவன் மனைவியின் சிநேகிதியாம்." மதுராவிடம் எல்லோரும் மரியாதையுடன் நடந்துகொண்டார்கள்.

"இந்தப் பெண் லேசுப்பட்டவள் இல்லையாம்... கல்லூரியில் படிக்கும்போது காதல் கத்தரிக்காய் என்று எவனுடனோ ஓடி விட்டாளாம். விக்ரம் வீட்டு வேலைக்காரி சொன்னாள்." பார்ட்டிக்கு வந்திருந்த ஒரு அம்மாள் வம்பு பேச முயன்றாள்.

"ஷ்... சும்மா இருங்க. நாம் வம்பு பேசுவது விக்ரம்க்கு தெரிந்தால் அவ்வளவுதான்." இன்னொரு அம்மாள் அடக்கினாள்.

மதுராவின் காதுகளில் இந்த உரையாடல் விழுந்து கொண்டுதான் இருந்தது.

# 25

"மதுரா... மதுரா..." பிரியா அழைத்துக்கொண்டே தோட்டத்திற்குள் வந்தாள். மதுரா மரத்தின் அடியில் போட்டிருந்த நாற்காலியில் தலையை பின்னால் சாய்த்து கண்களை மூடி அமர்ந்திருந்தாள். பிரியாவின் அழைப்பு அவள் காதுகளில் விழவில்லை போலும்.

"மதுரா" பிரியம்வதா தட்டி எழுப்பினாள்.

மதுரா திடுக்கிட்டவள் போல் கண்களைத் திறந்துப் பார்த்தாள். மதுரா ரொம்ப நேரமாக அழுதிருக்க வேண்டும். கண்ணீர் காய்ந்து கன்னத்தில் கோடாக படிந்திருந்தது. அந்தக் கண்களில் தென்பட்ட வேதனையை கவனித்த போது பிரியாவின் மனதில் சுருக்கென்று முள் குத்தியது போல் இருந்தது. காலம் எத்தனை வலிமையானது? சந்தோஷமாக ஆடிபாடி திரிந்துகொண்டிருந்தவளை முடக்கி ஒரு மூலையில் உட்கார வைத்துவிட்டது.

"பிரியா... இது நிஜம்தானே. நான் காண்பது கனவு இல்லையே?"

"கனவு இல்லை. நீ என் வீட்டில் என் அருகில் இருக்கிறாய். சற்று முன் பார்த்தபோது இங்கே புத்தகம் படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாய். வேலையை முடித்துக்கொண்டு வந்து பார்த்தால் கண்களை மூடி தூங்கிக்கொண்டிருக்கிறாய். நேரம் கெட்ட நேரத்தில் தூங்குவானேன்? இரவு சரியாக தூங்குவதில்லையா?"

அந்தக் கேள்விக்கு பதில் அளிக்க முடியாதவள் போல் மதுரா தலையைக் குனிந்துகொண்டாள். பிறகு தாழ்ந்த குரலில் மெதுவாகச் சொன்னாள். "ராத்திரி வேளையில் படுத்தால்

போதும் பயங்கரமான கனவுகள் என்னை துரத்தும், விடிய விடிய கட்டில் மீது அப்படியே உட்கார்ந்திருப்பேன். விடிவதற்கு சற்று முன்னால் நீங்கள் விழித்துக்கொள்ளும் சத்தம் கேட்டு சிறிது நேரம் படுத்துக்கொள்வேன்."

"மதுரா.. உன் மனதில் இந்த வாழ்க்கையைப் பற்றி இன்னும் நம்பிக்கை, தைரியம் ஏற்படவில்லை. அப்படித்தானே."

ஆமாம் என்பது போல் மதுரா தலையை அசைத்தாள்.

"தைரியம் எங்கிருந்தோ வராது மதுரா. நீயாகத்தான் அதை வரவழைத்துக்கொள்ள வேண்டும். முதலில் முகத்தை அலம்பி உடைகளை மாற்றிக்கொள். லயன்ஸ் கிளப்பிலிருந்து என் சிநேகிதிகள் வருகிறார்கள். உன்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன்."

அந்த வார்த்தையைக் கேட்டதும் மதுராவின் கண்களில் பதட்டம் எட்டிப் பார்த்தது. சட்டென்று பிரியாவின் கைகளை பற்றிக்கொண்டு "வேண்டாம் பிரியா. நான் அவர்களுக்கு முன்னால் வர மாட்டேன்" என்றாள்.

பிரியம்வதாவின் கண்களில் கோபம் பளபளத்தது. "ஏன்? எதற்காக வர மாட்டாய்?"

"நான் யாரென்று அவர்களுக்கு அறிமுகப்படுத்துவாய்?"

"உன்னை யாரென்று அறிமுகப்படுத்தப் போகிறேனோ நேரில் தெரிந்து கொள்ளலாமே. வீண் சந்தேகம் எதற்கு? வேண்டாத யோசனைகளை விட்டுவிட்டு முதலில் எழுந்து வா. பத்து நிமிடங்களில் நீ தயாராகி இருக்க வேண்டும். நீ நன்றாக டிரெஸ் செய்துகொண்டாலும் இல்லாவிட்டாலும் சரி. உன்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவது நிச்சயம். நான் அழைத்தபோது நீ வரவில்லை என்றால் அவர்களையே உன் அறைக்கு அழைத்து வருவேன்." மிரட்டுவதுபோல் சொல்லி விட்டு பிரியா அங்கிருந்து போய்விட்டாள்.



மதுராவின் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் வழிந்தது. பிரியா இவ்வளவு தீவிரமாக தன்னை நேசிக்காமல் இருந்தால் நன்றாக இருந்திருக்குமோ என்னவோ. வேறு வழியில்லாமல் எழுந்து உள்ளே போனாள். அரைமணியில் தயாராகிவிட்டு காத்திருந்தாள்.

வேலைக்காரி வந்து "அம்மா உங்களை கீழே வரச்சொன்னாங்க" என்று சொன்னாள்.

மதுரா அறையை விட்டு மெதுவாக வெளியில் வந்தாள். கீழே டிராயிங் ரூமில் பத்துக்கும் மேற்பட்ட பெண்கள் உட்கார்ந் திருந்தார்கள். விலை உயர்ந்த புடவைகள், நகைகள் அணிந்திருந் தார்கள்.

பிரியா மதுராவைப் பார்த்ததும் எழுந்து வந்தாள். "வா மதுரா... வா. இவர்கள் எல்லோரும் என்னுடைய சிநேகிதிகள். நாங்கள் எல்லோரும் சேர்ந்து லயன்ஸ் கிளப் சார்பில் சமூகசேவை செய்கிறோம். இவள் பெயர் லக்ஷ்மி. செக்ரடரியாக இருக்கிறாள். இவள் பெயர் வனஜா, ட்ரஷரர் ஆக இருக்கிறாள். மற்ற எல்லோரும் அங்கத்தினராக இருக்கிறார்கள்." எல்லோரையும் வரிசையாக அறிமுகப்படுத்தி வைத்தாள்.

எல்லோரும் வணக்கம் தெரிவித்தார்கள்.

மந்தாகினி என்பவள் புன்முறுவலுடன் கேட்டாள். "எங்களைப் பற்றி அவளுக்கு சொன்னீங்க. அவளை எங்களுக்கு அறிமுகப்படுத்தவில்லையே?"

"இவள் பெயர் மதுரா. என்னுடைய உயிர் சிநேகிதி. இந்த உலகில் உண்மையான நட்பு இருக்கிறதா என்று யாராவது கேட்டால், நான் மதுராவை மேற்கோள்காட்டுவேன். நாங்க இருவரும் சிறுவயது முதல் சினேகிதிகள்" என்றாள்.

"பிரியம்வதா... உண்மையிலேயே நீங்க அதிர்ஷ்டசாலி. இந்தக் காலத்தில் உண்மையான நட்புடன் இருப்பவர்களைக் காண்பது ரொம்ப அரிதுதான். வாங்க மதுரா. இப்படி

உட்கார்ந்துகொள்ளுங்கள்" என்று சொல்லிக்கொண்டே சிறிது நகர்ந்து சோபாவில் இடம் கொடுத்தாள். மதுரா வந்து உட்கார்ந்துகொண்டாள்.

"நீங்களும் எங்க கிளப்பில் உறுப்பினராக சேர வேண்டும். நாதியற்று இருப்பவர்களுக்கு, ஓரளவுக்கு வசதி படைத்த நம்மை போன்றவர்கள் உதவி செய்யவேண்டும் என்பதுதான் கிளப்பின் தலைவியாக இருக்கும் பிரியம்வதாவின் லட்சியம். அவளுடைய தலைமையில் நாங்கள் பல நல்ல காரியங்களை வெற்றிகரமாக செய்து முடித்திருக்கிறோம். நிறைய பாராட்டுகளையும் பெற்று இருக்கிறோம். அப்படிப்பட்ட பிரியம்வதா உங்களுடைய சிறுவயது சினேகிதி என்று சொன்னால் எனக்கு உங்கள் மீது பொறாமையாக கூட இருக்கிறது." மந்தாகினி சொன்னாள்.

"காபி எடுத்து வரச்சொல்கிறேன்." பிரியம்வதா எழுந்து உள்ளே போனாள்.

"உங்கள் கணவர் என்னவாக இருக்கிறார்?" லக்ஷ்மி கேட்டாள்.

அந்தக் கேள்வியைக் கேட்டதும் மதுரா தடுமாறினாள்.

காபி கொண்டு வரச்சொல்லி அம்புஜத்திடம் சொல்லிவிட்டு திரும்பிய பிரியம்வதாவின் காதுகளில் அந்தக் கேள்வி விழுந்தது. "எங்க மதுரா ரொம்ப வித்தியாசமான மனப்பான்மை படைத்தவள். மனதிற்கு பிடித்தவன் கிடைத்தால் தவிர திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்று தீர்மானமாக இருக்கிறாள். வாழ்க்கையில் திருமணத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் இல்லை என்பது அவளுடைய கொள்கை" என்றாள்.

"மனதிற்கு ஏற்றவன் கிடைக்காததால் திருமணம் தடை பட்டிருக்கவேண்டும். அப்படித்தானே?" என்றாள் லக்ஷ்மி.

"உங்களுடைய தைரியத்திற்கு பாராட்டுகிறோம்.' எல்லோரும் பாராட்டினார்கள்.



"எங்கேயாவது வேலை செய்கிறீர்களா?" வனஜா கேட்டாள்.

"இல்லை. முயற்சி செய்து வருகிறாள்.. நான்தான் வேலை பார்க்க வேண்டாம் என்று சொல்லி வருகிறேன். சொத்து இருக்கிறது. வேலை தேவையாக இருப்பவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அவர்களுடன் இவளும் போட்டிக்கு நிற்பானேன்? நிம்மதியாக வீட்டில் இருந்துகொண்டு ஏதாவது சோஷியல் சர்வீஸில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டால் போறாதா? சமுதாயத்திற்கும் பயன்பட்டது போல் இருக்கும். மனதிற்கும் திருப்திக் கிடைக்கும்."

"நீங்க சொன்னது முற்றிலும் உண்மை. தேவையிருந்தாலும் இல்லாவிட்டாலும் பல பேர் வேலைக்காக அலைவதை பார்க்கும் போது எனக்குக் கோபம்தான் வருகிறது. நம் வெங்கட்ராமனின் மனைவி மரகதத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். உட்கார்ந்து சாப்பிட்டாலும் மூன்று தலைமுறைக்கு தாங்கும் என்ற அளவுக்கு சொத்து இருக்கிறது. போறாத குறைக்கு கணவர் டாக்டர். இரண்டு கைகளாலேயும் சம்பாதிக்கிறார். இரண்டே குழந்தைகள். அவளுக்கும் வேலை வேண்டுமாம். சேஷாத்ரியின் தங்கை பானு ரொம்ப பாவம். கணவர் இறந்து போய் விட்டார். சின்னக் குழந்தைகளுடன் சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறாள். அவளுக்கு அந்த லெக்சரர் போஸ்ட் கிடைத்தால் நன்றாக இருக்குமே என்று முயற்சி செய்தால், மரகதம் பெரிய இடத்திலிருந்து சிபாரிசு கொண்டு வந்து அந்த வேலையைத் தட்டிச் சென்றுவிட்டாள். கஷ்டத்தில் இருப்பவர்களுக்கு வேலை இல்லை. பணத்தில் புரண்டு கொண்டிருப்பவள் பொழுது போவதற்காக வேலைக்கு போகிறாள். இதுதான் நம் நாட்டின் நிலைமை."

"இது போல் வெறுமே பேசிக்கொண்டிருப்பதை விட நடந்த அநியாயத்தை நான்கு பேருக்கு தெரியபடுத்துவது நல்லது" பிரியம்வதா சொன்னாள்.

"அதனால் ஏதாவது பிரயோஜனம் இருக்குமா?"

"நம்மால் ஆன முயற்சியை செய்வோம். பலன் கிடைத்தால் சந்தோஷம். இல்லையா குறைந்த பட்சம் அநியாயத்தை சுட்டிக் காட்டிய திருப்தியாவது கிடைக்கும்."

பிரியம்வதா சொன்னதை எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள்.

"அடுத்த ஞாயிற்றுக்கிழமை குமரன் காலனியில் இலவச கண் சிகிச்சை முகாம் ஏற்பாடு செய்ய வேண்டும்." லக்ஷ்மி சொன்னாள்.

எல்லோரும் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைப் பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். மதுரா அவர்களுடைய பேச்சை ரசனையுடன் கேட்டுக்கொண்டிருந்தாள்.

## 26

இரவு பத்துமணி.

மதுரா தூக்க மாத்திரையை எடுத்து விழுங்கப் போனபோது பின்னாலிருந்து பிரியாவின் கை நீண்டு வந்து அந்த மாத்திரையை பறித்துக்கொண்டு ஜன்னல் வழியாக வெளியில் வீசி எறிந்தது.

"பிரியா!" பிடிப்பட்டுவிட்டவள் போல் மதுரா பதட்டமாக பார்த்தாள்.

"தூக்க மாத்திரைகளை போட்டுக்கொள்ளக் கூடாது என்று சொல்லியிருந்தேனே? எங்கிருந்து கிடைத்தது?" பிரியா கோபமாக கேட்டாள்.

"பெட்டி அடியில் இருந்தது." தலையைக் குனிந்து கொண்டே சொன்னாள்.



"எந்தப் பெட்டியில்?" பிரியா வேகமாக பெட்டி அருகில் சென்று திறந்து தேடினாள். பெட்டியின் அடியில் பத்துக்கும் மேற்பட்ட மாத்திரைகள் இருந்தன. பிரியா எல்லாவற்றையும் அள்ளிக்கொண்டு வெளியில் வீசப் போனாள்.

மதுரா பிரியாவின் கைகளைப் பிடித்துக்கொண்டு "ப்ளீஸ் பிரியா! அவற்றை வெளியில் போட்டு விடாதே" என்று கெஞ்சினாள்.

"எதற்காக?"

"மாத்திரை போட்டுக்கொள்ளாவிட்டால் எனக்கு தூக்கம் வராது."

"கையில் மாத்திரை இருப்பதால்தான் தூக்கம் வரவில்லை. இப்போ வராமல் என்ன செய்யும்?" மாத்திரைகளை வீசி விட்டாள்.

"பிரியா! நான் அனுபவித்துக்கொண்டிருக்கும் நரகம் உனக்குத் தெரியாது. இரவு கண்களை மூடினால் போதும், வேண்டாத யோசனைகள் கனவாக வந்து என்னை பயமுறுத்தும்."

"அப்படி என்னதான் யோசிப்பாய்?"

"வாழ்க்கையில் நான் செய்த தவறுகள் நினைவுக்கு வரும். வாழ்க்கை எவ்வளவு மதிப்பு வாய்ந்தது என்று தாமதமாக புரிந்துகொண்டேன். அதை பத்திரமாக பாதுகாப்பது போய் தெருப் புழுதியில் வீசி விட்டேனே என்று வேதனையாக இருக்கும். பிரியா! மாலையில் உன் சிநேகிதிகள் வந்தார்கள் இல்லையா. அவர்கள் எல்லோரும் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்? உன்னுடைய சினேகிதிகள் என்று அவர்களை எனக்கு பெருமையுடன் அறிமுகப்படுத்தினாய். அதே போல் என்னையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாய். ஆனால் என்னைப் பற்றி பெருமையாக சொல்லிக்கொள்ள என்ன இருக்கிறது? என்னுடைய பின்னணி தெரிந்தால்

"இருக்கலாம். ஆனால் அந்த வேலைகளை செய்யும் போது எனக்கு ஏற்படும் சந்தோஷம்தான் விகிக்கு முக்கியமாக தோன்றும்."

"நீ ரொம்ப கொடுத்து வைத்தவள் பிரியா."

"ஆமாம், எல்லோரும் ரொம்ப சுலபமாக அந்த வார்த்தையை சொல்லிவிடுவார்கள். ஆனால் அதற்கு பின்னால் இருக்கும் என்னுடைய நேர்மையான உழைப்பை யாரும் உணர்ந்து கொள்ள மாட்டார்கள்."

"இல்லை. பிரியா, என்னால் புரிந்துகொள்ள முடியும்."

"தாங்க்யூ. இனி நீ தூங்கு. நீ தூங்கும் வரையில் நான் இந்த அறையை விட்டு போக மாட்டேன்."

பிரியாவின் அருகாமை தந்த தைரியத்தில் மதுரா சீக்கிரமாகவே உறங்கிவிட்டாள்.

## 27

வீடு முழுவதும் சந்தடியாக இருந்தது. கிளப் உறுப்பினர்கள், பெண் உரிமை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் கும்பலாக கூடி இருந்தார்கள். பிரியாவின் கழுத்தில் மாலையை அணிவித்தார்கள்.

"இது பெண் இனத்திற்கே கிடைத்த மகத்தான வெற்றி." உரத்த குரலில் சொன்னாள் பவானி.

"மரகதத்தை வேலையை விட்டு நீக்கி அந்த வேலையை சேஷாத்ரியின் தங்கைக்குக் கிடைக்கும் விதமாக நம்மால் செய்ய முடியும் என்று கனவில்கூட நினைக்கவில்லை." லக்ஷ்மி சொன்னாள்.

"பிரியம்வதா பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகளின் மூலமாகத்தான் இந்த விஷயம் வெளியில் வந்தது. மரகதத்தின்



கணவர் கல்லூரி முதல்வருக்கு லஞ்சம் கொடுத்த விஷயமும் நிரூபிக்கப்பட்டு விட்டதால் நம்முடைய வேலை எளிதாக முடிந்துவிட்டது." சுமித்ரா சொன்னாள்.

"சேஷாத்ரியின் தங்கை பானு பிரியம்வதாவின் கால்களில் விழுந்து கும்பிடாத குறையாக பலமுறை நன்றியைத் தெரிவித்து விட்டாள். தனக்கும், குழந்தைகளுக்கு புதிய வாழ்க்கை அளித்தீங்க என்று கண்ணால் ஜலம் விட்டாள். அந்தக் காட்சியைப் பார்க்கும் போது என் கண்களிலும் நீர் நிறைந்து விட்டது." ராஜலக்ஷ்மி சொன்னாள்.

"பெண்கள் ஒன்றாக கூடி வம்பு பேசுவதற்காகத்தான் இது போன்ற நிறுவனங்கள் என்ற அவச் சொல் வராமல் காப்பாற்றி விட்டோம். இந்தப் புகழ் முழுவதும் நம் தலைவி பிரியம்வதாவைச் சேரும்."

பெண்கள் முன்னேற்ற நிறுவனத்தின் சார்பாக பவானி பிரியம்வதாவின் கழுத்தில் ரோஜா மாலையை அணிவித்தார்கள்.

"மாலை எல்லாம் எதற்கு?" பிரியம்வதா கூச்சப்பட்டாள்.

"இந்தக் காரியம் முழுக்க முழுக்க உங்களால்தான் நிறைவேறியது. இதன் பெயரும், புகழும் உங்களைத்தான் சேர வேண்டும்." லக்ஷ்மி ஆணித்தரமாக முழங்கினாள்.

அப்பொழுதுதான் விக்ரம் வெளியிலிருந்து வந்தான். வீடு முழுவதும் பெண்களின் கூட்டம் நிரம்பியிருந்தது. ஏற்கனவே அறிமுகம் இருந்தவர்கள் விக்ரமுடன் பேசினார்கள். பிரியம்வதா போன்ற மனைவியை அடைந்த அவனுடைய அதிர்ஷ்டத்தை பாராட்டினார்கள்.

வந்தவர்கள் எல்லோரும் கிளம்பிப்போன பிறகு பிரியா உள்ளே வந்தாள். கழுத்திலிருந்த பூமாலையை எடுத்து விட்டாலும் ரோஜா இதழ்கள் தலைமுடியில் சிக்கியிருந்தன.

விகி மனைவியை இறுக்கமாகத் தழுவினான்.

"பிரியா! உன்னைப் பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது."

"எதற்காகவாம்?"

"அலுவலகத்திற்கு வந்த எல்லோரும் ஒரே பேச்சுதான். சேஷாத்ரியின் தங்கைக்கு வேலை கிடைக்கும் விதமாக செய்தது ரொம்ப நியாயமான காரியம் என்றும், உங்க ளிப் மூலமாக அதைச் சாதித்ததற்கு எனக்கு போன் செய்து வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்."

"நான் தனியாக ஏதோ பெரிய வேலையை சாதித்து விட்டதாக நினைக்கவில்லை. கல்லூரி முதல்வருக்கு அவர்கள் லஞ்சம் கொடுத்த விஷயத்தை சாட்சியங்களுடன் வெளிப்படுத்த உதவிய துர்காவின் துணிச்சலைத்தான் பாராட்டவேண்டும். ஏன் என்றால் அவர்கள் கொலை செய்யவும் தயங்க மாட்டார்கள்."

"துர்காவுக்கு அந்த தைரியம் எப்படி வந்தது? நீ கொடுத்ததுதானே." விக்ரம் அணைப்பை மேலும் இறுக்கினான். "பிரியா! மரகதத்தின் மாமனாருக்கு அரசியலில் ரொம்ப செல்வாக்கு இருக்கிறது. அவர்களுடைய கவனம் நம் பக்கம் திரும்புவது நல்லது இல்லை."

"என் மனதில் கோழைத்தனத்தை விதைப்பது நீங்கள்தானா?"

"பிரியா! எல்லாவற்றையும்விட நீயும், குழந்தைகளும் நலமாக இருப்பதுதான் எனக்கு முக்கியம்."

"எல்லோரும் இப்படியே நினைத்து ஒதுங்கிவிடுவதால் சுயநலக்காரர்கள் தைரியமாக ஆட்டம் போடுகிறார்கள். அதோடு நாம் யாருக்கும் எந்த தீங்கும் செய்யவில்லை. உங்களுடைய சொத்தும் கஷ்டப்பட்டு உழைத்து சேர்த்ததுதான்.



உங்களால் பத்து பேருக்கு நல்லதுதான் நடந்திருக்கிறது. அப்படியிருக்கும் போது நம் மீது பகை கொள்பவர்கள் யார் இருப்பார்கள்?"

"எதிரிகள் இல்லாமல் போகலாம். ஆனால் பொறாமைப் படுபவர்கள் இருக்கலாம் இல்லையா. பகையைவிட பொறாமை தீங்கானது. நம் வாழ்க்கையில் எந்த கரும்புள்ளியும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் நம்மைச் சுற்றி இருப்பவர்களில் யாருக்காவது ஏதாவது பலவீனம் இருக்கலாமே?"

"என்ன சொல்றீங்க?" பதட்டமடைந்து தலையை உயர்த்திப் பார்த்தாள்.

"ஒன்றுமில்லை, கொஞ்சம் கவனமாக இருப்பது நல்லது என்று சொல்ல வந்தேன். அவ்வளவுதான்."

காரணம் இல்லாமல் கணவன் இப்படி எச்சரிக்க மாட்டான் என்று பிரியம்வதாவுக்கு நன்றாகவே தெரியும்.

# 28

மதுராவின் உடல் நலம் முழுவதுமாக குணமடைந்துவிட்டது. பிரியம்வதா, விகியின் குடும்பத்துடன் பிரிக்க முடியாத பந்தம் ஏற்பட்டு விட்டது போல் உணரத் தொடங்கினாள்.

பிரியம்வதா நடத்தும் சிசுவிஹாரை மேற்பார்வையிடும் பொறுப்பை மதுரா ஏற்றுக்கொண்டாள். சின்னக் குழந்தைகளுக்கு நடுவில் தானும் ஒரு குழந்தையாக மாறி விளையாடும்போது மனதிற்கு சந்தோஷமாக இருந்தது.

அழுதுகொண்டிருக்கும் குழந்தைகளை தூக்கிக்கொண்டு சமாதானப்படுத்தும் போது சிலசமயம் அவளையும் அறியாமல் அவள் மனம் எங்கேயோ சென்று விடும். தனக்கும் ஒரு குழந்தை பிறந்து இருந்தால்?

எதையும் இழந்த பிறகுதான் அதன் அருமை புரியுமோ என்னவோ. "அம்மா!" என்று அழைக்கும் குழந்தையின் துணையிருந்தால் போதும். வாழ்நாள் முழுவதும் நிம்மதியாக கழித்து விடலாம்.

மதுராவுக்கு தாயின் நினைவு வந்தது. அவள் தன்னிடம் காட்டிய அன்பை, கண்டிப்பை சரியாக புரிந்துகொள்ளாமல் கானல்நீரை நோக்கி ஓடினாள்.

பிரியா மூலமாக தனக்குக் கிடைத்த இந்த வாழ்க்கையை பத்திரமாக போற்றி பாதுகாக்க வேண்டும். பிறருக்கு தீங்கு விளைவிக்காமல், மற்றவர்களின் வாழ்க்கைக்கு இடைஞ்சல் ஏற்படுத்தாமல் வாழவேண்டும்.

மதுரா யோசனையில் மூழ்கியிருந்த போது டங் டங் என்று மணி அடித்தது. திடுக்கிட்டு சுற்றிலும் பார்த்தாள். கிரீசின் நேரம் முடிந்து குழந்தைகள் எல்லோரும் கிளம்பிக்கொண்டிருந்தார்கள்.

மதுரா கதவைச் சாத்தி, பூட்டிவிட்டு வெளியில் வந்தாள்.

கேட்டுக்கு வெளியில் கார் ஒன்று நின்றிருந்தது. அதிலிருந்து இளம் பெண் ஒருத்தி இறங்கி வந்தாள்.

"என் பெயர் மரகதம். என் தங்கையின் மகனை இங்கே சேர்க்க வேண்டும் என்று நினைக்கிறோம்" என்றாள்.

"நாளை காலையில் வந்தால் தலைவியிடம் நேரில் பேசலாம்." மதுரா சொன்னாள்.

"இதன் தலைவி யாரு?"

"மிஸெஸ் பிரியம்வதா."

"அப்படியா. உங்களுக்கு இங்கே என்ன வேலை?"

"செகரெட்ரியாக இருக்கிறேன்."



"சம்பளம் எவ்வளவு?"

"சம்பளம் எதுவும் பெற்றுக்கொள்வதில்லை. நான் அவளுடைய சிநேகிதி."

"சிநேகிதி என்றால்?"

மதுராவுக்கு எரிச்சலாக வந்தது. அங்கிருந்து கிளம்பப் போனாள்.

"ஒரு நிமிஷம்"

மதுரா நின்றாள்.

வந்தவள் பேக்கிலிருந்து ஒரு போட்டோவை எடுத்து காண்பித்தாள்.

"இவனை உங்களுக்குத் தெரியுமா?"

அதைப் பார்த்ததும் மதுராவுக்கு தூக்கிவாரிப் போட்டது. போட்டோவில் டானி முறுவலித்துக்கொண்டிருந்தான். கொத்த வரும் நல்ல பாம்பு போல் தென்பட்டான்.

"இந்த ஆளை தெரியுமா?"

"தெரியாது." கோபத்தை அடக்கிக்கொண்டே சொன்னாள் மதுரா.

"இப்படி பொய் சொல்கிறவள் பிரியாவுக்கு சிநேகிதியா? தானும், தன்னைச் சுற்றி இருப்பவர்களும் ரொம்ப நேர்மையானவர்கள் என்று அவளுக்கு ரொம்ப அகம்பாவம். பாவம் பிரியா." ஏளனமாக சொன்னாள்.

"வாயை மூடுங்க. நீங்க யாரென்று எனக்குத் தெரியாது. பிரியம்வதா எனக்கு சிநேகிதி. அவளை ஏதாவது சொன்னால் நான் சும்மா இருக்க மாட்டேன், ஜாக்கிரதை!" ஆவேசமாகச் சொன்னாள்.

மரகதம் விழுந்து விழுந்து சிரித்தாள். மதுராவை இளக்காரமாக பார்த்துக்கொண்டே காரில் ஏறிச் சென்றுவிட்டாள்.

மதுரா கற்சிலையாக நின்று விட்டாள்.

மரகதம் என்றால்.......

திடீரென்று மதுராவுக்கு நினைவுக்கு வந்துவிட்டது.

## 29

வீட்டுக்கு வந்ததும் மதுரா பிரியாவிடம் நடந்ததை சொன்னாள்.

"இது அந்த மரகதம்தான். சந்தேகமே இல்லை. நான் எழுதிய கட்டுரைகள் காரணமாக அவளுடைய வேலை போய்விட்டது. என் மீது இருக்கும் கோபத்தில் ஏதாவது இடைஞ்சல் செய்ய வந்திருப்பாள். நாளைக்கு வந்தால் இடம் காலி இல்லை என்று சொல்லி விடலாம்" பிரியா சொன்னாள்.

மறுநாள் மரகதம் வரவில்லை. ஆனால் பிரியம்வதா ஒழுக்கம் கெட்ட சிநேகிதிக்கு ஆதரவளித்து, புகலிடம் கொடுத்திருப்பதாக நாளேட்டில் செய்தி வெளியானது.

"நியாயத்திற்காக போராடுவதாக சொல்லிக்கொள்ளும் பிரபல சமூகசேவகி திரைமறைவில் ஒழுக்கம் கெட்டுப் போனவர்களுக்கு ஆதரவு தந்து, ஊக்கப்படுத்துகிறார்." என்ற தலைப்பின் கீழே செய்தி விவரமாக வெளியாகி இருந்தது. மதுராவைப் பற்றிய விவரங்களும் பிரசுரிக்கப்பட்டு இருந்தன.

மதுராவைப்பற்றி எல்லோரும் மறுபடியும் குசுகுசுவென்று பேசத் தொடங்கினார்கள்.

விகி மாலையில் வீட்டுக்கு வந்தான். வழக்கத்திற்கு மாறாக அவன் முகம் ஜிவு ஜிவு என்று இருந்தது.

"எல்லோரும் போன் செய்து மதுராவைப் பற்றி கேட்கிறார்கள். என்னவென்று சொல்லட்டும்?" புருவங்கள் முடிச்சிட கேட்டான்.



"மனைவியின் சிநேகிதி என்று சொல்லுங்கள்."

"ஊர் வாயை மூட நம்மால் முடியுமா? ஏதாவது வம்பு பேசுவார்கள்."

"பேசட்டுமே. மடியில் கனம் இல்லாத போது நமக்கென்ன பயம்?"

"நீ வீட்டில் உட்கார்ந்துகொண்டு பேசுகிறாய். கொஞ்சம் வெளியில் வந்து பாரு. உனக்கே புரியும்." விகி சொன்னான்.

பிரியா மௌனமாக இருந்தாள்.

விகி லயன்ஸ் கிளப்புக்குக் கிளம்பிப் போனான். காரில் போய்க்கொண்டிருந்தபோது அவன் மனதில் பலவிதமான எண்ணங்கள் கடல் அலைகளைபோல் கொந்தளித்துக்கொண்டு இருந்தன. இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தவனாக கிளப்புக்கு போனதும் மனைவிக்கு போன் செய்தான்.

"ஸாரி பிரியா. கொஞ்சம் ஆவேசமாக பேசி விட்டேன் இல்லையா, எல்லோரும் கேள்வி மேல் கேள்வியாக கேட்கும் போது, எரிச்சலாக இருந்தது." மன்னிப்பு கேட்டுக்கொண்டான்.

"அப்படித்தான் இருக்க வேண்டும் என்று நானும் நினைத்தேன்." பிரியா சொன்னாள்.

"இனி ஒரு நாளும் இப்படி நடக்காது. நீ எந்த தவறும் செய்யாத போது உன் மீது கோபம் கொள்வது நியாயம் இல்லையே." விகி சொன்னான்.

"மேடம்! லக்ஷ்மி செகரெட்ரியாக இருக்கப் போவதில்லையாம்." பவானி செய்தியைத் தெரிவித்தாள்.

"காரணம்?"

"வீட்டில் இருப்பவர்கள் அவளை கோபித்துக் கொள்கிறார்களாம். நாளேடுகளில் பெயர் அடிபடுவதை அவர்கள் விரும்பவில்லையாம்."

"அப்படியானால் அவளை ராஜிநாமா கடிதம் அனுப்பச் சொல்லு. வேறு ஆளை போட்டுக்கொள்ளலாம்."

பவானி போகப் போனவள் திரும்பினாள். "மேடம்! உங்களை விட சின்னவள்தான் என்றாலும் உங்களுடைய நன்மையை கருதி ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். ஆபத்து வரும் என்று தெரிந்த போது எச்சரிக்கை செய்வது என்னுடைய கடமை இல்லையா."

"எதற்காக இந்த முன்னுரை?"

"மதுராவை உங்கள் வீட்டைவிட்டு அனுப்பி விடுங்கள்."

"பவானி! என் மீது நீ வைத்திருக்கும் அன்பிற்கும், அபிமானத்திற்கும் தாங்க்ஸ். இனி நீ போகலாம்."

"ஸாரி மேடம்! உங்களுக்கு கெட்ட பெயர் வரும் என்று தெரிந்த பிறகும் ஆதரவு தருவது....."

"கோழைகளுக்கு இங்கே இடம் இல்லை பவானி."

"நிலைமை இப்படியே நீடித்தால் கடைசியில் நீங்கள் ஒருத்தர்தான் எஞ்சியிருப்பீர்கள்.'' சொல்ல வந்ததை சொல்லிவிட்டு பவானி வெளியேறினாள்.

பிரியம்வதாவிடம் ஏதோ சொல்ல வேண்டும் என்று அந்த அறையை நோக்கி வந்துகொண்டிருந்த மதுராவின் காதுகளில் இந்த உரையாடல் விழுந்தது. அவள் முகம் வெளிறிப் போய் விட்டது.

அன்று மதுராவுக்கு தூக்கமே வரவில்லை. தன்னால் பிரியாவுக்கு கெட்ட பெயர் வருகிறது என்று தெரிந்த பிறகும் தான் இங்கே இருப்பது சரியில்லை. இங்கிருந்து போய் விட்டால்?

## 30

மறுநாள் காலையில் காபி குடிக்கும்போது மதுரா பிரியாவிடம் சொன்னாள்.



"பிரியா! சில நாட்களுக்கு எங்கேயாவது இருந்துவிட்டு வருகிறேன்."

"எங்கே போகப் போகிறாய்?"

"ஏதாவது ஒரு இடம்."

"கோழையாக ஓடிப் போக முயன்றால் இந்த உலகம் துரத்திக் கொண்டேதான் இருக்கும். துணிச்சலுடன் எதிர்த்து நின்று போராடணும். தனித்தன்மையால் உனக்கென்று ஒரு இடத்தை ஏற்படுத்திக்கொள். இனி இந்த விஷயமாக என்னிடம் பேச வேண்டாம். முடிவு உன் கையில்." சொல்லிவிட்டு பிரியா எழுந்து போனாள்.

மதுரா கற்சிலையாக அமர்ந்திருந்தாள்.

டிரைவர் வராததால் குழந்தைகளை பள்ளியில் கொண்டு விடுவதற்காக பிரியா போயிருந்தாள்.

போன் மணி ஒலித்தது. மதுரா போனை எடுத்தாள்.

"ஹலோ! யாரு?" மதுரா கேட்டாள்.

"நான்தான். ஒரு காலத்தில் உன் இதயத்துடிப்பாக இருந்தவன்."

அந்தக் குரலைக் கேட்டதும் மதுரா திடுக்கிட்டாள். ரிசீவரை பற்றியிருந்த கை லேசாக நடுங்கியது.

"டியர்! என் கைக்கு எட்டாத அளவுக்கு ரொம்ப உயர்ந்து விட்டாய். பங்களா வாசம், கார் வசதி. நீ அதிர்ஷ்டசாலிதான்." டானியின் குரல் நக்கலாக ஒலித்தது.

"ஷட்டப்!" போனை வைத்துவிட்டாள். உடல் முழுவதும் பற்றி எரிவதுபோல் இருந்தது மதுராவுக்கு.

போன் மறுபடியும் ஒலித்தது. மதுரா எடுக்கவில்லை. சத்தம் கேட்டு உள்ளேயிருந்து வேலைக்காரி ஓடி வந்தாள்.

மதுரா எழுந்துகொண்டு போனை எடுத்தாள். வேலைக்காரி போய்விட்டாள்.

"ஹலோ!" மறுமுனையிலிருந்து டானியின் குரல் கேட்டது.

மதுரா பதில் பேசவில்லை. டானி குரலைக் கேட்கும்போது கழுத்தை நெரித்து அவனைக் கொன்றுவிட வேண்டும் என்ற அளவுக்கு ஆவேசம் ஏற்பட்டது.

"ஹலோ.... ஹலோ" மறுமுனையில் டானி கத்திக் கொண்டிருந்தான்.

பிரியா வந்துவிட்டதற்கு அறிகுறியாய் வாசலில் பேச்சுகுரல் கேட்டது.

மதுரா போனை வைத்துவிட்டாள்.

"யாருடைய போன்?" பிரியம்வதா கேட்டாள்.

"ராங் நம்பர்."

மதுரா அன்று இரவு உறங்கவில்லை. டானிக்கு தான் இங்கே இருப்பது எப்படி தெரிந்தது? அந்தக் கயவன் இங்கே வந்து ரகளை செய்தால்?

நினைக்கும்போதே உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது.

டானி வந்தால்தான் என்ன? தான் இப்பொழுது தனியாள் இல்லையே. விக்ரம், பிரியம்வதா உறுதுணையாக இருக்கும்போது டானியைப் பார்த்து தான் பயப்படுவானேன்?

டானியால் ரகளை ஏதாவது ஏற்பட்டு விகியின் மதிப்புக்கு இழுக்கு நேர்ந்து விட்டால் என்ன செய்வது? பிரியா, விகியின் குடும்பத்திற்கு தன்னால் கெட்ட பெயர் வந்து விடுமோ என்று மதுரா அஞ்சினாள்.

அன்று இரவு மதுராவுக்கு பயங்கரமான கனவு வந்தது.

சுழலில் சிக்கிக்கொண்ட தன்னை மீட்பதற்காக பிரியா உதவிக்கரம் நீட்டுகிறாள். அதைப் பற்றிக்கொண்டு மேலே



வருவதற்காக தான் போராடிக்கொண்டிருக்கும் போது முதலை ஒன்று கால்களைக் கவ்வி உள்ளே இழுக்கிறது. குனிந்து பார்த்த போது முதலை உருவத்தில் டானி தன்னை சுழலுக்குள் இழுப்பதை உணருகிறாள்.

வீலென்று கத்திக்கொண்டே மதுரா எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

பிரியம்வதா, குழந்தைகள், மதுரா எல்லோருமாக சேர்ந்து அருகில் இருந்த பூங்காவிற்கு சென்றார்கள். குழந்தைகள் ஊஞ்சல் விளையாடுவதை பிரியா அருகில் இருந்து கவனித்துக் கொண்டிருந்தாள்.

மதுரா யோசனையில் மூழ்கியிருந்தாள். டானி போனில் தொடர்ந்து அவளை மிரட்டிக்கொண்டு இருந்தான். அவனிடம் வந்துவிட வேண்டுமாம். இல்லாவிட்டால் தங்களுடைய உறவைப் பற்றி பேப்பரில் போடச் செய்வானாம். விகியின் குழந்தைகளை கடத்திக்கொண்டு போவானாம்.

இப்படி எல்லாம் நடக்கக்கூடாது என்றால் மதுரா அவனை ஹோட்டல் ப்ளு டைமண்டில் சந்திக்க வேண்டுமாம். இருபத்தி நான்கு மணி நேரம் அவகாசம் தந்திருக்கிறான்.

டானி தன்னை மிரட்டி வருவதைப் பற்றி பிரியம்வதாவிடம் சொல்லிவிட வேண்டும் என்றுதான் மதுரா முதலில் நினைத்தாள்.

ஆனால் விஷயம் தெரிந்த மறுநிமிடம் பிரியா சும்மா இருக்க மாட்டாள். விகியிடம் சொல்வாள். இருவருமாக சேர்ந்து டானியை ஜெயிலுக்கு அனுப்பும் வரையில் ஓயமாட்டார்கள்.

ஆனால் இதெல்லாம் நடந்தால் அவர்களுடைய குடும்ப கௌரவம் பாதிக்கப்படும். தன் உடலில் உயிர் இருக்கும் வரையில் அப்படி நடப்பதற்கு அனுமதிக்க மாட்டாள்.

பின் என்னதான் செய்வது?

"என்ன மதூ! யோசனையில் மூழ்கிவிட்டாயா என்ன?"

மதுரா திடுக்கிட்டு திரும்பினாள்.

"வீட்டுக்குக் கிளம்புவோமா." பிரியா சொன்னதும் மதுரா எழுந்து கொண்டாள்.

எல்லோரும் வீட்டுக்குவந்தார்கள்.

அன்று இரவு சாப்பிடும்போதுகூட மதுரா மௌனமாகவே இருந்தாள். இரவு முழுவதும் நன்றாக யோசித்து டானியை நேரில் சந்திக்க வேண்டும் என்று முடிவு செய்தாள்.

## 31

ஹோட்டல் ரூமில் காலிங்பெல் ஒலித்தது.

டானி கதவைத் திறந்தான். எதிரே மதுரா நின்றிருந்தாள். அவளைப் பார்த்ததும் அவன் இதழ்களில் குரூரமான முறுவல் மலர்ந்தது.

"வந்து விட்டாயா. வரமாட்டாய் என்றுதான் நினைத்தேன். என் எதிர்பார்ப்புகளை தலைகீழாக்கி விட்டாய் டியர்." என்று சொல்லிக்கொண்டே மதுராவின் கையைப் பற்றி உள்ளே இழுத்து கதவைச் சாத்தினான்.

மதுரா கையை உதறி அவனைத் தள்ளிவிட்டாள். டானி மோகனப் புன்னகையுடன் அவளை நெருங்கினான்.

மதுரா அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். இந்தப் புன்னகையைக் கண்டு ஒரு காலத்தில் தான் எப்படி மயங்கினாள்? அந்தப் புன்னகைக்கு பின்னால் மறைந்திருக்கும் விஷத்தை இன்று புரிந்துகொள்ள முடிந்தது.

"உட்கார்ந்துகொள்." கட்டிலைச் சுட்டிக் காட்டினான்.



மதுரா உட்காரவில்லை. "ஏதோ பேச வேண்டும் என்று சொன்னாயே. முதலில் அதைச் சொல்லு."

"வந்ததும் வராததுமாக பிசினெஸ் பேச்சுதானா? கொஞ்ச நேரம் ஜாலியாக...." மேலும் ஏதோ சொல்லப் போனான்.

"ஷட்டப்!" கத்தினாள். "சொல்ல நினைத்ததை நேராகச் சொல்லு."

"ரொம்ப சிம்பிள். நீ என்னுடைய மனைவியாக என்னிடம் வந்துவிட வேண்டும்."

"மனைவி!'' அருவருப்புடன் நோக்கினாள். "எத்தனையாவது மனைவி நான்?"

"எத்தனை பேர் இருந்தாலும் உன்னுடைய இடமே வேறு. என் நினைவு எப்போதும் உன் மீதுதான்."

"ஆமாம். எப்போதும் என் நினைவுதான். ரெஸ்டிட்யூட் ஹோமில் அனாதையாக, உடல் நலம் குன்றி, உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும்போது எங்கே போயிருந்தாய்?" மதுராவின் குரல் நடுங்கியது.

"எனக்கு விஷயமே தெரியாது. பிசியாக இருந்து விட்டேன். எனக்கு ஒரு கடிதமாவது எழுதினாயா?"

"கடிதம்!'' பற்களை கடித்தாள் மதுரா. "பம்பாய் ஹோட்டலில் பில்லை கட்டாமல் நள்ளிரவு வேளையில் என்னை விட்டுவிட்டு எவளோ ஒருத்தியுடன் சிலோனுக்கு ஓடிப் போனபோது நீ எனக்குக் கடிதம் போட்டாயா? போலீசார் வந்து அரெஸ்ட் செய்யப் போன போது கருணை வள்ளலை போல் முன் வந்தவன் தன்னுடைய பசிக்கு என்னை இரையாக்கிக்கொண்ட கதையை கடிதமாக எழுதச் சொல்கிறாயா?"

"தவறு நேர்ந்து விட்டது. என்னை மன்னித்து விடு." இரண்டு கைகளையும் கூப்பினான்.

"நடித்தது போதும். என் வாழ்க்கையில் நீ குறுக்கிடாமல் இருந்தால் அதுவே நீ எனக்கு செய்யும் மிகப்பெரிய உதவியாக இருக்கும்."

"உனக்கு விருப்பம் இல்லாத போது என்னிடம் வரச்சொல்லி உன்னைக் கட்டாயப்படுத்துவானேன்? அதிலும் இந்த நாட்டில் பெண்களுக்கா பஞ்சம்? என்னைப் போன்று சாதுரியமாக பேசத் தெரிந்தவனுக்கு ஆயிரமாயிரம் பெண்கள் கிடைப்பார்கள். நீ எனக்காக ஒரு வேலை செய்து முடித்தால் போதும். பிறகு உன்னை தொந்தரவு செய்ய மாட்டேன்."

"என்ன வேலை?"

"விக்ரம் வீட்டில் ஒரு பைல் இருக்கிறது. அதை எடுத்து வந்து என்னிடம் ஒப்படைத்தால் போதும்."

"நான் என்ன பைத்தியமா? அது போன்று இழிவான காரியத்தை உனக்காக செய்வேன் என்று நினைத்தாயா?"

"நீ செய்ய மாட்டாய் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் செய்துதான் ஆக வேண்டும் என்ற சூழ்நிலையை உருவாக்க முடியும்."

"ஷட்டப்!"

"சத்தம் போட்டால் கஷ்டம் உனக்குத்தான். என் சுபாவம் உனக்குத் தெரியும். கோபம் வந்தால் நான் மனிதனாக இருக்க மாட்டேன்."

டானி ஒரு பைலை கொண்டு வந்தான்.

"இதோ பார். இது அந்த பைலின் நகல்தான். இதில் இருப்பதை விட அதில் ஓரிரு பேப்பர்கள் அதிகமாக இருக்கும். அவற்றை நீக்கி விட்டால் போதும். ஒரு கோடீஸ்வரனின் கௌரவம் காப்பாற்றப்பட்டு விடும். இந்த காரியம் முடித்துக்கொடுத்தால் எனக்கு இருபதுலட்ச ரூபாய் கிடைக்கும். இரண்டு காகிதங்களுக்காக இருபது லட்சம். யோசித்துப் பாரு. இதில் உனக்கு எந்த கஷ்டமும் இருக்காது பைலை அப்படியே எடுத்து வந்தால் விக்ரம்க்கு சந்தேகம் வரலாம். ஒரிஜினல் பைலை எடுத்துவிட்டு டூப்ளிகேட் பைலை வைத்து விட்டால் யாருக்கும் தெரியாது. கோர்ட்டுக்கு பைலை கொண்டு போன பிறகுதான் தெரியும், பேப்பர்களை காணவில்லை என்று அதற்குள் நம்முடைய வேலை முடிந்துவிடும்." பைலை கையில் கொடுத்தான். "நீ இந்த வேலையைச் செய்ய மறுத்தால் உன்னைப் பற்றிய எல்லா விஷயங்களையும் பேப்பர்களில் வரும் விதமாக செய்துவிடுவேன். உன்னால் அவர்களுக்கு சாசுவதமாக களங்கம் ஏற்பட்டு விடும். எந்த வழியை தேர்ந்து எடுத்தாலும் சரி. உன் விருப்பம்."



கற்சிலையாக நின்றிருந்தாள். எவ்வளவு தைரியம் இருந்தால் இப்படிப் பேசுவான்?

"என்ன சொல்கிறாய்?" இரட்டிப்பது போல் கேட்டான் டானி.

மதுரா இந்த உலகத்திற்கு மீண்டு வந்தாள். பைலை கட்டில் மீது வீசி எறிந்தவள், டானியின் கன்னத்தில் இழுத்து ஒரு அறைவிட்டாள். சரேலென்று கதவைத் திறந்துகொண்டு அந்த அறையிலிருந்து வெளியேறினாள்.

# 32

நான்கு நாட்கள் கழிந்தன. அன்று காலையில் படுக்கை அறையில் இருந்த விக்ரம் உரத்த குரலில் அழைத்தான்.

"பிரியா! பிரியா!"

"இதோ வந்து விட்டேன்." கணவன் குரலில் தென்பட்ட மாறுபாட்டை கண்டு பிரியா பதட்டத்துடன் ஓடி வந்தாள்.

பீரோ கதவுகள் திறந்திருந்தன.

"லாக்கரில் பச்சை நிற பைல் வைத்திருந்தேன். நீ எடுத்தாயா?"

"இல்லையே."

"சேட் ஹரிலால்க்கு சம்பந்தப்பட்ட பைல் அது."

"அதுவா. அங்கேதானே இருந்தது." பிரியம்வதாவும் தேடினாள். பைலை காணவில்லை.

"என்னவாகி இருக்கும்?" பிரியா கேட்டாள்.

"அதுதான் எனக்கும் தெரியவில்லை. அந்த பைல் காணவில்லை என்றால் நம் குடும்ப மானம் சந்தி சிரிக்கும். கடவுளே! இப்பொ என்ன செய்வது?"

விக்ரம் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டான்.

இரண்டு நாட்கள் கழிந்தன. இந்த இரண்டு நாட்களாக வீட்டில் குழந்தைகளின் சிரிப்புச் சத்தம்கூட கேட்கவில்லை. வீடு முழுவதும் மயான அமைதி நிலவியிருந்தது.

அந்த பைல் காணாமல் போனது விக்ரமின் வாழ்க்கைப் பிரச்னையாகிவிட்டது. பைல் காணாமல் போன விஷயத்தை பிரியம்வதா மதுராவிடம் இன்னும் சொல்லவில்லை.

விக்ரம் ஏன் இப்படி மௌனமாக இருக்கிறானோ மதுராவுக்கு புரியாவிட்டாலும் பிரியா சொன்னபடி குழந்தைகளுடன் பேசி பொழுதை போக்கி வந்தாள்.

அன்று மதியம் விக்ரம் வீட்டுக்கு வந்தான். வரும்போதே உக்கிர நரசிம்ம மூர்த்தியாக ஆவேசமாக தென்பட்டான்.

"பிரியா!!!" அவன் கத்திய கத்தலுக்கு வீடே அதிர்ந்தது.



மதுராவிடம் பேசிக்கொண்டிருந்த பிரியம்வதா எழுந்து வந்தாள்.

கையில் இருந்த புகைப்படத்தை பிரியம்வதா முகத்தின் மீது வீசி எறிந்தான். கீழே விழுந்த போட்டோவை பிரியா எடுத்துப் பார்த்தாள். மதுரா டானிக்கு ஹோட்டல் அறையில் பைலை கொடுக்கும் காட்சி அது. மதுராவின் கையில் பைல் இருந்தது. டானி முகத்தில் மகிழ்ச்சி வெளிப்படையாக தென்பட்டுக் கொண்டிருந்தது.

"உயிர் சிநேகிதி என்று பெருமைப் பட்டுக்கொண்டாயே, இந்த புகைப்படத்தைப் பார்த்த பிறகு என்ன பதில் சொல்லப் போகிறாய்? வேலியில் போகிற ஓணானை காதில் விட்டுக் கொண்ட கதையாகி விட்டது. முதலில் அவளை வீட்டைவிட்டு அனுப்பிவிடு. நானும், நீயும், குழந்தைகளும் பிச்சை எடுக்கவேண்டிய நிலைமைக்கு வந்து விட்டோம். இப்பொ உன் மனம் குளிர்ந்ததா?" உரத்த குரலில் கத்தினான்.

விக்ரமின் பேச்சு குரல் கேட்டதும் மதுரா வெளியில் வந்தாள்.

"இதில் ஏதோ ஏமாற்று வேலை இருப்பதுபோல் தோன்றுகிறது." பிரியா சொல்லிக்கொண்டிருந்தாள். அடுத்த நிமிடம் பிரியாவின் கன்னத்தில் பளாரென்று அறை விழுந்தது. விக்ரமின் கை இடி போல் இறங்கியது.

"ஏமாற்றியது அவர்கள் இல்லை. நீதான். இத்தனை நாளாக நீ என்னை உயிருக்கும் மேலாக நேசிக்கிறாய் என்று எண்ணியிருந்தேன். ஆனால் என்னைவிட, இந்த வீட்டு மான மரியாதைகளைவிட இன்னும் சொல்லப்போனால் நம் குழந்தைகளை விடவும் உனக்கு அவள்தான் உசத்தி என்பதை நிரூபித்து விட்டாய். சாவிக்கொத்து உன்னிடம்தான் இருக்கிறது. பீரோ சாவி எது என்று உன்னையே சுற்றிச் சுற்றி வரும் அவளுக்குத் தெரியாமல் எப்படி இருக்கும்? இதுநாள் வரையில்

அவளை தலையில் வைத்துக்கொண்டு கொண்டாடியது போதும். அவளை வெளியில் அனுப்பும் வரையில் உன் முகத்தில் விழிக்க மாட்டேன். குழந்தைகளை எண்ணி பேசாமல் இருக்கிறேன். இல்லா விட்டால் இந்நேரம் கொலை செய்து ஜெயிலுக்கு போயிருப்பேன்."

ஆவேசமாக மொழிந்துவிட்டு விக்ரம் வீட்டைவிட்டு வெளியேறி விட்டான்.

அறை வாசலில் நின்றிருந்த மதுராவுக்கு விஷயம் சரியாக புரியவில்லை.

"பிரியா! என்ன நடந்தது?" தயங்கிக்கொண்டே கேட்டாள்.

பிரியம்வதா திரும்பிப் பார்த்தாள். அவள் கண்களில் எல்லையில்லாத அருவருப்பு தென்பட்டது.

"உண்ட வீட்டுக்கு துரோகம் செய்ய உனக்கு எப்படி மனம் வந்தது?"

போட்டோவை மதுரா மீது வீசிவிட்டு பிரியா உள்ளே போய் கதவைச் சாத்திக்கொண்டாள்.

மதுரா போட்டோவை எடுத்துப் பார்த்தாள்.

டானி தன்னிடம் பைலை கொடுக்கும்போது யாரோ மறைவாக நின்று போட்டோ எடுத்திருக்கவேண்டும். போட்டோவை பார்ப்போரின் கண்களுக்கு மதுரா டானியிடம் பைலை கொடுப்பது போன்ற அபிப்பிராயம் நிச்சயமாக ஏற்படும். இதெல்லாம் டானி செய்த மோசடி. தன்னை வலையில் சிக்கவைக்க திட்டம் போட்டு செயல்பட்டிருக்கிறான்.

இந்த விஷயம் தன்னை மட்டுமே இல்லை. தனக்கு ஆதரவு தந்த பிரியாவின் குடும்பத்திற்கும் தீங்கு விளைவிக்கும்.

விக்ரம் சொன்ன வார்த்தைகள். பிரியாவின் கண்களில் தென்பட்ட அருவருப்பு.... எல்லாமாக சேர்ந்து அவள் மனதை ஈட்டியால் குத்துவது போல் இருந்தது. உடனே செத்துப் போனால் என்ன என்ற எண்ணம் வந்தது.



ஊஹூம். சாகக் கூடாது. முதலில் இதற்குக் காரணமான டானியைக் கொன்றுவிட வேண்டும்.

மதுரா வேகமாக வெளியேறினாள்.

# 33

காலிங் பெல் ஒலித்த சத்தம் கேட்டு டானி கதவைத் திறந்தான். வாசலில் நின்றிருந்த மதுராவை ஏற இறங்க பார்த்துவிட்டு "வந்துவிட்டாயா, நீ வருவாய் என்று நிச்சயமாக தெரியும், அவர்கள் உன்னை வீட்டை விட்டு துரத்தி விட்டார்களா?" என்றான்.

மதுரா உள்ளே வந்து கதவைச் சாத்தினாள்.

"ஒரே கல்லில் இரண்டு மாங்காய். என் மனைவி என்னிடம் வந்து சேர்ந்துவிட்டாள். நம்முடைய முதலிரவை நினைவுப்படுத்திக் கொள்வோம் வா என்று மதுராவின் கையைப் பிடித்து இழுத்தான்." "இதுவரையில் எத்தனையோ பெண்களை பார்த்துவிட்டேன். ஆனால் இந்த விஷயத்தில் உன்னை யாரும் மிஞ்ச முடியாது." கட்டில் மீது உட்காரவைத்து தானும் அருகில் உட்கார்ந்து கொண்டான்.

"என்னதான் இருந்தாலும் ஒரு காலத்தில் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் இல்லையா." மேலும் நெருங்க முயன்றான்.

மதுரா டானியை வேகமாக தள்ளினாள். கட்டில்மீது மல்லாக்க விழுந்தவனின் கழுத்தை இரண்டு கைகளாலேயும் இறுக்கத் தொடங்கினாள்.

"என்ன இது? என்னைக் கொல்லப் போகிறாயா?" எப்படியோ விடுவித்துக்கொண்டு மதுராவின் கன்னத்தில் பளாரென்று அறைந்தான்.

மதுரா விடவில்லை. மீண்டும் அவன் கழுத்தைப் பற்ற முயன்றாள். இருவருக்கும் இடையே போராட்டம் நடந்தது. அவள் கைகளுக்கு ஆயிரம் யானைகளின் பலம் வந்துவிட்டது போல் இருந்தது. உடல் முழுவதும் வியர்வை ஆறாக ஓடியது. தலைமுடி அவிழ்ந்து விட்டது. பழங்களை நறுக்குவதற்காக மேஜை மீது வைத்திருந்த கத்தியை எடுத்து டானியின் வயிற்றில் வேகமாக பாய்ச்சி விட்டாள். தனக்கு நேர்ந்த அநியாயத்திற்கு, விகியின் குடும்பத்திற்கு இழுக்கு ஏற்படுத்தியதற்கு பகை தீர்த்துக்கொள்வது போல் மூன்று முறை கத்தியால் குத்தினாள்.

டானி எப்படியோ போனை எடுத்தான். "ஹலோ! ரிசெப்ஷன்! யாரோ ஒரு பைத்தியம் என் அறையில் புகுந்து என்னைக் கொல்லப் பார்க்கிறாள். என்னைக் காப்பாற்றுங்கள்." வீலென்று கத்தினான். இந்தமுறை கத்தி குரல் வளையத்தில் இறங்கியது.

பத்தாவது நிமிடம் ஹோட்டல் சிப்பந்தி அறையின் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வந்தார்கள்.

மேனேஜர், ரூம் பாய்ஸ் எல்லோருமாக சேர்ந்து மதுராவை பிடித்துக்கொண்டார்கள்.

"நான்தான் கொலை செய்தேன். என்னை ஜெயிலில் போடுங்கள்." மதுரா ஹிஸ்டீரியா வந்தவள் போல் கத்திக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது அவளைப் பார்க்கும் போது பத்திரகாளியாக காட்சியளித்தாள்.

மதுராவை அரெஸ்ட் செய்தார்கள்.

"மதுரா!"

யாரோ அழைத்தார்கள். சூனியத்தை வெறித்து பார்த்துக் கொண்டிருந்த மதுரா திரும்பிப் பார்த்தாள்.



எதிரே இரண்டு கைகளையும் நீட்டிய நிலையில் பிரியம்வதா தென்பட்டாள்.

மதுரா தொலைவாக நகர்ந்துகொண்டாள். "வேண்டாம் பிரியா. என்னைத் தொட்டால் உனக்கும் களங்கம் வந்து விடும்."

"அப்படிச் சொல்லாதே மதூ! பைல் காணாமல் போன ஆவேசத்தில் உன்னைத் தவறாக பேசிவிட்டேன். அதற்காக நானும், விகியும் ரொம்ப வருத்தப்படுகிறோம். அந்த போட்டோ எங்களுடைய மூளையை மழுங்கச் செய்துவிட்டது. காணாமல் போன பைல் கிடைத்து விட்டது."

"எப்படி கிடைத்தது? எங்கே கிடைத்தது?"

"டானியின் அறையில்."

"நான்... நான் எடுக்கவில்லை பிரியா."

பிரியம்வதா மதுராவை நெருங்கி மார்போடு அணைத்துக் கொண்டாள். "எனக்குத் தெரியும். விகியின் நண்பன் பாஸ்கர் சி.ஐ.டி.யாக இருக்கிறார். அவர் மூலமாக பல விஷயங்கள் வெளியில் வந்தன. டானி வேண்டுமென்றே உன்னை ஹோட்டலுக்கு வரச் செய்து அப்படி போட்டோ எடுக்கச் செய்தானாம். நீ பைலை எடுத்துக்கொடுக்கமாட்டாய் என்று அவனுக்கு நிச்சயமாக தெரியும். அதான் எங்கள் வீட்டு வேலைக்காரிக்கு பணம் தருவதாக ஆசை காட்டியிருக்கிறான். அவள்தான் அந்த பைலை திருடி டானியிடம் கொடுத்திருக்கிறாள். போலீசார் அடித்த அடியில் உண்மையைச் சொல்லி விட்டாள். குழந்தைகளை பூங்காவுக்கு அழைத்துச் செல்லும் சாக்கில் வேலைக்காரி டானியிடம் பலமுறை பேசியிருக்கிறாள்."

மதூ! விக்ரம் உனக்காக நல்ல லாயரை ஏற்பாடு செய்திருக்கிறான். உனக்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்று எல்லாவிதமாக முயற்சி செய்து வருகிறோம்.

"பிரியா!" கண்களில் நீர் தளும்ப மதுரா அழுதுவிட்டாள்.

அன்றுதான் மதுரா விடுதலை ஆகப் போகிறாள்.

விகி, பிரியம்வதா, குழந்தைகள் எல்லோருமாக சேர்ந்து மதுராவை வீட்டுக்கு அழைத்துப் போக சிறைச்சாலைக்கு சென்றார்கள்.

ஆனால் மதுரா அங்கே இருக்கவில்லை. ஜெயில் அதிகாரி மதுரா அவர்களிடம் கொடுக்கச் சொன்னதாக கடிதம் ஒன்றை கொடுத்தார்.

பிரியா கடிதத்தைப் படிக்கத் தொடங்கினாள். பிரியா! விகி!

நீங்க இருவரும் என்னை அழைத்துப் போவதற்காக வருவீர்கள் என்று எனக்குத் தெரியும். அதான் முன்னாடியே இந்த இடத்தை விட்டுப் போகிறேன். இதற்காக என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் காட்டிய அன்பு, ஆதரவு எனக்கு புதிய வாழ்க்கையை அளித்திருக்கிறது. சில வருடங்கள் எங்கேயாவது போய் வாழ முடிவு செய்திருக்கிறேன்.

என்னை இன்னாரென்று அடையாளம் தெரியாதவர்களுக்கு நடுவில் புதிதாக வாழ்க்கையைத் தொடங்குவேன். சமுதாயத்தில் எனக்கென்று ஒரு இடத்தை ஏற்படுத்திக்கொண்டு எல்லோரும் மதிக்கத் தக்கவளாக, உங்களுக்கு அருகில் நிற்கக்கூடிய அளவுக்கு தகுதி பெற்றவளாக திரும்பி வருவேன்.

நிச்சயமாக தற்கொலை செய்துகொள்ளமாட்டேன். அந்தத் தேவை இப்பொ எனக்கு இல்லை. என்னை நேசிக்கும் மனிதர்கள் இருக்கும்போது நான் ஏன் தற்கொலை செய்துகொள்ள வேண்டும்?

இப்பொழுது என் உடல்நலமும் நன்றாக இருக்கிறது. கஷ்டப்பட்டு உழைத்து என்னால் வாழ முடியும்.



டானியின் வருகை என் வாழ்க்கையில் சில வருடங்கள் சர்வ நாசமாக்கி விட்டது. அந்த விஷ வளையத்திலிருந்து விடுபட்டு விட்டேன். இப்பொ என்னால் தலை நிமிர்ந்து நிற்க முடியும். இந்த நம்பிக்கை, துணிச்சல் எனக்கு ஏற்படுவதற்குக் காரணம் நீங்க இருவரும்தான்.

பிரியா! இவ்வளவு நாளாக இந்த வாழ்க்கை என்னுடையது என்று நினைத்து வந்தேன். அது தவறு. இந்த வாழ்க்கை என் ஒருத்திக்கு மட்டுமே சொந்தம் இல்லை. மற்றவர்களுக்கும் இதில் பங்கு இருக்கிறது.

வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றால் எல்லோரும் கஷ்டப்பட்டு உழைக்கவேண்டும். அதன் பலனை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டு வாழவேண்டும்.

நீ இந்த முறையை பின்பற்றுவதால் மகிழ்ச்சியாக இருக்கிறாய். உங்க இருவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். அம்மா, அப்பா கொடுத்த வாழ்க்கையின் மதிப்பு தெரியாமல் அதை கை நழுவவிட்டேன். நான் மறுபிறவி எடுப்பதற்கு நீங்க இருவரும் துணை புரிந்திருக்கிறீர்கள். இந்த வாழ்க்கையை கவனமாக போற்றி பாதுகாத்து வருவேன்.

எனக்கு சில நாட்கள் அவகாசம் கொடுங்கள்.

மதுரா எங்களுடைய சிநேகிதி என்று நீங்கள் பெருமையாக சொல்லிக்கொள்ளும் நிலையில் திரும்பி வருவேன். குழந்தைகளுக்கு என் ஆசிகள். உங்களிடம் நான் வைத்திருக்கும் அன்புதான் உங்களை விட்டு தொலைவாக போவதற்கு சக்தியை, தைரியத்தைத் தந்திருக்கிறது. விரைவில் உங்களிடம் திரும்பி வரவேண்டும் என்ற எண்ணத்துடன் உங்களிடமிருந்து பிரிந்துச் செல்கிறேன்.

உங்கள்

மதுரா

12796



பிரியாவின் விழிகளில் நீர் சுழன்றது. பிரியாவுக்கு பக்கத்தில் நின்றிருந்த விக்ரம், கடிதத்தை படித்துவிட்டு பெருமூச்சு விட்டான். மனைவியின் தோளைச் சுற்றிலும் கையை போட்டு வெளியே அழைத்து வந்தான்.

காரில் உட்கார்ந்திருந்த குழந்தைகள் "ஆன்ட்டீ எங்கே?" என்று கேட்டார்கள்.

"ஊருக்கு போயிருக்கிறாள். சீக்கிரம் திரும்பி வருவாள்." விக்ரம் காரை ஸ்டார்ட் செய்துகொண்டே சொன்னான்.

பிரியா விழிகளிலிருந்து வெளியேறப்போன கண்ணீரை வலுக்கட்டாயமாக அடக்க முயன்றாள். விக்ரம் மனைவியின் கையைப் பற்றிக்கொண்டான்.

"மதுரா எங்கே இருக்கிறாள் என்ன செய்கிறாள் என்று தெரிந்துகொண்டு உனக்கு தெரிவிக்கும் பொறுப்பு என்னுடையது. சரிதானே" என்றான்.

பிரியம்வதா கணவனின் தோள்மீது தலையை சாய்த்துக் கொண்டாள்.

'என்றாவது ஒருநாள் நிச்சயமாக மதுரா திரும்பி வருவாள். அந்த நாளுக்காக காத்திருக்க வேண்டியது தன்னுடைய கடமை.' நினைத்துக்கொண்டே கண்களை மூடிக்கொண்டாள்.

முற்றும்

GIFT BY
RRRLF
CALCUTTA

கிளை நூலகம்,
தூத்துக்குடி வடக்கு.

கிளை நூலகம்,
தூத்துக்குடி ... க்கு.